பொருளடக்கம்

திரைப் பகுதி :

இந்த மந்தம் ஏன் ... 2
அதுவும் தேவை ... 3
ஓர் இரவு - படவிமர்சனம் 'மூர்த்தி'... 4
ராஜ்கபூர் வாழ்க்கை வர்ணனை ... 8
வருகிறது ...13
சௌதாமினி - படவிமர்சனம் 'மூர்த்தி'...14
வெற்றிலைப் பெட்டியும் வெள்ளிக் கூஜாவும் 'ஸத்யன்' 17
செய்திப் படங்கள் ...21
லக்ஷ்மிப்பிரபா - பேட்டி 'ராஜரத்தினம்'...33
சினிமாவின் கவர்ச்சி 'ஜாவர் சீதாராமன்'...39

கலைப் பகுதி :

காதல் பாவையடி - கவிதை 'ஜி. தியாகராஜன்'...49
நீங்களும் போடலாம் 'வாசுகி'...50
புகைப்படப் பகுதி ...56
என்னைப்பற்றி 'ரா. ஆறுமுகம்'...57
செத்தவர்களோடு பேசலாம் 'ஆவியன்'...68
அமரர் கு. ப. ரா. - 'மாயா'...77

ஆசிரியர் : அரு. ராமநாதன்
கூட்டாசிரியர் : "மூர்த்தி"

தனிப் பிரதி விலை அணா எட்டு
வருட சந்தா ரூபாய் ஆறு

கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

கலைமணி காரியாலயம் கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி

கலைமணி

(சிறந்த சினிமா, இலக்கிய மாத இதழ்)

கலை : 2 ★ மே 1951 ★ மணி : 15

இந்த மந்தம் ஏன்?

ஒரு காலத்தில் புதுத் தமிழ்ப்படங்களைத் திரையிடக் கொட்டகைகள் கிடைக்காமல் திண்டாடினார்கள். படத்தயாரிப்பு அத்தனை வேகமாக இருந்தது. ஏராளமான படங்கள் தயாரிக்கப்பட்டது. புதுப்புது, கம்பெனிகள் தோன்றின. நமக்கும் தமிழ்ப்பட உலகின் முன்னேற்றம் கண்டும் வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஆனால் இப்போது புதுப்படங்களின் விளம்பரங்களைக் காண்பதுகூட அரிதாக இருக்கிறது. பெரிய தயாரிப்பாளர்கூட ஆமை வேகத்தில் நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். அதுகூடத் தவறு. நகராமல் நிலைத்து நின்று தூங்குகிறார்கள் என்றுகூடச் சொல்லலாம். ஜெமினி தமிழ் நாட்டுக்கு புதுத் தமிழ்ப்படம் அளித்து வருஷத்துக்குமேல் ஆகப்போகிறது. ராயல் டாக்கீஸார் ஐந்து வருஷமாக ஒரே படத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். ஜூபிடரின் வேகம்கூட முன்போல இல்லை. மாடர்ன தியேட்டர்ஸும் முன்போல வருஷத்துக்கு நாலு படம் தரவில்லை.

இதே சமயத்தில் தெலுங்கு, மலையாளப் படத் தயாரிப்பாளரின் வேகம் அற்புதமாக முன்னேறி வருகிறது. நாளைக்கொரு மலையாளப்பட தெலுங்குபட விளம்பரம் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல. அவர்கள் தமிழ் மார்க்கட்டைப் பிடிக்கத் தங்கள் படங்களை தமிழ் பேசவைத்து வருகிறார்கள். அவர்களின் இந்த முன்னேற்றம் வரவேற்கப்படவேண்டியதுதான். ஆனால் நம் தமிழ்ப்பட உலகம் இப்படி மந்தம் தட்டிப்போய் இருப்பதற்குக் காரணம் என்ன? மக்களின் ஆதரவு குறைவா. ஆதரவு குறைவாயிருப்பதானால் அதற்குப் பொறுப்பு யார்? நல்ல படங்களுக்கு என்றைக்குமே பொதுஜனங்கள் ஆதரவு அளிக்கத் தவறியதில்லை. வேறு என்ன? நல்ல கதைகற்பனைக்கு பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா?

தமிழ்ப்பட உலகம் எடுத்துக்கொண்டிருக்கும் இந்த ஓய்வு - ரசிகர்களுக்கு வேதனையாக இருக்கிறது. புதுப் புது கற்பனைகளை, விதவிதமான கோணங்களில் சித்திரிக்கும் நல்ல படங்களைத் தர தமிழ்ப் படத் தயாரிப்பாளர் உடனே விழித்தெழவேண்டும். இந்தத் தாமதம் - ஆமை வேகம் - மந்தம் நீடித்தால் தமிழ்ப்பட மார்க்கட் பிறமொழிப் படங்களுக்குத் தலைகுனிய வேண்டிய நிலையை வளர்த்துவிடும்.

—ஆசிரியர்

அதுவும் தேவை!

பெண்: எனக்கு குரல் மட்டும் யாராவது இரவல் கொடுத்தா நானா ஹீரோயினாகவே நடிப்பேன் சார்.

டைரக்டர்: நாசமாப்போச்சு! உனக்கு குரல் மட்டுமா இரவல் தரணும், நடிப்புக்கூட யாராவது இரவல் தந்தாக வேண்டும்.

ஓர் இரவு

தயாரிப்பு : 'ஏவிஎம்' புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : 'ஏவிஎம்' ஸ்டுடியோஸ்
கதை வசனம் : சி. என். அண்ணாத்துரை எம். ஏ.
டைரக்ஷன் : ப. நீலகண்டன்
நடிகர்கள் : டி. கே. ஷண்முகம், டி. எஸ். பாலையா, கே. ஆர். ராமசாமி, நாகேஸ்வர ராவ், துரை ராஜ், லலிதா, B. S. சரோஜா முதலியோர்.

நீண்ட நாளாக எதிர்பார்க்கப் பட்ட ஒருபடம். வாழ்க்கைக்குப் பிறகு ஏ. வி. எம். அளித்த சமூகப் படம். தமிழ் நாட்டு நாடகமேடையில் பரபரப்பை உண்டாக்கிப் புகழ் பெற்ற ஒரு கதை. நட்சத்திர நடிகர்களும், நாடகமேடை நட்சத்திரங் களும் சேர்ந்து நடித்த ஒரு படம் 'ஓரிரவு'

திருடன்—ரத்தினம்

படம் ஓட ஆரம்பித்த உடனேயே அதாவது காட்சிகளும், கதையும் திரையில் விழுவதற்கு முன்னே எழுத்துக்கள் காட்டப்படும் போதே கதை வசனம் சி. என். அண்ணாத் துரை என்ற எழுத்துக்களுக்கே கொட்டகை வெடித்து விடும்படி யான கைதட்டல் கிடைத்துவிடும் ஒரு படத்தைப்பற்றி நாம் விமர் சனம் செய்வது அவ்வளவு பொருத் தமில்லைதான்! படத்தைப் பார்க்கா மலேயே கதையை உருவாக்கிய மனி தருக்காகப் பாராட்ட வேண்டும் என்று உணர்ச்சிக் கொந்தளிப்பில் உள்ள மக்களுக்குப்படத்தில் உள்ள குறைகள் அவ்வளவாகத்தெரியாது. அதுவே படத்திற்கு ஓர் வெற்றி.

ஆனால் உண்மையில் ஓர் இரவுப் படம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு வெற்றி இல்லை என்றுதான் சொல்லவேண்டும். 'வாழ்க்கை' அளவு வெற்றியில்லை. ஓரிரவின் ஜோடியான வேலைக்காரியின் வெறறிகூட இல்லை என்று சொல்ல லாம். ஆதியும் அந்தமும் அழகாக விருவிருப்பாகப் போகிறது. நடுவில் ஒரே மந்தமாக இருக்கிறது. கதை நாடகத்திற்குத்தான் ஏற்றது சினிமாவிற்கு லாயக்கில்லையோ என்றுகூட நினைக்க வேண்டியிருக் கிறது. அல்லது சினிமாவில் அதை ரசிக்கும்படியாக உருவாக்குவதில்

தோல்வியடைந்து விட்டார்களோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. அடுக்குமொழி அண்ணாவின் பொன்மொழிகள் வழக்கப்படி காரசாரமாக நன்றாகத்தான் இருக்கிறது. சிற்சில இடங்களில் மட்டும் நாம் படம் பார்க்கிறோம் என்பதை மறந்து ஒரு பிரசாரப் பொதுக் கூட்டத்தில், அரசியல் கூட்டம் நடக்கும் மைதானத்தில் இருப்பதாக எண்ணச் செய்துவிடுகிறது. ஆனால் அது கதையோடு ஒன்று சேராமல் தனியாகத் தொங்கவில்லை. பொருத்தமாக ஒட்டியிருப்பதால் ஒன்றுசேர்ந்தே காணப்படுகிறது.

கதை அனேகமாக எல்லோருக்கும் தெரிந்த கதைதானாகையால் அதை மறுபடியும் இங்கே விவரிக்கப் போவதில்லை.

கிராமத்துப் பெண் அழகி சொர்ணத்தை ஜமீந்தார் காதலித்துக் கைவிட்டதும் சொர்ணம் ரயில் முன்னால் விழுவது வரை காட்டிவிட்டுப்பிறகு, மேலே கடைசிவரை கதையை வளர்த்துக் கொண்டு போய் முடிவில் கிழவி சொர்ணத்தைக் காட்டுவது சாதாரண ஜனங்களுக்கு குழப்பத்தைக் கொடுக்கிறது. அவள் ரயிலில் விழுந்தும் இறக்கவில்லை என்பதை ஒரு சிறிய காட்சியாகக் காட்டிவிட்டுப் பிறகு மேலே தொடர்ந்திருக்கலாம். இன்னொரு விஷயம். சொர்ணத்தை ஜமீந்தார் உதறிவிட்டுப் போகும்போது அவள் பரிதாபமாகக் கதறும் போது, தான் கர்ப்பிணி என்பதை ஒரு வார்த்தை மூலமாகவாவது விளக்கியிருக்கலாம். 'ஔவை விடுதி'யிலிருந்து வருவதாகக் காட்டியிருப்பது உண்மைதான். ஆனால் ஔவை விடுதியைப் பற்றி வெகு சிலருக்குத்தான் தெரியும். ஆகவே கடைசியில் ரத்னம் ஜமீந்தார் மகனை, சொர்ணத்தின் பிள்ளையாக வந்து விடுவது சிறிது வியப்பாகத்தான் இருக்கிறது. நாடகம் பார்க்காத, கதையே தெரியாத, ஒரு புது மனிதர் பார்க்க நேர்ந்தால் இம்மாதிரி காட்சிகள் ஒன்றுக்கொன்று இடைவெளி அதிகமாயும் தொடர்பு இல்லாமலும் முன்னேறிச் செல்லும் வேகத்தில் குழம்பிப் போய் விடுவார்கள். நாடக மேடை பாணி பல இடங்களில் வந்து கலந்திருக்கிறது.

நடிப்பு விஷயத்தில் முதல் பரிசை சந்தேகத்திற்கு இடமில்லாமல் தட்டிக்கொண்டு போகிறார் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி. கதையின் கடைசி கட்டத்தில் அவர் தோன்றினாலும்-படத்திலேயே அதுதான் விறுவிறுப்பான பாகம்: ஓர் இரவு என்ற பெயருக்குப் பொருத்தமான சம்பவங்கள் நடக்கும் பாகம்—அவர் அனாயாசமாக அற்புதமாக நடித்து நமது அப்ளாஸ்களை அள்ளிக் கொண்டு போகிறார். தவிர, அவர் பாகம் சோபிப்பதற்கு இன்னொரு முக்கிய காரணம் அவர் பேசும் வசனம் அடுக்குமொழியாக இல்லாமல் சாதாரணப் பேச்சுத் தமிழில் இருப்பதுதான்.

அபலை—சொர்ணம்

நடிப்பில் 2-ம் பரிசு பாலையாவிற்குத் தரலாம். ஜெகவீரனின் ஜபர்தஸ்துக்களைச் சிறிது மிகையாக நடித்துக்காட்டி இருந்தாலும் நடை மிடுக்கு முதலியவைகளில் வேறு புதுமை இல்லாமல வழக்கமாக ஒரே மாதிரியாக இருந்தாலும் ஜெகவீரனாக வரும் பாலையாவிற்கு நடிப்பில் 2ம் ஸ்தானம் தரலாம். பாலையாவினால் தான் படத்திற்கே ஒரு விறு விறுப்பு ஏற்படுகிறது என்று சொன்னாலும் மிகையல்ல.

அகராதி ராமசாமியின் ஹாஸ்ய நடிப்பு மிக உயர்ந்த ரகமாகவும், சிந்தித்துச் சிரிக்கும்படியாகவும் இருக்கிறது. நாம் இருவர் படத்தில் வரும் 'ஞானோதயம்' பாத்திரத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறது அகராதி!

டி. எஸ் துரைராஜ் ஹாஸ்யம் அளவோடு ரசிக்கும்படியாக அழகாக இருக்கிறது. ஆனால் அவரைக் கம்பவுண்டர் என்றுதான் நம்மால் நினைக்கமுடியவில்லை. பபூன் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

வில்லன்—ஜகவீரன்

அதற்கு ஏற்றார் போல இருக்கிறது அவரது பூப்போட்ட சட்டை!

நாடக மேடை நட்சத்திரம் ஷண்முகத்தின் நடிப்பு சுமாராக இருக்கிறது. குழைவு, பரபரப்பு, இயற்கையான ஓட்டம் அதில் இல்லை. வயதான காதைநரத் தேவாக அவரை நம்மால் நினைக்கமுடியவில்லை. காரணம் அவருக்குச் செய்யப்பட்டிருக்கும் மேக்கப்பைத்தான் குறைகூற வேண்டி இருக்கிறது.

தெலுங்குப் படத்தில் ஒளிவீசும் நட்சத்திரமாகத் திகழும் நாகேஸ்வரராவின் முதல் தமிழ் படம் இது. பிரமாதமான நடிப்பை அவரிடம் எதிர்பார்த்தவர்கள் ஏமாந்துதான் போகவேண்டும். அவர் முகத்தில் சோக பாவம்தான் குடிகொண்டிருக்கிறதேயொழிய ஒரு காதலனுக்கு உள்ள பூரிப்பு, ஆவல், மந்தஹாஸம், கனிவு அவர் முகத்தில் இல்லை வாழ்க்கை படத்தில் ராமச்சந்திரன் அடைந்த வெற்றி இவரிடம் இல்லை. சேகரை ஒரு டாக்டராக உருவ அமைப்பு நினைக்க வைக்கவில்லை. வசனத்தில் டாக்டர், மருந்து என்ற பதங்கள்தான் சேகரை டாக்டராக்குகிறது.

லலிதா கண்ணிற்கு குளிர்ச்சியாக வருகிறார். நாட்டிய நடிப்பு நடிக்கிறார். அவர் நடிப்பில் இன்னும் மெருகு ஏற வேண்டும். தமிழையே ரசிக்கும்படி பேச இப்போதுதானே கற்றுக் கொண்டிருக்கிறார்! கழுத்து வெட்டு, கண்ணசைப்பு இவைகள் அதிகமாக இருக்கிறது இவரிடம். அது நாட்டிய நடிகை என்பதை அடிக்கடி நமக்கு நினைவு படுத்திவிடுகிறது. சோக கட்டங்களில் அவர் உருவகப்படுத்தும் சோகமான முகம் நம் உள்ளத்தைத் தொடவில்லை. இயற்கையாக இல்லை, சில முகங்களுக்குத்தான் சோகம் பொருத்தமாக இருக்கும்போலும்.

நடிகைகளில் நல்ல பெயர் வாங்குகிறவர் B. S. சரோஜா.

கிராமப் பெண்ணாக வரும்போதும் சரி, நாடகக்காரியாக வரும்போதும் சரி, கிழவியாகத் தோன்றும்போதும் சரி அவர் நடிப்பு குறை சொல்லமுடியாதபடி இருக்கிறது. ஜமீன்தாரிடம் அவர் சீற்றங்கொண்டு கதறும்போது நம் உள்ளத்தைத் தொட்டு விடுகிறது அவர் நடிப்பு.

ரத்னத்தைத் தன் காதலனாக நடிக்கும்படி ஏற்பாடு செய்து கொண்ட சுசீலாவின் உண்மைக் காதலன் சேகரே அதைப் பார்க்க நேர்ந்து விடுகிறது. ரத்னம் சேகரை ஜெகவீரன் என்று தவறாக நினைத்துக் கொண்டு தாக்குகிறான். அந்த இடத்தில் வெகுநேரம் இருவரும் சண்டை போடுவதாகக் காட்டி இருப்பது அசம்பாவிதமாக இருக்கிறது. தன் தவறுதலால் தன் காதலன் துன்பம் அடைவதை எந்தப் பெண்ணும் அத்தனை நேரம் பார்த்துக் கொண்டு சுர்றிச் சுற்றிவர மாட்டாள். உள்ளம் வெடிக்க "இது என் மாமா இல்லை, ஜெகவீரனில்லை," என்று ரத்னம் காது கொடுத்துக் கேட்காது போனாலும் கத்தியிருப்பாள் அந்த இடத்தில் உண்மையை ரத்னம் அறிந்துவிட்டால் மேலே கதை வளராது என்பது உண்மைதான். ஆகவே இருவரும் சண்டையிடும் நேரத்தைக் குறைத்து அந்த சம்பவத்தை இன்னும் இயற்கையாக விருவிருப்புள்ளதாக்கி இருக்கலாம்.

படத்தின் காட்சி அமைப்புகள் அபாரம். ஆரம்பத்தில் ஜமீந்தார்—சொர்ணத்தின் காதலைச் சித்தரிக்கக் கையாண்டிருக்கும் முறைகள் பாராட்டும்படியாகவும் புதுமையாகவும் இருக்கின்றன.

நாட்டியங்கள் கதையின் சம்பவங்களுக்குத் தேவையில்லாவிட்டாலும் ரசிக்கும்படியாக இருக்கிறது. லவிதா, குமாரி கமலா இவர்களை வைத்துக் கொண்டு நாட்டியம் இல்லாமல் படம் பிடிக்கலாமா? ஆனால் நாட்டியத்தினால் சதையின் வேகம்

காதலன்—சேகர்

குறையவில்லை. விருவிருப்புக்கெடவில்லை.

பாட்டுக்கள் ஹிந்தி மெட்டுக்களாக இல்லாததால ஒன்றும் கெட்டுவிடவில்லை. முதல் முதலில் சொர்ணம் பாடும் 'எங்கநாடு' என்ற பாட்டு நன்றாக இருக்கிறது. லவிதாவின் நாட்டியத்திற்குப் பாடப்படும் பின்னிசை, 'கிட்டவந்தான்' என்ற பாட்டு வாழ்க்கைப் பாட்டுக்களைப் போலப் பிரபலமடையக் கூடியது. ராமசாமி ஒரு பாட்டுப்பாடினாலும் ஒண்ணா நம்பராகப் பாடிவிட்டார். புகழ்பெறத் தகுதியான பாட்டுக்களில் அதுவும் ஒன்று. பாரதிதாசனின் பாடலை நாடகத்தில் நாம் கேட்டபோது அதில் இருந்த ஜீவன் திரையில் கேட்கும்போது இல்லை.

மொத்தத்தில் 'ஓர் இரவு' பிரமாதமான படம் என்று புகழப்படாவிட்டாலும் ஒரு நல்ல படம். சிரிக்கவும், சிந்திக்கவும் செய்து கண்ணுக்கும் காதுக்கும் கருத்துக்கும் ஓரளவு விருந்து அளிக்கிறது ஓர் இரவு என்று சொல்லலாம்.

வடநாட்டு நட்சத்திரம்

வாழ்க்கை வர்ணனை

22–3–51ம் தேதியன்று பம்பாயே பிராபோர்ன் ஸ்டேடியத்திற்கு திரண்டு வந்திருந்தது. பெரிய பெரிய டெஸ்ட் விளையாட்டுக்காரர்களெல்லாம் வந்து இதற்கு முன் விளையாடின போதிலும் அவ்வளவு கூட்டம் வராத அந்த பிராபோர்ன் ஸ்டேடியத்திற்கு எள் விழுந்தால் எண்ணெயாகும் கூட்டத்திற்குக் காரணம் ராஜ்கபூர் கோஷ்டியும் மோதிலால்கோஷ்டியும் பல பிரபல சினிமா நட்சத்திரங்களை சேர்த்துக் கொண்டு ஒரு நல்ல காரியத்திற்காக நிதி திரட்ட கிரிக்கெட் ஆடினது தான். புதிய நடிகர் கோஷ்டிக்கு ராஜ்கபூர் காப்டனாகவும் பழைய நடிகர் கோஷ்டிக்கு மோதிலால் காப்டனாகவும் இருந்து ஆடினார்கள். மூன்றே வருஷங்களில் முன்னுக்கு வந்த புதிய நடிகர் ராஜ்கபூர். இவ்வளவு எளிதில் பல ரசிகர்களின் நன் மதிப்பையும் ஆதரவையும் பெற அவர் பட்ட பாடு எவ்வளவு என்று ரசிகர்கள் உணர்ந்தால் உண்மையிலேயே அவர்கள் ராஜ்கபூரின்மேல் அநுதாபம் காட்டாமல் இருக்க முடியாது. அவர் வாழ்க்கையே பல ருசிகரமான சம்பவங்கள் அடங்கியது.

1924ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 14ம் தேதி பெஷாவரில் பிரதிவிராஜுக்கு மூத்த மகனாய்ப்பிறந்தார் ராஜ்கபூர். தான் சிறுவனாய் இருக்கும் பொழுதே தன் தகப்பனார் பல இடங்களிலும், காலேஜிலும் நாடகங்களில் நடிப்பதையும், ராம்லீலா பண்டிகைகளில் கலந்து கொள்வதையும் கண்டவுடன் தானும் நடிக்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. சிறிது சிறிதாக இந்த ஆவல் வலுத்து வந்து ராஜ்கபூர் சுமார் எட்டு வயது அடையும் பொழுது அது முற்றி விட்டது. அவர் வீட்டில் உள்ள சாமான்களுக்குப் பிடித்தது சனியன். அவர் அம்மாவுக்கு எல்லையில்லாத தலை வலியைக் கொடுத்தது. ராஜ்கபூர் வீட்டில் உள்ள பெட்டிகளையெல்லாம் அடுக்கி ஒரு மேடை அமைத்து அப்பா வேஷ்டி, அம்மா புடவை இவைகளைக்கொண்டு ஒரு திரை கட்டி வீட்டு வேலைக்காரர்களையும், அக்கம் பக்கத்திலிருக்கும் சிறுவர்களையும் வைத்து சிறு நாடகம் நடத்துவான் தன் வீட்டில். போதாக்குறைக்கு, சில சமயங்களில் தன்னுடைய குட்டி நாடகங்களுக்கு டிக்கட் ஏற்படுத்தி. வீட்டில் உளளவர்களும் அதைப் பணங்கொடுத்து வாங்கும் படி வற்புறுத்தி நாடகங்கள் நடத்தி வந்தார். இந்த ராஜ்கபூரின் குட்டி நாடக் கம்பெனியின் விவகாரம் அவர்கள் பெற்றோருக்கு மகிழ்ச்சியையும் துன்பத்தையும் கொடுத்து வந்தது. மகிழ்ச்சி; நம் மகன் நன்றாக நடிக்கிறான். ஒரு காரியத்தை சாதிக்கும் திறமை இவ்வளவு சிறு வயதிலேயே ஏற்பட்டு விட்டதே என்று. துன்பம், இந்த நாடகத்தினால் வீட்டில் உள்ள சாமான்கள் அநியாயமாக சேதமடைகிறதே, தன் வீட்டில் சத்திரம் போல் கூக்குரலும் பிள்ளைகளின் அட்டகாசமும் இருக்கிறதே என்று. இதைக் கண்டு பிரிதிவிராஜ் ராஜ்கபூரை டேராடூனில் உள்ள ஒரு பள்ளியில் சேர்த்துவிட்டார்.

"ராஜ்கபூர்"

இந்தப்படிப்பு ஒருவருஷ காலமே நீடித்தது. அதற்குள் பிரிதிவி ராஜுக்கு கல்கத்தாவில் நியூ தியேட்டரில் வேலை கிடைத்தது. ராஜ்கபூரை கல்கத்தாவிற்கு அழைத்துச்சென்று அங்குள்ள ஒரு பாதிரிமார் பள்ளியில் சேர்த்தார்.

சுமார் ஒரு வருஷம் கழிந்தது. பிரிதிவி ராஜுக்கு கல்கத்தாவில் நியூ தியேட்டர்ஸ் ஒப்பந்தம் முடிந்ததும் பம்பாயில் ரஞ்சித் மூவிடோனில் வேலை கிடைத்ததால் ராஜ்கபூரையும் பம்பாய்க்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது ராஜ்கபூர் ஐந்தாவது வகுப்பு வாசித்துக் கொண்டிருந்தார். கல்கத்தாவில் அவர் படித்துக்கொண்டிருக்கும் பொழுது பள்ளி ஆண்டு விழாவிற்காக ஒரு நாடகம் நடத்தினார்கள். ஏசுநாதர் வாழ்க்கையைப் பற்றிய அந்த நாடகத்தில் ராஜ்கபூர் தனக்கு ஒரு நல்ல பாகம் கிடைக்குமென்று எதிர்பார்த்தார். ஆனால் அவர் எவ்வளவு மன்றாடியும் அவருக்கு அந்த நாடகத்தில் கும்பலிலே ஒருவனாக இருக்கத்தான் சான்ஸ் கிடைத்தது. இதைப் பற்றி அவர் தன் ஆசிரியரான பாதிரியிடம் முறையிட்ட பொழுது அவர் சொன்னார். "நீ நாடகத்தில் நடிக்க லாயக்கற்றவன். உனக்கும் நடிப்புக்கும் வெகுதூரம்" என்றாரும். "இப்பொழுது மட்டும் அந்தப் பாதிரி என்னெதிரில் வரட்டும் நான் நடிக்கத் தகுதியற்றவன் என்று சொன்னீர்களே இப்பொழுது என்ன சொல்லப்போகிறீர்கள் என்று கேட்டேன்" என்கிறார் ராஜ்கபூர்.

பம்பாயில் பள்ளிக்கூடத்தில் ராஜ்கபூர் விரும்பியபடி சலுகைகள் பலகிடைத்தன. பள்ளிக்கூட விவகாரங்களிலெல்லாம் தலையிட்டார். பேச்சுப் போட்டிகளிலும் தர்க்கப்போட்டிகளிலும் ராஜ்கபூர் கலந்து பல பரிசுகள் வாங்கினார். சாரணர் இயக்கத்திலும் சேர்ந்து தொண்டாற்றினார். இது மாதிரி விஷயங்களில் அதிகமாக ஈடுபட்டதினால் ராஜ்கபூருக்கு மெட்ரிகுலேஷன் பரீட்சை தேற முடியவில்லை. தேறவும் முடியாது என்று கருதினார். இனியாவது ஏதாவது ஸ்டுடியோவில் சேர்ந்து முன்னுக்கு வரலாம் என்றுநினைத்து தன் விருப்பத்தை தன் தகப்பனுக்கு தெரிவித்தார். அவரும் சரியென்றார்.

ரஞ்சித் ஸ்டுடியோவில் பிரபல டைரக்டர் கேதார் ஷர்மாவுக்கு மூன்று

வது உதவியாளராக (Third Assistant) அமர்த்தப்பட்டார். உத்யோகம் பெரியதாக இருந்ததே ஒழிய செய்த வேலை யெல்லாம் சாதாரண ஒரு கிளாப்ஸ்டிக் பையன் (Claspstickboy) செய்த வேலைதான். இந்த உத்யோகத்தை யும் அவர் மிகவும் விருப்பமாகவும் சுறுசுறுப்பாகவும் செய்து வந்தார். ஒவ்வொரு சமயம் கேதார்ஷர்மா வுக்குப் படப்பிடிப்பிற்கான தன்னு டைய அபிப்பிராயங்களைத் தெரி வித்தார். சில சமயம் அவர் சொன் னதை யாரும் ஏற்பகேயில்லை.

ஆனால் கேதார்ஷர்மாவுக்கு மட்டும் என்னமோ ராஜ்கபூர் மேல் ஒரு நம்பிக்கை பிறந்தது. பிற்காலத்தில் ராஜ்கபூர் ஒரு சிறந்த டைரக்டராக வரலாம் என்று கருதினார். இப்படி சுமார் இரண்டரை வருஷகாலமாக ரஞ்சித் மூவிடோனில் சம்பளமில்

இந்தப் போஸைப்பார்த்தாலே இது ராஜூம்பாள் வில்லன் என்று தெரியவில்லையா?

லாமல் ராஜ்கபூர் வேலை செய்ததில் இரண்டு மூன்று படப்பிடிப்பில் அவர் சம்மந்தப்பட நேர்ந்தது.

பிறகு அவர் தகப்பனார் விருப்பப் படி அவர் கொடுத்த சிபாரிசு கடி தத்துடன் பாம்பே டாக்கீஸ் தேவிகா ராணியிடம் சென்றார். தேவிகா ராணி உடனே அவரை 70 ரூபாய் சம்பளத்தில் மூன்று வருஷகால ஒப்பந்தத்தில் நடிகராக அமர்த்தி னார். நடிகராக வேலைக்கு அமர்ந்த தும் அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையென்னமோ ஒரு சாதாரண கூலி மாதிரி எடுபிடி வேலைதான். பாம்பே டாக்கீஸ் எடுத்த 'ஹமாரி பாத்'' என்னும் படத்தில் சுமார் ஆறு வார்த்தைகள் கொண்ட ஒரு வாக்கியத்தைப் பேசும் சந்தர்ப்பத் தையும் பெற்றார். அவ்வளவு தான். பாம்பே டாக்கிஸில் தயாரித்த 'ஜுவர் பத்தா'' என்னும் படத்தில் தன்னுடன் பள்ளியில் படித்த திலீப் குமார் நடிக்கப் போவதைக் கேட்ட ராஜ்கபூருக்கு தானும் நடிக்கவேண் டும் என்ற ஆவல் அதிகமாயிற்று. பள்ளியில் மிகவும் பயந்த சுபாவ முள்ள, திலீப்குமார் படத்தில் நடிக்க முன்வரும் பொழுது தான் ஏன் நடிக்கக் கூடாது என்ற உணர்ச்சிமேலிட அந்த உணர்ச்சி அவரை தேவிகாராணியிடம் தள் ளிக் கொண்டு போய் நிறுத்தியது. ''என்னை நடிகனாக அமர்த்தினீர் கள் ஆனால் அந்த வேலையைத் தவிர மற்ற எல்லா வேலையும் வாங்கிக் கொண்டீர்களே'' என்று கேட்ட தற்கு தேவிகாராணி சிரித்துக் கொண்டே ராஜ்கபூரை தட்டிக் கொடுத்து 'கவலைப்படாதே' என்று சொல்லிச் சென்றார். மனமுடைந்த ராஜ்கபூர் வேண்டா வெறுப்பாக வேலைசெய்து வந்தார். இதன் நடு வில் ராஜ்கபூரை அந்த ஸ்டுடியோ வில் ஒவ்வொரு இலாகாவிற்கும் மாற்றிக்கொண்டே இருந்தனர். கடைசியில மூன்று வருஷகால ஒப்பந்தம் முடிந்தவுடன் ராஜ்கபூர்

பாம்பே டாக்கீஸிலிருந்து வெளியேற்றப்பட்டார். மறுபடியும் தகப்பனரிடம் வந்துசேர்ந்தார் ராஜ்கபூர். அப்பொழுது தான் பிரிதிவி ராஜ் 'சகுந்தலா' படப்பிடிப்பில் முனைந்திருந்தார். உடனே ராஜ்கபூருக்கு ஆர்ட் டைரக்டர் உத்தியோகம் கிடைத்தது. மேலும் தகப்பனருடன் படப்பிடிப்பு சம்பந்தமான விவகாரங்களைப் பற்றிப் பேசி பல விஷயங்களை அறிய அவருக்கு நிறைய சந்தர்ப்பம் கிடைத்தது பின்னர் எடுத்த 'திவர்' என்னும் படத்தில் ஒரு சிறிய பகுதியில் ராஜ்கபூர் நடித்தார். இதைப் பார்த்த ஒரு பட முதலாளி தான் எடுக்கும் "வால்மீகி"யில் ராஜ்கபூரை நாரதராக நடிக்க வைத்தார்.

கேதார்ஷர்மா ராஜ்கபூரின் நடிப்பைப் பாராட்டி தான் எடுக்கும் "நீல்கமால்" என்னும் படத்தில் மதுபாலாவுடன் கதா நாயகனக நடிக்க வைத்தார். அது சுமாரான பண வசூலைக் கொடுத்தது. ராஜ்கபூருக்கு யோகம் அடிக்க ஆரம்பித்தது. பல ஒப்பந்தங்கள் அவர் கைக்கு வந்தன. பேசினபடி அவருக்கு சில பட முதலாளிகள் பணம் கொடுக்கவில்லை. இருந்தாலும் தான் நடித்து முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆவலில் அதைப்பற்றி அவர் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. 'ஜெயில் யாத்'ரா 'கோபிநாத்' முதலிய படங்களில் நடித்தார். "அந்தாஸ்" படம் அவருக்கு நல்ல புகழ் அளித்தது.

இந்த நிலைமையில் ராஜ்கபூருக்கு தானே சொந்தத்தில் ஒரு படம் எடுக்க வேண்டுமென்ற விருப்பம் இருந்தது தன் தகப்பனரிடமும் இன்னும் மற்றவர்களிடமும் ராஜ்கபூர் கடன் வாங்கி "ஆக்" என்னு படம் எடுத்தார். இதில் அவருக்கு நர்கீஸ், காமினிகௌஷல், நிகார் சுல்தான இவர்களுடைய அமோக ஆதரவு இருந்ததினல் ஒரே வருடத்தில் அவர் படப்பிடிப்பு முடிந்தது. அது ராஜ்கபூரின் முதல் முயற்சியாயிருந்தாலும். ராஜ்கபூர் நல்ல படத்தயாரிப்பாளர் என்பதை நிரூபித்து விட்டது. இதற்குப்பின் ராஜ்கபூர் இன்னும் நல்ல முறையில் படம் எடுக்க வேண்டுமென்று எண்ணி "பர்ஸாத்" எடுக்க முற்பட்டார். இதில் அவர் கூடியமட்டும் புதுமுகங்களைப் புகுத்தினர் பர்ஸாத் வெளிவந்த பின்னர் எல்லோரும் மூக்கின்மேல் விரல் வைக்க ஆரம்

நட்சத்திரம் மறைந்தது

வடநாட்டு நடிகர் ஷியாமைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. பல படங்களில் நடித்துப் பொது மக்களின் பாராட்டுதலைப் பெற்ற ஒரு சிறந்த நடிகர் ஷியாம். ஷியாமின் விசிறிகள் தென்னுட்டில் கூட ஏராளம். இப்படிப்பட்ட பிரபல நடிகரை திரையுலகம் இழந்துவிட்டது. பம்பாயில் ஒரு படப்பிடிப்பின் போது குதிரையிலிருந்து விழுந்ததால் நட்சத்திர நடிகர் ஷியாம் ஏப்ரல் 26ம்தேதி காலமானர். இவரது மரணம் திரை உலகையும் ரசிகர்களிடையேயும் ஒரே பரபரப்பை உண்டாக்கித் துக்கத்தில் ஆழ்த்தி இருக்கிறது. ஒரு சிறந்த நடிகரை, கலைஞரை இழந்துவிட்ட இந்த நஷ்டம் ஈடுசெய்ய முடியாதது. இவருக்கு 35 வயது தான் ஆகிறது. இவரது பிரிவால் வாடும் ஷியாமின் குடும்பத்தாருக்கு தென்னுட்டு ரசிகர்கள் சார்பில் நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

'டோலக்' என்ற ஹிந்திப் படத்தில் ரசிகர்களின் உள்ளத்தைத் திருடிவரும நடிகை 'மீனா'

மித்தனர். இருபத்தைந்து வயது இளைஞன் இவ்வளவு நல்ல படம் எடுக்க முடிந்தது என்று வியந்தனர். "பாஸாத்" அபரிமிதமான வசூலை அளித்தது. அடுத்ததாக "அவாரா' என்ற படம் எடுக்கிறார். இதில் இவர் தகப்பனார் பிரிதிவிராஜும் நிம்மியும் நடிக்கிறார்கள். தகப்பனாரையே இவர் டைரக்ட் செய்கிறார் இந்தப்படத்தில். இதற்கு நடுவில் ராஜ்கபூர் 'சாகப்' 'தாஸ்தான்' என்ற இரண்டு படங்களிலும் நடித்தார். ராஜ்கபூர் இந்த இரண்டு படங்களில் காமிக கட்டத்தில் நடித்ததைப் பார்த்தபின் இவர் எந்தக் கட்டத்தையும் ஏற்று நடிக்க முடியும் என்று நிரூபித்துவிட்டார். 'அந்தாஸ்' 'பன்வரேநயன்' 'பர்ஸாத்' இந்தப் படங்களில் சோகக் கட்டங்களில் நடித்த ராஜ்கபூர் 'சர்கம', 'தாஸ்தான்' இந்த இரண்டு படங்களில் இவ்வளவு ஹாஸ்யமாக நடித்தது மிகவும் போற்றத்தக்கது. இவர் நர்கிஸுடன் 'ஆஷியானா', 'ஆம்பார்' "பேவபா" (Bewafa) முதலிய படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார்.

ராஜ்கபூருக்கு ஆங்கில சங்கீதமும் இந்திய சங்கீதமும் பிடிக்கும். அதோடு ஆங்கில நடனமும் தெரியும். கால்பந்து, நீந்துவது, குதிரையேற்றம் முதலியவை ராஜ்கபூருக்கு மிகவும் பிரியம்.

தனது 24வது வயதில் ராஜ்கபூர் நடிகர் பிரேம் நாத்தின் தங்கையான கிருஷ்ண மேராவை மணந்து கொண்டார். இவர்களுக்கு ரீடா, ரந்தீர் என்ற இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். —தெ. ராஜரெத்தினம்

வருகிறது!

★ மதுரை ராயல் டாக்கீஸாரின் கூட்டுத்தயாரிப்பான 'ரிக்ஷாக்காரனை' வளர்க்கும் பொறுப்பை பிரபல டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி ஏற்றுக் கொண்டிருக்கிறார். விரைவில் 'சுந்தரனை' வெளியே அனுப்பிவிட்டு ரிக்ஷாக்காரனைக் கவனிப்பார்கள் என்று தெரிகிறது. நட்சத்திரங்களின் ஜாபிதா இன்னும் வெளியிடப்படவில்லை. கதை வசனம் டைரக்ஷன் சாமிதான்.

★ கிருஷ்ணா பிக்சர்ஸாரின் அடுத்த புதுப்படம் 'மருமகள்' என்ற சமூகப்படம். இவர்கள் எடுக்கும் முதல் சமூகப்படம் இதுதான். வழக்கமான நட்சத்திர நடிகர்கள் இருப்பார்கள் என்று தெரிகிறது.

★ 'ஜெமினி'யில் ஒரு பக்கம் 'ஔவையாரும்' இன்னொரு பக்கத்தில் 'சம்சாரம்' என்ற தெலுங்குப் படத்தைத் தமிழ்ப்படுத்தும் வேலையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். சம்சாரம் தெலுங்குப் படத்தின் தமிழ் உரிமையை ஜெமினியார் வாங்கி இருப்பதாகத் தெரிகிறது. ஜெமினி ஒரு படத்தை வாங்குவதானால் அதன் தரம் எப்படி இருக்குமென்று சொல்லவா வேண்டும்.

★ விரைவில் வெளிவரத் தயாராகிக் கொண்டிருக்கும் படங்களில் 'மணமகள்' ஒன்று. என்.எஸ்.கேயின் வெற்றிப் படமாக இது இருக்குமென்று தெரிகிறது. மணமகளோடு கூட 'மணமகனும்' வளர்ந்து வருகிறான்.

'தேவகி' மாடர்ன் தியேட்டர்ஸாரின் புது வெளியீடு மாதுரி, ஜானகி முதலிய நட்சத்திரங்களோடு பல புது முகங்களையும் இதில் காணலாம்.

"ராணி" படப்பிடிப்பில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதால் இந்த இதழிலும் ஏ. எஸ். ஏ. சாமி அவர்களின் கேள்வி பதில் வெளியிடமுடியவில்லை. அடுத்த இதழ் முதல் தொடர்ந்து வெளிவரும் என்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். — ஆசிரியர்.

'தேவகி'யில் மாதுரி தேவி, வி. என். ஜானகி, பாலசந்தர்.

சௌதாமினி

தயாரிப்பு : ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனி
வெளியீடு : ஜெமினி
ஸ்டுடியோ : ஜெமினி
டைரக்ஷன் : கே. பி. நாகபூஷணம்
நடிகர்கள் : ராதா, கண்ணம்பா, நாகேஸ்வர ராவ், வரலக்ஷ்மி, T. R. ரஜனி, ராமச்சந்திரன், சாமிநாதன் முதலியோர்.

1949-ம் வருஷத்திய சர்க்கார் பரிசைப் பெற்ற ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியார் 1951ம் வருஷம் தமிழ் நாட்டாருக்கு அளித்த சாவசாதாரணமான படம் தான் இந்த சௌதாமினி. அழகிய பெயரின் பின்னால் காட்டப்படும் ஒரு தெருக்கூத்து. கதை பத்து வருஷங்களுக்கு முன்னால் தமிழ்ப் பத்திரிகைகளில் சிறுவர் பகுதிக்கு எழுதப்படும் ஒரு கட்டுக்கதை தான் இந்த சௌதாமினி. ஆனால் இந்தக் காலத்தில் இதுபோன்ற கதைகளைச் சிறுவர்கள் கூட ரசிப்பதில்லை. சர்க்கார் பாராட்டுதலையும் பரிசையும் பெற்ற ஒரு பிலிம் கம்பெனியார் பொறுப்பற்ற முறையில் இப்படி ஒரு படத்தை எடுத்து வெளியிடுவார்கள் என்று நினைக்கவே முடியவில்லை. நல்ல நடிகர்களையும் சிறந்த ஸ்டுடியோவையும், ஆடை, அணி, அரங்கநிர்மாணங்களையும் வைத்துக்கொண்டு விருவிருப்பும், அழகும், ரசமும் இல்லாத இந்தக் காலத்துக்குச் சிறிதும் பொருந்தாத ஒரு கதையைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டியதில்லை.

ஆந்திர தேசத்திலேயே அநேகமாக தெருக்கூத்துப் பாணியில் தான் கதைகளை வழங்கி வரும் போலிருக்கிறது. தவிர எல்லாக் கதையுமே ஒரே மாதிரிதான் இருக்கும் என்றும் தெரிகிறது. அரசன், அவன் மனைவி பத்தினி. அரசனுக்கு 2ம் மனைவி. முதல் மனைவிக்கு நிர்க்கதியான நிலையில் குழந்தை. அதுவும் ஆண் குழந்தை. அவன் பெரியவனாகவேண்டியது. அசகாய சூரத்தனங்கள் செய்யவேண்டியது. மந்திரவாதியின் தந்திரங்களை உடைத்தெரிந்து அவனைக்கொன்று அம்மாவை அப்பாவிடம் சேர்க்கவேண்டியது. இதே போன்ற அடிப்படையில் எழுந்த கதைதான் சௌதாமினியும்.

மாளவ தேச ராஜா விக்ரமசேனன். ராணி சௌதாமினி. இருவருக்கும் ஒரே ஒரு குறை. குழந்தை இல்லை. மகரிஷி போதாயனர் வருகிறார் மாங்கனி தருகிறார் குழந்தைக்காக.

மகா ராணியின் தேன் வாழ்க்கைக்கு எறும்பாக-விஷமாக-வந்து சேர்ந்தாள் நாட்டிய ராணி விலாசவதி. அரண்மனையில் நடனமாடுகிறாள். அப்படியே மன்னனின் மனதையும் கொள்ளை கொண்டு செல்கிறாள். மன்னர் விலாசவதியின் வீட்டிலே மயங்கிக் கிடக்கிறார். இதைப்பயன் படுத்திக் கொண்டு சேனாபதி காமரூபனும் விலாசவதியும் சூழ்ச்சிகள் பல செய்கின்றனர். சௌதாமினியை காட்டில் கொண்டு

வெட்டி எறிந்துவிட உத்திரவு தருகிறான் அரசன்.

சௌதாமினி இறந்தால் பிறகு கதை ஏது? அவள் பிழைத்துக் கொள்ளுகிறாள். உதயசேனன் பிறக்கிறான். அங்கே விலாசவதி மன்னரின் கண்ணைக் குருடாக்கி விடுகிறாள். அதை குணமாக்க தேவமந்தார மலர் வேண்டும். அதைக் கொண்டுவர யாராலும் முடியாது. கிளம்புகிறான் உதயசேனன். வழியில் ஒரு காதல் சம்பவம். குந்தளநாட்டு இளவரசி ஹேமவதியை இழுத்துக் கொண்டு கிளம்புகிறான். ஹேமவதி தண்ணீர் கேட்க, நீர் நிலையைக் கண்டு பிடித்துத்தண்ணீர் கொண்டுவரப் பறக்கும் மந்திர மரமாகப்பார்த்து அதில் ஏறிப்பார்க்க; மரம்பறந்து உதயனை தேவலோகத்து வாசல்படி அருகில் கொண்டுவிட்டு விடுகிறது. தனியாகத் தவிக்கும் இளவரசி ஹேமவதியை காலபைரவன் என்ற மந்திரவாதி கவனித்துக் கொள்ள நேரிடுகிறது. தேவலோகத்து வாசல் படியில் நிற்கும் போதும் உதயனை அந்தக் காதல் விடவில்லை. ஒரு தேவகன்னிகை வருகிறாள். கண்டதும் காதல், உடனே உதயன் புருவாக மாற்றப்படுகிறான். பெண்ணின் உதவியால் தேவலோகம் சென்று மந்திர மஹேந்திர தந்திரங்களுக்கு நடுவில் இருக்கும் தேவ மந்தாரம் என்ற காகிதப் பூவை கஷ்டப்பட்டு அடைந்து 'விஸ்வதர்ப்பணம்' என்ற மாயக் (எலக்ட்ரிக் குளோப்) கண்ணாடி மூலம் தாய், முதல் காதலி, தகப்பனார் எல்லோரையும் பார்த்துவிடுகிறான். உடனே தக்கபடி தக்கசமயத்தில் அவர்களை விடுவித்து குற்றவாளிகளுக்குத் தக்க தண்டனை கிடைக்கும்படி நடந்துகொள்ளுகிறான். இதுதான் கதை நமது பொறுமையை சோதிக்கும் அளவிற்கு இதை நீண்ட படமாக்கி இடை இடையே காமிக்கையும் பதினெட்டுப் பாட்டுக்களையும் கோர்த்திருக்கிறார்கள். சூதும் வஞ்சனையும் முடிவில் அழியும், உண்மை, சத்யப நிலை பெறும், பதிவிரதையின் கண்ணீர் வீண்போகாது, இதுதான் கதையின் தத்துவம். இதை விளக்க எத்தனை விதவிதமான கதைகள்! இன்னமும் இதுபோன்ற கதைகள் நம் நாட்டுக்குத்தேவையா? பொழுது போக்கு அம்சங்கூட இதில் இல்லையே.

கண்ணீர் விட்டுக் கதறி அழுது கத்துவதற்கென்றே ஒரு நட்சத்திரத்தை ஒதுக்கி வைத்து அவளுக்காக கதையமைப்பும் சம்பவங்களும் அமைக்கப்படுவதை வெறுக்கத்தான் வேண்டியிருக்கிறது ரசிக்க முடியவில்லை. கண்ணாம்பாவின் அழுகை, கத்தல், கோபப் பேச்சு, பத்ரகாளி ஆவேசம் இவைகளை ஏதோ ஓரிருபடங்களில் தான் ரசிக்க முடிந்தது.

'பாதாளபைரவியில்' இப்படி முக்காடிட்டு வரும் ஹாஸ்ய நடிகை ஜி. வரலக்ஷ்மி சௌதாமினியிலும் வருகிறார்.

விளம்பரப்பிரியை ரஜனி நடன மாது விலாசவதியாக வருகிறார், உணர்ச்சியற்ற முகத்தோடு வந்து ஒரு நடனம் வேறு ஆடுகிறார். ஆட்சியைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்யும் ஒரு பெண்ணினிடம் காணப்படும் பாவம் அவர் முகத்தில் கொஞ்சமும் இல்லை அரசனை மயக்கும் லளிதமும் இல்லை. காமபாலனோடு நாட்டை ஆட்சி நடத்தும் போது இருக்க வேண்டிய கம்பீரமும் இல்லை. வேதனை நிறைந்த அவர் முகத்தில் அசடும் முதுமையும் வழிகிறது. நடிப்பிற்கு ஏற்ற முகபாவம் உணர்ச்சிகள் அவரிடம் சூன்யம்

ராதா நடிக்க அதிக சந்தர்ப்பம் இல்லை என்றாலும் ஏதோ தம் பாகத்தை ஓரளவு உருவாக்கி இருக்கிறார். கதைப் போக்குப்படி காணப்படும் குறைகளுக்கும், பாத்திரத்தை உருவகப்படுத்தத் தவறிய டைரக்டரின் தவறுக்கும் நடிகரைக் குறைகூற முடியாதல்லவா?

ஆந்திரப் படங்கள் எல்லாவற்றிலும் கல்யாணத்துப் பருப்பைப் போல நாகேஸ்வரராவ் தோன்றி வருகிறார். ஆனால் அவரிடம் அப்படி ஒன்றும் பிரமாதமான நடிப்பை இந்தப் படத்தில் காணமுடியவில்லை. சர்வசாதாரணம்.

குந்தள நாட்டு இளவரசி ஹேமவதியாக வருகிறார் வரலக்ஷ்மி. கனவில் கண்ட கட்டழகனை அடைய அவர் படும் அவஸ்தை, ஆனந்தம் பாட்டு, சோகம், ஓட்டம்... ஏதோ இருக்கிறது.

ராமச்சந்திரன் ஹாஸ்யம் இதில் சோபிக்கவில்லை. பெண் வேஷம் போட்டுக் கொண்டு வருவது ஒரு புதுமை ஹாஸ்யம் என்று இந்தக் காலத்தில் நினைக்கவும் முடியாது.

அடுக்குத் தொடர், பொன்மொழிகளாக வசனம் இல்லாவிட்டாலும் கொஞ்சம் ரசிக்கும்படியாகவாவது இருக்கலாம். பழைய பத்தாம் பசலி ரீதியில் வசனம் இருக்கிறது.

கதையில் திருதிருப்பும், ரசமும் சம்பவக் கோவையும் சரியாக இல்லாததினாலோ என்னவோ பாட்டுக்கள் அதிகமாக இருப்பதுபோல ஆயாசத்தைக் கொடுப்பதோடு ரசிக்கவும் முடியவில்லை.

குழந்தைக்காகவே முனிவர் கொடுத்த மாம்பழத்தைப் பெற்றுக் கொண்ட அரசர்; குற்றமற்ற மனைவி, மாம்பழத்தின் மகிமையால் கர்ப்பமுற்றிருப்பதை எடுத்துச் சொல்லியும் நம்பாமல் கொல்ல உத்திரவிடுவது பொருத்தமாக இல்லை. கண்ணைக் குருடாக்கியவள் ஆசைநாயகி விலாஸவதி என்று கடைசியில் அறிந்தும், தன் மனைவியை சந்தேகிக்கும் தனக்குத் கண்ணைக் கொடுத்தவன் தன் மகன் என்று மனைவியும் முனிவரும் சொல்வதைக்கூட நம்பாமல் கத்திக் கூச்சல் போடும் அரசனை முட்டாள் என்று நினைக்காமல் வேறு எப்படிக் கருதுவது.

இப்படி காட்சிக்கு காட்சி சம்பவத்துக்குச் சம்பவம் சொல்லிக் கொண்டே போனால் நீண்டுவிடும். சர்க்கார் பரிசு பெறும் அளவுக்குத் தங்களைத் தகுதியாக்கிக் கொண்ட கம்பெனியார் இப்படி உளுத்துப் போன ஒரு கற்பனைக்கு இவ்வளவு செலவு செய்ய வேண்டியதில்லை.

அரங்க நிர்மாணம், ஆடையணிகள் நன்றாக இருக்கிறது. ஜெமினி வாசனை ஆங்காங்கே வீசுகிறது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு படத்தை ஜெமினியார் தங்கள் வெளியீடாக எப்படி ஏற்றுக் கொண்டார்கள் என்பது வியப்பிற்கு உரிய ஒரு விஷயம்.

மொத்தத்தில் படம் - கதை - ஆந்திரநாட்டுக்கு ஏற்றதாக இருக்கலாம். குலேபகாவலி, பால நாகம்மா முதலிய கதைகளின் தழுவலாக அமைந்த சௌதாமினி தமிழ் நாட்டாரிடம் எவ்வித பரபரப்பையும் உண்டாக்கவில்லை. சௌதாமினி ராஜராஜேஸ்வரி யாருக்கு ஒரு தோல்விதான்.

வெள்ளிக் கூஜாவும் வெற்றிலைப் பெட்டியும்

என் நண்பன் மோஹன ரங்கனுடன் தான் சென்னையில் பல இடங்களுக்குப் போயிருக்கிறேன். போகக்கூடாத, சாதாரணமாகப் போகக் கிடைக்காத இடங்களுக்கெல்லாம் போயிருக்கிறேன். நான் சென்னையில் தங்கியதெல்லாம் நாலைந்து மாசங்கள் தான். அதற்குள்ளாகவே மோஹனரங்கன் எனக்குச் சென்னையில் சொர்க்க லோகத்தையும் நரகலோகத்தையும் காட்டி விட்டான்.

மோஹனரங்கன் எனக்குச் சிநேகமான விஷயத்தை இங்கு இப்போது சொல்ல விரும்பவில்லை நான். இந்தக் கதைக்கு அது அவசியமுமில்லை. இந்தக் கதைக்கு ஆதாரமான சம்பவம் சென்னையின் பல கந்தருவ லோகங்களில் ஒன்றில் நடைபெறுகிறது. மோஹனரங்கன் அந்தக் கந்தர்வ லோகங்களில் ஒன்றில் தனியாக வேலை பார்ப்பவன் என்று மட்டும் இங்கு சொல்ல நான் விரும்புகிறேன்.

ஒரு நாள் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டு நின்றேன் நான். மோஹனரங்கன் வந்து நின்ற பஸ்ஸிலிருந்து என்னைக் கண்டதும் இறங்கினான்: "அஹோ! வாரும் பிள்ளாய் சத்ய சிகாமணியே! வருகிறீரா" என்றான்

எனக்கு எங்கேயும் போக அவசரம் இல்லை, "வருகிறேன்" என்றேன். பிறகு தான் "எங்கே?" என்றேன்.

புது இடம் எதுவானாலும் நான் போகத் தயார்தான். தவிரவும் மோஹனரங்கன் பரம ரஸிகன். இன்றைய கந்தர்வ லோகமான சினிமா ஸ்டுடியோக்களுடன் தொடர்பு கொண்டவன். ரஸமான இடங்களுக்குத்தான் என்னை அழைத்துப் போவான்.

"வரயா என்று என்னைக்கேட்டு விட்டு இறங்கி விட்டால்?" என்றேன் நான்.

"அது தானையா சூக்ஷ்மம் - அது தான் சூக்ஷ்மம்." என்றான் மோஹனரங்கன், "நான் பஸ் ஏறிய இடத்தில் யாரும் நண்பர்களில்லை, இன்னும் காபிகூடச் சாப்பிடவில்லை" என்றான்.

"பர்ஸ் காலியோ?"

"என்று நிரம்பியிருந்தது?" என்றான் மோஹனரங்கன்.

காபி சாப்பிட்டோம். டாக்ஸி கூப்பிட்டான் மோஹனரங்கன், என் பர்ஸில் போதிய பணம் இருக்கிறதா என்று முதலில் பார்த்து விட்டு. டாக்ஸிக்காரனுக்கு இடத்தைச் சொன்னான் மோஹனரங்கன்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது இடம் ரொம்பவும் பிரபலமான இடம் தான். அந்த மாதிரி இடத்துக்குப் போகப்போன ஜன்மத்தில் புண்ணியம் ரொம்பவும் பண்ணியிருக்க வேண்டும். முகத்தை என் துண்டால் துடைத்துக் கொண்டேன். துண்டு அழுக்கானது தெரிந்தது; முகம் என்னவாயிற்று என்பது தெரியவில்லை.

"டாக்ஸிக்குப் பணத்தைக் கொடுத்து விடப்பா" என்றான் மோஹனரங்கன். கொடுத்தேன். கந்தருவலோகத்தின் வாசலில் நின்று கொண்டி

'ஸத்யன்'

ருந்த எனக்கு எத்தனை ரூபாய் கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. டாக்ஸி டிரைவர் முணு முணுக்காமல் போனதில் இருந்து சற்று அதிகமாகவே கொடுத்து விட்டேன் என்றுதான் தோன்று கிறது.

கந்தர்வலோகத்தின் காவல் கட்டு களைக் கடந்து முன்னறையை நாங் கள் எட்டும்போது, முன்னறையில் யாரும் இல்லை. ஆனால் மின்சார விசிறி சுழன்று கொண்டிருந்தது. அறை நடுவிலிருந்த ஒரு வட்ட மேஜையின்மேல் ஒரு வெள்ளிக் கூஜாவும் ஒரு வெற்றிலைப் பெட்டி யும் இருந்தன. ஹாட் ராக்கில் நாலைந்து தொப்பிகள் தொங்கிக் கொண்டிருந்தன.

அறை நடுவில், விசிறிக்கடியில் கிடந்த ஒரு சோபாவில் என்னை உட்காரச் சொன்னான் மோஹன ரங்கன். விசிறியை இன்னும் சற்று வேகமாகச் சுழலவிட் டான். "வேலை அதிக நேரம் பிடிக் காது. அரைமணிக் குள்ளாகவே வந்துவிடுவேன். இரு!" என்று சொல்லிவிட்டு கந்தருவலோகத்தின் மர்மமான பாகங்களுள் சென்று மறைந்து விட்டான்.

சோபா சுகமாக இருந்தது. காற் றும் சுகமாகத்தான் இருந்தது. விசிறி சிறிதும் கிறீச்சிடாமல் சுழன்று கொண்டிருந்தது. நான் கண்ணயர்ந்து விட்டேன் என்று நினைக்கிறேன்.

"இதோ பார் அக்கா" என்றது ஒரு குரல்.

"மூதேவிக்கும் மூத்தவனே! யாரையடா அக்கா என்கிறாய்?" என்றது இன்னொரு குரல்.

"உன்னைத்தான் பாட்டி! உன் னைத்தான்" என்றது முதல் குரல்.

"பாட்டியாமே பாட்டி! சின்னத் தங்கச்சியே பாட்டியானால், நீ என்னவாம்!" என்றது இரண்டா வது குரல் கோபமாக.

"சின்னத் தங்கச்சியாமே! சின் னத் தங்கச்சி! உன் வயது முதலிய விவரங்களெல்லாம் எனக்குத் தெரி யும் பொம்பிளே!" என்றது முதல் குரல்.

நான் தூக்கத்தில் என் அகக் காதுகளைத் திறந்து வைத்துக் கொண்டு கவனித்தேன். வட்ட மேஜை மேலிருந்த வெள்ளிக்கூஜா வும வெற்றிலைப் பெட்டியும் பேசிக் கொண்டிருந்தன. சுவாரசியமான விஷயம் வரும் என்று சந்தடி செய் யாமல் கவனமாகக் காத்திருந் தேன்.

"என் வயசு உனக்குத் தெரி யனுமானால் நீ என்னை விட மூத்த வன் என்றுதானே ஏற்படும்......?" மூடிப்பிடி இரண்டுதரம் கோபமா கப் படபடவென்று அடித்துக் கொண்டு சிரித்ததும், கூஜா தான் பெண், வெற்றிலைப் பெட்டி தான் ஆண் என்று எனக்குள் நானே முடிவு செய்து கொண் டேன். அது நியாயம்தான் என்று எனக்கும் தோன்றியது.

"இதோ பார். வயசைப்பத்தி இப்ப என்ன விவாதம் வந்தது, நமக்குள். இரண்டு பேருமே யுக்த வயசைக் கடந்துவிட்டவர்கள்தான். யாரும் நம்மை இனி வாலிபர்கள் என்று சொல்லிவிடப் போவ தில்லை......"

வெள்ளிக் கூஜா சொல்லிற்று: "மூத்தண்ணாவே இதோ பாரும். உம்மைப்பற்றி எது வேண்டுமானா லும் நீர் சொல்லிக் கொள்ளும். என் விஷயத்தில் மட்டும் குறுக்கிட வேண்டாம், அவ்வளவுதான்; சொல்லிவிட்டேன்!"

"அடேயப்பா! பூச்சி காட்ட றயே! என்ன பண்ணி விடுவா யாம் நீ?"

"என்ன பண்ணுணுமாம்? உன் பக்கப் திரும்பிப் பார்க்காமலே இருந்துவிடுவேன் அவ்வளவுதான்."

"உன் கடைக்கண் பார்வைக் காக யாரோ ஏங்கிக் கிடக்கற மாதிரித்தான் பேசறே" என்றது வெற்றிலைப் பெட்டி.

"ஏங்கித் தவங்கிடந்த நாள் இவ்வளவு சீக்கிறமே மறந்துவிட்டதா?" என்றது வெள்ளிக் கூஜா.

"சிறுக்கி கொண்டையை முடிச்சிக்கிட்டாளாம் — உலகமே தூரத்துது தூரத்துது என்றாளாம்!" என்று கேலி செய்தது வெற்றிலைப் பெட்டி.

"மூத்தண்ணுவே! உமக்குக் கிறுக்கு தலைக்கேறிப்போச்சு! வயசும் அதிகமாகிப் போச்சு. உம்ம எசமானரைப்போல உமக்கும் பல்லெல்லாம் விழுந்துபோச்சு. அவர் பெய்ப்பல்லு கட்டிவிட்டாரு-உமக்கு அது இல்லை, அபமா கையாளுகிட்டே கொடுத்துத் தூக்கிக்கிட்டு வரச் சொல்றாரு..."

வெற்றிப் பெட்டிக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. பாக்கு வெட்டியை நெறுக்கிப் படபடவென்று கடித்தது பல்லை, "போனால் போறது என்றுபார்த்தால்... உன் ரகசியத்தைப் பூராவும் அம்பலப்படுத்தி விடுவேன் ஜாக்கிரதை, என்னிடம் அதிகமாக விளையாடாதே! என்றது கோபமாக.

"அம்பலப்படுத்த உனக்கு ரொம்ப ரொம்ப ரகசியம் தான் தெரியும்" என்றது வெள்ளிக் கூஜா

"உன் பெய்க்கெளரவம் பூராவையும் அழித்துத் தொலைத்துவிட எனக்குத் தெரிந்தது போதுமே!"

வெள்ளிக் கூஜா முகத்தைத் திருப்பிக் கொண்டது. மேலே பேசுவதில்லை என்பது போல வாயை மூடிக்கொண்டது.

"ஏதோ நல்ல படியா சொல்ல வந்தால்...! நம்பரெண்டு பேருக்குமே."

மூக்கைப் பிடித்துக் கொண்டு வெள்ளிக் கூஜா "இங்கென்ன துர்நாற்றம் வீசுகிறது" என்று சுவரைப்பார்த்துக் கேட்டது வெள்ளிக் கூஜா.

"இப்படி எல்லாம்..."

கண்ணைப் பொத்திக் கொண்டது வெள்ளிக் கூஜா. "இங்கே என்ன கோரக் காட்சிகள் தென்படுகின்றன?"

"ஏதேது? ஏதோ ஆறுமாசச்சிநேகிதமாச்சேன்னு பார்த்தால்..."

காதைக் கைவிரல்களால் மூடிக் கொண்டது "காதிலே காராசம் பாய்கிறது" என்றது வெள்ளிக் கூஜா.

"கடைசித் தடவையாக......" என்று ஆரம்பித்தது வெற்றிலைப் பெட்டி.

"விசிறியே சற்று வேகமாகத் தான் சுற்றேன்" என்றது வெள்ளிக் கூஜா.

"சரிதான்! சரிதான்! விஷயம் இவ்வளவு முற்றிப்போச்சா?" என்றது வெற்றிலைப் பெட்டி கோபத்தில் ஒரு பாக்கை வெடுக்கென்று வெட்டியது. வெள்ளிக் கூஜா சப்தம் போடவில்லை.

"சற்று முன் துர்நாற்றம் அடிக்கிறது என்றாயே! கழுவாத உனக்குள் ஊளை பால் என்ற பெயருடன், உற்சாகம் தருவதற்கு அவ்வப்போது உபயோகமாகிற பானத்தின் வாசனையாக இருக்கலாம்"

வெள்ளிக் கூஜா பதில் சொல்லவில்லை, ஆனால் கண்களை மட்டும் பரக்க விழித்தது.

"நேரக் காட்சிகள் என்றாயே, சற்றுமுன், உன் யசமானியின் வீட்டில் ஆறவுக்குப் பின் இரவு... ஆனால் மேலே சொல்வானேன்?" என்றது வெற்றிலைப் பெட்டி.

வெள்ளிக் கூஜா இதற்கும் பதில் சொல்லவில்லை.

வெற்றிலைப் பெட்டி மேலும் சொல்லிற்று. "காலே நாராசம் என்றாயே சற்றுமுன் அது என்ன தெரியுமா? உன் யசமானி சொந்தக் குரல் எடுத்துப்பாடும் போது உன் காதில் விழுவது நாராசம்"

"ஆயிடுச்சா?", என்று கேட்டது வெள்ளிக்கூஜா ரௌத்திராகாரமாய்.

"யசமானியின் கணவன் என்று சொல்லிக் கொள்ளும் பேடியின் கைக் கூஜாவே..." என்று வெற்றிலைப் பெட்டி தொடங்கு முன் அங்கு பிரளயமே தோன்றிவிட்டது போலிருந்தது.

இதில்லெல்லாம் சம்பந்தப்பட்டதாகக் காட்டிக் கொள்ளாமலே மேலே சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறி, அமைதியை அந்த நிலைநிறுத்துவ பொருட்டு, நாலைந்து அணுகுண்டுகளை விசிறி எறிந்தது.

நான் விழித்துக் கொண்டேன். மோஹனரங்கன் என் சோபாவின் பக்கத்தில் நின்றிருந்தான். அறையில் ஏழெட்டுப் பேர் இருந்தார்கள். மேலே விசிறி சுழன்று கொண்டு தான் இருந்தது, ஆனால் மேஜை மேல் வெள்ளிக் கூஜாவையோ வெற்றிலைப் பெட்டியையோ காணவில்லை

"என்ன ஐயா அரை மணியில் வரதாகப் போனவர் 10 நிமிஷத்தில் வந்து விட்டீரே!" என்றேன் நான்.

"இன்று ஷூட்டிங் இல்லை!" என்றான் மோஹனரங்கன்

"இனிமேல் எங்கு இருக்கப் போறது? இந்த ஜோடி மறுபடி சேரப்போகிறது ஏது?" என்றான் அறையிலிருந்த ஒரு ஆசாமி.

"அப்படி என்ன?"

"நட்சத்திரங்களுக்கிடையே சண்டை"

"ஏன்?"

"யார் கண்டார்? திடீர்ச் சண்டை இது. ஆறுமாசக் காதலர்கள் பிரிந்து விட்டார்கள். அவள் இனி அவனோடு நடிக்க மாட்டேன் என்கிறாள். அவன் இனி அவளோடு நடிக்கமாட்டானாம்" என்றான் மோஹனரங்கம், "போகலாம்" என்று கொண்டே.

கந்தருவ லோகத்தின் வாசலில் டாக்ஸிகளுக்கா பஞ்சம்? ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டோம்.

"நாம் உள்ளே போகும்போது மேஜைமேல் வைத்திருந்ததே வெற்றிலைப் பெட்டி......"

"அது பிரபல நட்சத்திரம் பாதாம் பற்பினுடையது" என்றான் மோஹனரங்கம்

"வெள்ளிக் கூஜா பிரபல நடிகை பாஸந்தி பாயினுடையது; இல்லையா?" என்றேன்.

நான் கந்தருவ லோகத்தின் முன்னறை வரையில் போய்விட்டு வந்திருந்தேன். ஆனால் கந்தருவ லோகத்து அப்ஸரஸ்களும் கந்தர்வர்களும் என் கண்களில் படவேயில்லை. என் கண்களில் பட்டதெல்லாம் ஒரு வெள்ளிக்கூஜாவும் ஒரு வெற்றிலைப் பெட்டியும் தான். என் காதில் விழுந்ததெல்லாம் பாஸந்தி பாயையும் பாதாம் பற்பியையும் பற்றிய ஒரு வதந்தி தான்!

இந்தப் பார்வைகள் பேசிக்கொள்ளும் பேச்சு உங்களுக்குப் புரியவேண்டுமானல் 'மாயக்காரி'யை நீங்கள் பார்க்க வேண்டும். ஜோடிகள் யார் என்று இன்னுமா தெரியவில்லை. அஞ்சலி — நாகேஸ்வர ராவ் தான்.

அந்தப்பூரண நிலவினில் பொங்கும் உள்ளத்துடன் கையில் மலர்ந்த புஷ்பத்துடன் இப்படி நிற்பது யாருக்காக?......

— எப்போ வருவாரோ?' பாதாள பைரவியில் மாலதி. ..

அரேபியன் நைட்ஸ் கதைக்கு ஹாலிவுட் நட்சத்திரம மேக்கப் போட்டுக் கொண்டிருக்கிறதோ என்று திகைக்கிறீர்களா? மானவதி என்ற தமிழ்ப் படத்தில் B. K. சரஸ்வதி — இப்படிக் கவர்ச்சிகரமாகக் காட்சியளிக்கிறார். —

தேவகி தமிழ்ப்படத்தில் ஒரு காட்சி

நம்பியார்—வி. என். ஜானகி—மாலதி.

மாடர்ன் தியேட்டர்ஸின் 'தேவகி' தமிழ்ப்படத்தில்
ஒய்யார நடனம் ஆடும் பாதுரிதேவியும்
உருத்துப்பார்க்கும் பாலசந்திரனும்.

"என்ன சந்தேகம்? ராஜாம்பாளின் நாட்டியத்திலுமா இப்படி சந்தேகம். துப்பறியவர்களுக்கு எதிலுமே சந்தேகந்தான்" அருணா பிலிம்சாரின 'ராஜாம்பாளில்' நடேசனாகத் தோன்றும் குணசித்திர நடிகர் எஸ். பாலசந்தர்.

'இப்படி ஆடுவேன். என் எழுகைக்கண்டு என் காதலன் மயங்கி விடுவார்' என்று அப்படி ஒத்திகை நடத்துவது அருணா பிலிம் சாரின் 'ராஜாம்பாளுக்கு'. ராஜாம்பாளாக இப்படி நாட்டிய போஸ் கொடுப்பவர் B. K. சரஸ்வதி.

சீர்திருத்தக் கல்யாணமோ? மாலையும் செண்டும் ஏன் அந்த மீசைகூடத்தான் ஜோக்கா இருக்கிறது. மோகன சுந்திரத்திற்காக B. R. பந்துலுவும், சுசிலாவும் இப்படி மாலையணிந்து மகிழ்ச்சியோடு நிற்கிறார்கள்.

லக்ஷ்மிப்பிரா

பேட்டி

இராஜரத்னம்

சென்னை தியாகராய நகரில் ராஜகுமாரி தியேட்டர் ஆரம்பித்தவுடனே, அதன் பக்கத்தில் இருக்கும் லக்ஷ்மிகாந்தன் தெருவில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அடிக்கடி இரண்டு மூன்று பேர் கூட்டாக ஒவ்வொரு வீட்டையும் உற்றுப் பார்த்துக் கொண்டே போக ஆரம்பித்தனர். அப்படி எதைக்கண்டு பிடிக்க அவ்வளவு ஆவலாக அவர்கள், வருகிறார்கள் அடிக்கடி? அதோ இரண்டு பேர் வருகிறார்கள் ஒவ்வொரு வீட்டையும் முறைத்துப் பார்த்துக் கொண்டு. அவர்கள் என்ன பேசிக்கொண்டு வருகிறார்கள் கேட்கலாம்.

"டேய் சோமு, எந்த வீடடா லக்ஷ்மி பிரபா வீடு ரொம்ப தெரிந்தவன் மாதிரி கூட்டிக் கொண்டு வந்தாயே"

"கொஞ்சம் பொருடா தம்பி. அன்றைக்கு ராமசாமி சொன்னான். சந்து திரும்பினவுடன் இடது கைப் பக்கம் இரண்டாவது வீடு, வெளிப்புறத்தில் பூச்செடிகள் நிறைய இருக்கும் என்று. அநேகமாக இந்த வீடாகத் தாண்டா இருக்கும். கொஞ்ச நேரம் நின்று பார்க்கலாம். லக்ஷ்மி பிரபா முகம் உள்ளுக்குள் எங்கேயாவது தென்படுகிறதா என்று"

சிறிது நேரம் நின்றுக் கொண்டிருந்தார்கள். பாவம் அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது. இந்த படை படைக்கும் வெயிலில் லக்ஷ்மி பிரபா அமைதியாக உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருப்பார் என்று. ஜன்னல் பக்கம் அவர் ஏன் வரப் போகிறார். தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே, ஏமாந்த முகத்துடன் ராஜகுமாரி தியேட்டருக்குச் செல்கிறார்கள் படம் பார்க்க. இது மாதிரி எத்தனை ரசிகர்களுக்கு ஏமாற்றமோ.

சரி நான் உள்ளே போகிறேன். மணியோ நாலாகிறது. லக்ஷ்மி பிரபா எங்கேயாவது வெளியே போகக் கிளம்பிக் கொண்டிருக்கிறாரோ என்னமோ தெரியவில்லை. எதற்கும் உள்ளே போய்ப் பார்க்கலாம்.

உள்ளே சென்றதும் 'வணக்கம் வாருங்கள்' என்றாள் ஓர் அழகிய பெண். "அக்கா உள்ளே இருக்கிறாள், மாடியில் போய் உட்காருங்கள் உடனே வந்து விடுவாள"

என்று சொல்லி மறைந்து விட்டாள். நானும் மாடிக்குச் சென்று உட்கார்ந்தேன். உடனே பின் தொடர்ந்தார் லக்ஷ்மி பிரபா. ஆச்சரியமாக இருந்தது, சாதாரணமாக நடிகைகள் செய்யும் வழக்கத்திற்கு மாறாக இருந்ததினால்.

'கலைமணி'க்காக பேட்டிக்கு வந்தேன். முன்னேற்பாடாக வராததிற்கு வருந்துகிறேன். உங்களுக்கு நேரம் இருக்கிறதா பேட்டி கொடுக்க."

"நேரம் இல்லையே. இப்பொழுது ஒத்திகைக்குப் போக வேண்டுமே. என்ன செய்வது. பின்னர் ஒரு நாள் வாருங்களேன். நிதானமாக உட்கார்ந்து பேசலாம்.

"மன்னிக்கவும். பத்து நிமிஷம் கொடுத்தால் போதும், பேட்டியை முடித்துக் கொள்கிறேன்."

"சரி கேளுங்கள்."

கேள்வி: நீங்கள் பிறந்த ஊர்?

பதில்: ஐதராபாத்.

கேள்வி: பிறந்த தேதி?

பதில்: ஞாபகம் இல்லை ஜாதகத்தைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும் ஆனால் வயது இருபத்தைந்து ஆகிறது

கேள்வி: கூடப்பிறந்தவர்கள்?

பதில்: தங்கை சரோஜா ஒருத்திதான்.

கேள்வி: எவ்வளவு தூரம் படித்தீர்கள்?

பதில்: எட்டாவது வரையில் மதுரையில் படித்தேன். பின்னர் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று.

கேள்வி: உங்கள் சினிமாப் பிரவேசம் எப்படி ஏற்பட்டது? நீங்களாகவே சினிமாவில் நடிக்க விரும்பினீர்களா அல்லது யாராவது உங்களை அழைத்துக் கொண்டு போய் சேர்த்தார்களா?

பதில்: என் அப்பாவும் காலஞ்சென்ற ராஜா சாண்டோவும் நெருங்கிய நண்பர்கள். ராஜாசாண்டோ நடித்த வஸாதசேனாவில் எங்கள் தகப்பனார் ராமநாதன் ஒரு முக்கிய பாத்திரமேற்று நடித்திருக்கிறார். அதிலிருந்தே எங்கள் குடும்பத்திற்கும் சினிமா உலகத்திற்கும் ராஜா சாண்டோவினால் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. அந்த நிலையிலேதான் நான் முதன் முதலாக சினிமாவில் நடித்தேன்.

கேள்வி: உங்கள் முதல் படம் எது?

பதில்: குமார குலோத்துங்கா. T. R. ராஜகுமாரி கூட அதில் நடித்தார்கள்.

கேள்வி; பிறகு நீங்கள் நடித்த படங்கள் என்னென்ன?

பதில்: கீதகாந்தியில் மந்திரி மனைவியாகவும், கிருஷ்ண விஜயத்தில் யசோதாவாகவும், அபூர்வசகோதரர்களில் வில்லனின் வைப்பாகவும் திகம்பரசாமியாரில் அலங்காரத் தாசியாகவும் நடித்திருக்கிறேன்.

கேள்வி: தற்சமயம் நடிக்கும் படம் என்ன?

பதில்; ஜூபிடர்ஸ் தயாரிப்பில் வளர்ந்து வரும் ராணியில் நடிக்கிறேன். அதிலும் எனக்கு Vamp பாகமே கொடுத்திருக்கிறார்கள்.

கேள்வி: ஆமாம். நீங்கள் அடிக்கடி இந்த Vamp பாத்திரத்திலேயே நடிக்கிறீர்களே, அப்படி நடிப்பது உங்களுக்குப் பிடிக்கிறதா?

பதில்: பிடித்தமாயிருக்கிறதோ, இல்லையோ அதை யார் கேட்கிறார்கள். ஒப்பந்தத்தில் போடு கையெழுத்து என்கிறார்கள். போட்டபின் கொடுத்த பாகத்தில் நடி என்கிறார்கள் அதன்படி செய்ய

வேண்டி யிருக்கிறது. எனக்கென்னமோ வேறு மாதிரிப் பாத்திரங்கள் ஏற்று நடிக்க ஆசை இருக்கிறது. அதுவும் சோகரஸமான கட்டங்களில் நடிக்க மிகவும் விருப்பமிருக்கிறது. சந்தர்ப்பம் வரவில்லை.

கேள்வி: இதுவரையில் நீங்கள் ந்தப் படத்திலும் கதாநாயகியாக டித்ததில்லையே, உங்களை எந்த ட முதலாளிகளாவது கதாநாயகி ாக நடிக்க அழைத்ததுண்டா?

பதில்: மைசூரிலிருந்து ஒரு டக்கம்பெனியும் இன்னும் இரண் டொரு இடங்களிலிருந்தும் வந் கேட்டார்கள், தாங்கள் எடுக்கும் டங்களில் கதாநாயகியாக நடிக்க. ான்தான் மறுத்துவிட்டேன் முன் ின் தெரியாத கம்பெனியில் நடிக்க ிருப்பமில்லாததால்,

கேள்வி: உங்களுக்கு கதாநாயகி ாத்திரம் கொடுத்தால் திறமை புடன் நடிக்க முடியும் என்ற நம் ிக்கை இருக்கிறதா?

பதில்: நல்ல ம்பிக்கை இருக்கிறது. னக்கு யாராவதுகதாநாயகி ாத்திரம் காடுத்துப் ார்க்கட்டும். ின்னர் அதற் ாக அவர்கள் ருந்தவே ாட்டார்கள்.

கேள்வி: புரா ணப் படங்கள் டிக்கிறீர் ளே. அதஉங் ளுக்குப்பிடிக் றதா?

பதில்: அந்த ாதிரிப் படங் ள் அவசிய ில்லை தான். ராணப் படங்களை அவ்வளவாக வரவேற்பதே, இல்லை.

கேள்வி: பின் எது மாதிரிப் படங்கள் எடுக்கவேண்டும் என்கிறீர்கள்?

பதில்: நம் இந்தியநாட்டுச் சரித்திரத்தை அடிப்படையாகக்கொண்டு படம் எடுக்கலாம். ஏன் நம் தமிழ் நாட்டுச் சரித்திரங்கள் பல இருக்கிறது. நம் தமிழ்நாட்டு மன்னர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பெருமைகளைப் படம் பிடிக்கலாம். சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டும் ஏராளமான படங்கள் எடுக்கலாமே. தற்கால நிலைக்கு இவைகள் தான் தேவையான படங்கள்.

கேள்வி: நம் தமிழ்ப் படங்களில் அநாவசியமாக ஹாஸ்யத்தை கொண்டுவந்து புகுத்துகிறார்களே இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அளவுக்கு மீறிய சாமிக் ஒரு படத்தில்இருக்கக்கூடாது. படத்தை ஒட்டியே ஹாஸ்யம் அமைந்திருக்க வேண்டும். அதுவும் சில சமயங்களில் நம் படங்களில் வரும் ஹாஸ்யம் ரசிக்கக் கூடியதாக இல்லை.

கேள்வி: குடும்பப் பெண்கள் சினிமாவில் சேருவதைப்பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன.

அப்படிச் சேர்ந்தால் கெட்டுவிடுகிறார்கள் என்கிறார்களே இது உண்மையா?

பதில்: குடும்பப் பெண்கள் ஓரளவு நடிக்க முன் வரலாம். ஆனால் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும். தன் வேலையுண்டு தான் உண்டு என்று இருந்து காலந்தள்ள வேண்டுமேயல்லாமல் எல்லோரிடத்திலும் சரளமாகப் பழகவேண்டும் என்று தன்னைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது.

மற்றவர்களிடத்தில் கண்டிப்பாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் கற்பைக் காப்பாற்றிக்கொள்ளும் பொறுப்பு அவர்களிடத்திலிருக்க வேண்டுமே ஒழிய மற்றவர்களிடத்தில் இல்லையென்பதை உணரவேண்டும். நாம் கண்டிப்பாக இருந்தால் மற்றவர் நம்மிடத்தில் ஏன் நெருங்கப் போகிறார்கள்.

கேள்வி: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நம் படவுலகிற்கு பல புதிய முகங்கள் தேவையென்று ஒப்புக்கொள்கிறீர்களா?

பதில்: கண்டிப்பாக. நம் படமுதலாளிகள் புதிய முகங்களுக்கு சந்தர்ப்பமளிக்க வேண்டும். எவ்வளவோ ஆர்வமுள்ள அழகிய இள நடிக நடிகைகள் நடிக்க முன் வருவார்கள். இவர்களை நன்றாக பயன்படுத்த முன் வரவேண்டும்.

கேள்வி: நம்முடைய படங்களின் நீளத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அநேகமாக நம் படங்கள் எல்லாமே அளவுக்கு மீறின நீளமாகத்தான் இருக்கிறது.

என்னைக் கேட்டால் 12 000 அடி அல்லது 13 000 அடியே போதும் என்பேன். அந்த அடிக்குள் கதையை முடித்துவிட்டால் படமும் விறுவிறுப்பாக ஓடும், பார்ப்பவர்களுக்கும் அலுப்புத்தட்டாது.

கேள்வி: நம் படங்களில் பாட்டு அதிகமாக இருத்தல் நல்லதா அல்லது குறைவாக இருத்தல் நல்லதா.

பதில்: இது தலைவலி வேண்டுமா, வேண்டாமா என்று கேட்பது போல் இருக்கிறது. வேண்டிய அளவுக்கு மட்டும் பாட்டுக்கள் அமைத்தல் வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு பாட்டுகள் குறைவாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பட வெற்றிக்கு நல்லது.

கேள்வி: எது மாதிரி பாட்டுக்கள் இருந்தால் நல்லது. அநேகமாக இந்தி மெட்டுகளையே அமைத்து பாட்டுக் கட்டுகிறார்களே அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: இந்தி மெட்டுகளை காப்பியடித்து நம் படங்களில் புகுத்துவது அவ்வளவு நல்லதல்ல. நம் கர்நாடக சங்கீதத்திலேயே நல்ல மெட்டுகள் இருக்கும் பொழுது அதை பயன்படுத்திக் கொள்ளலாமே.

கேள்வி: நீங்கள் இந்திப் படம் பார்ப்பதுண்டா?

பதில்: அடிக்கடி பார்ப்பதுண்டு.

திகம்பர சாமியாரில் லக்ஷ்மிபிரபா - நம்பியார்

கேள்வி: உங்களுக்குப் பிடித்த இந்தி படம் எது?

பதில்: திலீப் குமாரும், காமினி கௌஷலும் நடித்த "ஷஹீத்".

கேள்வி: பிடித்த ஹிந்தி நடிகை?

பதில்: சாந்தா ஆப்தே.

கேள்வி: பிடித்த இந்தி நடிகர்?

பதில்: திலீப் குமார்.

கேள்வி: ஆங்கிலப் படங்கள் போவதுண்டா?

பதில்: போவதுண்டு.

கேள்வி: எது மாதிரிப் படங்கள் பார்ப்பதில் விருப்பம்?

பதில்: எனக்கு சோகரஸப் படம் (Tragedy) என்றால் உயிர். அதனால் தான் ஹாம்லெட் (Hamlet) நான்கு தடவை பார்த்தேன். ரோமியோவும் ஜூலியட்டும் (Romeo and Juliet) பலதடவைகள் பார்த்தேன். ஸ்டண்ட் படங்கள் எனக்கு கட்டாகப் பிடிக்காது.

கேள்வி: ஏன் உங்களுக்கு சோக ரஸப் படத்தில் அவ்வளவு ஆர்வம்?

பதில்: எல்லாப் படங்களைக் காட்டிலும் சோகரஸப் படங்களைப் பார்த்த பின்னும் அந்த உணர்ச்சி நம் மனதில் அப்படியே நிலைத்து நிற்கிறது. மற்ற படங்கள் பார்க்கிறோம். பிறகு வெளியே வந்தவுடன் அதைப்பற்றி மறந்துவிடுகிறோம். சோகரஸப் படங்களை அவ்வளவு எளிதாக மறக்கமுடிவதில்லை.

கேள்வி: உங்கள் வீட்டுக்குள் நான் நுழைந்த பொழுது என் கண்ணைக் கவர்ந்தது அழகான பூச்செடிகள். இவை வளர்ப்பதில் உங்களுக்கு ஆர்வம் உண்டா?

பதில்: எனக்கு எங்கள் வீடு நிறைய பல்வித வர்ண, வாசமிக்க பூக்கள் எங்கும் மலர வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதன் வளர்ப்பில் நான் கவனம் செலுத்துவதும் உண்டு?

கேள்வி: சர்க்கார் சொல்லுகிறார்கள், வீட்டுக்கொரு காய்கறித் தோட்டம். அமைக்கவேண்டும் உணவு உற்பத்தியை பெருக்க வென்று. நீங்கள் அதுமாதிரி ஏதாவது காய் கறித் தோட்டம் போட்டிருக்கிறீர்களா?

பதில்: சந்தேகமில்லாமல். என் வீட்டின் பின்புறத்தில் போய்ப் பார்த்தால் தெரியும். பலவித காய்கறிகள் பயிரிட்டிருக்கிறேன்.

கேள்வி: காய் கறிகள் என்று சொல்லும் பொழுது ஞாபகம் வருகிறது. உங்களுக்கு சமையல் செய்யத் தெரியுமா, வீட்டில் நீங்கள் சமைப்பது உண்டா?

பதில்: அடிக்கடி நானே சமைப்பதும் உண்டு. ஆனால் சமையல் எப்படி இருக்கும், என்று மட்டும் என்னைக் கேட்காதீர்கள். அதைச் சாப்பிடுகிறார்களே வீட்டில் அவர்களைக் கேளுங்கள்.

கேள்வி: சங்கீதத்தில் பயிற்சி உண்டா?

பதில்: கொஞ்சமாகத்தான் தெரியும். அதனால் தான் நான் படங்களில் பாடுவதில்லை. ஆனால் வீணை மட்டும் நன்றாக வாசிக்கத் தெரியும்.

கேள்: யார் சங்கீதம் உங்களுக்குப் பிடிக்கும்?

பதில்: M. S. சுப்புலக்ஷ்மி கச்சேரி என்றால் எனக்கு மிகவும் பிரியம்.

கேள்வி: பரத நாட்டியம் தெரியுமா?

பதில்: தெரியும். பயின்றும் வருகிறேன்.

கேள்வி: பரத நாட்டியத்தில் யார் நாட்டியம் உங்களுக்குப் பிடிக்கும்?

பதில்: பால சரஸ்வதி நாட்டியமும் பேபி கமலாவின் நாட்டியமும் எனக்கு மிகவும் பிடிக்கிறது.

கேள்வி: வீட்டில் சும்மாயிருக்கும் பொழுது பத்திரிகைகள், புத்தகங்கள் படிப்பதுண்டா?

பதில்: படிப்பதென்றால் எனக்கு மிகவும் ஆசை. எங்கள் வீட்டில் சாதாரணமாக எல்லா பத்திரிகைகளும் வருவதுண்டு. 'Illustrated Weekly'யை மிகவும் விரும்பி. பார்ப்பதுண்டு. தமிழ் நாவல்களும் சில சில சமயங்களில் படிப்பேன்.

கேள்: ரேடியோ கேட்பதுண்டா? சாதாரணமாக எந்த ஊரை வைக்க கேட்பீர்கள்?

பதில்: திருச்சி, சென்னை இதில் இரண்டில் எங்கு நல்ல நிகழ்ச்சி இருக்கிறதோ அங்குதான் கேட்பது. படித்துக்கொண்டே ரேடியோ கேட்பதும் உண்டு.

கேள்: சாயந்திர வேளைகளில் வீட்டில் இருக்க நேரிட்டால் ஏதாவது விளையாட்டு விளையாடுவதுண்டா?

பதில்: Ring Tennis எனக்கு மிகவும் பிடித்தமான ஆட்டம். எங்கள் வீட்டுப் பின் பக்கத்தில் ஒரு கோர்ட் (Court) அமைத்திருக்கிறேன். அதில் தான் விளையாடுவேன்.

கேள்: உங்களுடன் கூட யார் சாதாரணமாக விளையாடுவது?

பதில்: என் தங்கை சரோஜாவும் நானும் தான் விளையாடுவோம். காபி கொண்டு வைத்து விட்டுப் போனாளே அவள் தான் சரோஜா.

கேள்: உங்கள் தங்கை சரோஜா என்ன செய்து கொண்டிருக்கிறாள்?

பதில்: கூடிய சீக்கிரம் ஒரு படத்தில் நடிக்கப் போகிறாள்.

கேள்; உடை விஷயத்தில் நீங்கள் எப்படி? விலையுயர்ந்த தணி மணிகள் மேல் விருப்பம் அதிக [illegible]

பதில்: அப்படியொன்றும் இல்லை. மிக்க சாதாரணமான உடையிலேயே இருக்க பிரியம் அதிகம். பட்டுப்புடவையே வேண்டும் என்ற விருப்பம் இல்லை. எல்லா வகைகளையும் விரும்பி உடுத்துவேன்.

கேள்: நகையார்வம் உண்டா?

பதில்: கிடையாது. அதிக நகைகள் போட்டுக் கொள்வது எனக்குப் பிடிக்காது.

தீக்ஷா' என்ற தெலுங்குப் படத்தில் ஜி. வரலக்ஷ்மி இவ்வளவு சாதுவாக இரு குழந்தைகளையும் அணைத்துக்கொண்டு அம்மாவாக நடிக்கிறார்.

கேள்: சினிமாவில் நடிக்கிறீர்களே உங்களுக்கு ஏதாவது குறிக்கோள் இருக்கிறதா?

பதில்: என்னால் முடிந்தவரை சினிமாக் கலை வளர்வதற்கு பாடுபட வேண்டும் என்பதே ஒரு முக்கிய கொள்கை.

கேள்: உங்களுக்குப் பிடித்தமான டைரக்டர் யார்?

பதில்: டைரக்டர் சுப்ரமணியம் தான்.

கேள்: உங்களுக்கு ரசிகர்களிடத்திலிருந்து கடிதங்கள் வருமே?

பதில்: வருகிறது.

கேள்: மாதம் சுமார் எவ்வளவு கடிதங்கள் வருகிறது?

பதில்: சாதாரணமாக நாற்பதுக்குக் குறையாமல் வருகிறது.

கேள்: எந்த மாதிரிக் கடிதங்கள் உங்களுக்கு வருகிறது?

பதில்: அதை மட்டும் கேட்காதீர்கள். சில கடிதங்கள் ஆபாசமான முறையில் எழுதப்பட்டு வருகின்றன. சிலர் என் நடிப்பைப் பாராட்டி எழுதுகிறார்கள். சிலர் என்னுடைய போட்டோவைக் கேட்டு எழுதுகின்றனர்.



கேள்: இதற்கெல்லாம் நீங்கள் பதில் எழுதுவதுண்டா?

பதில்: இல்லை.

கேள்: போட்டோக்கள் யாருக்காவது அனுப்புவதுண்டா?

பதில்: முந்தியெல்லாம் அனுப்பி வந்தேன். இப்பொழுது அதையும் நிறுத்தி விட்டேன். எப்பொழுதாவது இஷ்டப்பட்டால் அனுப்புவதுண்டு.

கேள்வி: இந்த ரசிகர்களைப் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?

பதில்: இவர்கள் எங்கள் நடிப்பைப்பார்த்து ரசிப்பதோடு நின்று விட்டால் மிகவும் நன்றாயிருக்கும். நாங்கள் காரிலோ, ரயிலிலோ சென்றால் ஒவ்வொரு இடத்திலும் எங்களைச் சூழ்ந்து நின்று கொள்கிறார்கள். காதில் கேட்க முடியாதபடி அசங்கியமாக சில சமயங்களில் பேசுகிறார்கள். நாங்கள் எங்கு போகிறோம் எங்குவருகிறோம் என்று எங்களுக்குத் தெரியா விட்டாலும், இவர்களுக்கு எப்படித்தான் தெரிகிறதோ, எங்கே போனாலும் எங்களை விடமாட்டேன் என்கிறார்கள். அன்று ஜெமினி அபூர்வ சகோதரர்கள் பிரத்யேக காட்சி. நடந்தபொழுது இவர்கள் கும்பல் கூடி காரில் வந்த ஒரு பிரபல நடிகையைச் சுற்றி நின்று காரையே நசுக்கி விட்டார்கள். இனியாகிலும் இவர்கள் எங்களைத் தொந்தரவு

* * *

இந்தப் பார்வைகளும அந்தக் குற்றச்சாட்டும் 'தீக்ஷா' படத்திற்காக. சுந்தர்ராவ், கட்'டக், சாந்தா.

* * *

"இப்படி வெயிலில் எத்தனை நேரம் உட்கார்ந்து கொண்டு போஸ் கொடுப்பது?"

'ரத்தபந்தம்' மலையாளப் படத்தில், வாசுதேவ குருப், சரஸ்வதி.

செய்யாமல் இருந்தால் நன்ருயிருக்கும். இவர்களுக்குப் பயந்தே நாங்கள் சினிமாவுக்கோ நாடகததுக்கோ அல்லது மற்ற பொதுக் கூட்டங்களுக்கோ போக முடியவில்லை.

கேள்வி: யாராவது ரசிகர்கள் உங்களைத்தேடி வீட்டுக்கு வந்ததுண்டா?

பதில்: அதையேன் கேட்கிறீர்கள். அன்ருெரு நாள் திடீரென்று இரண்டு பேர் வீட்டுக்கு வந்து "லக்ஷ்மி பிரபா வீடு இது தானே" என்ருர்கள். என்னுடைய அப்பா வந்து அவர்களிடம் பேசினர். இரண்டு பேரும் திருப்பதியிலிருந்து வந்து ராஜகுமாரி தியேட்டரில் படுக்கையை வைத்துவிட்டு, நேரே எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிருர்கள் அதில் ஒருவனுக்கு சினிமாவில சேர மிகவும் ஆசையாம். நான் எப்படியாவது அவனை சினிமாவில்சேர்த்து விடவேண்டுமாம். சினிமாவில சேராமல் அவன் ஊருக்குத் திரும்பப் போவதே இல்லையென்ருன். அன்று ஹோட்டலில் அவர்கள் இருவருக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்து அந்தப் பையனுடைய வீட்டு விலாசத்தை கண்டறிந்து அவனுடைய தகப்பனருக்குக் கடிதம் எழுதினர் என் அப்பா. பிற்பாடு திருப்பதியிலிருந்து அந்தப் பையனுடைய தகப்பனர் வந்து பையனுக்கு புத்திமதி சொல்லி இருவரையும் அழைத்துக் கொண்டு போனர்.

அடிக்கடி சில பெண்கள் வேறு என் வீட்டிற்கு வந்து எனக்குப் பாடத்தெரியும், ஆடத்தெரியும் என்னையும் சினிமாவில் சேர்த்து விடுங்கள் என்று வருகிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லி யனுப்புவதே பெரிய வேலையாயிருக்கிறது.

கேள்வி: நீங்கள் ஸ்டுடியோவிற்கு போவது தவிர வேறே ஏதாவது கூட்டத்திற்கோ அல்லது விழாவிற்கோ வந்து கலந்து கொண்டதுண்டா?

பதில்: சென்ற வருஷம் டிசம்பர் மாதம் மாத்திரம் சென்னை சினிமா ரசிகர் சங்கப், Y. M. C. A. கார்னிவலில் "உங்கள் நட்சத்திரத்தைத் தேர்ந்தெடுங்கள்" (Choose Your Star) என்று ஒரு ஸ்டால் நடத்தினார்கள். அதைத் திறந்து வைக்க என்னை அழைத்தார்கள் நான் அதற்கு இணங்கி, திறந்து வைத்தேன்.

கேள்வி: ஸ்டுடியோவில் நீங்கள் நடிக்கும் பொழுது ரசமான நிகழ்ச்சி ஏதாவது நடந்தது நினைவிருக்கிறதா?

பதில்: யோசனை பண்ணித்தான் சொல்லவேண்டும். உம் இப்பொழுது ஞாபகம் வருகிறது. அன்று ஒருநாள் ஸ்டுடியோ வேலையாளிடம் பணம் கொடுத்து 'பேசும் படம்' வாங்கிவரச் சொன்னோம். சரியென்று போனான், சில நேரம் கழித்து ஒரு பொட்டலத்தைக் கொண்டு வந்து கொடுத்தான், ஆவலாகப் பிரித்துப் பார்த்தோம் 'பேரிச்சம்பழம்' இருந்தது. எல்லாரும் இந்த வேடிக்கையை அநுபவித்தோம்.

கேள்வி: கேட்க வேடிக்கையாகத்தான் இருக்கிறது. உங்களுக்கு நிறைவேறாத ஆசை ஏதாவது இருக்கிறதா?

பதில்: இருக்கிறது. எனக்கு பல ஊர்கள் சுற்ற வேண்டும் என்ற ஆசையிருக்கிறது. அதிலும் முக்கியமாக ஐரோப்பா அல்லது அமெரிக்கா போய்ப்பார்க்க வேண்டும் என்று இருக்கிறேன். என்றைக்காவது நீங்கள் பத்திரிகைகளில் லக்ஷ்மி பிரபா அமெரிக்கா செல்கிறாள் என்று படித்தால் எந்த லக்ஷ்மி பிரபா என்று திகைக்காதீர்கள். அது நானாகத்தான் இருக்கும்.

பதில்: ரொம்ப மகிழ்ச்சி இவ்வளவு நேரம் பொறுமையாக எனக்கு பேட்டி கொடுத்தது பற்றி மிகவும் நன்றி. பத்து நிமிஷம் என்று அரை மணி நேரம் எடுத்துக் கொண்டேன் என்றேன்.

"அதனால் பரவாயில்லை. தினமுமா இது மாதிரி நேரப்போகிறது" என்றார் லக்ஷ்மி பிரபா.

லக்ஷ்மி பிரபா மிகவும் மரியாதையுடனும் பரிவுடனும் பேட்டிகொடுத்தார். அவரிடத்தில் அடக்கம் இருக்கிறது. முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆசையிருக்கிறது. நல்ல முகவெட்டும் இருக்கிறது. முக்கிய பாத்திரம் கிடைத்தால் வெற்றியுடன் நடிக்கமுடியும் என்ற நம்பிக்கையிருக்கிறது. சீக்கிரம் இவரும் முன்னணியில் இருக்கும் பெரிய நட்சத்திர வரிசையில் இடம் பிடித்துக்கொள்வார் என்பதில் ஐயமில்லை. பொறுத்துப் பார்ப்போம்.

சினிமாவின் கவர்ச்சி

நடிகர் ஜாவர் சீதாராமன்

புராதன காலம் தொட்டு மனிதன் உழைப்பை வெறுத்து ஓய்வை விரும்பியும் வந்திருக்கிறான். உணவு சம்பாதிக்க அல்லது வாழ்க்கையை சவுகரியமாய் நடத்த பொருள் தேவையாயிருப்பதனால் பொருள் ஈட்டம் மிக்க அவசியமான பகுதியாக ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் இருந்து வந்திருக்கிறது. இருந்து வருகிறது. இத்தகைய பொருள் ஈட்டத்தின் நுணுக்கங்களை ஆராய்வதற்கென்று நாளடைவில் ஒரு சாஸ்திரமும் ஏற்பட்டது. அதற்குப்பெயர்தான் (Economics) பொருளாதாரம். பொருள் சம்பாதித்தல் பொருளைச் செலவிடுதல் என்ற இரு தூண்களில் நிற்கிறது அந்த சாஸ்திரம். ஆனால் மனிதன் பெருவாரியாக பொருள் சம்பாதிப்பதை ஒரு அவசியமென்று கருதிச் செய்கிறானே அல்லாது குதூகலமாகச் செய்வதில்லை. ஓய்வுடன் அதிகம் சம்பாதிக்க முடியாதா என்றுதான் கணித மூளை யோசிக்கிறது.

மனித வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் காப்பி கிளப்பில் வேலை செய்பவனிலிருந்து கலெக்டர் வரையில் எல்லோரும் ஓய்வைத் தேடுகின்றனர். ஓய்வை ரசிக்கின்றனர்.

ஓய்வு என்றால் சும்மாயிருப்பது என்று அர்த்தம் கொண்டாலும் ஓய்வு நேரத்தையெல்லாம் தூங்கும் காலம் என்று சொல்லமுடியாது. ஓய்வை நம்பியே பல தொழில்கள் கலைகள் இருக்கின்றன. வாழ்கின்றன. ஓய்வை உறக்கத்தில் கழித்தல் உடலுக்கு நலம் தரலாம் என்றாலும் மனிதன் ஓய்வை விளையாட்டுகளிலும், கேளிக்கைகளிலும் மகிழ்ச்சியூட்டும் சாதனங்களிலும்தான் செலவிடுகின்றான்.

ரேடியோ சங்கீத கச்சேரி, நாட்டிய மன்றம் நாடக அரங்கம், கால்பந்தாட்டம் கிரிக்கெட் என, ஓய்வு மகிழ்ச்சியூட்டும் சாதனங்கள் பல. அதில் சினிமாவும் ஒன்று, இவைகளையெல்லாம் ஓய்வில் பிறந்த குழந்தைகள் என்றுகூடக் கூறலாம்.

மற்றெல்லா சாதனங்களை விட சினிமா மக்களின் அபிமானத்தை மிகவும் கவர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் சினிமா ஒரு தனி பிரத்யேக உலகமாயிருத்தல் தான் காரணம். ஒரு திரைக் கதைக்குள் மற்றெல்லா மகிழ்ச்சியூட்டும் சாதனங்களையும் நுழைக்க முடியும். அதாவது ஒரு சர்க்கஸ், ஒரு நாடகம், ஒரு பாட்டுக்கச்சேரி, ஒரு கால் பந்தாட்டம் இவற்றையெல்லாம் ஒரு திரைப் படத்திற்குள் நுழைக்கமுடியும். இம்மாதிரி நுழைக்கப்பட்டுவதையும் நாம் பார்க்கிறோம். மேலும் மனிதனின் கனவுகளை — அதாவது அவனால் பூத உடலைக் கொண்டு செய்யமுடியாததையெல்லாம் அவன் செய்வதாகக் காட்டலாம். 60 அடி உயரம் தாவுதல

கலங்கி உட்கார்ந்திருக்கும் இக்காரிகைக்கு நேர்ந்த கஷ்டம் என்னவோ தெரியவில்லை.

மோகன சுந்தரத்தில் வரலக்ஷ்மி

நீக்ஷா' என்ற தெலுங்குப் படத்தில் இன்பக் கனவுகளுடன் கணவன் வரவிற்காகக் காத்திருக்கும் பத்தினிப் பெண் வேறு யாருமல்ல ஜி. வரலக்ஷ்மியே தான்.

வேகமாகச் போகும் ரயில்வண்டியிலிருந்து குதித்தல், சிங்கத்தின் வாயைப் பிளந்து அதன் உயிரைக் குடித்தல், ஆகாயத்தில் பறத்தல் திடீரென்று மறைதல், முதலியவை சினிமாவுக்கு மிகவும் சுலபம். ஒருவனை இருவனாகக் காண்பிப்பது பல பேர்களாக காண்பிப்பது சினிமாவின் பிரத்யேக சக்தி, வரம்பில்லாத சக்திகளை கதாநாயகர்களுக்குக் கொடுக்க இயலுகிறது என்ற ஒரு காரணத்தைக் கொண்டு, படம் பிடிக்க முடியாத கதைகளே உலகத்தில் இல்லையென்றுகூடத் துணிந்து கூறலாம்.

நம்ப முடியாதவைகளெல்லாம் தத்ரூபமாய் திரையில் நடப்பதால் சினிமாவின் மயக்கும் சக்தி அல்லது மாயை (illusion) மிகவும் விசேஷமானது. எவ்வளவு சுவாரஸ்யமான நாடகமாயிருந்தாலும் சாதாரண மனிதன் நாடகக் கதையில் அவ்வளவு தூரம் தன்னை மறந்து லயிப்பதில்லை. நாடகத்தில் ஒரு கூட்டமென்றால் மேடைகொள்ளும் அளவு தான் இருக்கமுடியும், ரகசியமென்றால் ஓரளவு உயர்ந்த குரலில்தான் இருக்கும். மேலும் ஒரு முக்கியமான விஷயத்தில் நாடகம் சினிமாவை விட கவர்ச்சியில் குறைகிறது. அதாவது நாடக நடிகனுக்கும் நாடகம் பார்ப்பவர்களுக்கும் இருக்கும் நெருக்கத்தை விட (Intimacy) சினிமா நடிகனுக்கும் சினிமா பார்ப்பவர்களுக்கும் நெருக்கம் அதிகம். அதற்கு காரணம் சினிமாவில் உள்ள "க்ளோஸ் அப்" (close up) வசதியே,

ஒரு பெண் பாம்பைப் பார்த்து அலறி மூர்ச்சிக்கிறாள் என்னும் கட்டத்தை நாடகத்திலென்றால் பெண் நடிகை கீழே குனிந்து பார்ப்பதைக் கொண்டும் (பாம்பு! பாம்பு!) என்று அலறி விழுவதைக் கொண்டும் தான் நாடகம் பார்ப்பவர்கள் ஊகிக்க முடியும். மேடையில் பாம்பு நகர்வதுகூட நாடகம் பார்ப்பவர்களில் எல்லோருக்கும் சரியாகத் தெரிய நியாயம் இல்லை. ஆனால் சினிமாவிலோ பாம்பு நகர்வதை தெளிவாகப் பார்க்கிறோம். பின்பு பெண் வருவதையும் பார்க்கிறோம். பிறகு பெண் பாம்பைப் பார்த்து விட்டு முகவிகாரமடைவதை ஸ்பஷ்டமாகப் பார்க்கிறோம். அவள் பீதியடைந்த முகம் திரை பூராவும் வியாபித்த நம்மையும் அவளுடன் சேர்ந்து "பாம்பு" என்று கூவும்

[illegible]க்கு கொண்டு வந்து விடுகிறது. [illegible] அட்மின் விசேஷ. சுருங்கச் சொன்னால் கைதேர்ந்த டைரக்டர் ஷாட்டுகளை சட்ட திட்டமாக அடுக்குவதினால் நாம் தூரத்திலிருந்து பார்க்கவேண்டியதைத் தூரத்திலிருந்தும் நெருங்கி கவனிக்க வேண்டியதை அருகாமையிலும் நமக்குக் காண்பிக்கிறார்.

சினிமாவின் கவர்ச்சிக்கு எல்லாவற்றையும் மேலான முக்கிய காரணம் அது பார்ப்பவர்களுக்கு கொடுக்கும் சலனம். சலனம் (Motion) நகர்தல் என்றால் திட்டமான வேகத்தில் படங்கள் வெளியில் நகர்வதை நான் குறிப்பிடவில்லை. படம் பார்ப்பவர்கள் சதா நகர்ந்து கொண்டிருப்பதைத்தான் குறிப்பிடுகிறேன். அதாவது ஒரு படத்தில் அழகான தம்பதிகள் 40 கெஜ தூரத்திலுள்ள ஒரு மரத்தடியில் நிற்பதைப் பார்க்கிறோம். அடுத்த வினாடி டைரக்டர், அவர்களுக்கு அரை கெஜ தூரத்தில் நம்மைத் தள்ளுகிறார். அவர்கள் பேசுவதைக் கேட்கும் தூரத்தில் நாம் இருக்கிறோம். மறு வினாடி பெண் நின்ற இடத்தில் இருந்து ஆணைக் கவனிக்கின்றோம். அடுத்த அரை வினாடியில் ஆண் நின்ற இடத்தில் இருந்து பெண் பேசுவதைக் கேட்கிறோம். தம்பதிகள் இருவருக்கும் தெரியாத ஒன்றை நாம் கவனிக்கும்படி செய்கிறார் டைரக்டர். புதருக்குள் ஒளிந்துகொண்டு தம்பதிகளை கண் கொட்டாமல் கவனிப்பவனையும் நாம் கவனிக்கிறோம். புதரில் இருக்கும் ஆசாமி நகர்ந்ததும் நாமும் அவனை பின் தொடர்கிறோம். தம்பதிகளைவிட்டுவிட்டு புதரில் இருக்கும் ஆசாமி காரில் ஏறிய பின் நாம் மரத்தடி காதலர்களிடம் வருகிறோம். இந்த மாதிரி சதா காலம் நாம் படம் பார்க்கும்போது அங்கும் இங்கும் நகர்ந்துகொண்டே இருக்கிறோம். டைரக்டர் போட்ட திட்டப்படி நாம் எல்லோரும் நாற்காலியில் உட்கார்ந்தபடியே மனதால் நகர்ந்து கொண்டே இருக்கிறோம். ஆனால் நாடகம் பார்க்கும்போது

மாடர்ன் தியேட்டர்ஸ் 'தேவகி'யில் நம்பியார், வி. என். ஜானகி, புது முகம் கண்ணப்பா.

நடிகர்கள் நகர்கிறார்களே தவிர பார்ப்பவர்கள் நகர்வதில்லை. மேடையை பார்த்தவண்ணம் இருக்கிறார்கள். வேறுவிதமாகக் கூறினால் நடிகர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும் இடையே உள்ள தூரம் நாடகத்தில் மாறுவதில்லை. ஆனால் சினிமாவில் அது சதா மாறிக்கொண்டிருக்கும். இந்தக் காரணத்தினால் தான் சினிமாவுக்கு Motion Picture அல்லது நகரும் படம் என்று பெயர் வைத்தார்களோ என்னவோ.

சிறு குழந்தைகளிலிருந்து வயதானவர்கள் வரை நம் எல்லோருக்கும் நகர்வதில் அலாதி ருசி. அதனால் தான் ரயில் பயணம் முதலியவற்றில் நாம் காரணமில்லாத குதூகலம் அடைகிறோம், நகராமல் இருக்கும் நிலையாகிய நோய் மரணம் இவற்றை மனித இயற்கை வெறுக்கிறது. அதனால்தான் எந்தப்

‘மாயாரம்பா’ வில் வேணுகானத்திற்குக் கட்டுப்பட்ட ராதை அஞ்சலி.

படத்தைப் பார்க்கும்போது நாம் அதிகம் மானஸீகமாக நகர்கின்றோமோ அதை நாம் அதிகம் ரசிக்கிறோம்.

சலனப் படத்தின் முக்கிய வசியம் சலனமாயிருக்கும்போது நம் நாட்டுப் படங்களின் நிலையென்ன என்பதைப் பார்ப்போம். தமிழ்ப் படங்களை பிடிப்பவர்கள் படங்களின் வெற்றிக்கு அதன் சலன சக்தியை காரணம் என்று நினைப்பதில்லை. அவரவர்களுக்குத் தோன்றியதைச் சொல்கிறார்கள். பல குருடர்கள் ஒரு யானையை வர்ணித்த கதைஎல்லாருக்கும் தெரிந்தது தான். குருடர்கள் சொல்வதிலும் ஓரளவு உண்மை இருக்கிறது யார் கூறுவதும் முழு உண்மையல்ல. அது போல் தான் தமிழ்ப் படம் பிடிப்பவர் நிலையும். ஒரு முதலாளிக்கு ஹிந்தி டியூன்களைப் போட்டதினால் ஒருபடம் வெற்றிகரமாக ஓடியிருக்கும். அவர் ஓடிய படம் பாட்டுப்படம் தான் என்று சாதிப்பார். மற்ற முதலாளி ஒருவரின் அனுபவத்தில் காரசாரமான வசனம் நிறைந்த கதை வெற்றி அளித்திருக்கும். ஆகையினால் அவர் வசனம் தான் படத்தை ஓட்டுகிறது என்பார். மற்ற பலர் சினிமா நக்ஷத்திரங்களின் பேரில் மிக நம்பிக்கை வைக்கின்றனர். நக்ஷத்திர கும்பல் உள்ள படங்கள் நம்பிய முதலாளிகளை நட்டாற்றில் தள்ளினாலும் நக்ஷத்திர மவுஸ் முதலாளியை விட்டு விலகாது. எனக்குத் தெரிந்தவரையில் உண்மை என்ன என்றால் வசனமோ, பாட்டோ, நக்ஷத்திரங்களோ ஒருபடத்தின் வெற்றிக்கு காரணமாகாது. எப்படி சர்க்கரையும் முந்திரிப்பருப்பும் எவ்வளவு அதிகம் இருந்தாலும் அது அல்வா ஆகாதோ அதுபோல் வசனமோ பாட்டோ ஒரு படத்தை வெற்றிப் படமாக்க முடியாது. மேற் சொன்னவையெல்லாம் இருக்கவேண்டிய அளவில் இருக்க வேண்டிய இடத்திலும் இருக்கவேண்டிய பக்குவத்தி

மணமகளில் ஒரு ரசமான இடம். பாலையா, அழ்வார் குப்புசாமி, லலிதா

லூர் இருந்தால் தான் அவைகளுக்கு மதிப்பும் படத்திற்கு கவர்ச்சியும் ஏற்படுகிறது. படத்தின் வெற்றி என்று நான் சொல்லும்போது 'வெற்றி' என்ற பதத்தை சாதாரண அர்த்தத்தில் உபயோகப்படுத்துகிறேன். அதாவது நல்ல வசூலும் பொதுஜனங்களிடையே நல்ல மதிப்பும் பெறுமானால் அந்த படத்திற்கு வெற்றியென்று நான் கருதுகிறேன். போட்டிப் புழக்கத்தில் வியர்த்து விறுவிறுத்துப் போயிருக்கும் பட முதலாளிகள் "வெற்றி" என்ற பதத்திற்கு நான் சொல்லும் அர்த்தத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் திட்டமாகச் சொல்ல முடியாது. அவர்களைப் பொறுத்த வரையில் வெற்றியென்றால் அந்த வருஷத்தில் (அல்லது சில வருஷங்களில்) வெளிவந்த மற்ற படங்களின் பங்கை அந்த படம் வசூலில் "அமுக்கி" இருக்கவேண்டும். அப்போது தான் வெற்றி கிட்டியதாக எண்ணுவார்கள். ஒரு படம் அதற்கென்று செலவிடப் பட்ட பணத்திற்கு மேல் ஒருபங்கு லாபம் சம்பாதித்தாலும் அது 'பரவாயில்லை' என்ற பெயர் தான் அடையும். சினிமா மார்க்கெட்டை பொறுத்தவரையில் "அமோகமான திணறவைக்கும் வெற்றி தான்" வெற்றியென்று கருதப்படும். சாதாரண லாபத்தைக் கொடுத்து உயர்ந்த ரகப்படமென்று அதிக புகழைப் பெற்றாலும் அந்தப் படம் அவ்வளவு மகிழ்ச்சிதராது. ஒரு படத்தின் அமோகமான வெற்றி (Box office) எதிர்பாராமல் ஏற்படும் ஒரு சம்பவம் என்றுதான் நான் கருதுகிறேன். திட்டமிட்டு அதை அடைவது சாதாரணமாக கஷ்டம் என்றுதான் நான் நினைக்கிறேன். இந்த விஷயத்தில் ஜெமினியின் சந்திரலேகாவை விதியை

நிரூபிக்கும் ஒரு விதி விலக்காகத் தான் கொள்ளவேண்டும்.

அமோக வெற்றி என்ற மாய வெளிச்சம் (Magic lamp) தான் முதலாளிகளை பல மாயச் சுழல்களில் கொண்டுபோய்த் தள்ளுகிறது. படம் பிடிப்பதில் இரண்டு விதம் உண்டு. ஒரு நல்ல கதையை தேர்ந்தெடுத்து அதற்கு தகுந்த நடிகர்களைப் பொறுக்கி நிதானமாக அதை ஒரு படமாக்குவது. இது ஒரு விதம் இதில் அதிகப்படபடப்பு கிடையாது. மனக்கவலை அதிகம் கிடையாது. அமோக அபரிமித வெற்றியை அடைந்தே தீருவது என்று திட்டமிட்டு நக்ஷத்திரங்களை பொறுக்கி அதிக ஆரம்பச் செலவு செய்து ஒரு படத்தைத்துவக்குவது இவ்விதமான படப்பிடிப்பில் அமோகமான பண வெற்றி தான் லக்ஷ்யமாய் விடுகிறது. கதை கலை எல்லாம் இரண்டாம் பக்ஷமாய் விடுகின்றன. இந்தப் படம் பிடித்து கொண்டிருக்கும் போதே சில படங்கள் வெளி வந்து அதில் சில அம்சங்கள் ஜனங்களுக்குப் பிடித்து விடும். அந்த ஜன ரஞ்சகமான அம்சங்களை எப்படியாவது நம் படத்தில் நுழைத்து விடுவது என்று தீர்மானிக்கப்படும். கதை உதைக்கும். உதைக்கும் பாகங்கள் கத்தரிக்கப்படும். கதையின் ஜீவகளை போய்விடும். இந்த நிலையில் தான் முதலாளியின் மனநிலை சூதாடுபவனின் மனநிலையை அடையும். விட்டதை திருப்பப் பிடிக்கும் கட்டம், இது. படத்தை பலருக்கு போட்டுக் காட்டுவார் பலர் பல யோசனைகள் சொல்வார்கள். கதையும் பலபாதைகளில் திரும்பும். சில பிரபல நடனமணிகளால் ஆவது படம் பிரகாசப் படாதா? என்று ஒரு யோசனை மறுபடியும் செலவு செலவு. கடைசியில் திருப்தியில்லாமலேயே படம் வெளிவரும். வெளிவந்த படம் வெற்றியடையாமல் போனால் அதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது. "பல பாட்டுகள் பல நடனங்கள் நல்ல வசனம் இருந்தும் படம் தோல்வி ஸார். ஜனங்களை நம்ப முடியவில்லை" என்று சொல்லிக் கொள்வார்கள்.

ஜனங்களை குற்றம் சொல்லியென்ன? படம் பார்க்க வருபவர்கள் பெரும்பாலோர் தங்களையும் தங்கள் மன வேதனைகளையும் சற்று நேரம் மறந்திருக்க வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையானது முதலில் ஸ்வாரஸ்யமான கதை. நல்ல கதையைப் பொறுக்கி விட்டால் படம் பாதி வெற்றியடைந்த மாதிரி தான். "நல்ல கதை" என்றால் எது? இது மிகவும் சிக்கலான கேள்வி. அந்தந்த மக்களின் பண்பாட்டிற்கு பொருத்தமானதும்,

✳

எனெஸ்கேயின்
'மணமகளில்'
துரைராஜ்
தமாஷ் கட்டம்.

✳

அருணா பிலிம்சாரின் 'ராஜாம்பாள்' துப்பறியும் சமூகப்படத்தில் ஒரு ரசமான கட்டம். B. R. பந்துலு, பாலசந்தர். B. K. சரஸ்வதி.

ஸ்வாரஸ்யமான சம்பவங்கள் தொடர்ந்து வரும்படியானதும் நல்ல கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதுமான கதைகள் நல்ல கதைகள் என்று பொதுப்படையாகக் கூறலாப. சிறந்த கதைகள் நாட்டில் பல வருஷங்களாக மக்களின் மனதைப்பற்றி இருக்கும். நல்ல புராணக் கதைகள் அந்த ரகம். கண்ணகியின் கதையை தமிழ் மக்களின் உள்ளத்தில் இடம் பெற்ற கதை என்று கூறலாம். ஒரு மனிதன் கஷ்டப்படுதல், கஷ்டத்திலும் குணத்தை நழுவ விடாமல் இருப்பது, கடைசியில் அவன் கஷ்டம் நீங்கி சந்தோஷப்படுதல் இதுதான் பல ஸ்வாரஸ்யமான கதைகளின் பொது அம்ஸம். பணத்திற்காக கஷ்டப்படுதல், காதலை அடைய கஷ்டப்படுதல், ஒரு தவறும் செய்யாத போதும் மற்றவன் சூழ்ச்சியினால் கஷ்டப்படுதல் என்பதெல்லாம் கஷ்டத்தின் பல வேறுபாடுகள். ஒவ்வொரு ஜனரஞ்சகமான கதையிலும் கதாநாயகன், அவனை விரும்பும் காதலி, அவர்கள் இருவரின் கஷ்டங்களின் உற்பத்திஸ்தானமான எதிரி (Villain) என்ற மூன்று முக்கியமான கதா பாத்திரங்கள் இருப்பார்கள்.

பெரும்பான்மையான கதைகளில் இந்த மூன்று பாத்திரங்கள் இல்லாமலிருக்க மாட்டார்கள். ராமாயணத்தை எடுத்துக் கொள்வோம். அயோத்தியா காண்டத்தில் கதை முடிந்திருக்கும் பட்டாபிஷேகத்துடன்; கைகேயி என்ற எதிரி இல்லாவிட்டால். பிறகு வனவாசம் ஸ்வாரஸ்யமில்லாத வெறும் காலம் கடத்தலாயிருந்திருக்கும், ராவணன் வந்து சீதையைத் தூக்கிப் போகாவிட்டால். கதையை மேலும் மேலும் நகர்த்த கஷ்டமும் அதைக்

கொடுக்கும் எதிரியும் தேவையாய் விடுகிறது ஒவ்வொரு கதையிலும்.

வெற்றிகரமாக படம் ஓட அடிப்படையாக மனித உணர்ச்சியைத் தூண்டக்கூடிய புரியும் படியானஒரு கதை அவசியம் என்று சொன்

'மாயக்காரி' என்ற தெலுங்கு படத்தில் அஞ்சலி, நாகேஸ்வர ராவ்.

னேன். அந்த மாதிரிக் கதைக்குப் பொருத்தமான நடிகர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். இந்த இரண்டும் அமைந்துவிட்டால் பின்பு மற்ற அம்சங்கள் பிரதான்யமடையும். மேற்சொன்ன இரண்டும் அமைந்த படத்தில்நல்லஜனரஞ்சகமான பாட்டுக்களும் ஹாஸ்ய துணுக்குகளும் (gages) உணர்ச்சி மிகுந்த வசனமும் 'களிப்பூட்டும் நடனங்களும்' அமைந்தால் அது மிகவும் பிரபல வெற்றிப் படமாய் விடுகிறது.

மனித உணர்ச்சியைத் தூண்டக் கூடிய கதை என்பதையும் சற்று விளக்க வேண்டியிருக்கிறது. மனிதன் மனநிலை என்பது ஒரு ஆழமான சிக்கலான ஆராய்ச்சி செய்யக் கூடிய விஷயம். அதற்கு பல முகப்புகள் (facts) இருக்கின்றன. பல கோணங்களிலிருந்து மனிதன் மனப்பக்குவத்தை ஆராய முடியும். ஆராயும் கதைகள் பல இருக்கின்றன. உதாரணமாக பொறுமை என்ற உணர்ச்சியின் வாயிலாக ஏற்படும் ஒரு சிக்கலை ஒரு கோணத்திலிருந்து ஆராய்ந்து ஒரு கதையைத் திறமையான எழுத்தாளன் எழுதமுடியும். அதைப் பலர் புரிந்து கொண்டாலும் சிலர்தான் ரஸிக்க முடியும். அதைத் திரைப்பட கதையாக எடுத்தால் வசூல் என்ற விஷயத்தில் ஏமாற்றத்தைக் கொடுக்கலாம் அல்லது நல்ல வெற்றியையும் கொடுக்கலாம். பொதுவாக அந்த மாதிரி நூதன கதைகள் விஷப்பரிக்ஷையாகத்தான் முடியும். காதல், கோபம், சூது, சோகம், இந்த உணர்ச்சிகளைப் பொதுவாகவும் பரந்தவிதமாகவும் சித்தரிக்கும கதைகளைத்தான் பொது ஜனங்கள் மிகவும் ரஸிக்கிறார்கள். ஏன் என்றால் அம்மாதிரிக் கதைகள் பொதுமக்களின் சிந்தனையைத் தூண்டும் அளவில் இருக்க வேண்டுமேயல்லாது அவர்களின் சிந்தனையைச் சோதிக்கவோ அல்லது திடுக்கிட

லோ[?] செய்தால் அது உண்மையாயினும் அவ்வளவு வெற்றி தராது.

நாம் பல விஷயங்களை ஆராய்ந்து பார்க்காமலே உண்மையென்றும் புனிதமென்றும் சரியென்றும் ஒப்புகொண்டு வருகிறோம். அதிலுள்ள முரண்பாடுகளைப் பற்றி நாம் கவலைப் படுவதில்லை. அந்த விஷயங்கள் நமக்கு மிகவும் நெருங்கினதாகவும் இனிமையானதாகவும் மிகவும் புனிதமானதாகவும் ஆய்விடுகின்றன. அம்மாதிரி விஷயங்களை யாராவது கேலி செய்தால் கேலி செய்பவர்கள் பேச்சில் சத்தியமிருந்தால் கூட நமக்குக் கோபம் வருகிறது. "பள்ளிக்கூடங்களுக்குச் சிறு பையன்களை அனுப்புவதினால் அவர்கள் மூளை மழுங்கிவிடுகிறது, ஒழுக்கம் கெடுகிறது என்று ஒருவன் கூறினால் நாம் திடுக்கிடுகிறோம். ஒருவேளை அதில் உண்மையிருக்கலாம் என்று நாம் எண்ணுவதில்லை. அவரவர் காலத்தில் தங்களுடைய அபிப்ராயங்களால் திடுக்கிட வைத்தவர்கள் தான் சரித்திரம் துதிக்கும் புருஷர்களாய் விளங்கி வருகின்றனர்.

சாக்ரடிஸின் கருத்துக்கள் ஏதென்ஸ் நகரத்தைத் திகைக்க வைத்தது. யேசுநாதரின் எண்ணங்கள் அக்காலத்தவரால் எள்ளி நகையாடப்பட்டன. ஜோன் என்னும் ஆர்லீயன்ஸ் கன்னி போரில் பிரஞ்சுக்காரர்களுக்கு வெற்றி கொண்டு வருவேன் என்று பிரஞ்சு சீமான்களிடம் கூறினது பிரஞ்சு சீமான்களைத் திகைக்க வைத்தது. பிறகு சிரிக்கவும் வைத்தது. தற்கால இலக்கியத்தில் பெர்நார்ட் ஷா (Bernard shaw) தான் காரசாரமான சிறந்த வசனம் எழுதுபவர். அவர் நாடகம் எழுத ஆரம்பித்ததும் நாடக உலகம் திடுக்கிட்டது. அவர் சொல்வதை, அவர் புரளியாகச் சொல்லவில்லை. உண்மையாகவும் பொறுப்புடனும் தான் கூறுகிறார் என்பதை வெகு நாள் வரை உலகம் நம்பவில்லை. காரணம் அவர் உலக விவகாரங்களையெல்லாம் ஒரு புதக்கோணத்திலிருந்து பார்க்கிறார் என்பதுதான்.

மாதுரியின் ஒய்யாரப பார்வையும் ஜானகியின் உருக்கமான வேண்டுகோளும் 'தேவகி'யை வெற்றிப் படமாக்குவதற்காகத்தான்.

அவர் எழுதும் பாணியும் நாடக அமைப்பும் புது மாதிரியாக இருந்த தால் ஜனங்கள் அவர் விஷயங்களைப் புரளியாகச் சொல்கிறாரா அல்லது உண்மையாகச் சொல்கிறாரா என்று கண்டு கொள்ள வே முடியவில்லை. பெர்னார்ட் ஷா போல் நாடகம் எழுதிப் படம்பிடிக்க முயற்சித்தால் நம் மார்க்கெட்டைப் பொறுத்தவரையில் தோல்வி தான் ஏற்படும் என்று ஓரளவு நிச்சயமாய்ச் சொல்லலாம். தனி ரகப் பேர்வழிகள் சிறந்த எழுத்தாளர்களாயினும் அவர்கள் கதை இலக்கியமாயினும், சில சமயங்களில் சினிமாவுக்குப் பொருந்தாமல போய் விடும். சினிமாக் கதைக்கு வேண்டிய அம்ஸங்களை ஆராய்ந்தால் கீழ்க்கண்டவை அதில் நிறைந்திருப்பது நலம் :

(1) விருவிருப்பான சம்பவங்கள் நிறைந்த கதைப் போக்கு, கதை பூராவும்.

(2) அடுத்தது என்ன வரும் (Suspense) என்ற ஒரு உணர்ச்சி.

(3) பல வகையான கதா பாத்திரங்கள்.

(4) கதா பாத்திரங்களின் ஆசாபாசங்கள் பொதுமக்களின் அனுபவத்திற் கொத்ததாயிருக்க வேண்டும்.

(5) சந்தோஷமான முடிவு.

(6) சம்பவங்களின் கோர்வை தெளிவாயிருக்க வேண்டும்.

(7) எல்லாவற்றிற்கும் மேலாக கதை என்பது கதையாயிருக்க வேண்டும்!

கதை என்பது கதையாயில்லாது போனால் என்ன ஆய் விடும் என்று நீங்கள் கேட்கலாம்? எழுத்தாளர்கள் பலதிறப்பட்டவர்கள். சிலர் தங்கள் கதைகளை தங்கள் லட்சியங்களை, கோபதாபங்களை வெளிப்படுத்தும் பிரசங்கங்களாகவோ அல்லது பிரசார பீடங்களாகவோ செய்து விடுவார்கள். அந்தக் கதைகள் எப்போதும் எல்லோரையும் கவர முடியாது. உண்மைக் கலைஞன் பிரசாரத்துக்கு மேற்பட்டவன். அவன் வேலை மனித வாழ்க்கையை ஆராய்வது. அப்படி ஆராயும் நிலையில் வாழ்க்கையிலோ சமூகத்திலோ காணப்படும் குறைபாடுகளை எடுத்துக் காட்ட வேண்டியது அவன் கடமை தான். ஆனால் அவன் செய்யும் கண்டனம் அனல் கக்கும் கண்டனமல்ல கண்ணீர் கலந்த கண்டனம். மனிதன் என்ற பண்புக்கு மாறுபடாதவாறு அவன் வாழ்க்கையைச் சித்திரிப்பான். வரப்போகும் தேர்தல் அல்லது கட்சிப் பிரசாரத்தை குறிக்கோளாகக் கொண்டு கதை யெழுதினால் அவைகள் வெற்றி யடையாது. ஆனால் பிரசாரத்தைத் தாங்கும் கதைகள் கூட இயற்கையிலேயே நல்ல கதைகளாய் அமைந்து விட்டால் அவை வெற்றியடையும். அந்த வெற்றி கதையிலுள்ள ஜீவனுக்கே உரித்ததேயல்லாது கதையில் வழிந்தோடும் பிரசாரத்துக்கு உரித்தது அல்ல ஏன் என்றால் மகா கவிகள் எந்த பாஷையிலும் சரி பிரசாரகர்களாய் இருந்ததில்லை. சாகுந்தலத்தில் என்ன பிரசாரம் இநக்கிறது? கதே (Goethe) யின் (Faust) பாஸ்டில் என்ன பிரசாரம் ஒளிந்து கிடக்கிறது. ஷேக்ஸ்பியர் ரஸீன் முதலிய நாடகாசிரியர்களின் கவிதையில் எங்கே பிரசாரம்? இவர்களையெல்லாம் பழம்பசலி என்று சொல்லலாம். தற்காலத்தில் மிகச் சிறந்த எழுத்தாளர், மிக சுவாரஸ்யமான நாவல்கள் எழுதியவர் (சில நாவல்கள் ஹாலிவுட் படங்களாகின்றன) ஸாமர்சட் மகாம் அவர்கள் எழுத்தில் கடுகளவு பிரசாரம் கூட கிடையாது. கதை கேட்டு ரசிக்கும் ஸ்வபாவம் மனித சமூகத்திடை வெகு புராதன காலம் தொட்டு இருக்கிறது. நல்ல கதையைத்திரையில் நல்லவிதமாகக் கொடுத்தால் மக்கள் எந்த கட்சியராயினும் எந்த கொள்கையினராயினும் ரஸிக்கத் தயார்.

காதல் பாவையடி!

(நினைவின் விளைவே கனவென்பது அறிஞர்கள் கருத்து. தமிழார்வம் கொண்ட தலைவன் தலைவியிடம் தான் கனவு கண்டதாகக் கூறும் கனிவு மொழிகள்)

ராக மாலிகை] [தாளம்: ஆதி

செஞ்சுருட்டி

காதல் பாவையடி அவளென் கனவில் தோன்றி வந்தாள்—தமிழ்
கவிதைகள் பொழிந்தாள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நின்றேன்
பாதச்சிலம் பொலியில் தமிழ்ப் பண்களையே உதிர்த்தாள்—என்
ஆவல்தீரும் வகையில் இசை அமுதினைப் பிழிந்தாள்!

மோஹனம்

சொல்லுதற் கென்னடியோ! நீ யென் சொந்த மனைவியன்றோ—அவள்
தூயதமிழ் மொழியில் உள்ளம் சொக்கித் துடிக்குதடீ!
முல்லை மலர் போலும் நல்ல முத்து நகை போலும்—அவள்
முறுவல் தனிலெல்லாம் தமிழே! முறு முறுக்கக் கண்டேன்!

அடானா

நெஞ்சம் குளிர்ந்ததடீ அவள் கொஞ்சும் மொழிகளிலே—என்
நித்திரை கெட்டதென்றே ஏதும் நிந்தனை செய்யவில்லை
வஞ்சம் தளர்ந்ததடீ நல்ல வாய்மை வளர்ந்ததடீ—அந்த
வனிதையவள் தந்த வண்ணத் தமிழினிலே!

சஹானா

என்னென்ன புண்ணியமோ இதுநாள் என்மனம் செய்ததோடி—அந்த
இன்பத் தமிழணங்கை இதுபோல் அன்பாய் அணைந்தேனடீ
சொன்னால் துயருருதே எந்தன் சுந்தரப் பெண் மயிலே!—அகம்
தொட்டுவிட்டே மறைந்தாள் இனி எட்டிதான் என் வாழ்வே!

திருச்சி ஜி. தியாகராஜன்

நீங்களும் படம் போடலாம்

சென்ற இதழில் கொடுத்திருந்த பயிர்ச்சிகளைச் செய்தீர்களா. கை நடுக்கம் நின்று விட்டதல்லவா. எந்தக் கோடுகளையும் எப்படி வேண்டுமானாலும் இப்போது உங்களால் இழுக்க முடியுமல்லவா?

சரி, இனி படம் போடப் பழகலாம். ஒரு உருவத்தைப் போட சட்ட ரீதியான சாஸ்திர ரீதியான எவ்வளவோ விதிகள் இருக்கிறது. ஆனால் அவைகளை எல்லாம் நான் இங்கு கொண்டு வரப்போவதே இல்லை. மிக எளிய முறையில் சில விதிகளை மட்டும் சொல்லித் தருகிறேன்.

நீங்கள் எங்கோ ஒரு நாட்டிற்கு போக நேரிடுகிறது. அதாவது நீங்கள் பேசும் மொழி அவர்களுக்குப் புரியாத ஒரு நாட்டிற்கு. அவர்கள் பாஷை உங்களுக்குத் தெரியாத நாட்டிற்குப் போக நேரிடுகிறது. அவர்களோடு சைகை மூலம் பேசவும் முடியவில்லை. உங்கள் எண்ணங்களைத் தெரிவிக்க வேண்டும். என்ன செய்வது. ஒரு பேப்பரும் பென்சிலும் உங்களிடம் இருந்தால் அவர்களோடு பேசி விடலாம். மொழியே தெரியாத போது அதை எப்படி எழுதுவது என்று திகைக்கிறீர்களா? பேப்பரும் பென்சிலும் மொழியை எழுத அல்ல. உங்கள் கருத்தைப் படங்கள் மூலம்—ஸ்கெட்ச் மூலம் —விளக்கித் தெரிவிக்கத்தான். ஆனால் உங்களுக்குப் படம் போடவும் தெரியாதிருந்தால்... என்ன ஆகும்? நினைக்கவும் பயமாக இருக்கிறதல்லவா?

உதாரணமாக இரண்டு கண்களை வரைய நேரிடுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். (எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் என்பது பழமொழி. ஆகவே முதலில் கண்ணிலிருந்து ஆரம்பிக்கலாம். ஒரு உருவத்துக்கு ஜீவனைக் கொடுப்பது கண் தானே) எப்படி வரைவீர்கள். இதுபோலத்தானே.



ஆமாம். இது கண்ணைக் குறிக்கிறது என்று ஒப்புக்கொண்டாலும் கவர்ச்சி இல்லை. இது வேறு எதையும் கூடக் குறிக்கலாம். கொஞ்சம் கவனம் செலுத்தி, கண்களின் அமைப்பை உற்றுக் கவனித்துச் சிந்தித்துப் பிறகு வரைய ஆரம்பித்தீர்களானல் உங்களுக்கே வியப்பாக இருக்கும். அப்படிப் போட்ட கண் இப்படியாக மாறும்.



முதலில் நீங்கள் போட்ட கண்ணைப் பார்த்துப் பிறர் மெல்லச் சிரிப்பார்கள் கேலியாக. ஆனால் இதைப் பார்த்துத் திருப்திபோடு வியப்படைவார்கள் இல்லையா மேலே உள்ள கடைசி மூன்று படங்களையும் போட்டுப் போட்டுப் பழகுங்கள். கண் போடுவது இவ்வளவு தானா என்று உங்களுக்கே வியப்பாகவும் உத்ஸாகமாகவும் இருக்கும்.

இரண்டு கண்களை வரைவது எப்படி என்று யோசிக்கிறீர்களா. ஒன்றும் பிரமாதமில்லை. முதலில் போட்ட ஒரு கண்ணின் படத்தை அப்படியே திருப்பி (REVERSE) எழுதி விடுங்கள். அவ்வளவுதான். ஆனால் ஒரு விஷயம். இரண்டு கண்களுக்கும் இடையே உள்ள இடைவெளியின் தூரம் எத்தனை இருக்கவேண்டும் தெரியுமா? ஒரு கண்ணின் நீளம் எவ்வளவோ அவ்வளவு தூரம் இடைவெளி விடவேண்டும். இந்த விதியை மறக்கவே கூடாது—ஆனால் அபூர்வமாக இது வெகு சிலருக்கு மாறுபட்டிருக்கும். அதைப் பற்றி நமக்கு அவசியமில்லை.



'கண்' என்றால் முதலில் நம் கை எழுதுவது புருவத்தின் குறிதான் இல்லையா. இந்தப் புருவம் ஒரு நேர் கோடா இல்லை. ஆனால் வட்டத்தின் ஒரு பாகமா. அதுவும் இல்லை. அப்படியானால்? புருவம் ஒரு வளைந்த கோடு.

கண்ணின் வெளிப்பக்கத்து வளைவு கண்ணின் அமைப்புக்கு அழகு தருவது மட்டுமல்ல தலையின் உருட்சியையும் தெளிவுபடுத்துகிறது.

அதிருப்தியை, வெறுப்பை, வெளிப்படுத்தும் விழிகளை எழுத வேண்டுமா இதோ இதுதான் முறை.



சந்தோஷத்தை, திருப்தியை வியப்பைத் தெரிவிக்க வேண்டுமானால் முகத்தின் முழு உருவத்தையும் வரையத்தான் விரும்புவீர்கள். ஏனென்றால் வாய்தான் இந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் அற்புதமான அவயவம்.

இரண்டு கண்கள், ஒரு மூக்கு, ஒரு வாய், இரண்டு காதுகள் கொண்டதுதான் முகம் என்று உங்களுக்குத் தெரியும். ஒரு சிரிக்கும் முகத்தைப் பக்கவாட்டு உருவமாக (Side View) எழுத வேண்டும் என்று விரும்புகிறீர்கள். நீங்கள் எழுதுவது இப்படித்தானே?



அழகு என்று சொல்ல முடியாவிட்டாலும் ஏதோ இருக்கிறது. பக்கவாட்டு முகத்தை வரைவதற்கு முதலில் கண்ணையும் புருவத்தையும் போட்டுக் கொண்டுதான் ஆரம்பிக்க வேண்டும்.

பயிற்சி அளிப்பவர் — "வாசுகி"

புருவம் உயர்ந்து வளைந்திருக்க வேண்டும். இனி நெற்றியைச் சேருங்கள். பிறகு மூக்கு, வாய், மூகவாய். இதோ கீழே காட்டியிருக்கும் வரிசைப்படி.

ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதோ. கொஞ்சம் கவனியுங்கள். சுலபமாக்கிக்கொள்ளலாம். புருவம் ஒரு வளைவு கோடு X என்ற குறி கண். அதற்கு நேரே ஒரு வளைவு. (4)

உங்கள் கண் விளக்கெண்ணை பாட்டிலைப் பார்த்துக் கடுப்பதாகக் காட்டவேண்டுமா?



பக்கவாட்டு முகத்தின் கண் வரைவதுதான் ரொம்ப ரொம்ப சுலபம். அதாவது கொஞ்சம் சிரமப்பட்டு விட்டால், இதோ பாருங்கள்;

கடுத்த கண் வேண்டுமா? இதோ. இவைகளை எல்லாம் கவனமாகப் போட்டுப் போட்டுப் பழகுங்கள்,



கண்ணில் ஒளி பட்டுப் பளபளக்கும் ஒரு பாகத்தை எப்படி போட்டிருக்கிறது. பார்த்துக்கொள்ளுங்கள். கரு விழியின் அரை வட்டத்திற்கு மேலே ஒரு புள்ளி இருக்கிறதல்லவா. அதுதான் கண்ணிற்கு ஜீவனைத்தருகிறது.

மகிழ்ச்சியைத் தெரிவிக்க எப்படி கண்ணை வரைவீர்கள். இப்படித் தானே:

கண் ஓரத்தில் காட்டியிருக்கும் சுருக்கம் மகிழ்ச்சிக்கு அறிகுறியான கோடுகள்தான். ஆனால் இதோ கீழே உள்ளதுபோல் அதே

படத்தை இப்படி அழகாகப் போட்டால் இன்னும் நன்றாக இருக்கும் அல்லவா?

கண்ணின் கருவிழி, உயர்ந்த கீழ் இமையாலும், உயர்ந்த மேல் இமையாலும் எப்படி மூடப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள்.

பக்கவாட்டு முகத்துக்கு மூக்கு வரைவதும் ரொம்பத் தமாஷான சுலபமான முறை.

உண்மையாகவே இந்த அமைப்பு விநோதமாக இருக்கிறதல்லவா. ஆனால் சுலபமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடியது. பக்கவாட்டு மூடிய வாய் போடுவதும் சுலபம்தான்.



கீழுதடு மேலுதட்டைவிடக் குட்டையாக இருப்பதைக் கவனியுங்கள். இரண்டாவது படத்தில் வழுக்கமாக வாய் வரையும் முறையைக் காட்டுகிறது, கீழுதடுக்கு முழு உருவமும் இல்லை. மூலை இல்லை.

ஒளி அதன்மீது படும்போது அப்படித்தான் தெரியும்!

இந்த மூக்கையும், வாயையும் போட்டுப் பழகி ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

பக்கவாட்டு முகவாய்க்கு நீங்கள் இழுக்கவேண்டியது இரண்டே கோடு ஒன்று முகவாயின் எலும்பைக் குறிக்கும் கோடு, மற்றது கழுத்தை உருவகப் படுத்தும் கோடு. இரண்டும் சேரும் இடம்:

பக்கவாட்டு முகத்தின் காது இவ்வளவுதான்:



சரி, இப்போது இவைகளை எல்லாம் ஒன்று சேர்ப்போமா. ஒன்று சேருங்கள். அழகாக இருக்க வேண்டுமே என்று கவலைப்பட வேண்டாம். போடுங்கள். போடப்போட தானாக அதற்கு அழகு அமைந்துவிடும்.



கண்ணில் ஆரம்பித்தேன் புருவத்தைப் பூர்த்திசெய்தேன். பிறகு மூக்கு, பின் வாய். கடைசியில் முகவாய் புருவங்களுக்கும்மூக்குக்கும் உள்ள தூரம்தான் மூக்கு நுனிக்கும் முகவாய் நுனிக்கும் இருப்பதைக் கவனியுங்கள். இதுதான் எல்லா முகங்களுக்கும் உள்ள ஒரே முக்கியமான விதி. எங்கே இதன்படி போட்டுப் பழகி நன்றாக அப்யாஸம் செய்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

2-ம் பரிசு: ரூ. 5/-
கே. எஸ். பாலு
122, பாப்பாட்டி தெரு,
கிழவாசல் தஞ்சை.
காமிரா ஆக்பாகாரட் F. 3 5
கெவர்ட் பான்க்ரமோஸா பிலிம்
F. 8-ல் 1/100 விநாடி

பாராட்டு பரிசு
C. K. ராதாகிருஷ்ணன்
36 ஷண்முகராயன் தெரு,
சென்னை-1.

[பரிசுத்தொகை 15—5—51 அன்று அனுப்பி வைக்கப்படும்.]

முதல் பரிசு ரூ. 10/-

காமிரா - ரோலி கார்டு

லென்ஸ்-F.11. 1/100 Sec

பிலிம் - சூபர் X X.

நேரம் - காலை 10 மணி

எஸ். ஆர். ராஜகோபால்

13, லால்கான் தெரு

சிதம்பரம்



1. ஒருவர் ஐந்து படங்கள் வரை அனுப்பலாம்.

2. ஸ்டுடியோவில் எடுத்த படங்களை அங்கிகரிக்க முடியாது. இந்த போட்டி அமெச்சூர்களுக்குத்தான். போட்டோ கலையைத் தொழிலாக மதித்து நடத்தும் அன்பர்கள் இதில் கலந்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

3. பரிசு பெறத் தகுதியில்லாத ஆனல் நல்ல படங்கள் கலைமணியில் இடம் பெறும். இந்த இதழிலேயே வெளியிட்டிருக்கிறோம்.

4. முடிவு தேதி-ஒவ்வொரு மாதமும் 20ந்தேதி தான் அடுத்த இதழின் பரிசு பெறத்தகுதியுடைய படங்களைத் தேர்ந்தெடுக்கும் கடைசி நாள்.

போட்டோ அனுப்புபவர்களுக்கு இன்னும் சில வார்த்தைகள்.

முக்கியமாகப் படங்கள் சலனங்கள் கற்பனை அழகுடன் இருப்பது நல்லது. குழந்தைகளின் சிரிப்பு, சேஷ்டை, அழுகை, விளையாட்டு இவைகளைப் படம் பிடித்தனுப்பலாம். பிராணிகளும் கூட நல்ல கோணங்களில் பரிசுப்படமாக இடம்பெறும். முக்கியமான விஷயம். உங்களுக்கே திருப்தி இல்லாத படங்களை வீணே அனுப்பிவைக்காதீர்கள்.

போட்டோவின் அளவு கார்டு சைஸுக்குக் குறைவாக இருக்கக் கூடாது. சிறிய படங்களை அனுப்பினல் அது கவனிக்கப்பட மாட்டாது.

பரிசுக்கோ பிரசுரத்துக்கோ தகுதியற்ற படங்களைத் திரும்பப்பெற போதிய தபால் தலை வைத்தனுப்பவேண்டும்.

கண்டிப்பாக இந்தப் போட்டி சம்பந்தமாக எந்தவிதமான கடிதப் போக்கு வரத்தும் வைத்துக்கொள்ளக் கூடாது.

போட்டோவின் பின்னல் தங்கள் முழு விலாசத்தையும் அது எடுக்கப்பட்ட காமிராவின் குறிப்புகளையும் எழுதி கலைமணி கண்டோண்மெண்ட் திருச்சி என்ற விலாசமிட்டு அனுப்புங்கள்.

ஒவ்வொரு இதழிலும் சிறந்த கற்பனையும் அழகும் நிறைந்த ஒரு போட்டோவிற்கு முதல் பரிசு ரூபாய் பத்தும், இரண்டாம் பரிசு ரூபாய் ஐந்தும் அன்பளிப்பாக அனுப்பப்படும். இந்தத் தொகை அன்பர்களின் ஆதரவுக்கு ஏற்றபடி உயர்த்தப்படலாம். —ஆசிரியர்.

பூர்த்தி செய்யவேண்டிய கூப்பன்

பெயர்.. *வயது*..............

விலாசம்..

....

அனுப்பியுள்ள போட்டோ பற்றிய விபரம்..................................

ரா. ஆறுமுகம்

"அப்படி என்ன பிரமாத யோஜனை? எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறீங்க?" என்று மற்ற கதாசிரியர்களின் மனைவி கேட்பது போலவே என் மனைவியும் கேட்டாள்.

"கோட்டையைப் பிடிக்க யோசனை வேறு வேண்டுமா? அதெல்லாம் அந்தக்காலம். இது அணுகுண்டு யுகம். எதிரியின் கையில் ஒரு குண்டு இருக்கிறதென்று தெரிந்தாலே போதும். கோட்டை வாசல் திறந்துவிடும்" என்றேன் நான்.

"அப்படியானால் அதைவிடப் பெரிய காரியத்தையா செய்யப் போறீங்க? என்னதான் சொல்லுங்களேன்" என்றாள் அவள் மறுபடியும்.

"இந்தப் பத்திரிக்காசிரியர்கள் இருக்கிறார்களே, இவர்களுக்குத் திடீரென ஒரு யோசனை உதிக்கும். இதர பத்திரிகைகள் செய்யாத ஒரு காரியத்தைத் தாங்கள் செய்ய வேண்டுமென்று திட்டமிடுவார்கள். உடனே அதை நிறைவேற்ற, என்னைப் போன்றவர்களுக்கு 'உத்திரவு' போட்டுவிடுவார்கள்!"

"ஓஹோ, வருகிறது வெய்யில் காலமல்லவா? எல்லோருக்கும் அப்படித்தான் மூளை வேலை செய்யும். சித்திரை மலர், விசாக மலர், திருமஞ்சன மலர் என்று ஏதாவது போட ஆரம்பிப்பார்கள். அதற்கு கதை கேட்கிறார்களா!" என்று நையாண்டியாகக் கேட்டாள்.

"கதையானாலும் கவலையில்லையே?"

"பின் என்ன? கட்டுரையா? அல்லது கவிதையா? இல்லை, காதல் கலப்பில்லாத கதைவேண்டுமென்கிறார்களா? இவைகள் எல்லாம் தான் உங்களுக்கு வராதே!" என்று அவள் என் பலவீனத்தை எடுத்துக் குத்திக் காட்டினாள்.

"அப்படிக் கேட்டிருந்தாலும் பரவாயில்லையே, 'எனக்கு எழுத வராது, மன்னிக்கவும்' என்று வழக்கமாக எல்லோருக்கும் எழுதும் பதிலை எழுதிவிடுவேனே. பெரிய சங்கடமான விஷயத்தையல்லவா ஆசிரியர் கேட்டுவிட்டார்!"

"அப்படி என்னதான் அவர் எழுதச் சொல்லி விட்டார்?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள் என் மனைவி.

"அதைச் சொல்லக்கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது. இந்தா, நீயே இந்தக் கடிதத்தைப்பார்" என்று அவளிடம் ஆசிரியர் அனுப்பியிருந்த கடிதத்தைக் கொடுத்தேன்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் என் மனைவி விழுந்து விழுந்து சிரித்தாள். எதற்காக அப்படிச் சிரித்தாள். என்று எனக்கு விளங்கவில்லை. நான் அவளைப் பார்க்கப் பார்க்க அவளும் என்னைப் பார்த்துப் பார்த்துச் சிரிப்பை அடக்க முடியாமல் சிரமப்பட்டாள். என் குழந்தைகளும் வந்து கூடிவிட்டன. அவர்களுக்கும் காரணம் புரியாமல் அவளோடு சேர்ந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். எனக்குக் கோபம் வந்துவிட்டது.

"இதோ பார், காரணத்தைச் சொல்லிவிட்டுச் சிரி. குழந்தைகள் உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று நினைத்துச் சிரிக்கிறார்கள்..." என்றேன்.

அவள் ஒருவாறு சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு,

"இருந்திருந்து இந்த ஆசிரியர் உங்கள் சுய சரித்திரத்தைத்தானா கேட்க வேண்டும்? அப்படி என்ன பிரசித்திபடைந்த விட்டீங்க! உங்கள் புகழ் உலகமெல்லாம் பரவியா கிடக்குது? மிஞ்சிப்போனா இந்தத்தெருவிலே உள்ளவங்களுக்கு மட்டும் உங்களைப்பத்தித் தெரியும். கதைகள் எழுதுறதாலே அதுகளைப் படிக்கிற ஒரு நூறு பேருக்கு தெரியலாம். இவ்வளவு 'பிரசித்தி' பெற்ற உங்களைப் பற்றிப் பத்திரிக்கையில் அந்த ஆசிரியர் வெளியிடுவதால் அவருக்கோ, பத்திரிக்கைக்கோ, உங்களுக்கோ, அல்லது அதைப் படிக்கிறவுங்களுக்கோ என்ன லாபம்?'' என்று கேட்டாள்.

"சரி, என் சுய சரிதத்தையே நான் எழுதியனுப்பப் போவதில்லை. இப்போது உனக்குத் திருப்திதானே'' என்று கோபமாக நான் வெளியே புறப்படத் தயாரானேன்.

''சே, சே அது சரியல்ல. பத்திரிகை ஆசிரியர் வருத்தம் எதற்கு? உங்களுக்கு எழுதப் பிரியமில்லேன்னா நானே எழுதியனுப்பி விடுகிறேன்!''

''என்ன? என்னைப்பற்றி நீயே எழுதப் போகிறாயா? ஆச்சரியமாயிருக்கிறதே? என்னைப்பற்றி உனக்கு எப்படித் தெரியும்?''

''எனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்? நீங்கள் கதை எழுத ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை உங்களைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும்! மேலும் உங்களைப்பற்றி நீங்களே எழுதியனுப்பினாலும் உங்களிடமுள்ள குறைகளையெல்லாம் மறைத்துத்தானே எழுதுவீங்க? நான் அதையெல்லாம் அம்பலப்படுத்தப் போறேன்'' என்றாள் சிரித்துக் கொண்டே

"அதைப்பற்றி எனக்குக் கவலையே இல்லை. உண்மைச் சரிதம் வேண்டுமென்றுதான் பத்திரிகாசிரியரும் கேட்டிருக்கிறார். ஆகையால் நீயே எழுதியனுப்பி விடு. எனக்கும் சிரமம் குறையும். இதை எழுதும் நேரத்தில் ஒரு கதையாவது எழுதி விடுவேன்.'' என்று சொல்லிவிட்டு மாடியிலுள்ள என் அறைக்குப் போய்விட்டேன்.

இரண்டு நாள் கழித்து அவள் எழுதியதை என்னிடம் கொண்டு வந்து காண்பித்தாள். படித்துப் பார்த்தேன். உண்மையிலேயே நானே அதை எழுதியிருந்தாலும் அவ்வளவு விஷயங்களையும் ஒன்று விடாமல் எழுதியிருக்க முடியுமா என்ற சந்தேகம் எழுந்தது. ஆகையால் அப்படியே பத்திரிகாசிரியருக்கு அனுப்பிவிட்டேன்.

* * *

அன்புள்ள ஆசிரியருக்கு:

என் கணவரின் சுய சரித்திரத்தைப்பற்றி எழுதச்சொல்லி அவர்களுக்குத் தாங்கள் அனுப்பியிருந்த கடிதத்தைப் பார்த்தேன். தன்னைப்பற்றி அவரே புகழ்ந்து கொள்ள அவருக்கு இஷ்டமில்லை. ஆகையால் அந்தப்பணியை நானே செய்திருக்கிறேன்.

1935ம் வருடம் அவர் மதுரையில் பத்தாவதுக்குப் பரீக்ஷை எழுதிவிட்டு விடுமுறையைக் கழிக்க எந்த ஊருக்குப் போகலாமென்று எண்ணிக்கொண்டிருந்தார். அப்போது அவருடைய தமையன் சென்னையில் உத்தியோகத்திலிருந்தார். இவரும் சென்னைக்குச் சென்றதேயில்லை. அவரிடமிருந்து கடிதம் வந்தது. இரண்டு நாளில் புறப்பட்டு விட்டார். நானும் போயிருந்தேன்.

நல்ல வேளையாக வேலைக்கு எங்கும் போய் அலையாமல் இவரது தமையனார் இருந்த இன்ஷூரன்ஸ் கம்பெனியிலேயே ஒரு டைப்பிஸ்டு உத்தியோகம் கிடைத்தது. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே டைப்ரைட்டிங்கும் பாஸ் செய்து வைத்திருந்தது அந்தச் சமயத்திற்கு உதவியாக இருந்தது. எட்டாவது படித்துக் கொண்டிருக்கையிலேயே

பத்திரிகைகளுக்கு கதைகள் எழுதியனுப்பிக் கொண்டிருந்தார். மாதம் தவறாமல் இரண்டு கதைகளாவது பத்திரிகைகளுக்குப் போகும். பதினைந்து வருடங்களுக்கு முன் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் குறைச்சல் தானே. அதனால் குறிப்பிட்ட ஓரிரண்டு நல்ல பத்திரிகைகளுக்கு மட்டும் தான் அவர் கதைகள் அனுப்ப முடிந்தது சுமார் இருபதுக்கு மேலான கதைகள் அனுப்பியிருப்பார். ஒன்றேனும் வெளியாகவுமில்லை. திரும்பி வரவுமில்லை. அதற்காக அவர் எழுதுவதை மட்டும் நிறுத்தவே இல்லை. சென்னைக்குச் சென்ற பின்பும் பத்திரிகைகளுக்கு எழுதிக் கொண்டேதானிருந்தார். அந்தக் காலத்தில் கதைகள் எழுதிவந்தவர்களையெல்லாம் நேரில் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு. ஹாஸ்யமாகக் கட்டுரை எழுதி வந்த 'சிட்டி'யையும் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட கதைகள் எழுதிய கு. ப. ராஜகோபாலனையும், வார்த்தை ஜாலங்களைக் கொண்டு எழுதும் 'இளங்கோவனை'யும் சந்திக்க மிக்க ஆவல் கொண்டிருந்தார். அவர்களெல்லாம் அந்த சமயத்தில் சென்னையிலிருந்தும், அவர்களுடைய விலாசம் தெரியவில்லை. ஒரு நாள் ஒரு கதை எழுதி எடுத்துக்கொண்டு 'தினமணி' ஆபிசுக்கு நேரில் சென்றார். அங்கே அப்போதிருந்த ஸ்ரீ ந. ராமரெத்தினத்தை என் கணவருக்கு ஏற்கனவே தெரியும். அவரிடம் 'இளங்கோவன்', 'சிட்டி' ஆகியவர்களின் விலாசத்தைக் கேட்டார். "இதோ அவர்கள் இங்கேயே தானிருக்கிறார்கள். வாருங்கள், உங்களுக்கு அறிமுகப்படுத்திவைக்கிறேன்" என்று ந. ரா. அவர்கள் இவரைக் கூட்டிக் கொண்டுபோய் அவர்கள் முன் நிறுத்தினார். அவர்களுடைய கதைகளையெல்லாம் தொடர்ந்து படித்து வருவதாகவும், அவர்களைக் காண வேண்டுமென்று வெகு நாட்களாக ஆவல் என்றும் இவர் சொன்னதும் அவர்களும் சந்தோஷப்பட்டு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ கு ப. ராஜகோபாலன் வீட்டிற்கு ஒருநாள் அழைத்துச் செல்வதாக 'சிட்டி' ஒப்புக் கொண்டார். அவர்களைச் சந்தித்த மகிழ்ச்சியில் கையில் கொண்டு போயிருந்த கதையைக் கூட அங்கே கொடுக்காமல் வந்து விட்டார். பின்னர் அதை சுதேசமித்திரன் வாரப்பத்திரிகைக்கு அனுப்பினார். மறுவாரத்திலேயே அக்கதை பத்திரிகையில் வெளியானது.

எழுத்தாளர்
ரா. ஆறுமுகம்

சிறுகதைதான். ஆனால் சிறுவர்களுக்காக எழுதப்பட்டதால் அந்தப் பகுதியில் கண்ணிழந்த கண்ணன் என்ற

தலைப்புடன் வெளி வந்தது. முதன் முதலாகப் பத்திரிகையில் வந்த கதை அதுதான். அதாவது 1936ம் வருடம். அக்கதையைப் பார்த்ததும், இவருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அளவில்லை. அதை எங்களிடமெல்லாம் படித்துக் காண்பித்தார். அந்தக் கதைக்குப் பொருத்தமாக இரண்டு மூன்று இடங்களில் சிறு சிறு படங்களும் போட்டிருந்தார்கள் அதையே பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார். பதினைந்து நாட்கள் சென்று "சுதேசமித்திரன்" பத்திரி காலயத்திலிருந்து மூன்று ரூபாய்க்கு மணியார்டர் வந்தது.

திருவல்லிக் கேணியில் இவர் இருந்த தெருவிற்கு அடுத்த தெருவில் தான் மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டு வீட்டை விசாரித்துக்கொண்டே சென்று கண்டார். அந்தச் சமயம் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள், டாக்டர் ஏதோ ஏட்டுச் சுவடியைப் பார்த்துச் சொல்வதையெல்லாம் கவனமாக எழுதிக் கொண்டிருந்தார். இவர் தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டு அளவளாவி விட்டு வந்தார்.

ஒரு நாள் காங்கிரஸ் மண்டப மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற இருந்தது. அன்று ராஜாஜியும், சத்தியமூர்த்தியும் பேசப் போகிறார்களென்று கூட்டமும் அதிகம். அதற்கு இவரும் போயிருந்தார், ஒரு இடத்தில் தனியாக நின்று கொண்டிருக்கையில் ஒருவர் வந்து மெதுவான குரலில், "நீங்கள் தானே ஆறுமுகம் என்கிறது" என்று கேட்டார். அதற்கு இவர் சிரித்துக்கொண்டே "ஆமாம் உங்களை எனக்குத் தெரியவில்லையே" என்றார். "நான் தான் நீங்கள் பார்க்கவேண்டுமென்று விரும்பிய கு. ப. ராஜகோபாலன்" என்றார். வந்தவர். இவருக்கு ஏற்பட்ட ஆச்சரியம் சொல்ல முடியவில்லை. சற்று நேரம் அப்படியே திகைத்து நின்றுவிட்டார். வந்தவர், "ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? உங்களை எப்படி நான் கண்டு பிடித்தேன், இவ்வளவு பெரிய கூட்டத்தில் என்று நினைக்கிறீர்களோ? அதோ 'சிட்டி'யும் மற்ற நண்பர்களும் அங்கே நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர் தான் உங்களை எனக்கு அடையாளம் காட்டினார். மேலும் நீங்கள் தனியாக நிற்பதால் பேச்சுத் துணையாக இருக்கலாமென்று வந்தேன்" என்றார். பல நாளாகத் தேடிக்கொண்டிருந்த ஒருவர் அவரே வலிய வந்துதன்னை அறிமுகப்படுத்திக் கொண்டால் எப்படியிருக்கும்? இவருக்கு அன்று பிரசங்கம் கேட்கக்கூடப் பிரியமில்லை. கு. ப. ராவும் இவரும் தனியாக வந்து வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். "எங்களுடைய கதைகளையெல்லாம் படிப்பதோடு மட்டும் நீங்கள் நின்று விடக்கூடாது. நீங்களும் பத்திரிகைக்கு எழுதவேண்டும்." என்று கு. ப. ரா. யோசனை சொன்னார்.

"ஒரு மாதத்திற்கு முன்புதான் 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் சிறுவர் பக்கத்தில் ஒரு கதை வெளி வந்தது." இதுதான் பத்திரிகையில் வந்த முதல் கதை" என்றார் இவர்.

"அப்படியா? இது ஒரு நல்ல அறிகுறியென்று தான் நினைக்கிறேன். இனி உங்களுக்கு நிறைய எழுதத் தோன்றும். ஏனென்றால் என்னுடைய முதல் கதையும் ஒரு காலத்தில் 'சுதேசமித்திர'னில் தான் வந்தது. ஆகையால் நீங்கள் தொடர்ந்து எழுதுங்கள்" என்று ஊக்கப் படுத்தினார் கு. ப. ரா.

அவருடைய உற்சாகமான வார்த்தைகளும், அன்பும் இவர் மனதில் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியது. அன்றிரவே வீட்டிற்கு வந்து ஒரு சிறு கதை எழுதி

இவரைப்பற்றி

தமிழ் நாட்டின் கிராம மக்களிடையே நிகழும் காதல், சோகம், பொறாமை, போட்டி, வீம்பு, வீராப்பு, கள்ளங்கபட மற்ற அவர்கள் வாழ்க்கை இவைகளை அற்புதமாகச் சித்தரித்துக் காட்டும் ஒரு சில தமிழ் எழுத்தாளர்களில் ரா. ஆறுமுகம் ஒருவர். ஆறுமுகத்தின் 'விடி வெள்ளி' 'களத்து வாசலில்' முதலிய கதைகளைத் தமிழ் நாட்டவர் மறந்திருக்க முடியாது. உழைத்து முன்னுக்கு வந்த எழுத்தாளர் ரா. ஆறுமுகம். தமிழ் நாட்டில் பெயர் வாங்க ஒரு எழுத்தாளனுக்கு எவ்வளவு சகிப்புத்தன்மை வேண்டுமென்பதை அவர் வாழ்க்கை காட்டுகிறது. ராமனாதபுரம் ஜில்லாவில் திருப்பத்தூரில் ராமசாமி பிள்ளைக்கும் அம்ருதம்மாளுக்கும் அருமைக் குழந்தையாகப் பிறந்த ஆறுமுகத்திற்கு இப்போது 36 வயதாகிறது. இதுவரை 200க்கு மேற்பட்ட கதைகள் எழுதி இருக்கிறார். 'கன்னிகாஸ்திரி,' 'விடிவெள்ளி', "நீறு பூத்த நெருப்பு" என்ற மூன்று சிறுகதைத் தொகுதிகளும் "அவமானச்சின்னம்" என்ற (அமெரிக்க) மொழி பெயர்ப்பு நாவலும் புத்தக ரூபத்தில் இவர் எழுத்துத் திறமையை எடுத்துக்காட்ட இருக்கிறது. 'பொன்வண்டு' என்ற முழு நாவல் விரைவில் வெளி வரப்போகிறது.

'கல்கி' சிறுகதைப் போட்டியில் 'சொக்கி சொன்னாள்' என்ற அற்புதமான கதையை எழுதி ஐநூறு ரூபாய் பரிசைத் தட்டிக்கொண்டு போனவர் வேறுயாருமல்ல. சாட்சாத் இவர் மனைவியாரே தான்! இந்தக் கட்டுரையையும் ஆறுமுகத்தின் மனைவி அவர்களே எழுதி இருப்பதால் 'இவரைப்பற்றி' வாசகர்களுக்கு நாம் சொல்ல வேண்டிய சிரமத்தைக்கூட அவர் குறைத்து விட்டார். —ஆசிரியர்

முடித்துவிட்டுத்தான் படுத்தார். அடுத்த நாள் காலையில் ஆபிசுக்கு போகுமுன்பு கு. ப. ராவின் வீட்டைத் தேடிச் சென்று அவரிடம் கதையைக் கொடுத்துப் பார்க்கச் சொன்னார். அவரும் உடனே படித்துவிட்டு, "சிறுகதை எப்படி எழுதவேண்டும் என்ற 'டெக்னிக்' உங்களுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. ஆனால் இந்த முதல் கதையில் 'ப்ளாட்' சரியாக வரவில்லை. இருந்தாலும் பாதகமில்லை. உங்களுக்கு இஷ்டமான பத்திரிகைக்கு அனுப்பி வையுங்கள். இனி எழுதும் கதைகளையும் என்னிடம் கொண்டு வந்து காட்டுங்கள். நான் பார்த்து எப்படி இருக்கவேண்டுமென்று அடிக்கடி சொல்லுகிறேன். பின்பு சரியாகிவிடும்" என்று மேலும் ஆதரவாகப் பேசியனுப்பினார்.

அந்தக் கதையை இவர் 'நவஜீவன்' பத்திரிகைக்கு அனுப்பினார். "அறையில் கண்ட சினிமா"

என்ற தலைப்புடன் அது வெளிவந்தது. அதைப் படித்த ஒரு சினிமாப் பத்திரிகை ஆசிரியர், சினிமாவைப் பற்றிக் கட்டுரைகள் எழுதும்படி வேண்டிக் கொண்டு இவருக்குக் கடிதம் எழுதினார். அவர் இஷ்டப்படியே பல கட்டுரைகள் எழுதினார். 'சில்வர் ஸ்கிரீன்' என்ற அந்த சினிமாப் பத்திரிகையின் ஆசிரியருக்கு இவரது கட்டுரைகள் எல்லாம் பிடித்திருக்கவே மேலும் மேலும் எழுதச் சொல்லி சிறிது பணமும் கொடுத்தார். அக்கட்டுரைகள் எல்லாம் 'காண்டீபன்' என்ற புனை பெயரிலேயே வெளிவந்தன. அர்சுனனுடைய அம்பைப்போல இவரது எழுத்துக்களும் வாசகர்கள் மனதில் பதிய வேண்டும் என்பதுதான் இவர் அந்த புனைபெயரை வைத்துக் கொண்டதற்குக் காரணம் என்று எங்களிடமெல்லாம் சொல்வார். ஆனால் சிறுகதைகளை மட்டும் சொந்தப் பெயரிலேதான் எழுதி வந்தார். கதைகளைவிட சினிமாக் கட்டுரைகளதான் அதிகமாகப் பிரசுரிக்கப்பட்டு வந்தன. வேறொரு சினிமாப் பத்திரிகையும் இவரிடம் கட்டுரை வாங்கிப் பிரசுரித்தது, சன்மானமாகக் கிடைத்த பணம் மிகச் சொற்பம்தான். இருந்தாலும் பெயர் பிரபலமாகட்டும் என்றே எழுதி வந்தார். சொந்தப் பெயரில் சிறுகதைகள் வெளியாக வேண்டுமென்பதுதான் இவருடைய ஆவல். ஒருவேளை தன்னுடைய பெயர் பத்திரிகாசிரியர்களுக்குப் பிடிக்கவில்லையோ என்று எண்ணி ஒரு தந்திரத்தைக் கையாள நினைத்தார். ஏற்கனவே அனுப்பி திரும்பிவந்த அதே கதைகளின் தலைப்புகளை மட்டும் மாற்றி, சொந்தப் பெயருக்குப் பதிலாக, காந்திமதி, சுலோசனா, பார்வதி, சுந்தரி என்ற பெண்கள் பெயரால் பல பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்தார். அந்தக் கதைகள் எல்லாம், 'பிரசண்ட விகடன்', 'ஆனந்த போதினி', 'லோகோபகாரி' ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. இதிலிருந்து கதையின் தாரதம்மியத்தை பத்திரிகாசிரியர்கள், அதை எழுதியவரின் பெயரைக் கொண்டுதான் தீர்மானிக்கிறார்கள் என்பது தெரிந்துவிட்டது. இருந்தாலும் தன் சொந்தப் பெயரை மறைக்க இவருக்கு விருப்பமில்லை. 'சுதேசமித்திரனி'ல் மட்டும் இவருடைய பெயரிலேயே பல கதைகள் வந்தன. அவைகளெல்லாம் கு. ப. ரா, பார்வையிட்டவைகள். ஐந்து கதைகள் பிரசுரமானதும் கு. ப. ரா. அவர்கள், "இனி நீங்கள் தாராளமாக எழுதலாம். நான் பார்க்கத் தேவையில்லை. கதைகள் நல்ல பக்குவத்தை அடைந்துவிட்டன!" என்றார். அதன் பின்னர் மாதம் தவறாமல் ஒரு கதையாவது இவர் பெயரில் வந்து கொண்டிருந்தது. 1936ல் பத்து சினிமாக் கட்டுரைகளும் இரண்டு கதைகளும், 1937ல் எட்டுக் கதைகளும், 1938ல் பன்னிரண்டு கதைகளும், 1939ல் பதினைந்து கதைகளும் வெளிவந்திருக்கின்றன. இந்தச் சமயத்தில் இவர் வேலை பார்த்துவந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அதை மூடிவிட அதன் மானேஜிங் டைரக்டர் தீர்மானித்து விட்டார். அதனால் இவர் வெளியிடங்களில் வேலைக்கு முயற்சி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இக்காரணத்தால் இவர் கதை எழுதும் ஆர்வம் சற்றுக் குறைந்து, 1940ல் ஓரிரண்டு கதைகள்தான் வெளிவந்தன.

ஸ்ரீ ரா. வெங்கடாசலம் இவரோடு கூடவே மதுரையில் ஒரே வகுப்பில் படித்தவர். இவருடைய கதைகள் பத்திரிகையில் வருவதைக் கண்ட ரா. வெ. தானும் சில கதைகள் எழுதி இவருக்கு சென்னைக்கு அனுப்பிவைத்தார். இவர் தன் கதைகளோடு சேர்த்து பத்திரிகைகளுக்கு அனுப்பினார். இவருக்கும் அந்தச் சமயத்தில் சிறிது பெயர்

பிரபலமாகி யிருந்தபடியால் நண்பரது கதையும் சேர்ந்தே வெளியாகியது. இவர் பெயரின் முதல் எழுத்தும் நண்பர் பெயரின் முதல் எழுத்தும் 'ரா' என்றிருக்கவே அநேகர் இவ்விருவரும் சகோதரர்களாயிருக்கக் கூடுமோ என்று நினைத்தார்கள். இவர்கள் உடன் பிறந்த சகோதரர்களாயில்லாவிட்டாலும், இன்றுவரை அந்யோன்யமாகவே பழகி வருகிறார்கள்.

இன்ஷூரன்ஸ் கம்பெனியை மூடிவிட்டார்கள். வேலையில்லாமல் இவர் சென்னையில் இரண்டு மாதமிருந்தார். ஏதாவது பத்திரிகை ஆபிசில் முயற்சி செய்யலாமாவென்று கு. ப. ரா. கேட்டார். ஆனால் இவருக்கு இஷ்டமில்லை. பத்திரிகையை நிரந்தரமாக நம்பியிருக்க முடியாதென்றும், கதை எழுதுவதை ஒரு பொழுது போக்காகவே கொள்ளவேண்டுமென்றும் சொல்லி, இதர இடங்களில் முயற்சி செய்து கொண்டிருந்தார். நல்லவேளையாக சென்னையிலுள்ள கெல்வட் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் இவருக்கு ஏற்கனவே பரிச்சயமானவராயிருந்தார். அங்கேயிருந்த 'ரைட்டர்' அந்த சமயம் 'ரிடயர்' ஆவதாகயிருந்தது. இவரும் மதுரையில் படிக்கும்போதே, பள்ளிக்கூட ஆபீஸ் வேலையைக் கவனித்து வந்ததால் அதில் நல்ல பயிற்சியிருந்தது. ஆகையால் சென்னை ஹைஸ்கூல் ஆசிரியரும் தயக்கமில்லாமல் வேலைக்கு எடுத்துக்கொண்டார்.

உத்தியோகத்தைப் பற்றிய கவலை தீர்ந்ததும் மறுபடியும் கதைகள் எழுதுவதில் மும்மரமாக ஈடுபட்டார். ஏற்கனவே பத்திரிகைகளிலும் பெயர் இருந்தபடியால் கதைகள் மளமளவென்று பிரசுரமாக வந்தன. இந்த சமயத்தில் இவருக்கு இன்னொரு ஆசையும் உதித்தது. இதுவரையும் சாதாரணப் பத்திரிகைகளில்தான் கதைகள் வந்துகொண்டிருந்தன. பிரபலமுள்ள பத்திரிகைகளுக்கும் எழுத விரும்பி, முதலில் ஆனந்தவிகடனுக்கு ஒரு கதை எழுதியனுப்பினார். ஒரு மாதமாகியும் அது வெளியாகவில்லை. திரும்பி வரவுமில்லை. ஒரு நாள் நேரில் அந்த ஆபிசிற்கே சென்று உதவி ஆசிரியரைக் கேட்டதற்கு, "உங்கள கதை நன்றாய்த்தானிருக்கிறது. ஆனால் அதில் ஒரு சில வரிகளை மட்டும் மாற்றி திருத்தி எழுதிக்கொடுத்தால் பிரசுரிக்க இயலும்" என்றார். இவருக்கு அது இஷ்டமில்லை. "அதைத் திருப்பிக் கொடுங்கள் உங்களுக்கு வேறு கதை எழுதி அனுப்புகிறேன்" என்று சொல்லி அதை வாங்கிவந்து அந்த ஆபிசுக்குப் பக்கத்திலிருந்த "சந்திரோதயம்" என்ற பத்திரிகையில் அதைக் கொடுத்துவிட்டார். 'சந்திரோதயம்' ஆண்டு மலருக்கு அவசரமாகக் கதை வேண்டுமென்று அவர்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். இவர் கொண்டுபோய் கொடுத்ததும் அவர்கள் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்டு மலரில் பிரசுரித்துவிட்டார்கள் "களத்து வாசலில்" என்ற தலைப்புடன் வெளிவந்த அந்தச் சிறுகதை அம்மலரிலேயே முதன்மையான கதை என்று எல்லோரும் புகழ்ந்தார்கள். கு. ப. ராவும் அதைப் படித்துவிட்டு "அற்புதம், அபாரம்" என்று பாராட்டினார். 'இனி இம்மாதிரிக் கதைகளே எழுத முயற்சி செய்யுங்கள். நம் கிராம வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட கதைகள்தான் வாசகர்களுக்குப் பிடிக்கும்" என்று அவர் ஊக்கப்படுத்தினார்.

அதிலிருந்து இவர் கிராமியக் கதைகளே எழுத முனைந்தார். கலைமகள், மணிக்கொடி, பாரததேவி, பாரதமணி ஆகிய பத்திரிகைகளில் அடிக்கடி வெளியாகி வந்த கதைகள் பலராலும் பாராட்டப்பட்டன. இவர் சிறுவயதில் அதாவது

முதல் வகுப்புமுதல் ஆறாவது வரை பழனியில் படித்து வந்தார். தன் பெரியப்பா வீட்டில் தங்கியிருந்தார் அவருக்கு நிலபுலன்கள் அதிகம். ஆகையால் பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் இவர், தன் பெரியப்பாவுக்குப் பதிலாக நிலங்களைக் கவனிக்கப் போகவேண்டியதாயிற்று, அங்கே தான் இந்தக் கதைகளுக்கெல்லாம் இவருக்கு எண்ணம் உதித்தது. பின்பு பத்து வருஷங்கள் கழித்த, அவைகளெல்லாம் கதைகளாக வர வாய்ப்புக் கிடைத்தது இவரே அடிக்கடி எங்களிடமும் நண்பர்களிடமும் சொல்லுவார், "உயர்ந்த கதைகள் என்று பாராட்டப்படுபவைகள் எல்லாம் என் மனதில் வருஷக் கணக்காக ஊறிக் கிடந்தவைகள் தான். அவைகளை எப்படி எழுதுவதென்று இரவு பகலாக நினைத்துக் கொண்டிருந்திருப்பேன்." பள்ளிக் கூடத்தில் மிக்க பொறுப்பான வேலையை வகித்து வந்தார். பணம் வரவு செலவெல்லாம் இவர் பொறுப்புத்தான். ஆகையால் வீட்டுக்குக் கூட சில சமயங்களில் கணக்குகளை எடுத்துக் கொண்டு வந்து முடிக்கவேண்டியிருக்கும். அப்படி இருந்தாலும் கதைகள் எழுதுவதை மட்டும் நிறுத்துவதில்லை. திடீரென்று இரவில் இரண்டு மணிக்குக்கூட எழுந்து உட்கார்ந்து கொண்டு எழுதிக் கொண்டிருப்பார். "இப்படித் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டால் உடம்பு கெட்டுப் போகாதா?" என்று இவரது தாயார் சொன்னால், "இந்த நேரத்தில் தானம்மா கதையை மளமளவென்று எழுத முடிகிறது" என்பார். 1940ல் ஒரு வருஷம் எழுதாமல் நிறுத்தியதையெல்லாம் சேர்த்து 41, 42 வருஷங்களில் எழுதிக்குவித்தார். அந்தச் சமயம் இரண்டாவது யுத்தம் மும்முரமாக இருந்த படியால் நாங்களெல்லாம் சென்னையை விட்டு மதுரைக்குக் கிளம்பி விட்டோம். பள்ளியில் வேலை அதிகமாயிருந்ததால் இவர் மட்டும் சென்னையிலேயே தங்கி விட்டார்.

இது வரையில் சுயேச்சையாகக் கவலையில்லாமலிருந்த இவருக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைத்துக் கஷ்டப்படுவதைப் பார்க்க இவருடைய பெற்றோர்கள் நினைத்தார்கள். எல்லோரும் சொல்வது போலவே இவர், "எனக்கு இப்போது கல்யாணத்திற்கு அவசரமில்லை" யென்று சொல்லிவிட்டார். ஆனால் இவருக்காக இவருடைய மூத்த சகோதரி தன் மகளை வேறு இடத்தில் கொடுக்காமல் வைத்துக் காத்துக் கொண்டிருந்தார்கள். இவர் தாயாருக்குப் அந்தப் பெண்ணைத் தான் தன் மகனுக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்ற எண்ணம். ஆனால் இவருடைய தகப்பனாருக்கும் பெண்ணின் தகப்பனாருக்கும் அது இஷ்டமில்லை. காரணம் இரண்டு குடும்பத்திலும் அந்தச் சமயத்தில் ஏற்பட்டிருந்த ஒரு மனஸ்தாபம்தான். அந்தப் பெண்ணை வேறு இடத்தில் கொடுத்த பின்பு தன் மகனுக்குக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று காத்திருந்தார் இவர் தந்தை, அதே போல பெண்ணின் தந்தையும் இவருக்கு வேறு இடத்தில் கல்யாணம் முதலில் ஆகட்டும் என்று நினைத்திருந்தார். பெண்ணின் தாய்க்கு பெண்ணை வீட்டிலே வைத்துக்கொண்டிருக்க இஷ்டமில்லை. சீக்கிரம் இரண்டில் ஒன்று தெரிய வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். பெண்ணின் தாயும், மாப்பிள்ளையின் தாயும் ஒரே கட்சி. அதேபோல இருவரின் தந்தையும் வேறு கட்சி. எப்படிக் கல்யாணம் நடக்க முடியும்? இந்தச் சமயத்தில் 'சுதேசமித்திர'னில் "விசித்திர விவாஹம்" என்று இவர் ஒரு கதை எழுதி, அப்பத்திரிகையின் இரண்டு பிரதிகளை பெண்ணின் வீட்டுக்கொன்றும், தன் பெற்றோருக்கு ஒன்றும் அனுப்பியிருந்தார். அதைப் படித்த அவர்கள்,

தந்தையாரிருவரும், பெண்ணின் தாயாரின் இஷ்டப்படியே கல்யாணத்தை முடிக்க ஒப்புக்கொண்டு விட்டார்கள். தன்னுடைய கதை இவ்வளவு பெரிய வேலையைச் செய்துவிடுமென்று இவருக்கே தெரியவில்லை அந்தக் கதை வெளியான இரண்டாவது மாதத்திலேயே இவருக்குக் கல்யாணமும் ஆகிவிட்டது! மணப் பெண் வேறு யாருமல்ல. நான்தான்! இந்த விவாகத்தில் எனக்கும் இவருக்கும் திருப்தியோ அதிருப்தியோ கிடையாது. பெரும்பாலும் காதல் கதைகளையே எழுதுவதில் திறமை பெற்றிருந்தாலும் தன் சொந்த வாழ்க்கையில் காதலுக்கு இடமே இவர் கொடுக்கவில்லை யென்றுதான் நான் நினைக்கிறேன். தன் சொந்த சகோதரியின் நீண்டநாள் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் என்னைக் கல்யாணம் செய்து கொண்டார். கல்யாணத்தன்று பரிசாக இவருக்கு ஒரு புத்தகம் வந்தது தபாலில். பிரித்துப் பார்த்தால், இவர் எழுதிய கதைகளும், இவரது நண்பர் ஸ்ரீ ரா. வெங்கடாசலம் எழுதிய கதைகளும் தொகுப்பாக "கன்னிகா ஸ்திரீ" என்ற பெயரில் வெளிவந்த புத்தகம்தான் அது. இவருடைய முதல் புத்தகமாகையால், கல்யாணத்தினால் ஒருவருக்கு ஏற்படும் ஆனந்தத்தைவிட அதிக மகிழ்ச்சி அன்று இருந்தது.

யுத்த பயம் தீர்ந்து சென்னையில் எல்லோரும் வந்து குடியேற ஆரம்பித்த சமயத்தில் நாங்கள் மறுபடியும் சென்றோம். அப்போதுதான் இரண்டாவது கதைக் கோவையில் இவருடைய 'களத்து வாசலில்' என்ற கதை இரண்டாவது தடவையாக வெளிவந்தது. அந்தப் புத்தகத்தில் வெளிவந்துள்ள எழுபது கதைகளில் ஸ்ரீ "சுகி", ஏ. என். சிவராமன், இவர், ஆகியோரின் மூன்று கதைகளை மட்டும்தான் எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டி எழுதின. இவர் சென்னையிலே இருந்ததால் ஏ. என். சிவராமனைத் தெரிந்திருந்தார். 'சுகி'யின் பல கதைகளை படித்திருந்தாரேயொழிய அவரை நேரில் பார்த்ததில்லை. அவர் விலாசமும் தெரியாது. இதனால் அவரையும் பார்க்கவேண்டுமென்ற ஆவல் எழுந்தது. இந்த ஆவல் இரண்டு வருடம் பொறுத்து 'சுகி'யை திருச்சி ரேடியோ நிலையத்தில் சந்தித்த போதுதான் பூர்த்தியாகியது.

கதைகள் எழுதுவதிலேயே முழுக் கவனத்தையும் இவர் செலுத்தி வந்ததால் சினிமா பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுதுவதை இரண்டு வருடமாக நிறுத்திவிட்டார் ஆனால் "காண்டீபன்" என்ற புனை பெயரில் வேறு யாரோ ஒருவர் பத்திரிகைகளில் அடிக்கடி கதைகளும் கட்டுரைகளும் எழுதி வந்தார். அந்தப் புனைபெயர் தனக்குத்தான் சொந்தமென்று இவர் எழுத எண்ணினார். ஆனால் தன் சொந்தப் பெயரே பிரபலமாகி விட்டபின்பு புனை பெயரைப் பற்றிக் கவலை எதற்கு என்று விட்டுவிட்டார்.

ஒரு நாள் இவர் வீட்டில் இல்லாத சமயம் இவரைத் தேடிக்கொண்டு ஒருவர் தன் மனைவி குழந்தைகளோடு வந்தார். அவரை நான் அதற்குமுன் பார்த்ததில்லை. இருந்தாலும் வந்தவர்களை உள்ளே அழைத்துச் சென்று உபசரித்தேன், "நாங்கள் உங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி, உங்களை எங்கள் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வரும்படி எத்தனையோ முறை உங்கள் கணவரிடம் சொல்லிப்பார்த்தோம். ஆனால் அவர் வெட்கப்பட்டுக் கொண்டோ என்னவோ பேசாமலிருந்துவிட்டார். அதனால் நாங்களே வந்துவிட்டோம்" என்றார் அந்த நண்பர். "நீங்கள் யாரென்று தெரியவில்லையே. ஆனால் படத்தில் பார்த்திருக்கிறேன். ஸ்ரீ கு. ப. ரா. என்கிறது

என்று நான் முடிப்பதற்குள், "ஆமாம், ஆமாம். அந்த ஆசாமி நான்தான்" என்றார் அவர் சிரித்துக் கொண்டே. அவரைப் பற்றி இவரும் அடிக்கடி என்னிடம் சொல்லியிருந்தார், அவர் கதைகளையும் நான் விடாமல் படித்திருந்தேன். அவரது எழுத்தின் வேகத்தையும் அவர் உருவத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது எனக்கே ஆச்சரியமாகத்தானிருந்தது. கடைசியாக அவர் விடைபெற்றுக் கொண்டு செல்லுகையில், "உங்கள் கணவரைப்போல நீங்களும் கதைகள் எழுதிப் பெயர் வாங்கவேண்டுமென்று "வேடிக்கையாகச் சொல்லி விட்டுச் சென்றார்.

சில மாதங்களுக்குப் பின்னர் கு. ப. ரா. தன் சொந்த ஊராகிய கும்பகோணத்திற்கே வந்து தங்கி விட்டார். அதனால் அவரைத் தேடிக் கொண்டு சென்னைக்கு வரும் நண்பர்கள் எங்கள் வீட்டிலேயே வந்து தங்குவார்கள். அப்படி வந்தவர்களில் ஸ்ரீ அ. கி. ஜெயராமன், ந. சிதம்பர சுப்ரமண்யன், க. நா. சுப்ரமண்யன் ஆகியோர் இவருக்கு நெருங்கிய பழக்கமுடையவர்களானார்கள். ஸ்ரீ அ. கி. ஜ. எங்கள் வீட்டிலேயே "ஜோதி நிலையம்" என்ற புத்தக வெளியீட்டை ஆரம்பித்தார். இவர் பள்ளிக்கூட வேலையை முடித்து விட்டு வந்து இரவில் அந்த நிலைய வேலைகளையும் கவனிப்பார். முதலில் சிறு சிறு புத்தகங்களாக வெளி வந்து கொண்டிருந்தது. பின்னர் அந்த நிலையம் பெரிதாகிவிட்டது. அதனால் அ. கி. ஜ. தனியாக வேறு வீடு பார்த்துக்கொண்டுபோய் விட்டார். இவருக்கும் பள்ளிக்கூட வேலையில் சலிப்பு ஏற்பட ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் சென்னை ரேடியோ நிலையத்தில் கதைகள் எழுத ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு மாதத்தில் 15 நாள் செய்திக் குறிப்புகளும் நாடகங்களும் எழுதிக் கொடுத்துவர ஒப்புக் கொண்டு வேலை செய்துவந்தார். ஆனால் இரண்டு வேலைகளையும் பார்த்துக் கொண்டு பத்திரிகைகளுக்கும் கதை எழுதி வந்ததில் உடம்பு கெட்டுவிட்டது. பள்ளிக்கூடத்தில் தனக்குத் தெரிந்த ஒரு நண்பரைக் கொண்டுவந்து வைத்து அவருக்கு வேலையைக் கற்றுக்கொடுத்துவிட்டு விலகிக்கொள்ள முயற்சி செய்தார். இதற்கு மத்தியில் திருச்சி ரேடியோ நிலையத்திலேயே வேலை கிடைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தன் சொந்த ஊர் மதுரைக்குப் பக்கத்தில், பெற்றோர்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்ற நெடுநாளைய ஆவல் நிறைவேறியது.

இந்தச் சந்தோஷ சமயத்தில் பேரிடிபோல ஒரு தந்தி வந்தது. கும்பகோணத்திலிருந்த கு. ப. ரா. இறந்துவிட்டார். நாங்களெல்லாம் உடனே புறப்பட்டுச் சென்றோம். ஆனால் அவர் உடலைக்கூடப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. இந்த ஏக்கம் இவரை வெகுநாள் வரை வாட்டி வந்தது. 1944ல் அவர் இறந்தார். அதற்குப்பின் இவருக்குச் சென்னையில் இருக்கவும் பிரியமில்லை. 1945ல் திருச்சிக்கு வந்து விட்டார். அந்த வருடம் வெளியான "விடி வெள்ளி" என்ற இவரது கதைத் தொகுதி புத்தகத்தை கு. ப. ரா. விற்கே சமர்ப்பணம் செய்தார். அதற்கு அடுத்த வருடம் "அவமானச் சின்னம்" என்ற அமெரிக்க நாவலின் மொழிபெயர்ப்பு வெளியாகியது. அதிலும் முன்னுரையில் கு. ப. ரா. வைப் பற்றிப் புகழ்ந்து எழுதினார். ஏனெனில் அவர் உயிரோடு சென்னையில் இருக்கையில் அந்த மொழிபெயர்ப்பைச் செய்யத் தூண்டியவர் அவர் தான். அதோடு தன்னால் முடிந்த வரை திருத்தியும் உதவினார்,

திருச்சியிலிருந்து நாங்கள் எல்லோரும் ஒரு முறை மதுரைக்கு வந்திருக்கும் சமயம் 'காண்டீபன்' என்று புனை பெயரில் எழுதிய கட்டுரைகள், கதைகள் அடங்கிய சேகரிப்பு மேஜைமீது இருந்தது.

இவர் அதைப் பார்த்துவிட்டு, "யார் இந்தக் காண்டீபன்" என்னுடைய புனைப் பெயரை என் அனுமதியில்லாமல் உபயோகித்துக் கொள்ளலாமா?" என்று என் தமையனைக் கேட்டார். "அது நான்தான்!" என்றார் என் அண்ணா. இவருக்கும், எனக்கும் ஆச்சரியமாகிவிட்டது. "இத்தனை நாளா தெரியாமல் போய்விட்டதே. ஏகலைவன் பக்தியைப் போலல்லவா இருக்கிறது, உன்னுடைய செயல். என் பெயரை உபயோகித்துக் கொண்டதால் தான் உனக்கு இவ்வளவு எழுத வந்திருக்கிறது!" என்று வேடிக்கையாக இவர் சொல்லி, மேலும் எழுத உற்சாகப்படுத்தினார்.

சொல்லப்போனால் இவர் பத்து வருஷம் சிரமப்பட்டு எழுதி பெயர் எடுத்ததைவிட என் அண்ணா இரண்டே வருடத்தில் அந்தஸ்தானத்திற்கு வந்துவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும். என் அண்ணாவும் இவரும் கதைகள் எழுதும்போது நான் மட்டும் எழுதாமலிருக்கலாமா என்று நினைத்து ஒருகதை எழுதி இவரிடம் காண்பித்தேன். அதை இவர் திருத்தி சேர்க்க வேண்டியவைகள், குறைக்க வேண்டியவைகள் எல்லாம் செய்து ஒரு பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். என் பெயரில் அது வெளியான பின்னர் நானே சில சிறு கதைகளும் இரண்டொரு பத்திரிகைகளுக்கு எழுதிவிட்டு, நிறுத்திக்கொண்டேன்.

1947ல் இவருடைய இரண்டாவது கதைத் தொகுதிப் புத்தகம் 'நிறுபூத்த நெருப்பு" வெளியாகியது "பயங்கர மாளிகை" என்ற மொழிபெயர்ப்பு தொடர் கதையும் அடுத்த வருஷத்தில் 'விமர்சனம்' என்ற பத்திரிகையில் வர ஆரம்பித்தது. அந்தப் பத்திரிகைக்கு ஆசிரியர் "காண்டீபன்"தான். என்னுடைய துரதிர்ஷ்டம் என் தமையன் 1949ல் இறந்துவிட்டார். அந்தப் பத்திரிகையும் நின்றுவிட்டது. இவரும் அந்தத் துரதிஷ்டக் கதையைத் தொடர்ந்து எழுதாமல் விட்டுவிட்டார், 1950ல் 'காதம்பரி' என்ற பத்திரிகையில் இவர் "பொன் வண்டு" என்ற தொடர் நாவலை எழுத ஆரம்பித்தார். அந்தப் பத்திரிகையும் ஒரே வருடத்தில் நின்றுவிட்டது. ஆனால் இவர் அந்த நாவலை சிறுகச் சிறுக எழுதி முடித்துவிட்டார். இன்னும் ஓரிரண்டு மாதங்களில் அது புத்தகமாக வெளிவரப் போகிறது.

இதுவரை சுமார் 200 சிறுகதைகள் எழுதியிருப்பார். அவைகளில் இரண்டு தொகுதிதான் புத்தகமாக வெளி வந்திருக்கின்றன. இன்னும் நான்கு புத்தகங்கள் போடும் அளவுக்கு வெளி வந்த கதைகளே இருக்கின்றன. ஆனால் இப்போது தான் காகிதப் பஞ்ச காலமாயிற்றே. இரண்டு மொழி பெயர்ப்புப் புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன ஒரு சொந்த முதல் நாவல் வெளிவரப் போகிறது என்னதான் வந்தும் என்ன. அதிலிருந்து கிடைத்த பணமெல்லாம் தண்ணீரில் போட்ட சர்க்கரை போலக் கரைந்துதான் போய்விடுகிறது. பத்திரிகையிலிருந்து வரும் பணங்களை என்னிடம் சொல்லவே மாட்டார். நானும் வற்புறுத்திக் கேட்பதில்லை அனாவசிய செலவு செய்யமாட்டார், என்ற நம்பிக்கை மட்டும் எனக்கு உண்டு. கையில் பணம் இருந்தால் குழந்தைகளுக்குத் துணிமணி வாங்குவதிலும் புத்தகங்கள் வாங்குவதிலுமே ஒரு நொடியில் தீர்த்துவிடுவார். பண நெருக்கடி வந்துவிட்டால் இரவு பகலாக உட்கார்ந்து எழுதுவார். அது தீர்ந்ததும் ஓய்வு எடுத்துக் கொண்டு விடுவார். எழுதுகிறவர்கள் எல்லாமே இப்படித்தான் இருப்பார்கள் போலும்! இதுதான் கலை என்று அவர்கள் சொல்லக் கூடும்!

" ஆவியன் "

[புளுகுக்கும் எனக்கும் வெகுதூரம், பேய்க் கதைகள் புளுக வேண்டும் என்பதோ வாசகர்களை மந்திரவாதிகளாக மாற்றிவிட வேண்டுமென்பதோ இதை எழுதும் என்னுடைய நோக்கமில்லை.]

நடுக்காட்டு எசக்கி என்ற மோகினி தோற்றமளித்தபோது தோன்றிய தீப்பந்தம் பற்றிச்சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன்- ஆவிகள் தோற்றமளிக்கும் போது அல்லது அதற்கு சற்று முன்னர் நமது கண்களுக்குத் தெரியும் விசித்திரமான ஒளிதான் 'ஆவி ஒளி' என்றும் நான் கூறியிருந்தேன். அந்த ஆவி ஒளியின் தன்மையைப் பற்றி முழுதும் தெரிந்து கொள்ள வாசகர்களாகிய நீங்கள் துடிக்கிறீர்களல்லவா?

சொல்லுகிறேன். ஆவி ஒளியைப் பற்றிய உண்மை வேறு ஒன்றுமில்லை. இது தான்-

ஆவிகள் இந்த உலகில் நம் முன்னர் பிரசன்னமாகும் போது ஒளித்தோற்றம் இயற்கையிலே தாமாகவே நிகழும் முதல் வகை அறிகுறிகளில் ஒன்று. ஆவியுலகத் தொடர்பு கொள்வதற்கென்றே குழுமியிருப்பவர்கள்—அவர்கள் அத்துறைக்கு மிகப்புதியவர்களாயினும் சரி, மிகப் பழகியவர்களாயினும் சரி— மேஜையைச் சுற்றி அவர்கள் உட்கார்ந்து மின்சார விளக்குகள் அணைக்கப்பட்டு, அல்லது சிகப்புநிற பல்புகள் மங்கிய ஒளி சிதற ஆரம்பித்து, சில நிமிடங்கள் சென்றதும், திடுதிப்பென்று ஒருவித ஒளி குழுமியிருப்பவர்களின் கண்களுக்குத் தென்பட ஆரம்பிக்கும். சில வேளைகளில் அப்படித் தென்படும் வெளிச்சம் கூரிய ஊசி நுனிமேல் பளிச் பளிச்சென்று மின்ன ஆரம்பிக்கும். மற்றும் சில வேளைகளில் இரவில் இருளில் ஒளி சிந்தும் மின்மினிப் பூச்சிகள்போல் குழுமி இருப்பவர்கள இருக்கும் அறையில் மேலே அங்கங்கே மிதந்த வண்ணம் ஒளி விடுவதைப் பார்க்கலாம். இந்த வெளிச்சத்தை ஆவியுலக பாஷையில் ஸ்பிரிட் லைட்ஸ் (Spirit Lights)—அதாவது 'ஆவி ஒளி' என்டார்கள். இந்த 'ஆவி ஒளி' இன்ன வடிவத்தில், இன்னின்ன இலட்சணத்தில்தான் இருக்கும் என்று அறுதியிட்டுக் கூற இயலாவிட்டாலும் சாதாரணமாக அவைகள் தோன்றும் சில ரூபங்களையும் சில வடிவங்களையும் ஆவியுலக ஆராய்ச்சியாளர் குறித்து வைத்திருக்கிறார்கள்.

ஆவிகளுடன் தொடர்புகொள்ளக் காத்திருக்கும் நமக்கு முன்னால் அல்

லது மேலே இந்த ஒளி எவ்வளவு திடீரென்று தோன்றுகிறதோ அவ்வளவு திடீரென்று தோன்றிய பின்னர் மறையவும் செய்கின்றது. உருண்டை வடிவமான ஒளிப் பந்தங்கள் போலும். 'குளோப்'கள் போலவும், உருளைகள் போலவும், பந்து போலவும், நட்சத்திரங்கள் போலவும் இந்த ஒளி சில சமயங்களில் நம் தலைக்கு மேலாகத் தோன்றி உயரே அதிவேகமாகச் சுழன்று வட்டமிடும். அப்படி வட்டமிடும்போது ஏதோ கண்காணாத கரங்கள் அவற்றை அவ்வாறு வேகமாகச் சுழற்றி ஆட்டி வைப்பது போலவும் இருக்கும். இந்த ஒளி வடிவங்கள் இருளினுள்ளிருந்து எப்படித் திடீரென்று முளைத்தனவோ, அவ்வளவு திடீரென்று மீண்டும் இருளினூடே இரவில் சென்று மறைவதும் உண்டு. இதே ஒளி உயரே சிறிய மின்னல் போன்று பளிச்சென்று வெட்டி, நெளிந்து மறுகணமே தேய்வதும் உண்டு. 'வியான்ஸ்' மேஜையிலிருந்து கிளம்பி மேலே சுவர் வரை எட்டி மறையும் ஒளிக்கம்பியாக இந்த ஒளி காட்சியளிப்பதும் உண்டு. சிற்சில வேளைகளில் எரி தழலின் சிறு சிறு நாக்குகள் நீண்டு நீண்டு உயர்வதும் பின்னர் தாழ்ந்து அணைந்து போவதம் உண்டு அப்படியும் இல்லையெனில் பிரகாச மிக்க மேகங்கள் போலவும் நெருப்புத் தூள்கள் போலவும் தோற்றமளித்து தலைமேலிருக்கும் சுவரின் பக்கமாகச் சென்று மறைந்து போவதையும் காணலாம். இவ்வித ஒளி வடிவை ஆவியுலக ஆராய்ச்சியில் ஈடுபட்டு மிக நல்ல 'மீடியம்' என்று பெயர் பெற்ற ரெவரண்டு வில்லியம் ஸ்டெய்ன்டன் மோஸஸ் (Reverand William Stainton Moses) தமது ஆராய்ச்சியின் போது பல தடவை கண்டிருக்கிறார்.

உலையில் பழுக்கக் காய்ச்சி எடுத்த இரும்புபோல் நெருப்புச்

பெர்னார்டு ஷாவின் 'ஆவி'

ஆவி உலக ஆராய்ச்சியில் நம்பிக்கை இல்லாத பலரும் இப்போது ரஸாயன ரீதியாக நம்ப ஆரம்பித்திருக்கின்றனர். உலக நாவலாசிரியர் ஷாவைப் பற்றித் தெரியாதவர் இருக்க முடியாது. ஷா இப்போது அமரராகி விட்டார். இருந்தாலும் அவர் 'ஆவி' ரூபத்தில் பேசுகிறாராம். எழுதுகிறாராம்.

லண்டன் செய்தியொன்று இது பற்றிய ரஸமான விஷயத்தைத் தருகிறது பாருங்கள். 'பிரடிக்ஷன்' என்ற பத்திரிகையில் கீழ்க்கண்ட செய்தி பிரசுரமாகி இருக்கிறது. இப்பத்திரிகையின் ஆசிரியை மிஸ் ஜெரால்டைன் கம்மிங்ஸ், ஆவி உலகுடன் தொடர்புடைய ஒரு ஆராய்ச்சியாளினி. இவரும் இவர் நண்பர்களும் ஒரு நாள் ஆவிஉலகுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருந்தபோது ஒரு புதிய ஆவி வந்து குறுக்கிட்டதாம். அது ஷாவின் ஆவியேதான். இதற்கு அத்தாட்சி, மிஸ் கம்மிங்ஸ், ஏதோ ஒரு சக்தியால் தூண்டப்பட்டு எழுத ஆரம்பித்தார். அவர் எழுதியது பெர்னாட் ஷாவின் கையெழுத்தே. ஆவியினால் இயக்கப்பட்டு அவர் எழுதியது இது தான். "அது யார் பேட்ச்தானா? (பேட்ச்தானா அவர் காரியதரிசியின் பெயர்) அந்த நர்ஸை விரட்டி விடவும். அவள் டாக்டருடன் சேர்ந்து என்னைப் பிழைக்க வைக்கப் பார்க்கிறாள். எனக்குச் சாக வேண்டுமென்றே விருப்பம். நான் மரண மடைந்ததாகக் கனவு கண்டேன். ஆனால் என்ன கஷ்டம். இன்னும் உயிருடன் இருக்கிறேனே..." இது ஷா இறந்த 3ம் நாள் கிடைத்த பேட்டி. இப்போது அடிக்கடி ஷாவின் ஆவி பேசி வருவதாக அச்செய்தி கூறுகிறது.

சிவப்பாயும், வாணவேடிக்கையின் போது நாம் காணும் 'வயலட்' நிறமாகவும், பிரகாசமிக்க மஞ்சள் நிறமாகவும் அதாவது கனிந்த ரோஜா நிறமாகவும் மங்கி மங்கித் தோன்றும் பச்சை நிறச் சாயந் தோய்ந்ததாகவும் கூட இந்த ஆவி ஒளிகள் சில சமயங்களில் தோன்றியிருக்கின்றன. ஆவி ஒளி பற்றிய வரையில் இன்னொரு ஆச்சரியம் என்னவெனில் அது எவ்வளவுதான் பிரகாசமாக இருந்தாலும் ஒளி தோன்றும் இடம் இந்த ஒளியால் பிரகாசமடைவதில்லை. ஒளி தோன்றும் இடத்தில் ஏற்கனவேயிருந்த வெளிச்சத்திற்கு அதிகமான வெளிச்சத்தை இந்த ஆவி ஒளி நல்குவதில்லை மற்றொன்று என்னவெனில் இந்த ஆவி ஒளியின் காரணமாக ஒளி தோன்றும் இடத்தில் எவ்வித நிழலும் விழுவது இல்லை; படர்வதும் இல்லை இந்த ஆவி ஒளியின் நோக்கமென்ன என்று கேட்கிறீர்களா? ஆவியுடன் தொடர்பு ஏற்பட்ட உடன் நிகழப்போகிறவற்றைவரவேற்பதும்,குறிப்புணர்த்துவதும் தான் இந்த ஆவி ஒளியின் வேலை என்று ஆவியுலக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஆவியுலகத்திலிருந்து மறைந்துபோன நண்பர்கள் அல்லது உறவினர்கள் நம் முன்னர் வரப் போகிறார்கள். பிரசன்னமாகப் போகிறார்கள். பிரசன்னமாகி நம்மிடையே வியாபித்து நம்முடன் சம்பாஷணை நடத்தப் போகிறார்கள் என்பதை அறிவிப்பதே இந்த ஆவி ஒளித் தோற்றத்தின் நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். நண்பர்கள் அல்லது உறவினரின் ஆவியின் வருகையைக் குறிப்பிட்டு முடிந்து, வேறு அறிகுறிகளும் அடையாளங்களும் நிகழ ஆரம்பித்ததும் ஆவி ஒளி யாரோ கண்காணாத ஒருவரின் கரங்களால் திடீரென்று அணைக்கப்பட்டது போல் அவிந்து விடுகிறது.

ஆவி ஒளியைப்பற்றி இத்தனை கூறிய பின்னர் வாசகர்களுக்கு வாழ்க்கையில் நடந்த ஒன்றிரண்டு சம்பவங்களையும் நான் கூற விரும்புகிறேன். எனது நண்பர் ஒருவர். மீண்டும் நண்பர்தானா என்று கேட்டு விடாதீர்கள். இவர் ஒரு சமயவாதி; சந்தேகவாதி. எதையுமே எந்தக் காலமும் தன் கண்ணால் கண்டாலன்றி நம்பாதவர். ஐம்புலனுக்கும் அப்பாற்பட்ட எதையும் நம்ப மறுப்பவர். ஒரு வழக்கறிஞர் இன்று நாட்டில் ஒரு சட்டசபையில் அங்கத்தினராகவும் இருப்பவர். அவர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம். ஒரு நாள் இரவு 12 மணிக்கு தன் வீட்டிற்கு வந்திருந்த தனது சிறிய தாயாரை அந்த அம்மையின் வீட்டிற்குக் கொண்டு சேர்க்க இவர் உடன் சென்றார். சிறிய தாயாரின் வீடு அவரது வீட்டிலிருந்து சுமார் அரை மைல் தூரத்திற்கப்பாலிருந்தது. அவர் தனது சிறிய தாயாரோடு போகும் வழியில் ஒரு கட்டை மாடன் கோயில் இருந்தது. கோயிலுக்குப் பக்கத்தில் வீடுகள் கிடையாது. அது பாதையருகிலிருந்த ஒற்றைத் தனிக் கோவில். மேகங்களால் சூழப்பட்ட சந்திரன் மங்கிய நிலவைச் சிதறிக்கொண்டிருந்த நேரம். நிலவொளி மங்கலாக இருந்த காரணத்தினால் நண்பர் தமது வீட்டிலிருந்து சிறிய தாயாருடன் வெளியில் இறங்கும்பொழுது தமது 'டார்ச் லைட்'டையும் கூடத் தம்முடன் எடுத்து வந்திருந்தார். கட்டை மாடன் கோயிலின் அருகே வந்துகொண்டிருந்த பொழுது அவரது சிறிய தாயாரின் உள்ளத்தில் சிறிது அச்சமும் பயமும் தோன்ற ஆரம்பித்தனவாம். இவரும் தமது கையிலிருந்த 'டார்ச் லைட்'டின் பொத்தானை அமுக்கி ஒளியேற்றி தரை மேல் காட்டிய வண்ணம் நடக்க ஆரம்பித்தாராம். திடுதிப்பென்று 'டார்ச் லைட்'டின் பிரகாசத்தின் மேல் வேறு ஒரு ஒளி மேலிருந்து கீழ் நோக்கித் தென்பட

ஆரம்பித்ததாம். நண்பரும் அவர் சிறிய தாயாரும் மேல் பக்கமாக வானத்தை அண்ணாந்து பார்த்தார்களாம்.

ஒரு ஒளித்தூண் மேலே ஆகாயத்திலிருந்து கீழே நடந்து கொண்டிருந்த அவர்களின் பாதங்கள் வரையில் வந்துவிட்டதாம். அந்த ஒளித்தூணின் நீளம் சுமார் 50 அடிகள். அதன் குறுக்களவு உத்தேசம் அரை அடி. கட்டைமாடன் கோயிலைத் தாண்டி 50 அடிகள் வரையில் அவர்கள் நடந்து கொண்டிருந்த பொழுது அந்த ஒளித்தூணும் அவர்கள் முன்னாலேயே அவர்களை தொடர்ந்ததாம். நான்தான் சொன்னேனே! நண்பர் சந்தேகவாதியென்று. சுற்று முற்றும், மேலும் கீழும், முன்னும் பின்னுமாக நண்பர் ஒவ்வொருபுறமும் திரும்பித் திரும்பி அந்த ஒளித்தூண் எங்கிருந்து, எவ்வாறு, ஏன் தோன்றிற்று என்று ஆராய முற்பட்டாராம். அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஒன்றையும் அவர் நம்புவதற்கும் தயாராக இல்லை. இருந்தாலும் தானும் தன்னுடன் இன்னொருவரும் கண்களால் கண்ட அந்த ஒளித்தூணை நம்பாமல் இருக்கவும் வழியில்லை. வேறு வழியின்றி, காரணம் அறிய முடியாமல், தமது சிறிய தாயாரிடம் 'இது என்ன?' என்று அவர் கேட்டாராம். 'இந்தக் கட்டைமாடன் இப்படித்தான். நடு ராத்திரியில் போகிறவர்களைப்புரளி பண்ணுகிறதுதான் அவன் வேலை. நீ சும்மா பயப்படாமல் நட அப்பா' என்று அந்த அம்மாள் தனக்கென்றமைந்த பாஷைக்கும் அறிவுக்கும் ஏற்ப பதிலுரைத்தாராம்.

இந்த சம்பவத்தைப்பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்று நீங்கள் கேட்கிறீர்கள். இல்லையா? இந்த ஒளித்தூணுக்கு ஒரே ஒரு விளக்கம்தான் கூறமுடியும். அந்த நண்பரின் அல்லது அவரது சிறிய தாயாரின் குடும்பத்திலிருந்து முன்

வெளவாலைப்பற்றி

பறவையைவிட திறமையாகப் பறக்கமுடியும் வெளவாலால். 'வெளவாலைப் போலக் குருடு' 'Blind as a bat' என்ற ஆங்கிலப் பழமொழி சுத்த அபத்தம். பாதி இருட்டிலும் இவைகளால் நன்றாகப் பார்க்கமுடியும். வெளவால் பூனையைப் போல தன்னைத்தானே சுத்தம் செய்து கொள்ளும். பூச்சிகளைத் தின்னும் வெளவால்கள் பறவைகளைவிட வேகமாகப் பறக்கும். வளைந்து வளைந்து பறத்தல் இடைவெளிவிட்டுப் பறத்தல் சடேரென்று திரும்புதல்போன்ற வெளவாலுக்கு இருக்கும் திறமையைப் பறவைகள் காப்பி அடிக்கக்கூட முடியாது. சில பறவைகளைப் போல ஒரு கண்டத்திலிருந்து வேறு ஒரு கண்டத்துக்குப் பறந்து செல்லும் வெளவால்களும் இருக்கின்றன. சில வெளவால்களின் விரல் அமைப்பில் ஒரு புதுமை இருக்கிறது. இதனால் இவைகள் சுவர் ஓரத்தில் நடக்கவோ அல்லது விழாமல் தொங்கவோ முடிகிறது.

போன ஒரு மஹானின் ஆவி, அல்லது நண்பரிடமும் அவரின் சிறிய தாயாரிடமும் பரிவு கொண்ட ஒரு உத்தம ஞானியின் ஆவி கட்டையன் கோவிலைத் தாண்டி நண்பரும் அவர் சிறிய தாயாரும் போய்க்கொண்டிருந்த பொழுது அவர்களின் அச்சத்தையும் பயத்தையும் நீக்கி அவர்களுக்கு ஒரு துணையாக வந்திருக்க வேண்டும். 'பயப்படாதீர்கள் அஞ்சாதீர்கள். அருகில் நான் இருக்கிறேன்' என்பதை அந்த ஒளித் தூண் மூலம் வந்திருந்த ஆவி உணர்த்தி இருக்க வேண்டும்.

இந்த விளக்கத்தைத்தான் நான் எனது நண்பரிடமும் கூறினேன். அவரால் எனது இந்த விளக்கத்தை ஏற்கவும் முடியவில்லை, மறுக்கவும் முடியவில்லை. பல வருடங்களுக்குப் பின்னர் எனக்கு உயிருக்குயிரான ஒரு மகானை, ஒரு பெரும் மேதையை, ஆத்மீக சக்திமிக்க ஒரு ஞானியை நான் இழந்தேன். அந்த மகானுக்குத் தனிப்பட்ட முறையில் மரியாதை செலுத்துவதற்கென்று பிரத்தியேகமாக சமாதி எழுப்பப்பட்டது. மகானைப் பிரிந்த துயரம் தாங்காமல் தேம்பித் தேம்பி உருகி உலர்ந்து கொண்டிருந்த என்னைத் தேற்றுவதற்காக நான் மேலே குறிப்பிட்ட நண்பர் சில நாட்கள் அநேகமாக என் அருகிலேயே இருந்தார். நண்பருக்கும் கூடத்தான் மேதையின் மறைவில் தாங்கொணாத் துயரம். மகான் மறைந்த மூன்றாம் நாள் நானும் எனது நண்பரும் மகானின் சமாதி மண்டபத்தில் இரவு 11½ மணிக்கு மறைந்தவரின் மஹாத்மியத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு நின்றோம், திடீரென்று எங்கள் தலைக்கு மேலே ஆகாயத்தில் மின்வெட்டுப் போல ஒரு பிரகாசமான ஒளி தோன்றி, காற்றைக் கிழித்து, பளபளப்பான சுடர்விட்டு வெட்டி மின்னி, வளைந்து, நெளிந்து மறைந்தது. என்னுடையவும் எனது நண்பருடையவும் கண்களில் பட்டுத்தெறித்தது. ஒளி வந்த திக்கையும், மற்ற எல்லாப் பக்கங்களையும் நாங்கள் பார்த்தோம். எவ்வளவுதான் நாங்கள் முயன்றும் ஒளி தோன்றியதின் காரணத்தை எங்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஒருவேளை மின்னலாக இருக்குமோ என்றால் இல்லவே இல்லை. அது கோடை இரவு. வானத்தின் நாலா பக்கமும் பார்த்தோம். ஒரு சிறு துண்டு மேகம்கூட இல்லை அப்படியானால் வேறு ஏதும் காரணம் காட்ட முடியாத இந்த ஒளி ஆவி ஒளியா? நிச்சயமாகவும் ஆவி ஒளியாகத் தான் இருக்க வேண்டும். எந்த ஆவி, ஏன் அந்த ஒளி என்பதை மட்டும் கேட்காதீர்கள்.

இன்னொரு அநுபவம். அது ஒருவரின் சொந்த அநுபவம். இரவு சாதாரணமாக அவர் சுமார் 11 மணிக்குத்தான் படுக்கைக்கு செல்லுவார். 11 மணிக்குப்பின்னர் அவர் படுக்கைக்குச் சென்றாலும் செல்வாரே தவிர அதற்கு முன்னர் ஒரு நாளும் அவர் செல்லுவதில்லை. அவர் தெய்வ பக்தி மிக்கவர். விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் தலை சாய்த்ததும் அவர் சில நிமிடங்களாவது கடவுளை தம் மனத்தால் நினைத்து அஞ்சலி செய்யாமல் கண்ணயற மாட்டார். ஒருநாள் இப்படிக் கட்டிலில் படுத்துக் கண்களை மூடி கடவுளை சில நிமிடங்கள் தியானித்த பின்னர் அவர் தமது கண்களை விழித்தார். அவரை அறியாமலே அவரது தலைக்குமேல் மாடியைத் தாங்கிக் கொண்டிருந்த உத்திரத்தைப் பார்த்தார். அங்கு சிறுவர்கள் விளையாடும் கோலி உருண்டை அளவில் மூன்று ஒளி உருண்டைகள் பளிச்சென்று சுடர்விட்டன. கலியாண ஊர்வலங்களின் போது தெருக்களிலே நாம் பார்க்கின்ற 'காஸ் லைட்டின்' ஒளி திடுதிப்பென்று வெடித்து சுற்றி

யிருக்கும் கண்ணாடியைத் தகர்த்துக் கொண்டு துண்டு துண்டுகளாக வெளியே சிதறி அலையாமல் எரிந்து கொண்டே நின்றால் எவ்விதப் பிரகாசமும் நிறமும் இருக்குமோ அவ்வித நிறத்துடனும் பிரகாசத்துடனும் அந்த ஒளி உருண்டைகள் அவரது கண்களுக்குப் பட்டன. அவர் பயந்துவிடவில்லை. ஆச்சரியப்படவும் இல்லை. மின்சார விளக்கை அணைத்துக் கட்டிலில் படுத்த பின்னர் இருளில், உயரே உத்திரத்தின் அடியில் பதித்துவைத்த வைரங்கள் போல் மூன்று ஒளி உருண்டைகள் தோன்றக் காரணம் என்ன என்று அவர் அமைதியாகச் சிந்திக்க ஆரம்பித்தார். எங்கிருந்தாவது வேறு ஒளி தமது அறைக்குள் நுழைய மார்க்கமிருந்ததா என்று ஆராய்ந்தார். வெளியிலிருந்து ஒளி தமது அறைக்குள் நுழைவதற்கு வழியில்லை. இல்லவே இல்லை. ஜன்னல் கதவுகள் எல்லாவற்றையுமே அவர் இறுக மூடியிருந்தார். அறையில் எங்கும், எந்தப் பக்கத்திலும் கூட வெளியிலுள்ள ஒளி நுழைவதற்கு இடை வெளி கிடையாது. ஒளி வந்த திசையை அவரால் காண முடியவில்லை. அப்படி ஒளி வருவதற்கு ஒரு திசைகூட இல்லை. உயரே இருந்து மாடிச்சுவரைக் கிழித்துக்கொண்டு தான் இந்த ஒளி உருண்டைகள் காட்சியளிக்கின்றனவோ என்று கருதுவதற்கும் இடமில்லை. ஏனென்றால் மரத்தாலான உத்திரத்தின் கீழ் பக்கமாகவும் படுத்திருந்த அவரது கண்களுக்கு நேராகவும் அந்த ஒளி உருண்டைகள் தெரிந்தன. அவரது காரண காரிய வாதத்தால் ஒளி உருண்டைகளின் பிறப்பின் மர்மத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடவே அவர் படுக்கையை விட்டு எழுந்திருந்தார். விளக்கின் ஸ்விட்சைப் போட்டார். அறையில் மின்சார பல்பு பிரகாசிக்க ஆரம்பித்ததும் ஒளி உருண்டைகளைக்காண முடியவில்லை, மீண்டும் விளக்கை அணைத்துவிட்டு உத்திரத்தைப் பார்த்தார். சில விநாடிகள் கழிந்து மீண்டும் அந்த மூன்று ஒளி உருண்டைகளும் தோன்ற ஆரம்பித்தன அவர் மீண்டும் ஆராயத் தொடங்கினார். அவர் சிந்தை எங்கெங்கெல்லாமோ சென்று எதை எதை எல்லாமோ நினைத்தது. இரவில் ஏதாவது உத்திரத்தை ஒட்டியிருக்கும் ஒரு வகைப் பூச்சிகள் இம்மாதிரி

ஒரு முத்தம் 12,000 பவுன்

1915ம் வருஷம் லண்டனிலுள்ள ஆல்பர்ட் ஹாலில் ஒரு விநோத ஏலம் நடைபெற்றது. ஒரு நிதிக்குப் பொருள் சேர்க்க 'மாட்லாஸ்' (Mad Laus) என்ற நடிகை தனது ஒரு முத்தத்தை ஏலம் விட்டாள். 8,000 பவுனிலிருந்து ஏலம் ஆரம்பிக்கப்பட்டு கேட்கப்பட்டது. கடைசியில் அவள் முத்தத்தை ஸெயிண்ட் ஆன்பன்னின் டியூக் 12 000 பவுனுக்கு ஏலமெடுத்தார். நடிகை மாட்லாஸ் அவருக்கு முத்தம் வழங்கத் தயாராக நின்றாள். ஆனால் நடந்தது என்ன தெரியுமா? டியூக் தனது 9வயது மகனைத் தூக்கிப் பிடித்தார். முத்தம் பெற்றுக்கொள்ளுவதற்குத்தான்!

ஒளியைச் சிதறுகின்றனவோ? நாகப்பாம்பின் தலையில் இரத்தினம் இருக்கிறது. இரவில் அது இரை தேட வரும்போது அதன் இரத்தினம் பிரகாசிக்கும் என்று சொல்வார்களே! அப்படி ஏதாவது நாகம் ஒன்று உத்திரத்தின் பக்கமாக வந்து இருக்கிறதோ? அதன் இரத்தினம் சுடர் விடுகிறதோ! அப்படி என்றால் நாகப் பாம்பிற்கு மூன்று இரத்தினங்களா? அவர் மூளை குழம்பியது. அவருக்குப் படுக்கை கொள்ளவில்லை. எழுந்திருந்தார். விளக்கைப் போட்டார். மேலே பார்த்தார். ஒளி உருண்டைகளைக் காண முடியவில்லை. நேராகச் சென்று ஒட்டடை அடிக்கும் ஒட்டடைக்குச்சி ஒன்றை எடுத்து வந்தார். விளக்கை அணைத்தார். சில விநாடிகளில் மீண்டும் அந்த மூன்று ஒளி உருண்டைகளும் தென்பட்டன. ஒட்டடைக் குச்சியினால் உத்திரத்தில் ஒளி உருண்டைகள் தெரிந்த பாகத்தை அடித்தார். ராவினார். அதே குச்சியை உத்திரத்தில் தெரிந்த ஒளி உருண்டைகளின் மேல் தேய்த்துப் பார்த்தார். அவர் சந்தேகம் தெரிந்தது. பூச்சியும் இல்லை. நாகப்பாம்பும் இல்லை. அப்பொழுதுதான் அவர் இன்னொரு அற்புதத்தையும் கவனித்தார். அந்த ஒளி உருண்டைகளால் எவ்வித நிழலும் விழவில்லை. தாம் பிடித்திருந்த ஒட்டடைக் கம்பை அந்த ஒளி உருண்டை ஒன்றின் நேராகப் பிடித்தார். பக்கத்திலோ சுவர்களிலோ கீழே தரையிலோ அந்தக் கம்பின் நிழல் விழவில்லை. ஒட்டடைக் கம்பை ஒரு பக்கமாகப் போட்டு விட்டு படுக்கையில் படுத்தார். சிந்தித்துச் சிந்தித்து அவர் மனம் தடுமாறவே அவரைக்கொஞ்சம் பயமும் பிடித்துக் கொண்டது. அந்த ஒளி உருண்டைகளைப் பார்த்துக்கொண்டே கண்களை அகல விரித்துக்கொண்டு கட்டிலில் கிடந்தார். சுமார் இரவு 12 மணிக்கு அந்த ஒளி உருண்டைகள் திடுதிப்பென்று மறைந்தன. வெகு தூரிதமாகச் சிந்தித்துக் களைத்துப் போயிருந்த அவர் அப்படியே கண்களை மூடி உறங்கினார். களைப்பு மேலீட்டால் இளைத்துப் போயிருந்தன அவரது மூளை நரம்புகள். இரவெல்லாம் ஒளி உருண்டைகள் தம்மைச் சுற்றிவருவதாகக் கனவு கண்டார்.

மறுநாளும் படுக்கப் போகும் பொழுது அதே ஒளி உருண்டைகளைக் கண்டார். அவரை நடுக்கம் ஆட்கொண்டது. கண்களை மூடிக்கொண்டு அப்படியே படுக்கையில் கவிழ்ந்துபடுத்து உறங்கினார். இதன் பின்னர் வாரத்தில் பல நாட்கள் இதே ஒளி உருண்டைகளை அவர் கண்டார். சுமார் ஒரு மணி நேரம் அவை தோற்றமளித்து அப்புறம் இரவு 12 மணிக்கு அவை மறைந்துகொண்டிருந்தன. பகல் இரவாகப் பல நாட்கள் அவர் ஒளி உருண்டைகளின் பிறப்புக்குக் காரணத்தை ஆராய்ந்தார். அவருக்கு அந்த ஒளிக்காட்சி சர்வ சாதாரணமாகி விட்டது. அட்புறம் பல இரவுகள் ஒளி உருண்டைகளின் தோற்றம் ஏற்பட்ட பொழுதெல்லாம் கதவைத் திறந்துகொண்டு வெளிப்புறத்தில் வீட்டின் நாலு பக்கமும் சுற்றிச் சுற்றி வந்து எங்காவது ஆகாயத்திலோ தரையிலோ வீட்டினுள்ளே உத்திரத்தின் அடிப்பக்கம் வரத்தக்க ஒளி ஏதேனும் தெரிகின்றதா என்று பார்த்தார். அப்படியும்கூட ஒருவிதமான ஒளியையும் அவரால் காண முடியவில்லை. அவருக்கு இந்த ஒளி உருண்டைகள் காரணம் காண முடியாத ஒரு புதிராக இருந்தது. "சொல்லப்போகிற விஷயத்தைக் கேட்டுவிட்டு என்னைப் பரிகாசம் செய்யக்கூடாது" என்று என்னைக் கேட்டுக்கொண்டே ஒரு நாள் அவர் என்னிடம் விஷயத்தைப் பிரஸ்தாபித்தார். அந்த ஒளியைக் காண வரும்படி என்னை அழைக்கவும் செய்தார். நானும்

போனேன். இரவு 11-மணிக்கு தமது அறையிலுள்ள விளக்கை அணைத்தார். அவரோடு நானும் அந்த ஒளி உருண்டைகளைப் பார்த்தேன். அந்த ஒளி உருண்டைகள் என்ன என்று கேட்டார் அவர். "இவை உனது மாண்டுபோன முன்னோர்களில் நல்லவர்களான மூன்று பேரின் ஆவிகளின் பிரசன்னத்தைக் குறிக்கும் ஒளி உருண்டைகள், இரவில் அவர்கள் உன்னருகில் இருக்கிறார்கள். உனக்கு எவ்விதத் தீங்கும் நேராமல் பாதுகாக்கிறவர்கள் அவர்கள். அவர்களுக்கு உன் மேல் பரிவும் அன்பும், அக்கறையும், நீ சஞ்சலப்படும் விஷயங்கள் பற்றி உன் மேல் இரக்கமும் இருக்கிறது. அவர்களுக்கு உன்மீதுள்ள நல்லெண்ணத்தின் சின்னங்களாக இந்த ஒளி உருண்டைகளைக் கருது" என்றேன் நான். அவர் எனது பேச்சைக் கேட்டுத் திகைத்துப் போனார், நான் கூறியதை நம்பவில்லை அவர் என்பதை அவரது முகமே காட்டிற்று. என் கூற்று எவ்வளவு தூரம் உண்மை என்பதைச் சோதிக்க நான் அவருக்கு விஞ்ஞான ரீதியான சில யோசனைகளைச் சொல்லி அவற்றைப் பரிசோதிக்கவும் சொன்னேன். உறங்கியும் உறங்காமல் இருக்கும் பிரக்ஞையற்ற உள்மனத்தின் ஒரு நிலையிலுள்ள சோதனைகள் அவை. அந்தச் சோதனைகளில் ஈடுபட்ட பின்னர் இப்போது அவர் நான் சொன்னவற்றை நம்புகிறார்,

பால் பிரண்டனைப் (Paul Brunton) பற்றி உங்களில் சிலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் பிரசித்திபெற்ற பிரிட்டிஷ் பத்திரிகாசிரியர்; எழுத்தாளர். கீழ்நாட்டு ஆத்ம ஞானத்தில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டவர். 'அந்தரங்க எகிப்தினுள்ளே' (Inside Secret Egypt) என்ற அவரது அரிய நூலில் பிரக்யாதி வாய்ந்த எகிப்திய கோபுரம் எனப்படும் பிரமிடின் (Pyramid) உள்ளே ஓர் இரவில் அவர் தமக்கு நேர்ந்த அநுபவத்தை விவரமாக எழுதியிருக்கிறார். எகிப்திய கோபுரங்களினுள்ளே புதைந்து கிடக்கும் மர்மங்கள், அந்தரங்கங்கள், இரகசியங்கள் - இவற்றைத் துருவித் துருவி ஆராய உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் எத்தனை எத்தனையோ ஆராய்ச்சியாளர்கள் அக்கோபுரங்களுக்குச் செல்கிறார்கள். ஆனால் இரவில் பிரமிடின் உள்ளே யாருமே தங்க அநுமதிக்கப்படுவதில்லை. எகிப்திய சட்டம் அதற்கு இடமளிப்பதில்லை. மிகக் கண்டிப்பான சட்டம் அது. பால் பிரண்டன் என்னென்னவெல்லாமோ பாடுபட்டு, கஷ்டப்பட்டு, அச்சட்டத்திலிருந்து தமக்கு மாத்திரம் ஓரிரவு மட்டும் தங்குவதற்கு விதி விலக்கு வாங்கி, ஒரு இரவை பிரமிடின் உள்ளே கழித்தார். தன்னையும் தன்னுணர்வையும் மறந்த ஒரு நிலையில், தூங்காமல் தூங்கி, உள் மன விழிப்புப் பெற்ற ஒரு நிலையில், அவர் இவ்விதமான ஒளியைக் கண்டதாகக் குறிப்பிடுகிறார். 'ஆவி ஒளிக்கும்' அந்த ஒளிக்கும் அதிக வித்தியாசம் இருக்கமுடியாதென்று நான் கருதுகிறேன். ஒளி கண்ட பின்னர் அவருக்கு ஆவிகளின் உதவியால் புராதன எகிப்திய கோயில்களில் நிகழ்ந்ததாக நம்பப்படும் அற்புத மர்மமும் விளங்கிற்றாம்.

ஆவி ஒளியைப் பற்றிக் குறிப்பிடுகையில் உங்களுக்கெல்லாம் வேறு ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வரலாம்

கடவுளை நம் நாட்டவர் ஜோதி வடிவத்தில தான் கண்டார்கள. கடவுளை ஒளி வடிவமாக எண்ணி அஞ்சலி செய்வதும் நமது பண்பாடு. கடவுளை மட்டுமல்ல கடவுள் தன்மை பெற்ற தவஞானிகளையும், முனிபுங்கவர்களையும். தெய்வ அருட்கடாக்ஷத்திற்கு பாத்திரமான மனித சிரேஷ்டர்களையும், மத ஸ்தாபகர்களையும் ஜோதி வடிவமாகவே மக்கள் கற்பனை செய்து வந்துள்ளனர். உலக மக்களின் எண்ணத்தை கவர்ந்த மகா புருஷர்களை எல்லாம் ஒளித்தன்மை ஏறப் பெற்றவர்களாகவே உலகம் கருதி வந்திருக்கிறது, கருதுகின்றது. இதனல் மறைந்தவர்களின் ஆவிகள் எல்லாம் கடவுள் தன்மை பெற்றவை, அல்லது கடவுளுக்கு ஒப்பானவை என்று நாம் நினைத்து விடக்கூடாது. கூடவே கூடாது. நினைப்பது சரியும் அல்ல. ஆனல் ஒன்று. ஆவிகள், ஆவிகளின் உலகம் என்ற உடன் அவற்றிற்கும் ஒளிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது என்று மிகப் பழங்காலத்திலிருந்தே உலகத்தவர் நம்பி வந்திருக்கின்றனர். இந்த நம்பிக்கையின் காரணம் எதுவாக இருந்தாலும் சரி. ஆவிகள் தோன்றும் பொழுது, அல்லது தோற்றமளிப்பதற்கு சற்று முன்பு திடீரென்று காரணங் கூறமுடியாத, காரணத்திற்கு உட்படாத ஒரு 'ஆவி ஒளி' தோன்றுகிறது என்று ஆவியுலக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இந்த ஒளிக்கும் ஆவியுலகத்திற்கும் என்ன தொடர்பு என்பது இன்னும் ஆராய்ச்சிக்குரிய விஷயமாகவே இருந்து வருகிறது ஆவிகளுடன் தொடர்பு கொள்ளத் தவிக்கும் நாம் இந்த 'ஆவி ஒளி' யைட பற்றி மட்டும் தெரிந்துகொண்டால் போதும் என்று நினைக்கிறேன். அதன் காரணத்தை இப்பொழுது நீங்கள் அறியவேண்டிய அவசியமில்லை.

சாயத்தின் மூலம்

இந்தக் காலத்தில் அற்புதமான வர்ணங்கள் எல்லாம் தாவரங்களிலிருந்து தான் எடுக்கப்படுகிறது. இவைகளில் முக்கியமானது 'மாடர்' (Madder) என்ற ஒரு செடி. இதன் வேரிலிருந்து அழகான சிவப்புச்சாயம் கிடைக்கிறது. மத்திய அமெரிக்காவிலுள்ள 'லாக்வுட்' (Logwood) என்ற மரத்திலிருந்து கருப்பு. பச்சை, விலாக், வயலெட், பாமின், நீலம், சிகப்பு, இண்டிகோ முதலிய வர்ணங்கள் எடுக்கிறார்கள். இவை தவிர ஜீவஜந்துக்களிடமிருந்தும் சாயம கிடைக்கிறது. 'மியூரெக்ஸ்' (Murex) என்ற கடல் நத்தையிடமிருநது பிரசித்திபெற்ற 'டைரியன் பழுப்பு' வர்ணம் (Tyrian Purple) எடுக்கப்படுகிறதாம். மெக்ஸிகோவில் ஒரு பூச்சி ரத்தச் சிவப்பு வர்ணம் தருகிறதாம். இது பல நூற்றாண்டுகளாக அந்த நாட்டில் எடுக்கப்பட்டுவருகிறது இவை தவிர சில உப்புகளிலிருந்தும் வர்ணம் உண்டாக்கப்படுகிறது. இது ரசாயனமுறை. குரோம், மஞ்சள், பர்சியன் நீலம், மங்கனிசிய காவி இவைகளின் மூலம் உப்பு. ஆனல் விதவிதமான வர்ணஜாலங்களை எல்லாம் இந்தக் காலத்தில் நிலக்கரி மூலம் பெருகிறார்கள். இந்த முறை 1856ல் ஸர் வில்லியம் ஹென்றி பெர்கின் என்ற விஞ்ஞானியால் கண்டு பிடிக்கப்பட்டது. செயற்கை குவினைன் மருந்து கண்டு பிடிக்க சோதனை நடத்தும் போது இந்த முறை தற்செயலாகக் கிடைத்தது.

உங்களுக்குப் பிடித்தமான, உங்கள் உள்ளத்தைத் தொட்ட தமிழ் நாட்டுச் சிறுகதை எழுத்தாளரையும் அவர் எழுத்துக்களையும் பற்றி விமர்சனம் எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தோம். அதற்குப் பல கட்டுரைகள் வந்து குவிந்திருக்கிறது. அவைகளில் ஒன்று இந்த இதழில் பரிசு பெறுகிறது. பரிசு ரூபாய் 5ம் கட்டுரையாசிரியருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அமரர் கு. ப. ரா.

பாரதி யுகத்தில் தமிழ் மறுமலர்ச்சியின் தலைக் காலத்தில் 'மணிக்கொடி' மரபில் அறிமுகமான ஒரு சில எழுத்தாளர்களில் முதன்மையானவர் கு. ப. ரா.

எழுதிப் பிழைப்பதை 'அழுகுத் தொண்டு' என்று அருமையாகப் பெயரிட்டு அழைத்த பெருமை அவரைச் சேரும்.

சூறுவளி வேகத்தில் தற்பொழுது சிறு கதையின் வளர்ச்சி மலிந்து விட்டது. சிறு கதை யென்ற பொதுத் தலைப்பில், நிமிடக் கதை, குட்டிக் கதை, நீண்ட சிறுகதை, நெடுங்கதை என்றிப்படியாக வெளி வந்துள்ளன. திடுக்கிடும் சம்பவங்கள், படுகொலைகள், இருபது வருடத்திய நிகழ்ச்சிகள் இவற்றை எல்லாம் திணித்து கதைகள் எழுதப்பட்டு அவை பிரசுரமுமாகின்றன. இவை யாவுமே காலத்தின் ஏலத்தால் செத்துவிடும். கால வெள்ளத்தில் நிலைகாணக் கூடியவை யல்ல.

சிறு கதையின் லக்ஷணமென்ன? படிப்பவர்களின்மனதில் உணர்ச்சியலைகளை யெழுப்பி அவர்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். கதையைப் படித்து முடித்ததும் பாராட்டு தன்னையுமறியாமல் இதயத்தில் பிறக்க வேண்டும். 'ஆஹா! என்ன கற்பனை! என்ன சொற் பிரயோகம்' என்று வியக்க வேண்டும்.

இத்தகைய மனநெகிழ்ச்சி கு. ப. ரா. வின் ஒவ்வொரு கதையைப் படித்து முடித்ததும் நான் அடைந்ததுண்டு. வார்த்தைகளைக் கையாளுவதில் அவருக்கு நிகர் அவர் தான்! அவர் சொல்லின் செல்வன். மந்திரம் போன்ற சொற்களையும் மணி மணியான வாசகங்களையும் கொண்டு, மன உணர்ச்சிகளின் கொந்தளிப்பையும், அழகின் வாளிப்பையும் சித்தரித்துக் காட்டிவிடும் செப்பிடுவித்தைக்காரர் கு. ப. ரா. 'வள வள' வென்று பக்கம் பக்கமாக அளந்து கொண்டே படிப்பவரின் பொறுமையைச் சோதிக்கும் இயல்பு அவர் கதைகளுக்கில்லை. சொற்களை செட்டாக கருமித்தனமாக என்றுகூடச் சொல்லிவிடலாம் உபயோகித்து அதனுள் சாரமெல்லாம் திரட்டித் தந்துவிடுவார். பேராசிரியர் வ. ரா. குறிப்பிடுவது போல், 'உள்ளத் துடிப்பை இரண்டொரு சொற்களால் இரண்டொரு வாக்கியங்களால் சித்தரிப்பதில் கு. ப. ரா இணையற்ற கலைஞன். பார்க்கப்போனால் அச்சு வாகனமேறிய அவர் கதைகளின் எண்ணிக்கை நூற்றுக்குள் அடங்கிவிடும். அவற்றில் ஒன்றாவது சொத்தையில்லை. சோடைபோனதும் கிடையாது. அத்தனையும் மாணிக்கம். அவ்வளவும் நல்ல வயிரம்.

வானத்துக் கற்பனைகளை அவர் எழுதவில்லை. வாழ்வில் தினசரி நாம் காண நேரும், கட்க நேரும் சமாளிக்கும் நிகழ்ச்சிகளையும் பிரச்னைகளையும் படம் பிடித்துக் காட்டினர்.

"மாயா"

ஆழ்ந்து பார்த்தால் அவர் கதைகளின் அடிப்படைப் பிரச்னை ஒன்றுதான் அதாவது ஆண் — பெண் உறவு, அவ்விருவரின் மனோதத்துவப் போராட்டம், தாம்பத்திய வாழ்க்கையின் நித்திய நிகழ்ச்சிகள் இவையே. இவைகளை விட்டுப் புறம்பே அவர் எழுதியதாகத் தெரியவில்லை. இது ஒன்றே அவர் தனி வழியாக இருந்தது. இவ்வழியைப் பின்பற்றி இவர் அளவுக்கு எழுதுவோரில்லாமையால், இவ்வழியின் ஆதியும் அந்தமும் மூலமும் முடிவுமாக கு. ப. ரா. விளங்கி வருகிறார்.

'புனர் ஜன்மம்', 'கனகாம்பரம்', 'காணமலே காதல்' என்ற மூன்று சிறுகதைத் தொகுதிகள் தமிழன்னைக்கு இவர் செலுத்திய காணிக்கை. இவையே தமிழன்பர்களுக்கு, என்போன்ற சிறுகதைப் பித்தர்களுக்கு அவர் விட்டுப்போன சேமநிதி.

இத் தொகுதிகளின் ஒவ்வொரு கதையையும் நுணுக்கமாக ஆராய்ந்து விமர்சனம் எழுத முனைந்தால் அதுவே ஒரு நாவல் அளவுக்கு ஓடிவிடும்! எந்தக் கதையைப்பற்றி குறைவாக எழுத முடியும்? எதை விட்டுச் சொல்ல முடியும்? கதைக்குக் கதை 'இவர் எப்படி எழுதுகிறார்?' என்று பிரமிப்பையுண்டு பண்ணுகின்றன.

அழகையும் யௌவனத்தையும் குறிப்பிடும்பொழுது அவர் நடையைப் பார்க்க வேண்டுமே! உருவத்தையே நம் மனக்கண் முன் கொண்டு நிறுத்திவிடுவார்.

'ஒரு சிறுமியின் முக்காடிட்ட குற்றமற்ற முகம். அதில் மை தீட்டிய இமைகளிடையே குறு குறு என்று சஞ்சரித்த இரு குறை கூறும் விழிகள். ரோஜாக்களிடையே பல்லிகைபோலக் கீழ் இதழைச் சற்றே கடித்து வெளியே தோன்றின பல் வரிசை...

......"பாவம் பதினான்கு வயது வரையில் கவலை என்பதே அறியாமல்—துக்கம் என்பதே இன்னதென்று தெரியாமல் — காட்டில் செழிப்பும் வளப்பமும் கொண்டு தாவிப்படரும் கொடிபோல வளர்ந்தாள். அவளுடைய ஒவ்வொரு அங்கத்திலும் புதுக் கிளைகளில் நிறையும் ஜீவசத்துப்போல இளமை எதிர்த்து ஓடி நின்றது."

நிறைவேறாத ஆசைகளையும் தேய்ந்துபோன காதலையும் குறிப்பிடும்பொழுது தம்மையே மறந்து வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார்.

......"என்னைத் திட்டுங்கள் காலால்கூட உதையுங்கள் பட்டுக் கொள்கிறேன். ஆனால் உன்னைக் காதலிக்கிறேன் என்ற வார்த்தைகளை மட்டும் சொல்லிவிடாதீர்கள். கெஞ்சுகிறேன். எனக்கு வேறு போக்கிடமில்லை. உங்கள் உறுதியைப்பற்றி நான் சந்தேகம் கொள்ளவில்லை. காதலைத்தான் நான் நம்பவில்லை......"

"...உண்மையான அன்பு! அப்படி ஒன்று இருக்குமோ? நான் பச்சையாகக் கேட்கிறேன். இனிமேல் என்ன? நீங்கள் என்னுடைய அழகை அனுபவிக்க விரும்புகிறீர்கள்......"

"......என் இளமையைப் பூப்போல், நீங்கள் சொன்ன மாதிரி— நட்புக் கிளையிலிருந்து பறித்து கசக்கி மோந்து பார்க்க இச்சைப்படுகிறீர்கள். என்ன ஆகும் தெரியுமா? துவண்டு போகும். நீங்கள் விட்டெறிந்து விடுவீர்கள்!"

விடியாத துக்கத்தை ஏற்றுக் கொண்டுவிட்ட ஒரு பெண்ணின் மன நிலையை அவர் எப்படி உணர்ந்து எழுதிவிடுகிறார் பாருங்கள்.

"...அந்த துக்கம் அவளைச் சோர்வடையச் செய்துவிட்டது. அழுது அழுது அவள் கண்களில் கண்ணீர்

ஊற்று அற்றுப் போயிற்று. பொங்கிப் பொங்கி அவள் இதயத்தின் துக்கம் ஒருவாறு அடங்கிவிட்டது. சரீரம் பலஹீன மடைந்ததால் உணர்ச்சிகளும் பலக்குறைவு அடைந்தன. அழக்கூட திறமையற்றுப்போனாள். மறுபடியும் கொஞ்சம் சிரித்துக்கொண்டு திரிந்தால் பிறகு அழலாமோ என்று எண்ணினாள். துக்கத்தில் எல்லையைக் கண்டுவிட்டாள். மேலே அவளுக்கு ஒருவித திடமும் அமைதியும்கூட ஏற்பட்டது. கொதிப்பு ஏறினால் பால் பொங்குவதுபோல தகப்பனார் பேச்செடுத்தபோதெல்லாம் அவள் உள்ளம் குமுறென்று குமுறியது."

பிஞ்சு நெஞ்சில் காதலின் விதையை யூன்றிக் களிக்கும் இயல்பு படைத்தவர் கு. ப. ரா. ஆணுக்கு வாலிபத்திலும் பெண்ணுக்கு வாலைப்பருவத்திலும் ஒருவரையொருவர் ஸ்பர்சித்துப் பார்க்க வேண்டுமென்ற தீவிரமான மனவெழுச்சியேறபடுமல்லவா? இத்துடிப்பை கைநடுங்காமல் கூசாமல் துணிவாக எழுதியவர் கு. ப. ரா. இதற்காகவே இவர் எழுத்தைப் போற்றுவோரும் உண்டு இகழ்வோரு முண்டு

"என்னைத் தொடக்கூடாது நீ புருஷப்பிள்ளை என்பாள். தொடும்படியாகவே ஏதாவது விஷமம் செய்வாள் தொட்டபிறகு கோபங்கொள்வாள். இனி உன்னோடு பேச மாட்டேன் போ! என்பாள் சிறிது நேரத்திற்கெல்லாம் குஞ்சு என்று வந்துவிடுவாள்..."

"ஒருநாள் ஏதோ விஷமம் செய்துவிட்டு ஓடினாள். நான் துரத்திக்கொண்டு போய் கட்டிப்பிடித்துவிட்டேன் ஒரு நிமிஷம் இருவருக்கும் ஒருவிபரீத உணர்ச்சி. அவள் முகம் சிவந்துவிட்டது. நான் சட்டென்று அவளை விட்டுவிட்டேன். வெட்கத்தைக் கோபமாக மாற்றிக்கொண்டு அவள் போய் விட்டாள்..."

"...அம்மா தொடப்படாது என்கிருடா இல்லாட்டா நீ தொட்டா என்னடா?" என்றாள்.

"......கல்யாண சேதியைக் கேட்டதுமே எனக்கு என்னவோ வேதனை...குஞ்சு இனிமே நீ நிஜமா என்னைத் தொடமுடியாது...எனக்கு திடீரென்று ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. கல்யாணமான பிறகு தானே தொடக்கூடாது? அவளைக் கட்டியணைத்துக் கொண்டேன். அவளா என்னைத் தடுக்கவில்லை..."

காதலைப் பற்றிய அவரின் கருத்து எத்தனை உயர்ந்த ரீதியில் இருக்கிறது பாருங்கள்! கண்டதும் காதல் என்ற மோகத்திற்கும் இவர் வேதாந்தத்திற்குமுள்ள வித்தியாசம்?

"...காதல் கரையற்றது கட்டற்றது என்பது மட்டுமல்ல வார்த்தையிலோ செயலிலோ அதற்கு ஒரு கரை ஏற்படக்கூடாது. நிர்ணயம் கூடாது. அது மனசில் மரணமின்றி வாழவேண்டும். காதலில் கால்பாவினால் வெள்ளம் வடிந்துபோகும்... அது உடல் சம்பந்தப்பட்டமட்டில் தூரத்துப் பச்சையாகவே இருக்க வேண்டும். நெருங்கினால் அந்த மோகனக் கனவு கலைந்துவிடும். பரஸ்பர ஆலிங்கனத்தினால் இருவர் சேர்ந்து கட்டிப்பிடித்துக் கண்டுவிட முயலும் மாய அழகு தப்பி ஓடிவிடும். வெறும் உடல்கள் தாம் நிற்கும். பரஸ்பரம் உடனே ஏமாற்றமும் வெறுப்பும் தோன்றும்... காதலை நிலைநிறுத்த முயன்றவர்களும் மரணத்தில் சரண்புகுந்துதான் சாதித்திருக்கிறார்கள்..."

'காணாமலே காதல்' என்ற தொகுதியில் சரித்திர அடிப்படையில் பிறந்த கதைகள் தான் என்றாலும் அவற்றிற்கு கற்பனையழகு பூசியது கு. ப. ரா. தான்.

சரித்திரக் கதைகள் என்றாலே அவ்வளவாக விரும்பாத என்னையும் கவர்ந்த தனிச் சிறப்பு இவைகளிடம் இருக்கிறது. முதற் கதையாகிய 'இருளிலிருந்து' என்ற சித்தார்த்தன் துறவு பற்றிய கற்பனையில் முதல் வரிகளே நம் சிந்தனையைக்கிளறிவிடும்.

"க்ஷண சுகத்திற்குப் பிறகு ஏற்பட்ட அந்த ஆழ்ந்த வெறுப்பு அவருடைய உள்ளத்தைக் கிளறிவிட்டது. யசோதரை அப்படியே தூங்கிவிட்டாள் சித்தார்த்தனுக்குத் தூக்கம் கொள்ளவில்லை. கட்டிலிலிருந்து எழுந்து அறையில் உலவினார். சுகத்தைப்பற்றியும் துக்கத்தைப்பற்றியும் அவர் எண்ணங்கள் மேன்மேலும் உயர்ந்து கிளம்பின. ஆரோக்கியமும் யௌவனமும் சுக போகத்தைக் கொடுக்கும் மதுவாக இருக்கின்றன. சரீரத்தில் அந்த மது குறைந்தால், நோயும் மூப்பும்-மரணமும் கூட துக்கபரம்பரையாகத் தோன்றுகின்றன. எது நிரந்தரம்...?"

கதைகளின் முடிவு மிருதங்கத்தின் முத்தாய்ப்புப் போல நம் காதுகளைச் சுற்றியே சுழலும்.

"மலைச்சாரலில், மர நிழலில், மடுக்கரையில்-எங்கும் 'திடீரென்று ஆண் குரல் பெண்ணை கூவியழைத்தது."

"தூரத்தில் கடற்கரையில் அலைமேல் திரும்பும் அலைமோதி இரண்டும் கலந்து ஒலித்தன. இங்கே சாவின் சன்னிதானத்திலே இரண்டு உள்ளங்கள் உயர்ந்து மோதி ஒன்றாகி அடங்கின."

பிறமொழிகளில் குறிப்பாக வங்கத்திலிருந்தும் — ஆங்கிலத்திலிருந்தும் மொழி பெயர்த்துச் சில எழுதியுள்ளார். அந்த அடி நாட்களில் பாரதியின் இலக்கிய பீடத்தை நிர்ணயிக்கும் சர்ச்சை வளர்ந்த பொழுது. பாரதி மகா கவிதான் என்பதை நிலை நிறுத்தி, கு. ப. ராவும் 'சிட்டி'யும் எழுதிய 'கண்ணன்-என் கவி' என்ற பாரதியின் கவிதையைப் பற்றிய விமர்சனம் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துக் காப்பாற்ற வேண்டிய புத்தகம் பாரதியின் மோக வெள்ளம் கரை தெரியாது ஓடும் இந்நாளில் அந்தப் புத்தகத்தின் புதுப்பதிப்பு ஒன்றை வெளியிட்டு உதவ யாராவது முன் வந்தால் பாரதியைப் பலரும் 'உண்மையாக' அறிந்துகொள்ள ஏதுவாயிருக்கும்.

அவர் தம் வாழ்க்கையைப் பொறுத்த பட்டில் மிகவும் கஷ்டப்பட்டிருக்க வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. அறிவிற் கேற்ற பதவியின்றி வேலைக்கேற்ற ஊதியமின்றி, உடல் நலமும் குன்றி, குடும்பப்பொறுப்பை எப்படியோ சமாளித்துமிருக்கிறார். அவர் கதைகளினூடே, அவரின் ஏக்கத்தை நிராசைகளை கனவுகளை-அவற்றின் சிதைவை, நான் காண்கிறேன். 'அவர் மன அமைதியோடு வாழ்ந்தார்' என்பதை அவை எனக்குச் சொல்லவில்லை ஏதோ பெருங்குறையொன்று, மாளாத ஆசையாக அவர் வாழ் நாள் முழுதும் மலை போல அவரை யெதிர்த்து நின்றிருக்க வேண்டும். வாழ்க்கையின் துக்கமுட்களில் விழுந்து ரத்தம் கக்கிய உள்ளம் அவர் உள்ளம் போலும்!

என் போன்ற ஏகலைவனுக்கு அவர் துரோணர். கு. ப. ரா. இன்று அமரர். அவர் கதைகள் 'சாகா வரம் பெற்றவை. ஒரு முறை படித்துவிட்ட திருப்தியுடன் கீழே வைத்துவிடக் கூடியவையல்ல. எத்தனை முறை படித்தாலும் அத்தனை முறையும் அலுக்காதவை. புது மயக்கம் தருபவை. பரம்பரையாகப் படித்து அனுபவிக்க முடியும்.

—

Printed by VE. Chidambaram at the Rainbow Printers, Trichy. Edited and Published by ARU. Ramanathan Williams Road, Cantonment, Tiruchirappalli. Associate Editor: V.K.Murthy.

182

கலைமணி

செப்டம்பர் - 51



இளமை விருந்து !
இலட்சியக் குரல் !
செப்டம்பர் வெளியீடு
பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்
அண்ணி
தமிழ்
ஜி.வரலக்ஷ்மி
சேது நடித்தது
டைரக்ஷன் : பிரகாஷ் ராவ்
நேஷனல் பிக்சர்ஸ்...சென்னை.

பொருளடக்கம்

OFFICE OF THE REGISTRAR OF ...
17 OCT 1951

திரைப் பகுதி:

சமூகப்படத்தில் முன்னேற்றம்? ... 2
மோகனசுந்தரம் — படவிமர்சனம் 'மூர்த்தி' ... 4
மனமோகினி — சிறு கதை 'சுபாஷ்சந்திரன்' ... 8
ராஜாம்பாள் — திரைக்கதை ...11
நாடக விருந்து ...13
கிஷோர் சாஹு வாழ்க்கை வர்ணனை ...17
திரைச் செய்திப் படங்கள் ...21–28
பி. கே. சரஸ்வதி — பேட்டி 'மூர்த்தி' ...29
மாயமாலை — படவிமர்சனம் 'மூர்த்தி' ...41

கலைப் பகுதி:

தமிழ்ப்புதல்வர் மறைவு ...49
நீங்களும் போடலாம் 'வாசுகி'—50
என்னைப்பற்றி 'வஸந்தன்' ...55
புகைப்படப் பகுதி ...61
ஓய்வு நேரம் — சி. என். அண்ணாத்துரை ...63
செத்தவரோடு பேசலாம் 'ஆவியன்' ...70
சிறுகதை எழுதாமலிருப்பது எப்படி?— R. P. மல்லாரி...78

ஆசிரியர்: அரு. ராமநாதன்
கூட்டாசிரியர்: "மூர்த்தி"

தனிப் பிரதி விலை அணா எட்டு
வருட சந்தா ரூபாய் ஆறு.

கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே.

கலைமணி காரியாலயம் கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி

கலைமணி

(சிறந்த சினிமா, இலக்கிய மாத இதழ்)

கலை : 3 ○ செப்டம்பர் 1951 ○ மணி : 18

சமூகப் படத்தில் முன்னேற்றம்?

தமிழ்ப்பட உலகம் இரண்டு வருஷங்களுக்குள் எவ்வளவோ முன்னேறி இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். புராணப் படங்களை பொதுமக்களும் விரும்பவில்லை தயாரிப்பாளரும் பிடிக்கவில்லை. இப்போது சமூகக் கதைகளைத்தான் தயாரிப்பாளர் தேடுகின்றனர். இந்தச் சமூகப். பட விஷயத்திலும் நம் தமிழ்ப் படத்தயாரிப்பாளர் நம் நாட்டுச் சொந்தக் கற்பனைக் கதைகளுக்கு இடந்தராமல் மேல்நாட்டுக் கதைகளையே நம்பி இருப்பது வருந்தத்தக்கது.

நம் நாட்டில் நல்ல கதைகள் இல்லையா? எழுத்தாளர்களுக்குத்தான் பஞ்சமா? ஒரு தயாரிப்பாளர் ஒரு எழுத்தாளரைக்கொண்டு கதை எழுதி அது வெற்றியடைந்தால் எல்லோரும அதே எழுத்தாளரின் காலைக் கட்டிக்கொண்டு தொங்குவது இப்போது வழக்கமாகிவிட்டது. வசன கர்த்தாவின் படத்துக்காகப் படம் ஓடவேண்டுமென்று கனவு காண்கின்றனர். பலதரப்பட்ட எழுத்தாளர்களைத் திரை உலகம் வரவேற்றால் தான் நாட்டு மக்கள் அத்தனைபேருடைய மனோபாவங்களையும் திருப்திப்படுத்தும்படி விதவிதமான கற்பனைகள் உதயமாகும். மேல்நாட்டுப் படங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் தனித்தனிச் சுவையோடு காணப்பகிற தென்றால்; ஒரே கம்பெனியில் வெளியாகும் படமானாலும் டைரக்டரும், வசனகர்த்தாவும் சிருஷ்டி கர்த்தாக்களும் படத்திற்குப்படம் மாறுபட்டிருப்பதைக் காணலாம். இப்படி மாறுபடுவதால் அவரவருடைய கற்பனை, கனவு, மனோபாவத்துக்கு ஏற்றபடி படம் வெளிவருகிறது. பலதரப்பட்ட குணங்களுடைய படங்களைப் பார்க்கிறோம். தமிழ் நாட்டிலே ஒருவருடைய கதை வசனத்தினால் படம் வெற்றியடைந்தால் அதே எழுத்தாளரையே அத்தனை தயாரிப்பாளரும் புக் செய்து கொள்வதால் அந்த ஒரு தனி எழுத்தாளருடைய மனோபாவங்களைத்தான் வெளிவரும் அத்தனை படங்களிலும் பார்க்க முடிகிறது. ரசனை இல்லாமல் சப்பென்று போய்விடுகிறது. ஜிலேபியானாலும் அதையே முழு நேர உணவாகக் கொள்ளமுடியுமா?

தமிழ் நாட்டிலே எவ்வளவோ நாவல்கள் வெளி வந்துள்ளது. அவைகளைப் படமாக்கினாலே இன்னும் பத்து வருஷத்துக்கு வருமே. நம் தமிழ் நாட்டிலுள்ள நாவல்கள் (ஐந்தாறு ஆண்டுகளுக்குள் வெளி வந்தவை) தயாரிப்பாளரின் கண்களில படவில்லை. ஏன்? அவர்கள் தமிழ் நாவல்களைப் படிப்பதில்லை. ஆங்கில நாவல்களைப் படிப்பதில் அவர்களுக்குப் பெருமையும் பொழுதும் இருக்கிறது. தமிழ் நாவல்களில் ஈடுபடும பண்பாடு இன்னும் வளரவில்லை. தமிழ் நாவல்களைப் படமெடுக்கவிட்டாலும் இந்திய மொழிகளா - ஹிந்தி, வங்காளி, குஜராத்தி, மராத்தி இவைகளில் எவ்வளவோ மணமுள்ள நறுமலர்கள் நாவல்களாக மலர்ந்துளளதே. அவைகளைப் படமாக்கக் கூடாதா? இந்தியப் படங்கள் அனேகமாக இந்தியக் கதைகளாகத்தான் இருக்கவேண்டும். அப்போதுதான் நம் இந்தியக் கலாசாரப் பண்பாடு வளரும். மேல்நாட்டவருக்கு நம் கலா

சாரத்தை விளக்க முடியும். இப்போது வரும் ஹிந்திப் படங்கள் முழு மோசமாகிக்கொண்டு வருகிறது. நடிகர்களைத் தவிர அத்தனையும் அப்படியே ஆங்கில மோஸ்தர்தான். காதல் காட்சிகள் உடை, பின்னணி, காட்சிகள் எல்லாம் ஹாலிவுட் காப்பி. மேல்நாட்டிலும் வேறு தேசக் கலாசாரக் கதைகளைப் படம் பிடிக்கின்றனர், எப்படி? நூறு படத்திற்கு ஒரு படம் தான். அத்தப் படமும், மொழிதான் ஆங்கிலமாக இருக்குமே தவிர மற்றதத்தனையும் அந்தக் கதையில் உள்ள காலம், ஜனங்கள நாகரிகம், வேஷப் பொருத்தம் இவைகளைத் தத்ரூபமாகக் கொண்டிருக்கும். மேல்நாட்டார் எடுக்கும் அரேபியன் நைட்ஸ் கதைகளையும் சைனு தேசத்துக் கதைகளையும் சமீபத்தில் இந்தியச் சூழ்நிலையில் வெளி வந்த 'கிம்' என்ற படத்தையும் பாருங்கள். நம் படத்திற்கும் அவர்கள் படத்துக்கும் வித்தியாசம் விளங்கும். நம் இந்தியப் படங்களின் கதை இந்தியச் சூழ்நிலை-மோஸ்தர் ஆங்கில மோஸ்தர்! இரண்டு மூன்று மேல்நாட்டு நாவலைக் கலந்து 30 ஆயிர அடியில் ஒரு படம் தயாரிப்பதைவிட நம் தமிழ்நாட்டில் வெளிவந்திருக்கும் நாவலைக்கொண்டு 10 ஆயிர அடியில் படம் தயாரித்தால் போதுமே. மேல்நாட்டுப் படங்கள் அனேகமாக 7 ஆயிர அடியில் தானே வருகின்றன. அவைகள் வெற்றியடையவில்லையா?

ஏழாயிர அடியில் அவர்கள் படம் விருவிருப்பாக வெற்றியடையும் காரணம். அவர்கள் ஒவ்வொரு கதைக்கும் ஏற்றபடி சம்பவங்களைப் புகுத்துகிறார்கள். தேவையில்லாத காட்சிகளை அநாவசியமாகப் புகுத்திக் கதையை வளர்ப்பதில்லை தமிழ்ப் படங்கள் இப்போது நவரசங்களில் ஒரு ரசம்கூடக் குறைந்துவிடாமல கவனிக்கப்படுகிறத. "மர்டா மிஸ்டரி" படத்தில் நாட்டியமும் ஹாஸ்யமும் குழைத்துக் கொடுக்கப்படுகிறது. பத்து நாட்டியம், பதினைந்து பாட்டு, மூன்று நான்கு விதமான சண்டைகள் கதாநாயக நாயகிகளுக்குப்பல விதமான வேஷங்கள் இவை அத்தனையும் ஒவ்வொரு தமிழ்ப்படத்திலும் குறையாமல் இருக்கவேண்டுமென்ற நியதி இருந்து வருகிறது இப்போது. துப்பறியும் கதைப் படங்கள் ஆங்கிலத்திலும் வருகிறது. ஆறாயிர அடிகளுக்குமேல் இவைகள் வளருவதில்லை. இந்த ஆறாயிர அடியில் எத்தனை வியப்பு, திகைப்பு, விருவிருப்பு கொலையாளி யார், கொலை செய்யப்பட்டவன் யார், அதை எப்படிச் செய்தான், போலீஸ் அல்லது துப்பறிபவர்களின் சாகஸம், குற்றவாளியின் தந்திரங்கள் இத்தனையும் தான் முக்கியமாகக் கவனிக்கப்படும். படம் முழுதும் நம்மைப் பிரமிப்பூட்டும் படியான சம்பவக் கோர்வைகளால் பின்னப்பட்டிருக்கும். அதே போலத்தான் காதல் படங்கள் என்றால் அதில் கதையின் உயிர்நாடி எதுவோ அது கெடாமல் அதையே பிரதானமாகக்கொண்டு வளர்க்கப்படுகிறது.

மேல் நாட்டுப் படங்களிலுள்ள காட்சிகளையும் கதைகளையும் திருடும் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள், அவாகள் படத்துக்குப் படம கதைக்கு ஏற்றபடி கையாளும் டெக்னிக்குகளையும் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அது கருப்புப்பெண் கவுன் போட்டுக்கொண்டு நடக்கும் அழகு போலத்தான் இருக்கும்.

பட உலகம் முக்கியமாகத் தமிழ்பபட உலகம் தனது பிரகாசமான வரும் காலத்தை அமைத்துக்கொள்ள வேண்டுமானால் சொந்தக் கதைகளுக்குக் கௌரவம் கொடுத்து பலரசங்களையும் ஒரே படத்தில புகுத்த வேண்டுமென்ற கொள்கையை கொஞ்ச நாளைக்கு மறந்து விட்டு கதைக்குத்தகுந்த சூழ்நிலையை தத்ரூபமாக அமைப்பது; ஒரு கதையின் ஜீவனாக உள்ள அம்சத்தை மட்டும் பிரதானமாகக் கொள்வது போன்ற தயாரிபபு விஷயத்தில் கவனஞ் செலுத்தவேண்டும்.

பட விமர்சனம் "மூர்த்தி"

மோகன சுந்தரம்

நாம் இருவருக்குப் பிறகு மகாலிங்கம் நடிக்கும் இரண்டாவது சமூகப்படம், திகம்பரசாமியாருக்குப்பிறகு வந்த இரண்டாவது துப்பறியும் நவீனம், மகாலிங்கத்தின் இரண்டாவது சொந்தப்படம் தான் மோகன சுந்தரம். இந்த மூன்று காரணங்களுக்காக இந்தப் படத்திற்கு நல்ல வரவேற்புக்கிடைத்தது. ஜே. ஆர். ரங்கராஜு-வின் துப்பறியும் நவீனம் இது.

படத்தின் சிறப்புக்கு மகாலிங்கத்தின் அநாயாசமான நடிப்பு ஒரு காரணமாக விளங்குகிறது. இது வரை எந்தப் படத்திலுமே அவர் இதுபோல நடித்ததில்லை. சொந்தப் படம் என்ற உற்சாகமோ அல்லது சமூகப்படம் என்ற சரளமோ தெரியாது, படத்தில் நடிப்பதாகவே நினைக்காமல் வீட்டில் பழகுவது போலத்தான் இருக்கிறது முன் பாதிப்படத்தில் அவரது நடிப்பு. பாப்பாவிற்குக் காதல் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும்போது சுந்தரமுதலியார் வந்ததும் பூபதி படும் அவஸ்தை ரொம்பத் தமாஷாக இயற்கையாக இருக்கிறது.

சிறுவயது முதல் சேர்ந்து காதலர்கள் எப்படிப் பழகிப்பேசி நடிப்பார்களோ அதுபோல பாப்பா உடன் நடிக்கிறார் பூபதியாக, மகாலிங்கம்.

சில இடங்களைத் தவிர மற்ற எல்லா இடத்திலுமே வசனம் கருத்தமைந்ததாக நடைமுறைப் பாஷையில் ரசிக்கும்படியாக அமைந்திருக்கிறது. அதுவும் படத்தின் தரத்தை உயர்த்த உதவுகிறது. பூபதிக்கு அடுத்தபடியாக நடிப்பில் நல்ல மார்க் பெறுபவர் B. R. பந்துலு அவர்கள் அவர் நடிப்பு இயற்கையாக இருந்தாலும் சில இடங்களில் கொஞ்சம் மிகையாகவும் இருக்கிறது. மோகன முதலியாரும் தன் பாத்திரம் பிரகாசிக்கப் பாடுபட்டிருக்கிறார்.

கதைப்போக்கின் வசனத்திலேயே ஹாஸ்யங்களைப் புகுத்தி இருந்தாலும் சுந்தர முதலியார் வீட்டு வேலைக்காரன் சுப்பண்ணாவாக வரும் சாரங்கபாணியின் ஹாஸ்யமும் ரசிக்கும் படியாக இருக்கிறது. அவரைப் போலீசார் கைது செய்து சிறையில் தள்ள உத்தரவிடும்போது "சார் நானும் என் ஒப்பும் முதியோர் கல்வித் திட்டத்திலே இப்போ படிப்புச் சொல்லிக்கிட்டுவரோம். நீங்க சிறையிலே போட்டா எங்கள் படிப்புக் கெட்டுப் போகும்" என்று சொல்லும்போது சிரிக்காமல் இருக்க முடியுமா?

'எங்களைப்போன்ற கிராம ஜனங்கள் இப்படி நகரத்துக்கு வந்ததினாலே தான் நாட்டிலே உணவுப் பஞ்சம் ஏற்பட்டது' என்று சொல்லும் சுப்பண்ணா ஒரு சீர்திருத்தவாதியாகக் காட்சியளிக்கிறார். சுப்பண்ணா பாத்திரம் கதையில் ஜீவனோடு இருக்கிறது. டைரக்டரின் திறமை சில இடங்களில் பிரகாசிக்கிறது. சுந்தரமுதலியார் பாட்டு வாத்தியாரம்மாள் அறைக்குள் மனம் பேதலித்து நுழையும்போது அவர் மேல் துண்டு கதவுநாதாங்கியில் மாட்டிக்கொண்டு அவரை முன்னே போகவிடாமல் தடைசெய்வது போலக் காட்டி இருப்பது ஒரு நல்ல கற்பனை. பாட்டு வாத்தியாரின் நினைவாக, முதலியார் சுருட்டுப் புகை மண்டலத்தில் சிந்தனையோடு உட்கார்ந்திருக்கும் போது அவர் உள்ளத்திலே குழம்பும் எண்ணங்களின் உருவமாக ஆடை நெகிழ்ந்த நிலையிலுள்ள ஒரு பெண்ணின் நிலை

ளைக் காட்டுவதும் நன்றாக இருக்கிறது.

ஒளிப்பதிவு சுமார்தான். ஒலிப்பதிவில் இன்னும் ரொம்பக் கவனம்செலுத்தி இருக்கலாம். பல இடங்களில் பேச்சு தெளிவாகக் கேட்கவில்லை.



ஸ்திரீ சாகஸத்தில்
கிரிஜாவும்
நாகேஸ்வர ராவும்

இது ஒரு துப்பறியும் கதையாக இருந்தும் அதற்கு ஏற்ற விறுவிறுப்பு இல்லை. சாதாரணக் கதை போலத்தான் மோகன சுந்தரமும் நகர்கிறது. மேல்நாட்டுப் படங்களிலிருந்து எவ்வளவோ விஷயங்களை எடுத்துக் கையாளும்தமிழ்ப்படத் தயாரிப்பாளர் மேல்நாட்டார் தங்கள் படத்தில் கதைக்கு ஏற்ற டெக்னிக்குகளையும் டெம்போக்களையும் எப்படிக் கையாளுகிறார்கள் என்பதைமட்டும் ஏனோ கவனிப்பதில்லை. ஷெர்லக் ஹோம்ஸ் படங்களைப் பார்த்தால் படம் முடியும்வரை நம் நெஞ்சும் மார்பும் அடித்தக் கொள்ளும். மேலே என்ன என்ன என்ற துடிப்பு அதிகமாகும். 'மர்டர் மிஸ்டரி' படங்களின் டெக்னிக்கே அலாதிதான். திகம்பர சாமியார் அளவுகூட மோகனசுந்தரம் வெற்றியடையவில்லை. இது ஒரு பெரிய குறைதான். துப்பறியும் கதையாக இது இல்லை. நாம் இருவரைப் போன்ற சாதாரண சமூகக்கதையாகத்தான் இருக்கிறது மோகன சுந்தரம்.

துப்பறியும் கோவிந்தனாகவரும் நபர் புதியமுகம் என்று நினைக்கிறேன். இவரது மூக்குக் கண்ணாடி இவர் முகத்தைக் கெடுத்துவிட்டது. தவிர துப்பறியும் கோவிந்தன் பாத்திரத்துக்கு ஏற்ற நடிப்பு இவரிடம் படுசூனியம். துப்பறியும் கோவிந்தன் தான் ரங்கராஜு நாவலின் பிரதான கதாபாத்திரம். அதைப் படத்தில் அமைத்திருப்பதும் போதாது. முறையும் நன்றாக இல்லை. நடிப்பவரும் சுகமில்லை. பிறருக்கு இல்லாத விசேஷமான நடிப்பாகிய கண் நடிப்பு (கூர்ந்து விஷயங்களை நோக்கி ஆராய்ந்து பார்க்கும் சாதுரியமான முகபாவம்) கோவிந்தன் பாத்திரத்துக்கு இருக்க வேண்டும். அவர் பாத்திரம் சோபிக்கவில்லை என்று தானோ என்னவோ

உண்மைக் காதலர்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ராஜமபாலுக்கு அந்தத் தொப்பிக்காரரால் ஏதோ ஆபத்து போலிருக்கிறது. இப்படிப் பயப்படுபவள் பி. கே. சரஸ்வதி

விளம்பரங்களில் கூட அவர் முகத்தைக் காட்டவில்லை!

பாப்பாவாக நடிக்கும் வரலக்ஷ்மியின் நடிப்பு சப்பென்றிருக்கிறது. இன்னும கொஞ்சம் உழைத்து நடித்திருக்கலாம். பாட்டு வாத்தியாராக வரும் சுசீலா இன்னும் நடிப்பில் கற்றுக்கொள்ள வேண்டியது ரொம்ப இருக்கிறது

சீதாராமனாக வரும் டி. கே. ராமச்சந்திரனின் நடிப்பு நாடக மேடை நடிப்பாக இருக்கிறது. ரசிக்கமுடியவில்லை.

சித ராமன் சுந்தர முதலியாரை ஒளித்து வைத்திருக்கும் இடத்தை அறிந்து கொள்வதற்காக பூபதி கார் டிரைவரின் உடையை வாங்கிப் போட்டுக் கொண்டு சீதாராமனுக்குக் கார் ஓட்டிப் போகிறான். சுந்தர முதலியாா வீட்டிற்குள் போயிருந்த கோவிந்தன் வெளியே வந்து சுப்பண்ணுவிடம் பூபதி எங்கே என்று கேட்க, சுப்பண்ணு, "பூபதி சீதாராமனைப் பின் தொடர்ந்து போயிருக்கிறான். அந்த இடம் எனக்குத் தெரியும் வாருங்கள் போகலாம்" என்று கோவிந்தனைக் கூட்டிப் போகிறான். கோவிந்தனும் சுப்பண்ணுவும்; சீதாராமன் பூபதியை ஹிம்சிக்கும சமயத்தில் அங்கு திடும் பிரவேசம் செய்கிறார்கள்.

சுப்பண்ணுவிற்கு சீதாராமனின் ரகசிய இருப்பிடம எப்படித் தெரிந்தது? சுப்பண்ணுவிற்குத் தெரிந்தால் பூபதி எதற்காக டிரைவர் வேஷத்தில் கார் ஓட்டிச் சென்று அந்த இடத்தைக் கண்டுவரப் போக வேண்டும்? பூபதி சீதாராமனின் இருப்பிடத்தை அறிந்து வந்து, சுப்பண்ணு கோவிந்தனைக் கூட்டிப் போவதாக அல்லவா காட்டியிருக்க வேண்டும்? அப்படி அவர்கள் சந்திப்பதாகக் காட்டவே இல்லை. அல்லது பூபதி அந்த இடத்தினருகிலிருந்து டெலிபோன் மூலம் வீட்டு அடையாளத்தைச் சொல்லி அவர்

தங்கள் சாகஸம் பலிக்காத காரணத்தினால் அடைந்த ஏமாற்றமும் பிரப்பும்தான் இவர்களை இப்படிப் பார்க்கும்படி செய்கிறதோ. ஸ்ரீ சாகஸத்தில் அஞ்சலியும் — சூர்யப்பிரபாவும்

களைப்போலீசுடன் வரும்படி எச்சரிப்பதாகக் காட்டி இருக்கலாம். அதுவும் இல்லை. எந்த ரகசியத்தை அறிந்து வர பூபதி மாறுவேஷத்துடன் போகிறானோ அதே ரகசியம் சுப்பண்ணா தனக்குத் தெரியுமென்று சொல்லி கோவிந்தனை அழைத்துப் போவது விந்தையாகவும் சிரிப்பாகவும் இருக்கிறது. கார் டிரைவராக மாறி கார் ஓட்டும் பூபதிக்கு சிதாராமன் போக வேண்டிய இடம் எப்படித் தெரிந்தது? பின்னால் இருக்கும் சிதாராமனை வழிகேட்கவில்லை கேட்க முடியாது. ஏனென்றால் முதலில் ஓட்டி வந்தவனுக்கு இப்போது வழி எப்படி மறந்து போயிற்று என்ற சந்தேகம் ஏற்பட, பூபதி அகப்பட்டுக் கொள்ளுவான். கதாநாயகனுக்கு இல்லாத அபூர்வ அசாதாரணமான குணங்கள் உடையவன் தான் வில்லன். இது போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தாதது படத்தின் விருவிருப்பைக் கெடுத்து, பெரிய தவறாக வளர்வதைக் கவனிக்க வேண்டும்.

கோபு என்ற பாத்திரம் செய்யும் சேஷ்டையையும் ஆங்கில நடனத்தையும் எல்லோராலுமே ரசிக்க முடியாது.

துப்பறியும் கதைக்கேற்ற விருவிருப்பு வேகம் இல்லாவிட்டாலும் மோகனசுந்தரம் ஒரு நல்ல படம். மகாலிங்கத்தின் நல்ல நடிப்புக்காகவும், கிருஷ்ணசாமியின் ரசமான வசனத்துக்காகவும், சாரங்கபாணியின் ஹாஸ்யத்துக்காகவும் படத்தை அவசியம் பார்க்கவேண்டும். சுகுமார் புரொடக்ஷன் ஸாருக்கு பிரமாத வெற்றி என்று சொல்ல முடியாவிட்டாலும் நல்ல முயற்சி, அடுத்த தயாரிப்பில் மகாலிங்கம் தன் படத்தின் தரத்தைக் கட்டாயம் உயர்த்தி விடுவார் என்று எதிர்பார்க்கலாம். எதிர்பார்க்க இடமிருக்கிறது.

நடிகை மனமோகினி

— சுபாஷ் சந்திரன் —

'நான் சொல்வதைச் செய். நான் செய்வதைச் செய்யாதே.'

—ஒரு பொன் மொழி

பூம்......பூம்...

தார் ரோட்டில் ஆடாது அசையாது அலறிக்கொண்டு ஓடியது புத்தம் புதிய ஒரு மோட்டார் கார். எதிர்ப்படும் எதையும் லட்சியம் செய்யவில்லை அதை ஓட்டிச்சென்ற ஆசிரியர் சுந்தரம்... கைகள் கார் ஸ்டீரிங்கைப் பற்றியிருக்க, கண் வழிகாட்ட, மனம் அந்த "மனமோகினி"யைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தது...

இன்று திரைப்பட வானில் நாற்றிசையும் ஒளி வீசும் விண் மீனாய், ஒப்புயர்வற்று விளங்கும் மிஸ் மோகினி, ஒன்பது வருடங்களுக்கு முன்பு "மாரியாத்தாளா"க் இருந்தபோது அவளைப்பற்றி எவருக்கும் எதுவும் தெரியாது... ஆம்! தெரிந்திருக்க நியாயமுமில்லை.

அந்தக் காலத்தில், அதாவது அவள் பிரபல நடிகை ஆவதற்கு முன், கண்ணன்பட்டி கிராம மக்களிடையே மட்டும் பிரபலமாய் விளங்கினாள் மாரியாத்தா. இன்று "மலர்ந்த சினிமா நக்ஷத்திரம்" 'மங்காத தவ நடிகை' எனப் போற்றப் படும் மாரியாத்தா அன்று அக்கிராம மக்களால் 'வாயாடி' 'ஊர்வம்புக்காரி' 'வலுச்சண்டைக்காரி' என்றெல்லாம் பலவாறாகப் பட்டம் சூட்டப்பட்டு, அட்டகாசராணியாக வாழ்ந்து வந்தாள். எல்லாவற்றிற்கும் மேலாக 'என்னமோ ஒரு மாதிரி' 'மானமிழந்தவள்' என்ற அந்திப் பட்டம் அவள் வாழ்வுப் பாதையின் போக்கை வளைத்து வேறு திசையில் திருப்பிவிடும் சக்தி பெற்றிருந்தது.

ஐந்து வயதிலேயே, அறியாப் பருவத்தில் தாய் தந்தையர் யாரென அறியாத ஏழை, அநாதைச் சிறுமி மாரியாத்தா பணக்காரர் ஒருவர் வீட்டில் 'சம்பளமில்லா' வேலையில் அமர்ந்து தன் காலத்தைத் தள்ளிக்கொண்டிருந்தாள்.

காலம் ஓடிக்கொண்டிருந்தது! சும்மா ஓடவில்லை... கன்னியாக இருந்த மாரியாத்தாளை முற்றிலும் மாற்றிவிட்டு மறைந்தது. பக்கமெல்லாம் வீசிக்கொண்டிருந்த வஸந்த பருவ வாடை மாரியாத்தாளை மட்டும் விட்டுவிடுமா? அவள் வனப்பு எங்கும் பொங்கி வழிந்தது இயற்கை இட்ட புது மெருகினால்!

சம்பளமில்லா வேலையில் எஞ்சிய சோற்றைத் தின்றுகொண்டு வறட்டு வாழ்வுடன் காலம் கடத்த அவள் புதுமை மனம் ஒப்பவில்லை... கட்டுவதற்கு நல்ல மாற்றுத் துணி கூட இன்றி என்ன வாழ்க்கை வேண்டியிருக்கிறது? மன அமைதியிழந்து சோகம் பிடித்த நல்லவளான மாரியாத்தாள், 'இல்லாததும் பொல்லாததுமாக'ச் சொல்லி கிராமத்தினரால் விளையாட்டாகப் பரிகசிக்கப்பட்டபோது காகசர்ப்பமென சீறினாள்! அதன் பலன்தான் அவள் பெற்ற 'வாயாடி' முதலிய பட்டங்கள்.

வறட்டு வாழ்வில் சலிப்புற்ற உள்ளம்—பருவம் விரும்பிய அலங்காரங்களைச் செய்துகொள்ள இயலாத நிலையில் எத்தனை நாள்தான் பொறுமையோடிருக்கும்? ... . போதாக்குறைக்கு பொதுமக்கள்

வேறு பொய்ப் பிரசாரம் செய்த போது - "அப்படியே செய்தால் தான் என்ன?" என்று ஆத்திரப் பட்டது அவளது அசட்டுப் பேதை உள்ளம். அவள் எதற்கும் துணிந்து விட்டாள்—அவளுக்கு வேண்டியது வாழ்க்கை, வாழ்க்கைக்கு வேண்டியது காசு. அதிகம் வளர்த்துவானேன்?

நாலு காசுக்காக, நல்லதனமான பெண்மையின் பொக்கிஷத்தை விற்கும் பதிதையாகி விட்டாள்! கணக்கற்ற வாலிபர்கள், கிழவர்களின் எண்ணங்களின் ராணியாக விளங்கினாள்.

கொஞ்சம் காசு கிடைத்தது. நடுத்தெருவில் காசுக்கடையே வைத்து விட்டாள். வியாபாரம் வலுத்தது... வியாபாரிகளுக்கா பஞ்சம். தனிமை வாழ்வு நடத்தும் தூய பெண்களையும் சுற்றி வட்டமிட்டு அவளுக்குத் தீங்குசெய்ய முயலும் "ஆண்வீரர்"கள் உள்ள நாட்டில்.

அவள் வாழ்க்கை இப்போது புது மெருகுடன் விளங்கியது...வாழ்வுப் பாதை திசை மாறுங்காலமும் வந்தது...

அவளுக்குப் புதிதாய்த் தெரிந்த ஒருவன் அவளை சினிமாவில் சேரச் சொன்னான்... அசட்டையுடன் அவ்வாறே செய்தாள். ஆனால் அதிர்ஷ்ட தேவதை அவளுக்கு முன் நின்றான்... ... அவ்வொளியிலே சினிமா உலக இராணியாக — பட உலக நக்ஷத்திரமாக மிஸ் மனமோகினியாக மாறினாள் மாஜி மாரியாத்தாள்!

பிரபல நடிகை வீட்டில் கணக்கற்ற காசுகள் குவிந்தன. அவள் நடிப்புத்திறனை மெச்சிப் புகழ அவள் வீட்டிற்கு அடிக்கடி வரும் பேர்களில் ஒருவர்தான் ஆசிரியர் சுந்தரம்! 'டக்' கென்று ஒரு ஸடன் பிரேக்குடன் நின்றது அந்தக்கார்...,அந்தப் பிரபல நடிகை மாளிகை வாசல் முன்னே...நடிகை மோகினி எதிர்கொண்டழைக்க நடிகையின் 'பிரைவேட் ரூமுக்கு' ஏகினர் இருவரும்.

"மோகினி, எனக்காக வெகுநேரம் காத்திருந்தாயோ?"

"இல்லை...தாங்கள் இப்போது தான் வருவீர்கள் என்று தெரியும்... ஆமாம்...தாங்கள் இங்கே வந்து போவது எல்லோர்க்கும் தெரியுமா?"

"ஊஹூம்...எவருக்கும் தெரியாது...தெரிந்தால் என் வாழ்வின் சொகுசெல்லாம் மறைந்து விடாதா?...நான் பேசிவரும் பேச்சுக்கும், எழுதிவரும் எழுத்துக்கும், இப்போது உன் நடிப்பை ரசிக்கும் போக்குக்கும்......"

"அதற்குத்தான் கேட்டேன்... ஆமாம்...யாராவது உங்களைத் தனியாக என் வீட்டில் பார்த்துவிட்டால் என்ன செய்வீர்களாம்?":

"எவனும் பார்க்க மாட்டான்... இந்த ஜனங்களுக்கு என்ன தெரியும்? 'கலாசாரம்' என்ற டிரேட் மார்க்கோடு சொல்வதையெல்லாம் நம்புவார்களே தவிர, சொல்பவர்களோடு சேர்ந்து 'ஆமாம்' போடுவார்களே தவிர, சுயமாக சிந்திக்கவோ, சொல்பவர்களைப் பற்றிக் கவனிக்கவோதான் மாட்டார்களே. இவர்கள் இம்மாதிரி இல்லாவிட்டால் நாம் தான் எப்படி வாழ முடியும்?"

கலகல வெனச் சிரித்தாள் மனமோகினி..."ஹூம்...நல்ல ஜனங்கள்...உங்கள் வெற்று வேட்டுக்களையெல்லாம் நம்பி எவ்வளவு தூரம் மோசம் போகிறார்கள்?"

மோசமா? நான் ஒருவன் தானா? எத்தனையோ பேர்கள் இவ்வாறு தானே 'பண்டையக் கலாசாரம்' என்ற பெயரால் இன்று உலகை மயக்கி வருகிறார்கள்?"

"இருந்தாலும் உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்...நேற்றைய இதழில் உங்கள் தலையங்கத்தைக் கண்டதும் எப்படிச் சிரித்தேன்

தெரியுமா?... சிரித்துச் சிரித்து இப்போது கூட என் வயிறு வலிக்கிறது!"

"ஓஹோ! எங்கே, படி அதை பார்க்கலாம்..."

-மனமோகினி மேஜையின் மீது கிடந்த "இடி" என்ற அந்தப் பத்திரிகையை எடுத்துப் படித்தாள்:

நாடு நலிவுற்றதேன்?

"நாரிமணிகளின் நாயகர் தேடும் படலமும், ஆடவரின் உல்லாச அக்ரமமும் இன்று நாட்டில் மலிந்துள்ளன... நாட்டின் பண்டைய பண்பாட்டையே கொலை செய்யும் விதமாய் சினிமாக்காரிகள் கவலையின்றி வாழ்கின்றனர்... பணம் படைத்தோர் அறிவு படைத்தோர் பலரும் அவர்களுக்கு ஆதரவு தருவதனாலன்றோ இந்நிலை ஏற்பட்டுள்ளது?-எனவே இந்த நிலையை மாற்றியாக வேண்டும். நம் புராதனக் கலாசார உயர்வைக் காப்பாற்ற வேண்டும். புதுமை முன்னேற்றம் போகும் வழி பயங்கரமானது! என் போன்றவர் உண்மையாக, நாட்டின் பண்டையக் கலாசாரத்தில் கருத்துள்ளவர்களாக, உலகை உத்தாரணம் செய்வதற்கு எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறது..."

மேலே படிக்க முடியவில்லை அவளால். அவளையும் மீறி பீறிட்டுக் கொண்டு வெளிவந்தது சிரிப்பு... அதே சமயம் காம்பவுண்டுக்கு வெளியே அவளுக்குத் தெரிந்த சினிமா முதலாளியின் புது மோட்டார்காரின் ஹாரன் ஒலி கேட்டது.

"சரி... முதலாளி வருகிறார்... போங்கள்... மறுபடி நாளை வாருங்கள் என்ன" என்றாள். அவசரமாக எழுந்து வேறு வழியே சென்று சினிமாமுதலாளிக்குத் தெரியாமல்' மோட்டாரிலேறினார் 'புராதனகலாச்சார சிங்கம்'. அடுத்த விநாடி 'இடி' காரியாலயம் நோக்கி, பறந்து சென்றது அந்தக்கார்!

ஆசிரியர் சுந்தரம் தன்னறையில் அமர்ந்து அன்றைய தலையங்கத்தை தீட்டிக்கொண்டிருந்தார்... இப்பொழுது அவர் மனதில் கலாசார வெள்ளம் அலையடித்துக் கொண்டிருந்தது! அதன் உருவத்தைப் பேனா, காகிதத்தில் வரைந்து தள்ளிக்கொண்டிருந்தது...

"வாலிபர்தான் இந்நாட்டின் செல்வங்கள்... நம் புராதன கலாச்சாரத்திற்குப் புறம்பாகத் தன் நிலை தப்பி தாறுமாறாகச் செல்லாதிருங்கள் தம்பிகளே"... மேலே மேலே ஓடிக் கொண்டிருந்தது அவர் பேனா...

அன்று மாலை வெளியான 'இடி' இதழ் புதுமையான கலாச்சாரக் கருத்துகளை வெளியிட்டது... புயல் போலவே கொடூரமாகத் தோன்றிய ஆவேச நடையில் தெய்வீக மொழிகளாக மிளிர்ந்தன அழகு வசனங்கள்! நாட்டை உத்தாரணம் செய்வதாக அவை பறைசாற்றின...

பொது மக்களெல்லாம் "இடி" ஆசிரியர் சுந்தரத்தைப் பலவாறாகக் கொண்டாடினர்.

இன்றும் கொண்டாடுகின்றனர். நாளையும் கொண்டாடத்தான் போகிறார்கள்... அவர்கள் உள்ளங்களிலே அவர் ஒரு கலாசாரப்புத்துலகச் சிற்பி. புராதனப் பண்பாட்டை நிலைநிறுத்தி உலகைச் சிருஷ்டிக்க வல்ல ஞானமூர்த்தி—உலகை உத்தாரணம் செய்யப் பிறந்த உத்தமர்...

ஆனால்?

இரவு 8 மணி சுமாருக்கு "டு ஸீட்டர்" கார் ஆசிரியர் சுந்தரத்தை சுமந்த வண்ணம் மனமோகினி மாளிகையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது!

ராஜாம்பாள்

ஸ்வாமிநாத சாஸ்திரியும் - நடேச தீக்ஷதரும் நெடு நாளைய நண்பர்கள் - சாஸ்திரியின் மகள் ராஜாம்பாளும், தீக்ஷதரின் மகன் கோபாலனும் காதலர்கள்.

காதல் வழிதான் கரடுமுரடாயிற்றே - சாஸ்திரிகளென்னமோ இவர்களது கல்யாணத்தை கட்டாயமாக நடத்தியே தீரவேண்டுமென்று திட்டம் போட்டாலும், அவரது மனைவி கனகவல்லியோ தன் சக்களத்தியின் மகள் ராஜாம்பாளைத் தத்தாரியான தன் தம்பி நடேசனுக்குத் தாரை வார்க்க வேண்டுமென்று ஒரு காலில் நிற்கிறாள்.

அவள் எவ்வளவு சொல்லியும் அவர் மசியவில்லை. கடைசியில் அவளது உபத்திரவம் தாங்காமல் தன் சொத்தில் பாதியை அவள் தம்பிக்கே அர்ப்பணமாய் எழுதி வைக்கிறார்.

இன்னும் அவள் திருப்தி அடையவில்லை. தன்னுடைய பழைய திட்டம் நிறைவேறக் காசுக்கு கலம் பொய் சொல்லும் கல்யாணத்தரகன் ராமண்ணாவின் மூலம் ஜோதிடர்களைச் சரிசெய்து கோபாலனுக்கும் ராஜாம்பாளுக்கும் ஜாதகப் பொருத்தம் இல்லையென்று சாதிக்கச்சொல்லுகிறாள். அவளது தம்பி நடேசனோ படித்துப் பட்டம் பெற்றும் பயனற்ற படாடோபப் பேர்வழி. அப்போது அவன் பாலாம்பாள் என்னும் வேசியோடு உல்லாச வாழ்க்கை நடத்தி வந்தான்.

அன்றொரு நாள் பிச்சைக்கார விடுதியின் உதவி நிதிக்காக ராஜாம்பாள் ஆடிய நடனத்தைக் கண்ட அவ்வூர் கிழ ஸப் மாஜிஸ்ட்ரேட் நீலமேக சாஸ்த்ரிக்கு வாலிபம் திரும்புகிறது. அவரும் எப்படியாவது அவளை மணம்செய்துகொள்ள வேண்டுமென்று அதற்காக மேற்சொன்ன அதே ராமண்ணாவின் உதவியை நாடுகிறார். ராமண்ணாவுக்கு அடிக்கிறது யோகம். ஜாதகப் புரட்டு செய்ய ஒரே சமயத்தில் இரண்டிடங்களிலிருந்து இரட்டிப்பு ஸன்மானம் கிடைக்கிறது.

இதற்கிடையே இக்காதலர்களின் பழைய ஸ்நேகிதியும், செல்வமும், சீரும், செழிப்பும் மிக்க இளம் விதவையுமான லோகசுந்தரி கோபாலன் மேல் காதல் கொள்கிறாள். தன் எண்ணம் ஈடேற அவள் தக்க சமயத்தை எதிர் பார்த்திருக்கிறாள். நடேசன் செய்யும் முயற்சிகளுக்கு உடந்தையாய் இருக்கிறாள். இனிமேல்தான் சம்பவங்கள் வெகு வேகமாகச் செல்லுகின்றன. முன்னேற்பாட்டின்படி ஜோதிடர்கள் தங்கள் பங்கான தகிடுதத்தத்தைச் செய்து விடுகின்றனர், ஜாதகப் பொருத்தம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும்சரி தன் மகளை கோபாலனுக்கே கொடுக்கப் போவதாக உறுதி கூறுகிறார் சாஸ்திரி.

இவ்வாறாக தங்கள் முயற்சியில் தோல்விகண்ட ஸப் மாஜிஸ்ட்ரேட்டும் ராமண்ணாவும், புது சூட்சிகளை யோசிக்கின்றனர். அதன்படி சில திருட்டு நகைகளை ராமண்ணா—, சாஸ்திரியின் வீட்டில் ஒளித்து வைக்க, ஸப் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு சாஸ்த்திரியைக் கைது செய்கிறார். சிறையில் ஒன்று ஸப் மாஜிஸ்ட்ரேட்டின் இஷ்டத்திற்கு இணங்க வேண்டும் இல்லையேல் அவர் சிறை செல்வதோடுகூட, கொலைக்கேஸ் மூலம் கோபாலனையும் இழந்துவிடத் தயாராய் இருக்க வேண்டுமென்று தெரிந்து, வேறுவழியின்றி ராமண்

னுவின் யோசனைக்கு தலை சாய்க்கின்றார். ராஜாம்பாளும் ஆச்சரியப்படும்படி கிழவரை மணக்க சம்மதிக்கிறாள். ஆனால்......

கோபாலன் வீட்டு வேலைக்காரனை முருகனை வசப்படுத்திக்கொண்ட லோகசுந்தரி, காதலர்களுக்கிடையே நடக்கும் கடிதப் போக்கு வரத்துக்களின் அந்தரங்கங்களையெல்லாம் அறிந்து கொள்ளுகிறாள். கடைசிக் கடிதத்தில் அவர்கள் இருவரும் இரவு 2 மணிக்கு சந்திக்க வேண்டுமென்று கோபாலன் எழுதியிருந்ததை 12 மணிக்கு என்று மாற்றி எழுதி அனுப்பி விடுகிறாள். இவ்விஷயங்களைஎல்லாம் கடிதமூலம் அறிவித்து நடேசனையும் வரவழைக்கிறாள். இரவு 12 மணிக்கு தன் காதலனைக் காண வரும் ராஜாம்பாளைக் கடத்திச் செல்வதென்று இருவரும் திட்டம் போடுகின்றனர்.

லோகசுந்தரியைக் காணப் போகும் அவசரத்தில் மறதியாக அவள் கடிதத்தை பாலாம்பாள் வீட்டிலேயே விட்டுவிட்டுச் செல்கிறான் நடேசன். அக்கடிதத்தைப் படித்த பாலாம்பாள் பொறாமை மிகுந்தவளாய் அவனைப் பின் தொடர்கிறாள்.

இதற்குமுன் பாலாம்பாளை வைப்பாக வைத்திருந்த நரசிம்மலு நாயுடு என்பவன் தன் காதலியான பாலாம்பாள் நடேசன் பின்னால் போவதை அறிந்து கோபமுற்று அவளைப் பழி வாங்க அவளைப் பின் தொடர்கிறான்

குறிப்பிட்ட இரவில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு ராஜாம்பாள் தன் காதலனைக்காண செல்லுகிறாள். தயாராய் இருந்த நடேசனும் லோகசுந்தரியும் அவளை கடத்திச்செல்ல முயற்சிக்கின்றனர். அதே சமயம் திருட்டுத்தனமாய் அங்கு நுழைந்த பாலாம்பாளை அவன் பின் வந்த நரசிம்மலு நாயுடு கத்தியால் குத்துகிறான். இந்த இடையூற்றைக்கண்ட நடேசனும் ஆத்திரத்தால் பாலாம்பாளைச் சுட்டுவிடுகிறான். ராஜாம்பாள் வீறிட்டுக் கத்துகிறாள். நடேசனும் லோகசுந்தரியும் பயந்து ஓடிவிடுகின்றனர், ராஜாம்பாளை அங்கு கண்ட நாயுடு மயக்கங்கொடுத்து அவளைத் தூக்கிச் செல்லுகிறான். ஓடும் அவசரத்தில் அங்கிருந்த விளக்கு கீழே விழுந்து ரத்த வெள்ளத்தில் கிடந்த பாலாம்பாளின் ஆடையில் நெருப்புப் பற்றிக்கொள்ளுகிறது.

கல்யாண வீட்டில் பெண்ணைக் காணோமென்று ஒரே களேபரம். சாமிநாத சாஸ்திரி தன் மகள் தமக்கு எழுதியுள்ள கடிதத்தைக் காண்கிறார். நீலமேக சாஸ்திரி அடியுண்ட வேங்கைபோல் உருமுகின்றார். ராஜாம்பாளின் கடிதத்தின் மூலம் அவன் போன இடத்தை அறிந்து போலீஸ் தேடிச் செல்லுகிறது. அப்போதுதான் தன் காதலி ராஜாம்பாளின் கடிதப்படி அங்கு, வந்த கோபாலன் பாலாம்பாளைத் தன் காதலி என்று எண்ணி சவத்தின்மேல் விழுந்து நெருப்பை அணைக்க முயல்கிறான். அதைக் கண்ட போலீஸார் ராஜாம்பாளைக் கொலை செய்தவன் கோபாலனே என்று அவனைக் கைது செய்கின்றனர்.

துப்பறியும் கோவிந்தனிடம் கேஸ் வருகிறது. கோவிந்தன் தன் அசகாய சூரத்தனத்தையெல்லாம் காட்டி உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதுதான் படத்தின் விருவிருப்பான கட்டம். அதைத் திரையில்தான் பார்க்க வேண்டும். எழுதினால் ரசிக்க முடியாது.

நாடக விருந்து

சென்ற ஜூலை மாதம் திருச்சி நகர மக்களுக்கு ஒரு யோக காலம் என்றே சொல்லவேண்டும். இல்லாவிட்டால் டி. கே. எஸ். சகோதரர்கள் திருச்சியில் தங்கி பொறுக்கி எடுத்த தங்கள் நாலு நாடகங்களை பத்து தினங்கள் நடித்துக் காட்டுவார்சளா? நாடகக்கலை நசித்து விடாமல் அதில் மக்களுக்கு மோகம் குறையாமல் செய்துவரும் பெருமை சகோதரர்களுக்கு உண்டு. மனிதன், ஒளவையார், அந்தமான் கைதி, இன்ஸ்பெக்டர் இந்த நாலும்தான் திருச்சி மக்களை மகிழ்வித்த நாடகங்கள்.

இவைகளில் புதியது இன்ஸ்பெக்டர். மனிதன் சென்ற வருஷம் அறங்கேற்றப்பட்ட நாடகம். டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகங்களைப் பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. இன்ஸ்பெக்டர் நாடகத்தின் சிறப்புப்பற்றிமட்டும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பிரபல ஆங்கில நாவலாசிரியரான 'தாமஸ் ஹார்ட்டி' அவர்களின் 'டெள் ஆப் டம்பர் வில்லி' என்ற நாவலில் வரும் கதாநாயகியைப் போல இன்ஸ்பெக்டர் நாடகத்தில் வரும் ராஜம் தன் மானத்தைக் கெடுத்த காதலனை கதாநாயகனின் உயிரை வாங்குவதாக அமைத்திருப்பது நம் உள்ளத்தைத் தொட்டு விடுகிறது.

வில்லன் பாத்திரத்தில் கதாநாயகனாகத் திகழும் டி. கே. ஷண்முகம் அவர்கள் தன் அபாரமான நடிப்புத் திறமையால் அந்தப் பாத்திரத்தை ரொம்ப நாசூக்காகப் பிரமாதமாக்கி விட்டார்.

இன்ஸ்பெக்டராக வரும் பகவதி அவர்கள் கருணையின்றிக் கடமையின் யந்திரமாகப் பிரதி பலித்தாலும் கடைசிக் கட்டத்தில் ஹிருதயமுள்ள மனிதராக மாறி தன் பாத்திரத்தை ஜீவனுள்ளதாக்கி நம் அனுதாபத்தைப் பெரிதும் பெற்றுவிடு

இன்ஸ்பெக்டர் நாடகத்தில்

மைதிலி நாடகத்தில்
பாகவதர் மனைவி ஸ்ரீமதி

கிறார். உண்மைக் குற்றவாளிகள் கூட அந்த இன்ஸ்பெக்டர் நடிப்பின் உயர்ந்த குணத்தில் தங்களைப் பறி கொடுத்து நிற்பார்கள். தன் தங்கையின் வாழ்வு வளம் பெறுவதற்காகப் பாடுபடும் இன்ஸ்பெக்டர் அவள் தன் காதலனைக் கொன்ற கொலையாளியாகத் தன்முன் நிற்கும்போது உணர்ச்சி வசப்பட்டுக் கலங்கினாலும் கடமையை நிறைவேற்ற அவளைக் கைதி செய்யும் கட்டத்தில் அவர் நடிப்பு உச்சத்தை அடைந்துவிடுகிறது.

திரௌபதி கிராமியப் பெண்ணாக வந்த, பட்டிக்காட்டுப் பெண்ணின் உயர்ந்த லக்ஷியங்களையும் நடத்தையையும் அழகுபடத் தன் குறுகுறுத்த பேச்சுக்களால் நடித்துக் காட்டி பட்டிக்காட்டுப் பெண்ணே உயர்ந்தவள் என்ற ரசிகர்களின் ஒருமனதான பாராட்டுதல்களைப் பெற்று விடுகிறார். அவ்வளவு இயற்கையான நடிப்பு.

சிந்திக்கச் செய்து சிரிக்கவைக்கும் ஹாஸ்யத்தை சிதாணுவும் ராமசாமியும் வழக்கம் போலக் குறைவின்றி அளித்தார்கள்.

நாட்டிய வாத்தியாரிடம் மானத்தைப் பறிகொடுத்து மனம் வருந்தி இருக்கும் நிலையிலும், வஞ்சித்துக் கைவிட்ட காதலனைக் கத்தியால் பலமுறை ஆத்திரம் தீரக் குத்திக் குத்திப் பழி வாங்கும் கட்டத்திலும் கதாநாயகியாக நடித்த பெண்ணின் நடிப்பு நம்மை அது நாடகம் என்பதை மறந்து மயிர்சிலிர்க்கும்படி செய்து விட்டது.

இன்ஸ்பெக்டர் மனைவியாக நடித்த ராஜம் தன் பாத்திரத்தை உணர்ந்து திறம்பட நடித்துக் காட்டினார்.

நாட்டு வைத்தியர் யமகண்டனாக வந்த சீதாராமன் அவர்களின் நடிப்பு உண்மை யமனையே திகைக்கவைக்கும் படியாக இருந்தது. அப்பாவி எழுத்தாளராக வந்த நடிகர் தான் ஒரு குணசித்திர நடிகர் என்பதை நிரூபித்துக் கொண்டார். அவர் நடிக்கவில்லை, அசல் அப்பாவி எழுத்தாளராகவே மாறிவிட்டார்!

மொத்தத்தில் டி. கே. எஸ் சகோதரர்களுக்கு இன்ஸ்பெக்டர் ஒரு மகத்தான வெற்றி. கலாதேவிக்கு சமர்ப்பித்த ஒரு அரிய சாதனை. இதுபோன்ற உயர்ந்த சமூக நாடகங்கள் பலவற்றை சகோதரர்கள் தமிழ்நாட்டுக்கு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

தேவனின் மைதிலி

ஆகஸ்டு சுதந்திர தினத்தன்று திருச்சி தென் மதராஸ் எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் ஸ்தாபனத்தில் வேலை பார்க்கும் அன்பர்களின் சங்க ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. ஆண்டுவிழாவின் முக்கிய அம்சமாக ஆனந்தவிகடன், 'தேவன்'

இவரைத் தெரியுமா?

ஒரு காலத்தில் அழகும் குரலும் இருந்தால் தான் திரை உலகில் நுழைய முடியும் என்றிருந்தது. ஆனால் இப்போது பாடும் திறமையில்லாதவர்களும் திரையில் சோபிக்க முடியும். அப்படி பாட்டுத்திறன் இல்லாதவர்களைச் சோபிக்கச் செய்யும் கைங்கரியத்தை இனிமையான சாரீர சம்பத்தைப்பெற்றிருக்கும் சிலர் செய்துவருகிறார்கள். தமிழ்ப் படங்களில் ஆண் நடிகர்களுக்குக் குரல் இரவல் கொடுக்கும் பிரபலமான ஒரு சிலரில் இவரும் ஒருவர், இவர் தான் உங்கள் வாய் அடிக்கடி முணுமுணுக்கும் பல பாட்டுக்களைத் திரையில் பாடிய திருச்சி லோகநாதன். கணீர் என்ற கம்பீரமான இவரது குரல் திரையில் பிரமாதமாகச் சோபிப்பதை நேயர்கள் அறிவார்கள். இதுவரை இவர் 23 தமிழ்ப் படத்திலும், இரண்டு மலையாளப்படத்திலும், ஒரு தெலுங்குப் படத்திலும் திரையில் நாம் பார்க்கும் உருவத்துக்காகப்பாடி இருக்கிறார். இவரது இனிமையான சங்கீதத்தை ரசித்த நாம் இவரது நடிப்பைப் பார்க்கும் சந்தர்ப்பமும் விரைவில் ஏற்பட்டுவிடும். 'என் தங்கை' என்ற படத்தில் இவர் கதாநாயகராக நடித்துக்கொண்டிருக்கிறாராம். கதாநாயகனுக்கு ஏற்ற முகவெட்டும், நல்ல சாரீரமும் சரீரமும் இருக்கிறது. நடிப்புத் துறையிலும் இவர் வெற்றியோடு முன்னேறுவாராக.

அவர்கள் எழுதிய 'மைதில்' என்ற ஹாஸ்யமும் திகைப்பும் நிறைந்த நாடகத்தை வைத்துக் கொண்டார்கள். இந்தச் சங்கத்தில் உள்ள பல ரசிக அன்பர்களின் முயற்சியில் 'மைதிலி' நாடகம் வெற்றிகரமாக நடந்தது, தேவனின் ஹாஸ்யத்திற்கே ஒரு அலாதி மதிப்பு ஜனங்களிடையே உண்டு. அப்படிப் பட்ட அவர் நாடகம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தது சங்கத்தாரின் விசேஷ ரஸனையைக் காட்டுகிறது. ஒரு நாடகம் 'பிரமாதம்' என்ற பாராட்டுதல் பெறவேண்டுமானல் நடிப்பும் வேஷப் பொருத்தமும் தான் முக்கியம். இந்த இரண்டும் அமெய்ச்சூர் நடிகர்கள் நடித்த இந்த மைதிலி நாடகத்தில் அமைந்து அதை ரொம்பப் பிரமாதமாக்கி விட்டது.

நடிப்பில் முதல் மார்க்கை செல்லமணியாக நடித்த ஆர். வைத்தியநாதன் அவர்கள் பெற்றுவிடுகிறார். தேவன் அவர்கள் எந்த நோக்கத்தோடு அந்தப்பாத்திரத்தை சிருஷ்டித்திருந்தரோ அந்தப் பாத்திரமாகவே வைத்தியநாதன் அவர்கள் காட்சி அளித்தார். அவர் குழப்பமடைந்து விழிக்கும்போது ஒரே அப்ளாஸ்தான்! இந்த நாடகத்தின் டைரக்டரும் இவர்தான் என்பதை

அம்மாக் கோண்டுவும்
மந்தரேசனும்

அறிந்தபோது, "டைரக்டர்களுக்கு நடிக்க வராது" என்று சொல்பவர்களைக் கூட்டிவந்து வைத்தியநாதனின் நடிப்பைப் பார்க்கச் சொல்ல வேண்டுமென்று தோன்றிற்று.

பெண் வேஷதாரிகளில் நடிப்பிலும் வேஷப் பொருத்தத்திலும் முதல் ஸ்தானம் பட்டணம் பஞ்சுவின் மனைவி ஸ்ரீமதியாக நடித்த டி.எஸ். சோமசுந்தரத்துக்குத்தான். நிஜப் பெண்களே பார்த்து வெட்கப்பட்டுத் தலை குனியும்படி அவ்வளவு அற்புதமாக நடித்துக்காட்டினார். தலையசைப்பு, கை நீட்டல் முக பாவங்கள் எல்லாம் அவர் ஒரு பிறவி நடிகர் என்பதை விளக்கின.
பட்டணம் பஞ்சுவாக நடித்த பி. வி. ரெங்கசாமி அசல் பாகவதராகவே இருந்தார்.

ஒரேஒரு குறை. கதாநாயகி மைதிலியாக நடித்தவருக்கு மேடைக்கூச்சம் இருக்கிறது. அவர் பாத்திரம் சோபிக்கவில்லை. மந்தரேசனை நடித்தவர் 'தேவனின்' கதைப்படி இன்னும் கொஞ்சம் முறுக்காகக் காட்சியளிக்க வேண்டும். தலை குனிந்தபடியே பேசி நடித்தது ஒரு மாதிரியாகத் தான் இருந்தது. நாடக முழுதும் நிறைந்தவராக வருகிறார் 'அம்மாக் கோண்டு'. இந்தப் பாத்திரத்தை தத்ரூபமாக நடித்துக் காட்டினார் வி. ராமசாமி. அவர் மேடை மீது தோன்றிய உடனேயே குபீர் என்று சிரிப்புப் பொங்கி வழிய ஆரம்பித்து விட்டது. இதில் ஒரு வேடிக்கை, என்ன வென்றால், "நானும்... அப்படித்தான் நெனச்சேன்" என்ற இந்த வார்த்தைக்கு மேல் இவர் ஒன்றுமே பேசவில்லை! ஆனால் இந்த வார்த்தைகளை அவர் சொன்ன மாதிரியும் சந்தர்ப்பங்களுமே நாடகத்தின் பிரதான ஹாஸ்ய அம்சமாக விளங்கிற்று.

சமாளிக்க முடியாத ஏராளமான கூட்டத்திற்குத் தகுந்த வசதிகள் செய்து கொடுத்திருந்தால் இன்னும் பலர் நாடகத்தை ரசிக்க முடிந்திருக்கும்.

நாடகத்தில் பங்கு கொண்ட அனேகருக்கு நடிப்பு அனுபவம் இது தான் முதல் தடவை. அப்படி இருந்தும் 'மைதிலி' ஒரு வெற்றி என்றே சொல்ல வேண்டும். நாடகத்திற்கு அமரகவி பாரதியாரின் பேத்தியான லலிதா பாரதி அவர்கள் அழகான பாட்டொன்றைப் பாடி சிறக்கச் செய்தார்கள். வேஷப் பொருத்தத்தின் வெற்றிக்கு திருச்சி பைன் ஆர்ட்ஸ்காரர்கள் தான் பொறுப்பாளிகள் என்று தெரிகிறது.

—'மூர்த்தி'

மைதிலியும் அவள் காதலனும்

வடநாட்டு நட்சத்திரங்கள்

கிஷோர் சாஹு

நெ. இராஜரெத்னம்

சென்ற வருஷம் பம்பாய் சினிமாப் பத்திரிகைகளில் ஒரு விளம்பரம் வெளிவந்தது. "தேவை. நான் எடுக்கப்போகும் ஒரு சமூகப் படத்திற்குப் படித்த பெண்கள் தேவை. நல்ல முகவெட்டும் நடிக்கத் திறமையுமுள்ள பெண்கள் மட்டுமே தங்கள் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். கடிதப் போக்குவரத்து இரகசியமாய் வைத்துக் கொள்ளப்படும். கிஷோர் சாஹு, ஹிந்துஸ்தான் சித்ரா பிலிம்ஸ், பம்பாய்" என்றிருந்தது. கிஷோர் சாஹுவே எழுதி, நடித்து, டைரக்ட் செய்து தயாரிக்கப் போகும் "காலிகட்" என்ற படத்தில் எல்லா நடிகைகளும் புதிய முகங்களாக இருந்தால் படம் எப்படி வெற்றிகரமாக இருக்க முடியும் என்று பெரும்பாலோர் சந்தேகப் பட்டார்கள். படமும் வெளிவந்து விட்டது. சந்தேகப்பட்டது போல் இல்லாமல் படம் வெற்றிகரமாக இப்போது பல ஊர்களில் ஓடிக்கொண்டிருக்கிறது. மேற்படி விளம்பரத்தின் பலன் அந்தப் படத்தின் மூலம் பீனா ராய், இந்திரா பஞ்சல், ஆஷா மதூர் என்ற மூன்று படித்த பெண்கள் திரைஉலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றனர். பழைய முகங்களையே கண்டு அலுத்துப் போன நமக்கு மூன்று நல்ல நடிகைகளை ஒரே படத்தில் அறிமுகப்படுத்திய கிஷோர் சாஹுவை பாராட்டாமல் இருக்க முடியாது. இவ்வளவு சுலபமாக மூன்று பெண்களை ஒரே படத்தில முன்னுக்குக் கொணர்ந்த கிஷோர் சாஹு, தான் படவுலகில் முன்னுக்கு வர மிகவும் கஷ்டப்பட்டார். படிப்படியாகத்தான் முன்னேற முடிந்தது. ஊக்கமும், உழைப்புமே அவரது முன்னேற்றத்திற்கு படிகளாக அமைந்தன.

நாக்பூரில் ஒரு நல்ல உயர்தர ராஜபுத குடும்பத்தில் பிறந்தார் கிஷோர். அவரது தகப்பனர் ஒரு அறிவாளி. பெரிய கவிகூட. அவரது புத்தகங்கள் பல வெளியிடப் பெற்றிருக்கின்றன. அதனல் இளவயதிலேயே கிஷோருக்கு உருது, பாரசிக பாஷைகளில நன்கு பரிச்சியம் ஏற்பட்டது. சிறு வயதில் கதைகளைக் கேட்க மிகுந்த ஆவல் காட்டினர். பல கதைகளைக் கேட்ட பலன் பின்னர் சினிமாவுக்கு கதைகள் எழுதும் திறமை அவருக்கு எளிதாக ஏற்பட்டது.

அவருடைய பள்ளிப் படிப்பு ஒன்றும் விசேஷமில்லாமல் சென்றது. பின்னர் கல்லூரியில் பல நாடகங்களில் நடிக்க முற்பட்டார். முதன் முதலில் நடித்த 'ஷாஜஹான்' என்ற நாடகம் படுதோல்வியடைந்தது.

பின்னர் அவரே கதைகள் எழுதி நடித்த பல கல்லூரி நாடகங்கள் அவருக்கு நல்ல பெயரைக் கொடுத்தது. பல நாடகங்களில் நடித்ததின் பயனாகத்தான் அவர் ஒரு சிறந்த நடிகர் என்று பலர் நினைக்க சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அடிக்கடி நாடகங்கள் நடத்திவந்த கிஷோருக்கு தானும் ஏன் சினிமாவில் சேர்ந்து நடிக்கக்கூடாது என்ற எண்ணம் உண்டாயிற்று. அப்பொழுது பாம்பேடாக்கிஸின் புகழ் உயர்ந்தோங்கி இருந்தது. அங்கே நடிக்க சந்தர்ப்பம் கிடைக்குமா என்று சென்றார் கிஷோர். வீட்டில் பெற்றோர் யாவரும் கிஷோர் சினிமாவில் சேரப்போவதை விரும்பவில்லை. சினிமாத் தொழிலே மிகவும் கேவலமான தொழில் என்றார்கள். கிஷோர் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. படித்தவர்கள் பலர் நடிக்க முன் வந்தால்தான் பட உலகைப் பற்றிய கெட்ட பெயரும் அவனாலும் ஒழியும் என்று கருதினர். அவர் உறுதி நிறைவேறியது. பட்டமும் நடிப்புத் திறமையும் பெற்றுள்ள கிஷோருக்கு பாம்பே டாக்கிஸில் நடிக்க சந்தர்ப்பம் எளிதாகக் கிடைத்தது. அதுவும் எப்படி? பிரபல நடிகை தேவிகாராணியுடன் 'ஜீவன் பிரபாத்' என்ற படத்தில் நடிக்க. முதல் படமாதலால் சுமாராக யிருந்தது. அப்பொழுது கிஷோருக்கு வயது 21.

"ஜீவன் பிரபாத்" தில் நடித்த பின், அதே கம்பெனியில் சிநேஹ பிரபாவுடன் புனர் மிலனில் நடித்தார். அது நல்ல வெற்றியளித்தது.

முன்னுக்கு வரக்கூடிய அறிகுறிகளுடன் திறமையாக மிருதங்கம் வாசிக்கும் சித லக்ஷ்மணன் அவர்கள் முறையாகச் சிக்ஷை பெற்றவர். ஆர்வமுள்ள இளைஞர். இவரை சங்கீத உலகம் பயன்படுத்திக் கொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

கிஷோர் பாம்பே டாக்கிஸில் நடிகராக மட்டும் தன்னை நிறுத்திக் கொள்ளாமல் ஸ்டுடியோவில உள்ள எல்லா இலாக்காக்களிலும் சென்று வேலை கற்றுக்கொண்டு வந்தார். அசோக் குமாரை நன்கு அறியும் சந்தர்ப்பமும் அங்கேதான் அவருக்குக் கிடைத்தது. நடிகராக மட்டும் இல்லாமல் தானும் ஒரு டைரக்டராக இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். டைரக்டராக இருந்தால்தான் தன்னுடைய கற்பனைத்திறனை நன்கு காண்பிக்க முடியும் என்று கருதினார். ஆனால் பாம்பே டாக்கீஸார் அவரது விருப்பத்திற்கு இணங்கவில்லை. "மாதம் இருநூறு ரூபாய் தருகிறோம். நிரந்தர நடிகராக இரும்" என்றார்கள். டைரக்டர் வேலையை விரும்பிய கிஷோர் அதற்கு ஒத்துக்கொள்ளாமல் "டைரக்டர் வேலை கொடுக்க முடிந்தால் பாருங்கள். இல்லாவிட்டால் நான் வெளியேறிவிடுகிறேன்" என்றார். பாம்பே டாக்கீஸார் அதற்கு இணங்கவில்லை கிஷோரும் உடனே வெளியேறினார். வெளியே வந்தவர் சும்மாயிருக்கவில்லை 'இந்தியா ஆர்ட்ஸ்' என்ற படக் கம்பெனி ஒன்றை ஆரம்பித்தார். இதைக்கண்ட பாம்பே டாக்கிஸ் உரிமையாளர் காலஞ்சென்ற ஹிமான்சுராய் கிஷோரிடம் "மாதம் ஐநூறு தருகிறேன் எங்கள் கம்பெனியிலேயே நடிகராக இருந்துவிடு" என்று மீண்டும் வற்புறுத்தினார். அதை வந்தனத்துடன் மறுத்துவிட்டார் கிஷோர். பின்னர் பல நண்பர்களின் உதவியைக் கொண்டு 'பக்ஷிராணி' என்ற படம் தயாரித்தார். படம் வெளி வந்தவுடன் 'இந்தியா ஆர்ட்ஸ்' கம்பெனியும் மூடப்பெற்றது.

பின்னர் 'குன்வாராபாப்', 'ராஜா', 'சாவன் ஆய்ரே' என்ற மூன்று படங்களைத் தயாரித்தார் 'குன்வாரா பாப்' 'Bachelor's Mother' என்ற ஆங்கில படத்தின் தழுவல். எல்லாப் படமும் சுமாராகத்தான் இருந்தது. பின்னர் எடுத்த 'பிஜ்லி' என்ற படமும் அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை. மேற்கண்ட படங்களைத் தயாரித்த கிஷோருக்கு இன்னும் நல்ல முறையில் ஒரு சிறந்த படம் தயாரிக்கவேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. அதன் விளைவே 'ஹிந்துஸ்தான் சித்ரா' என்ற தன் சொந்தக் கம்பெனியை ஆரம்பிக்கும்படி செய்தது. 'ராத்' என்ற காமிக் படமும் 'வீர்குனல்' என்ற சரித்திரப் படமும் தயாரித்தார். வீர குனல் படத்தைப் பாராட்டி அகில இந்திய எழுத்தாளர்கள் சங்கம் ஒரு தங்கப் பதக்கத்தை அளித்தனர்.

பிலிம்ஸ்தானில் நடித்த 'சிந்தூர்' என்ற படம் கிஷோருக்கு நல்ல புகழைக் கொடுத்தது.

சமீபத்தில்வெளிவந்தது 'காலிகட்' என்றபடம். 'ஹிந்துஸ்தான் சித்ரா' படக் கம்பெனியை ஆரம்பித்து அதன் மூலம் தயாரித்த 'காலிகட்' இது வரையில் கிஷோர் தயாரித்த படங்களைவிட பன்மடங்கு சிறப் புற்று அவருக்கு நல்ல பண வரு வாயைக் கொடுக்கப்போகிறது. இதில கிஷோரும் அவர் கண்டுபிடித்த மூன்று புதிய நடிகைகளும் நன்ருக நடித்திருக்கிறார்கள். 'காலிகட்'டை கொண்டுவந்த கிஷோர் மறுபடியும் ஒரு புதிய படம் தயாரிக்கப் போகி ருர். அதற்காக மறுபடியும் புதிய முகங்கள் தேவையென்று பத்திரி கையில் விளம்பரம் செய்திருக்கி ரூர். இனிமேல் இவர் எடுக்கும் படங் கள் எல்லாம் நிச்சயமாக வெற்றி யளிக்கும் என்று நம்பலாம்.

1943-ம் ஆண்டில் சாந்தி நீகேத னத்தில் படித்துக்கொண்டிருந்த மீதி என்ற அழகியை மணம் செய்துகொண்டார். இவருக்கு தற்சமயம் மூன்று குழந்தைகள் இருக்கின்றன. கிஷோர் வீட்டில் சும்மாயிருப்பதில்லை. காலையில் எழுந்ததும் சிறிது நேரம் தன் வீட் டில் உள்ள தோட்டத்தைச் சுற்றி சுற்றி வருவார். உடனே வந்து குளித்துவிட்டு ஏதாவது புத்தகம் கையில் வைத்துப் படித்துக்கொண் டிருப்பார். துப்பறியும் கதைகளைப் படிப்பதிலும், காதல் கதைகளைப் படிப்பதிலும் கிஷோருக்கு இப் பொழுது வெறுப்பு அதிகம். அவர் படிப்பதெல்லாம் தத்துவ ஆராய்ச்சி நூல்கள், சமூக முன் னேற்றத்திற்கான வழிகளை வகுக் கும் நூல்களேயாகும். மற்ற வேளை களில் ஹிந்தியில் புத்தகங்கள், பாட்டுக்கள் முதலியவை எழுது வார். அபிசாரா என்ற புத்தகத் தில் கிஷோருடைய வசன கவிதை களைப் படிக்கலாம்.

இந்த மாதிரி அறிவுத்துறையில் அவர் மிகவும் சிறந்திருப்பதால்தான் அவரைச் சில நண்பர்கள் ஆச் சார்ய கிஷோர் என்று அழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கிஷோ ருக்கு எவ்வளவு குழந்தைகள் உண்டோ அவ்வளவு நாய்கள் வீட் டில் வளர்க்கிருர். நாய்கள் என் ருல் கிஷோருக்கு உயிர். அதனுல் தானே என்னவோ அவர் அல்சேஷி யன் (Alsation) என்ற உயர்ந்த ஜாதி நாய்களை வளர்க்கிருர். படம் வரைவதிலும் போட்டோ பிடிப்பதி லும் கிஷோருக்கு விருப்பம் அதிகம்.

மற்ற நடிகர்களைப் போல் கிஷோர் கிளப்பிற்குப் போவதோ, அரட்டை அடிப்பதோ அல்லது அடிக்கடி விருந்துக்குச் செல்வதோ கிடையாது. எப்பொழுதும் தனி மையையே விரும்புவார். தனிமை யில் தான் தீர சிந்திக்க முடியும் சிந்தித்தால் தான் நல்ல படங்களைத் தயாரிக்க முடியும் என்று கருது கிருர். அவர் எவ்வளவு கண்டிப் பாக இருக்கிருரோ அதே மாதிரி தான் அவரது நடிகர் நடிகைகளும் இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிருர். இந்தக் கண்டிப்பு தான் 'காலிகட்'டில் நடித்த இந் திரா பஞ்சல் என்ற புதிய நடி கையை படம் முடியும் தருணத்தில் வெளிக் கடத்தியது. இந்திரா பஞ் சல் ஒழுங்காக நடக்காததால் அவளை வெளிக் கிளப்ப வேண்டிய தாயிற்று என்று கிஷோர் ஓர் அறிக்கை விட நேர்ந்தது. இந்தக் கண்டிப்பு அவருடைய பல நண்பர் களை குறைத்துக் கொண்டே வரு கிறது. இதற்காக அவர் கவலைப் படுவதில்லை. அவர் கவலை யெல் லாம் நல்ல படங்களைத் தயாரிக்க வேண்டும், படக் கலை வளர வேண் டும் என்பதே. 'காலிகட்'டில் புது முகங்களைப் புகுத்திய கிஷோர் இன்னும் பல படங்கள் எடுத்துப்பல புதிய முகங்களை திரையுலகிற்கு அறிமுகப்படுத்தி, இந்த நடிகைப் பஞ்சத்தைப் போக்கினுல் அதுவே நம் பட உலகிற்குச் செய்த தொண் டாகும். இதை அவரால் செய்ய முடியுமா! பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

ஜிப்ஸி வேஷத்தில் வியப்போடு உங்களைப் பார்க்கும்
இந்த அழகி யார் என்று தெரியவில்லையா ?
கட்டழகி ஸூர்யப்பிரபாதான்
ஸ்திரீசாகஸத்தில் இப்படி சாகஸம் செய்கிறார்.

அங்கமுத்துவை C. R. ராஜகுமாரி எதற்காக
அப்படித் தாஜா செய்கிருரோ தெரியவில்லை.
'ராஜம்பாளுக்காக' நாட்டிய C. R. ராஜகுமாரி
இந்த வேஷமேற்றிருக்கிருர்.

இந்த ரிக்ஷாக்காரனை எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறதோ? நீங்கள் எங்கேயும் பார்த்திருக்க முடியாது. ராஜாம்பாள் கொலைக் கேஸ் விஷயமாகத் துப்பறியும் 'கோவிந்தன்' போட்டுக்கொள்ளும் ஒரு வேஷமிது.

சாரங்கபாணிதான் — *ரிக்ஷாக்காரர்*

யோஜனையைப் பார்த்தால் ஏதோ பெரிய
திட்டத்துக்குத்தான் என்று தெரிகிறது.
யோஜனை செய்பவர் கிரிஜா. ஸ்திரீசாகஸத்தில்.

ஸ்திரீயின் சாகஸத்தில் இவர் என்ன பாடுபடுகிறாரோ தெரியவில்லை. ஸ்திரீசாகஸத்தில் — நாகேஸ்வர ராவ்

'நடிகை' என்ற படத்தில் இவருக்கு நடிக்க நல்ல சந்தர்ப்பம் இருக்குமென்று தெரிகிறது.

இந்தச் சாந்தமான அழகிய முகத்தை

நடிகையில் சந்திக்கலாம்.

ராஜாம்பாளில் ராஜம்பாளாகத்
தோன்றுகிறார் பி. கே. சரஸ்வதி

சினிமாவில் நாம் பார்க்கும் மின்னும் நட்சத்திரங்களுக்கெல்லாம் ஒளி இயற்கையானதல்ல. மேல்நாட்டு வர்ணப் பூச்சு டப்பிகளின் தயவில்தான் அந்த நட்சத்திரங்கள் ஒளிவிடுகின்றன. இது திரை உலகின் பொது நியதி. இந்த முறைக்கு விலக்காக இயற்கையாகவே அழகுள்ள நட்சத்திரங்களும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். மேக்அப்பின் தயவை எதிர்பாராமலேயே அவர்களால் பொதுமக்களின் கவனத்தைக் கவரமுடியும். சிவந்த மேனி, குரு குருவென்ற பார்வை, லட்சணமான சிரித்த முகம், கட்டுமஸ்தான உடல், இளவயது இவ்வளவும் ஒருவருக்குச் சேர்ந்துவிட்டால் மேக் அப் வாலாவின் அர்த்தமுள்ள பார்வைக்கு தலைவணங்க வேண்டியதில்லையே.

மேனாடுகளில் சில நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். அவர்கள் நடிக்கும் படம் என்றால் ஏராளமான கூட்டம் நம் இந்தியாவிலும் கூடுகிறது. அந்தக்கூட்டத்தில் முக்கால்வாசிப்பேர் கட்டிளங்காளைகள். இளவயது வாலிபர்கள். மீதிப்பேர் அழகை ரசித்து ஆராதனை செய்யும் ரசிகர்கள். அந்த நடிகையின் நடிப்பு அப்படி ஒன்றும் பிரமாதமாக இருக்காது. கதையோடு உருண்டு வருவார், அவ்வளவுதான். ஆனால் அவரைப் பார்க்கத்தான், அவர் உடலழகைக் கண்டு களிக்கத்தான் இத்தனை கூட்டமும். 'எஸ்தர் வில்லியம்ஸ்' என்ற நீச்சலழகி, 'பெட்டி கிரேபிள்' என்ற நாட்டிய ராணி, 'டோரதிலாமூர்' என்ற வனசுந்தரி, 'ஹெடிலாமர்' என்ற அழகு சுந்தரி இவர்கள் இந்த வரிசையில் உள்ளவர்கள் என்பதற்குச் சில உதாரணங்கள்.

இதுபோல நம் தமிழ்ப் பட உலகிலும் சில நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். ஒரு சமயம் என்னை என் நண்பன் ஒருவன் ஒரு தமிழ்ப்படத்துக்குக் கூப்பிட்டான். "போடா, அது சுத்தப் பாடாவதியாம் எல்லாரும் சொல்லிக்கிறாங்க நான் வரலை' என்றேன். அதற்கு அவன் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"டேய், படம் பாடாவதியா இருக்கலாம், டைரக்ஷன் மோசமா இருக்கலாம், கதை மட்டமா இருக்கலாம், அதைப்பத்தி எல்லாம் நீ கவனிக்காதே. அதிலே பி. கே. சரஸ்வதி ஆக்ட் செய்யறா. அவளுக்காகவாவது அந்தப் படத்தை பாக்கணும். ஸெக்ஸ் அப்பில் பிரமாதமா இருக்கும் வா" என்று என்னைப் பைத்தியமாக்கி அழைத்துச் சென்றான்.

இதை எதற்குச் சொல்ல வந்தேனென்றால் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்துக்காகப் படம் பார்க்க வேண்

டும் என்ற மனப்பான்மை நம் தமிழ் நாட்டிலும் உண்டு என்பதற்காகத் தான்.

இன்றைய தமிழ்ப்பட உலகில் உடல் பெருக்காமல இயற்கை அழகோடும் இளமையோடும் உள்ள ஒருசில நட்சத்திரங்களில் பி. கே. சரஸ்வதியும் ஒருவர். இவர் படங்களில் 'ஸெக்ஸ்' அப்பீல் அபரிமிதமாக இருக்கிறது என்றால் அதற்கு சரஸ்வதியைக் குறைகூற முடியாது. ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு ஆட்டி வைக்கிறார்களே தயாரிப்பாளர்கள் அவர்களைத்தான் அதற்குப் பொறுப்பாளி ஆக்க வேண்டும். பத்தப் பதினொரு படங்களில் நடித்தும் ஒரு படத்தில் நடிக்காமல் விளம்பரத்திற்கு

மட்டும் இலக்கானதிலிருந்து இவரது புகழ் ஒங்க ஆரம்பித்தது. இவர் திறமையைப் பட உலகம் புரிந்து கொண்டு விட்டது. கேரளம் தந்த மாணிக்கங்களில் சரஸ்வதியும் ஒருவர். வேலைக்காரியில் மடாதிபதியின் உள்ளத்தை மயக்கிய சுந்தர கோஷை, அபூர்வசிந்தாமணி ராஜகுமாரி செல்வகாயகத்தை, போஜனின் கள்வர் தலைவார் குமாரி லீலாவை, இன்பவல்லி தாசி பத்மாவை, ராஜாம்பாளின் ராஜாம்பாளை உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்று நினைத்தோம். நடிக நட்சத்திரமான பி. கே. சரஸ்வதியின் வீட்டின் முன்னால் கார் வந்து நின்றது. அடைத்த கதவைப் பார்த்து நாங்கள் திகைத்து நின்றபோது சிரித்த முகத்துடன் ஒரு வயதான அம்மாள் வந்து கதவை உரிமையுடன் தட்டி உள்ளிருப்போரை அழைத்துத் திறக்கும்படி சொன்னார். எங்க

சரஸ்வதியின் சில தோற்றங்கள்

ஆசிரியர் மாதவமேனனுடன்
பேபி சரஸ்வதி

ளுக்கு உதவிய அந்த அம்மாள் யார் என்று முதலில் நாங்கள் திகைத்தாலும் எங்கள் திகைப்பு சில நிமிஷங்களிலேயே தீர்ந்து விட்டது. தமிழ்ப்பட உலகிற்கு ஒரு ஒளி பொருந்திய நட்சத்திரத்தை அளித்தவர் அவர் தான் என்பதை அறிந்து கொண்டோம். நாங்கள் பேட்டி காணப் போன சரசுவதியின் அருமைத் தாயார் தான் அவர்கள். எங்களை அன்போடு முகம் மலர வரவேற்று உட்காரச் சொல்லிப் பேச ஆரம்பித்தார். அவர் பேச்சில் அந்த அறையின் புழுக்கத்தை எங்களால் மறக்க முடியவில்லை. கைக் குட்டையால் வியர்வையைத் தடுத்து நிறுத்த முயன்று கொண்டிருக்கும்போது தான் அந்த அம்மையாருக்கு மின்சார விசிறியை சுற்றவிட மறந்து போனது தெரிந்தது. தன் மறதிக்குத் தன்னையே கேலி செய்து கொண்டு விசிறியைச் சுற்ற விட்டார். ஜில் ஜில் என்ற காற்று அறையில் வியாபிக்கவே நாங்கள் வந்த காரியத்தைச் சொன்னோம்.

"சரசு தூங்கிக் கிட்டுருக்கு. ஷூட்டிங்கிலேருந்து காலையிலே தான் வந்துச்சு. எழுப்பச் சொல்றேன்" என்று சொல்லி விட்டு உள்ளே போனார். கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்த அவர் 'நீங்க உங்க கேள்விகளைக் கேளுங்க' என்றார்.

நாங்கள் வியப்புடன் விழித்தோம். யாரைக் கேட்பது? பேட்டி காண வந்த சரசுவதியைக் காணோம். "ஒரு வேளை அடுத்த அறையில் உட்கார்ந்திருக்கிறாரோ. முன்னால் வர வெட்கமாக..." எனக்கு வியப்பாக இருந்தது. சினிமா நட்சத்திரங்களில் இவ்வளவு வெட்கப்படுபவர் கூட இருக்கிறாரா என்று. நான் கேட்ட கேள்விகளுக்கு சரசுவதியின் தாயாரே பதில் சொல்லி வந்தது எனக்கு கொஞ்சம் வேதனையாகத் தான் இருந்தது. 'சரசுவதி' எங்கே என்று கேட்கவும் ஒரு மாதிரியாக இருந்தது. இந்தத் தர்ம சங்கடநிலைக்கு என்ன செய்வது என்று யோசித்தேன். டக்கென்று ஒரு கேள்வியைத் தூக்கிப்போட்டேன். அதற்கு சரசுவதியினால் தான் பதில் சொல்லமுடியும். என் யுக்தி பலித்து விட்டது.

"இந்தாம்மா சரசு இப்படி வந்து உக்காரு இவங்க கேக்கரகேள்விக்கு என்னுலே பதில் சொல்ல முடியாது என்ருர். கலகல வென்ற சிரிப் பொலிச்குப் பிறகு கிரீம் கலர் நூல் புடவை சரிய சரஸ்வதி எங்கள் முன்னுல் வந்து உட்கார்ந் தார்.

"தூங்கி எழுந்த முகத்தோடு உங்கள் முன்னுல் வருவானேன் என்று தான் வாசற்படிக்கு அருகில் உட்கார்ந்திருந்தேன்" என்று அவர் சமாதானத்தோடு தன் முத்துப்பல் தெரிய சிரிப்பைச் சிந்திஞர். நானும் என் பேட்டியை முதலிலிருந்து ஆரம்பித்தேன். இடை இடையே மகளுக்கு சரசுவதியின் தாயாரும் பதில் சொல்ல உதவிஞர்கள்.

கேள்வி: அவர் உங்கள் தாயார் தானே

பதில்: ஆமாம். இப்போது என் தந்தையும்கூட அவரே தான்.

கேள்வி; உங்கள் பெயர் என் னம்மா (தாயாரைப் பார்த்து)

பதில்: என் பெயர் நாராயணி அம்மாள்

கேள்வி: உங்கள் கணவர் பெய ரை நீங்கள் சொல்லமாட்டீர்கள். ம். (சரசுவதியிடம்) உங்கள் தகப்பஞர் பெயரைச் சொல்லுங்கள்.

பதில்: குமார நாயர் என்பது என் அப்பாவின் பெயர். கொச்சி சமஸ்தானத்துப் பட்டாளத்தில் இருந்தார். என் சின்ன வயதிலேயே அவர் இறந்து விட்டார்.

கேள்வி: உங்கள் பிறந்த ஊர்?

பதில்: கொச்சி சமஸ்தானத்தி லுள்ள திருப்பூணித்துறையில் தான் நான் பிறந்தது.

கேள்: உங்களோடு கூடப் பிறந்தவர்கள் எத்தனைப்பேர்.

பதில்: என்னேடு பிறந்தவர்கள் நாலுபேர். எல்லோருக்கும் மூத்த

விஜய குமாரியில்
பி. கே. சரஸ்வதியின்
இரண்டு தோற்றங்கள்

இன்பவல்லியில்

வள் அக்கா தங்கம், அவளுக்கு அடுத்தது கமலா, என்னோடேயே வசித்துவருகிறார். நான்தான் மூன்றாவது குட்டி. எனக்கடுத்த இரண்டு பேரும் தம்பிகள், படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கேள்: நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?

பதில்: அதிகமாக ஒன்றுமில்லை எட்டாவதுவரை படித்திருக்கிறேன்.

கேள்: உங்களுக்குத் தெரிந்த பாஷைகள் என்னென்ன

பதில்: மலையாளம் தாய் பாஷை. தமிழ், ஹிந்தி, தெலுங்கு நன்றாகப் பேசவரும். ஆங்கிலம் சுமாராகத் தெரியும்.

கேள்வி: உங்களுக்குப் பாட வருமா?

பதில்: பாட்டை ரசிக்கத் தெரியும். என் பாட்டைப் பிறர் ரசிக்கும்படி செய்யத் தெரியாது.

கேள்வி: சினிமாவில் சேர்வதற்கு முன்னால் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்.

பதில்: நாட்டிய உலகில் சேவை செய்து கொண்டிருந்தேன்.

கேள்வி: உங்கள் நாட்டிய உலக வாழ்வு எப்பொழுது எப்படி ஆரம்பமாயிற்று விபரமாகச் சொல்லுங்கள்.

பதில்: என் நாட்டிய 'குரு' யார் என்று தெரியுமா உங்களுக்கு

நான்: நீங்கள் சொன்னபிறகு கேளுங்கள், நான் டக்கென்று பதில் சொல்லுகிறேன்

சரஸ்வதி: (சிரித்துவிட்டு) 'கண்ணோக்கடே' மாதவமேனனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறீர்களா?

நான்: மாதவமேனன் என்ற பெயரைக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் இந்தக் 'கண்ணோக்கடே' என்ற சிறப்புப் பெயரோடு உள்ள மாதவமேனனை எனக்குத்

தெரியாது என்பதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்.

சரஸ்: பிரபல நர்த்தகி சாதனுபோஸைப்பற்றியாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

நான்: சரிதான்! என்னை நீங்கள் கேள்வி கேட்டுத்தினர அடிப்படையைப் பார்த்தால் பயமாக இருக்கிறதே. எனக்குத் தெரியாத விஷயங்களாக முன்னலேயே ஒரு லிஸ்ட் தயார் செய்து வைத்திருக்கிறீர்களோ? அப்படியானல் நீங்கள் தோற்றுப்போக வேண்டியது தான். ராஜ்நர்த்தகி சாதனுபோஸை எனக்குத் தெரியும். எனக்கென்ன சினிமாப் பார்க்கும் எல்லோருக்குமே தெரிந்திருக்க வேண்டும். ஒரு காலத்தில் பிரமாதமான புகழுடன் விளங்கியவராயிற்றே அவா!

சரஸ்: அந்த சாதனுபோஸுடன் பல படங்களில் நடித்தவர் தான் எங்கள் குரு மாதவமேனன். இவர் திருப்பூணித் துறையில் 'நர்த்தன் கலா பரகடனம்' என்ற பெயரில் ஒரு இலவச நடனப்பள்ளி நடத்தி வந்தார். அவரிடம் நடனம் கற்றுக் கொள்ளவேண்டுமென்று எனக்குக் கொள்ளை ஆசை. அப்போது எனக்கு வயது ஏழு. அவரிடம் நாட்டியம் கற்றுக்கொண்டு வரும் ஒரு பெண்ணுடன் ஒருநாள் நான் மேனன் அவர்களிடம் சென்று என் விருப்பத்தைத் தெரிவித்தேன். அவர் என்பெற்றூர்களின் அனுமதியோடு வந்தால் கற்றுத்தருவதாகச் சொன்னர்.

நான்: அம்மா அனுமதி அளிக்க மறுத்தார்களாக்கும். பிற்காலத்தில் புகழோடு வரப்போகும் கலைஞர்களுக்கு ஆரம்பத்தில் முட்டுக்கட்டை இல்லாமல இருக்காதே, (என்று நான் ஆருடம் தெரிந்தவன்

போலப் பேசிக்கொண்டே போனேன். என் பேச்சை இடைமறித்தார் சரஸ்வதி)

சரஸ்: அதுதான் இல்லை என் தாயார் எனக்கு உடனே அனுமதியளித்தார். எனக்குமட்டுமல்ல, என் அக்கா கமலாவையும் கூட அவரிடம் பயிற்சிக்கு அனுப்பிவைத்தார்.

நான்: நிஜமாகவா? (நாராயணி அம்மாளைப் பார்த்து) என்னால் நம்பவே முடியவில்லையே. உங்களைப் போன்ற தாயார்கள் நாட்டில் இருந்தால் கலைஞர்கள் மலிந்த நாடாகிவிடுமே இது. (சரஸ்வதியிடம்) எத்தனை வருஷம் அவரிடம் நடனப் பயிற்சி நடைபெற்றது.

பதில்: இரண்டு வருஷம் அவரிடம் பயிற்சி பெற்றோம். அவரது நடன கோஷ்டியில் சேர்ந்து மலையாளத்தில் பல ஊர்களில் ரஸிகர்களுக்கு நாட்டிய விருந்தளித்தோம்.

கேள்: அப்படியானால் உங்களுக்கு அப்போது 9 வயது இல்லையா? இதன் பிறகு என்ன நடந்தது.

சரஸ்: இதன் பிறகு ஒருநாள் பம்பாயிலிருந்து எங்களுக்குத் திடீரென்று எதிர்பாராத விதமாக அழைப்பு வந்தது.

நான்: பம்பாயிலிருந்தா எதற்கு? சினிமாவில் நடிப்பதற்கா?

சரஸ்: இல்லை எங்கள் நாட்டியத்தைப் பற்றி புகழ்ந்து எழுதிய ஒரு பத்திரிகை விமர்சனத்தைப் பம்பாயிலுள்ள ஒரு நாட்டிய கலா மந்திரக்காரர் பார்த்திருக்கிறார். உடனே எங்கள் ஆசிரியரிடம் வந்து எங்களைத் தங்கள் கழகத்தில் சேர்த்துக்கொள்ள அனுமதி கேட்டனர். அவர் எங்கள் தாயாரின் உத்திரவு பெற்று எங்களை அனுப்பினார். 'ஸெவன் ஆர்ட்ஸ் ஸெண்டர்' என்ற அந்தக் கழகத்தின் மூலம் நாங்கள் இரண்டு வருஷ காலம் பல முக்கிய வட இந்திய நகரங்களிலும் சமஸ்தானங்களிலும் நாட்டிய விருந்தளித்தோம்.

கேள்: நாட்டிய உலகிலிருந்து திரை உலகத்திற்கு எப்போது எப்படி யாரால் கொண்டுவரப்பட்டீர்கள்?

பதில்: டேயப்பா பல கேள்விகளைச் சேர்த்து ஒரே கேள்வியாகக் கேட்டுவிட்டீர்களே. 'போர்பந்தரில்' எங்கள் கழகம் நாட்டிய விருந்தளித்துக்கொண்டிருந்தபோது ஒருநாள் உதயசங்கர் எங்கள் நாட்டியத்தைப் பார்க்க நேர்ந்தது. அவர் திட்டமிட்டிருந்த தன் கல்பனா படத்திற்கு எங்களை ஒப்பந்தம் செய்துகொண்டார். பம்பாய் கழகத்தோடு செய்திருந்த இரண்டு வருஷ ஒப்பந்தமும் முடிந்துவிடவே நாங்கள் கல்பனாவில் நடிக்க சென்னைக்கு வந்தோம். அப்போது எனக்கு வயது பனிரண்டு. அக்காவுக்கு பதினாலு.

கேள்வி: கல்பனா தான் உங்கள் முதல் சினிமா விஜயம் என்று சொல்லுங்கள். ம்...கல்பனா தான் நாட்டியப் படமாயிற்றே. அதற்கடுத்ததாக நீங்கள் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்ட படம் எது?

பதில்: கன்னா பிலிம்சாரின் திருமழிசை ஆழ்வாரில் மோகினி கனகாங்கியாக ஒப்பந்தம் செய்யப்பட்டேன்.

கேள்: இதுவரை நீங்கள் நடித்திருக்கும் படங்கள் என்னென்ன?

பதில்: கல்பனா, திருமழிசை ஆழ்வார், மாரியம்மன், அபூர்வ சிந்தாமணி, பிழைக்கும் வழி, போஜன், வேலைக்காரி, ஆதித்தன் கனவு, இன்பவல்லி, விஜயகுமாரி, முதல் இரவு (தெலுங்கு) ஓர் இரவல்ல!

கேள்: ஓர் இரவு விஷயத்தைப் பற்றி உங்களிடம் நான் ரொம்ப ரொம்பக் கேட்க வேண்டும். அது இருக்கட்டும். நீங்கள் இப்போது

நடிக்க ஒப்பந்தமாகி இருக்கும் படங்கள் என்னென்ன.

பதில்: எனக்கும் ஓர் இரவைப் பற்றி எவ்வளவோ சொல்ல வேண்டும் என்று தான் இருக்கிறது. ஆனால் சொல்ல விருப்பம் இல்லாமலும் இருக்கிறது. சொந்த ஹோதாவில் நீங்கள் கேட்டுப் போவதானால்மட்டும் சொல்கிறேன். பத்திரிகையில் போடுவதானால் ஓர் இரவைப்பற்றி ஒரு விஷயமும் நான் சொல்லத் தயாராக இல்லை. அதைப்பற்றிப் பேசவே நான் விரும்பவில்லை. ம்... அது போகட்டும் இப்போது நான் நடித்து முடியும் தருவாயில் இருப்பது அருணா பிலிம்சாரின் ராஜாம்பாள். நடித்துக் கொண்டிருப்பவை. அமரகவி, மானவதி, மனோஹரா, அந்தமான் கைதி.

கேள்: நாட்டிய சம்பந்தமான ஒரு கேள்வி விட்டுப் போச்சு. உங்களுக்கு எந்தெந்த நடனம் ஆட வரும்?

பதில்: கதகளி, ஜிப்ஸி, இதெல்லாம் தவிர சினிமா நாட்டியம் நன்றாக ஆடவரும். பரதநாட்டியத்தில் மட்டும் அவ்வளவு பயிற்சி கிடையாது. சுமாராக ஆடுவேன்.

கேள்: நாடக உலகில் உங்களுக்குப் பரிச்சயம் உண்டா?

பதில்: அதிகமாகக் கிடையாது. ஏ. எஸ். ஏ. சாமி அவர்களின் 'துளி விஷம்' நாடகம் முதல் முதலாகக் கோவையில் அரங்கேற்றமான போது அதில் நடித்திருக்கிறேன். பிறகு இங்கே (சென்னையில்) நடந்த இரண்டொரு மலையாள நாடகங்களில் பங்குகொண்டதுண்டு. இவ்வளவுதான் என் நாடக அனுபவம்.

கேள்: எந்தப் பாகத்தையும் ஏற்று நடிப்பதில் உங்களுக்குச் சிரமம் ஒன்றுமிருக்காதே.

பதில்: எதையும் ஏற்று நடிக்க ஆர்வம்தான் உண்டு.

கேள்: ஹாஸ்ய பாகங்களில் தோன்ற முடியுமா?

பதில்: இதுவரை யாரும் அப்படிப்பட்ட பாத்திரம் தரவில்லை. கொடுத்தால் நடிக்க முயற்சிப்பேன்.

கேள்: சமூகம், புராணம், ராஜாராணிக்கதை இவைகளில் எதில் நடிப்பதற்கு உங்களுக்கு விருப்பம்?

பதில்: சமூகப் படங்களில்தான் என்னால் சோபிக்கமுடியும் என்று இப்போது எனக்குப்படுகிறது.

கேள்: ஆண் வேஷம் அணிந்து நடித்ததுண்டா? விருப்பமா?

பதில்: போஜனிலும் வேலைக்காரியிலும் அப்படி நடித்திருக்

மேல்நாட்டு முறையில் காதலன் நாகேஸ்வரராவ் கையில் துவண்டு நிற்கும் காரிகை கிரிஜா — ஸ்திரீ சாகஸத்தில் —

கிறேன். எனக்கு அதில் விருப்பம் என்று சொல்லமுடியாது. ஆனால் நடிக்கச்சொன்னால் நடித்துத்தானே ஆகவேண்டும்,

கேள்: வேறு பாஷைப் படங்கள் பார்ப்பதுண்டா?

பதில்: நான் சினிமாவிற்கே போவதில்லை. போக வண்டி வசதி கிடையாது. வெளியே கிளம்பினால் உங்களை எல்லாம்போல 'சுதந்திரமாக எங்களால் போகமுடிகிறதா? கூட்டம் கூடி எங்களைக் காட்சிப் பொருளைப் போல வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடுகிறார்களே!

கேள்: உங்களுக்குப் பிடித்தமான தமிழ்ப் படம் எது?

பதில்: இன்றுவரையில் 'மர்மயோகி' எனக்குப் பிடித்தமான படமாக இருக்கிறது.

கேள்வி: தமிழ் நடிகர்களில் யார் நடிப்பு உங்களுக்குப் பிடித்திருக்கிறது.

பதில்: பாலையாவின் நடிப்பு எனக்குப் பிடித்தமானது.

கேள்வி: நடிகைகளில்?

பதில்: பானுமதியின் நடிப்பை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.

கேள்வி: யாருடைய ஹாஸ்யத்தில் உங்களுக்கு விருப்பம்,

பதில்: என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் ஹாஸ்ய மென்றால் எனக்குச் சிரிப்புத் தாங்காது.

கேள்வி: சங்கீத வித்வான்களில் யார் பாட்டு உங்களுக்குப்பிடிக்கும்?

பதில்: தியாகராஜ பாகவதரின் பாட்டு.

கேள்வி: பாடகிகளில் உங்கள் அபிமானத்தைப் பெற்றவர் யார்.

பதில்: வசந்தகுமாரி, எம். எஸ். சுப்புலக்ஷ்மி இவர்களின் சங்கீதத்தில் நான் மெய்மறந்து போவதுண்டு

கேள்வி: வீட்டு வேலைகள் செய்வதுண்டா? செய்யத் தெரியுமா?

பதில்: நேரமிருந்தால் வீட்டு வேலை செய்வேன். சமைக்கவும் தெரியும் எனக்கு.

கேள்வி: எந்த வர்ண ஆடையில் உங்களுக்கு விருப்பம்.

பதில்: கருப்பு எனக்குப் பிடித்தமான வர்ணம். ஆடையில் தான்! கிரீம் கலரில் ரோஸ் பிடிக்கும்.

கேள்வி: எந்தப் புஷ்பம் உங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது

பதில்: எந்தப் புஷ்பமுமே என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது தான்.

கேள்வி: உங்கள் சாப்பாட்டைப் பற்றிச் சொல்கிறீர்களா?

பதில்: கறி, மீன், தவிர எந்த உணவும் எனக்குப் பிடிக்கும்.

கேள்வி: ஒரே சமயத்தில் பல படங்களில் நடிப்பதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?



○

பத்தனுபனின் 'குமாரி'யில் உள்ள முக்கியமான கதாபாத்திரங்களையெல்லாம் இங்கே காணலாம்.

எம். ஜி. ராமச்சந்திரன், சாமா, மூன்று முட்டாள்

அருணாவின் 'ராஜாம்பாளில்' சதிகாரர்கள் திட்டமிடுகிறார்கள். மாதுரி — பாலசந்தர்

பதில்: எனக்கு அது போல இது வரை ஏற்படவில்லை. பெயர் வர வேண்டுமானால் பாடுபடத்தான் வேண்டும். கஷ்டமானது தான்.

கேள்வி: அடுக்குமொழி வசனம், சாதாரண நடைமுறை வசனம், இவை இரண்டில் நீங்கள் விரும்புவது எது?

பதில்: அர்த்தமுள்ள வசனம் எதுவானாலும் அதில் எனக்கு விருப்பந்தான்.

கேள்வி: உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத ஏதாவது ஒரு சம்பவத்தைச் சொல்லுங்கள்.

பதில்: இதைக் கேட்பானேன். 'ஓர் இரவில்' நான் நன்றாக நடித்திருந்தும் திடீரென்று என்னை விலக்கி விட்டுப் புது நடிகையைக் கொண்டு படத்தை முடித்து வெளியிட்டதை என் வாழ்வில் மறக்க முடியுமா?

கேள்வி: நீங்கள் நடித்த படங்களுக்குள் உங்கள் உள்ளங் கவர்ந்த படம் எது?

பதில்: எனக்குப் 'போஜன்' பிடித்தமான படம். ஆனால் பொது மக்களுக்கு எது பிடித்தமானதோ எனக்குத் தெரியாது

கேள்வி: உங்கள் வாழ்வின் லட்சியமென்ன.

பதில்: சிறந்த கதாநாயகி பாத்திரத்தைப் பலபடங்களில் ஏற்று நடிக்கவேண்டுமென்ற ஒரே ஆசை தான்.

கேள்வி: கல்யாணத்தைப்பற்றி உங்கள் கருத்து

பதில்: கல்யாணத்தைப் பற்றி இப்போது எனக்கு அபிப்பிராயமே கிடையாது. காலம் வரும்போது கணவனோடு வாழ்வதை விரும்புகிறேன்.

கேள்வி: பொது மக்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: எல்லாப் பொதுமக்களுக்கும் என்னை இன்னும் சரியாகத் தெரியாது. இனிமேல்தான் அவர்கள் என்னைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். என்னைத் தெரியாத அவர்களைப்பற்றி என்னால் என்ன சொல்ல முடியும்.

கேள்வி: உங்களுக்குப் பிடித்தமானது

பதில்: புத்தகம் படிப்பது. எந்தப் பத்திரிகையையும் வாங்கிவிடுவேன் (தன் மகளின் பத்திரிகைப் பித்தைப்பற்றி நாராயணி அம்மாள் சிரிக்கச் சிரிக்கச் சொன்னார்கள் கேட்கத் தமாஷாக இருந்தது)

கேள்: நீங்கள் வெறுப்பது

பதில்: பொறாமையை

கேள்: நீங்கள் நம்புவது

பதில்: கடவுளை

கேள்: கடைப்பிடிப்பது

பதில்: ஒழுக்கத்தை

கேள்: நீங்கள் காணும் கனவு

பதில்: பெரியநடிகையாகவேண்டுமென்பதை. இப்போதுதவிர, நீங்

இப்படி நாகேஸ்வர ராவ் சிறையில் வாடுவதற்கு எந்த ஸ்திரீயின் சாகஸம் காரணமாக இருந்ததோ?

கள் மறுக்காமல் சாப்பிட வேண்டியது இந்த டிபனையும் குளிர்ந்த பானத்தையும்'' என்று கல கலவென்று சிரித்துக் கொண்டே எங்கள் முன்னால் ஒரு தட்டில் உயர்ந்த கேக், குஞ்சா லாடு, மிக்சர் இவ்வளவையும் வைத்து நிரப்பி நீட்டினார் சரஸ்வதி.

நான்: ஐயோ இவ்வளவையும் சாப்பிட என்னிடம் வயிறு இல்லையே.

சரஸ்: என்னிடம் இத்தனை கேள்விகள் கேட்கமட்டும் வாயிருந்ததோ இதை சாப்பிட்டு விட்டுத்தான் நகர வேண்டும் என்று அன்புக் கட்டளையிட்டு விட்டார். எங்கள் பேட்டி நடந்துகொண்டிருக்கும் போது சரஸ்வதியின் தாயார் நாராயணி அம்மாள் பால்காரன் வராததைப்பற்றி அடிக்கடி அங்கலாய்த்துக் கொண்டிருந்ததின் மர்மம் அப்போது தான் எனக்குப் புரிந்தது. குளிர்ந்த பானத்தைக் கொடுத்து காப்பி கொடுக்க முடியாது போன தன் குறையைத் தெரிவித்துக் கொண்டார் நாராயணி அம்மாள். வெகுநேரம் சினிமா உலக விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

சரஸ்வதி முன்னுக்கு வரவேண்டும் என்ற துடிப்புள்ள நடிகை. இவரது ஆர்வமும், முயற்சியும், நாட்டியத்திறமையும், சிவந்தமேனியும், அழகும், இளமையும், இவரை விரைவில் ஒரு சிறந்த நடிகையாக்குமென்பதில் சந்தேகமே இல்லை. பிறருடன் கலகலப்பாகப்பேசிப் பழகும் சுபாவம் உடையவர் சரஸ்வதி. கள்ளங்கபடமற்ற சிரிப்பு. வெள்ளை உள்ளம். குற்றங்களை மறந்துவிடும் மேலான மனப்பண்பு, இவரிடம் இருக்கிறது. ஓர் இரவில் இவரைப் பயன்படுத்திக்கொள்ளாதது ஏ. வி. எம். செய்த ஒரு தவறு என்றே நான் நினைக்கிறேன். ஓர் இரவு சம்பந்தமான சரஸ்வதியின் ஸ்டில்களைப் பார்க்க நேர்ந்தபோது தான் இந்த அபிப்பிராயம் எனக்கு உண்டாயிற்று. வெளிவந்திருக்கும் ஓர் இரவு படத்தைப் பார்த்த பிறகு அது ஊர்ஜிதமாயிற்று. ஓர் இரவு சமபவத்தை மறந்துவிடத்தான் நினைக்கிறார் சரஸ்வதி. தனக்குப் பிரகாசமான பிற்காலம் இருப்பதாக அவர் நம்புகிறார். நம்ப இடமும் இருக்கிறது. ராஜாம்பாள் அவரது புகழை இன்னும் உயர்த்துமென்று நினைக்கிறேன். பல தயாரிப்பாளர்கள் இப்போது அவரைத் தம் படங்களில் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். வசீகரமான தோற்றமும் இருபத்தோரு வயது இளமைப் பொலிவும் உள்ள சரஸ்வதிக்கு விரைவிலேயே புகழேணியின் உச்சாணிப்படியில் உட்காரப்போகும் பாக்கியம் கிடைக்கட்டும்.

"மூர்த்தி"

மாய மாலை

பூலோகம் தேவலோகம், சாபம், மறுபிறப்பு, ஒருவருக்கே பல வேஷங்கள், கத்திச் சண்டை, சோகரஸம், பலவித நாட்டியங்கள், டார்ஜான் வேலை இப்படிப்பட்ட உலக அகராதியில் என்னென்ன அம்சங்கள் உண்டோ அத்தனையையும் சேர்த்துத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார் நமக்கு மிர்ஜாபுரம் ராஜா சாகேப் அவர்கள்! கதையைப்பற்றி அவர் கவலைப்பட வில்லை. தான் போட்டிருக்கும் திட்டங்கள், காட்சிகள் அத்தனையும் வரவேண்டுமென்று நினைத்தார். அதற்குத் தகுந்தபடி கதையைத் தன் போக்கில் உருட்டிப் பிசைந்து உருவாக்கி விட்டார்.

தெலுங்கிலே பிறந்து பிறகு தமிழ் மொழி பேசி உலவி வரும் இந்த மாயமாலையின் கதையைக் கேளுங்கள். கதையைக் கேட்டாலே போதும். படம் பார்க்க வேண்டுமென்ற அவசியம்கூட இல்லை.

இந்தியப் பெண்களின் காதலைப் பற்றிப் படத் தயாரிப்பாளர்களின் ஆராய்ச்சி அளவு கடந்து போய் விட்டது. பெயரைக் கேட்டாலே காதல், நினைத்தாலே காதல், மந்திரி காதல், சேனாபதி காதல், கலைஞன் காதல், தோட்டிகாதல், தோட்டக்காரன் காதல் இப்படிப்பட்ட காதலில் இது பூக்காரன் காதல். ஒரே ஒரு ஊரிலே தேவதத்தன் என்ற பெயருடைய; கதைக்குக் கதாநாயகனாக வேண்டுமென்ற நோக்கத்துடனேயே ஒரு பூக்காரன் இருந்தான். அவன் கட்டும் மாலைக்கு ஏகக்கிராக்கி. அதுமட்டுமா பெண்களுக்கெல்லாம் அந்தப் பூமாலைக்காக அவனிடம் காதல் கூட! காதலுக்குத்தான் கண்கிடையாதே! அந்த ஊரிலே வஸந்த சேனை என்ற ஒரு தாசி. அந்த ஊரைப்பற்றிச் சொல்லவில்லையே. ஊர பெயர் தெரியாது. ஆனால் அந்த ஊர்ப் பெண்கள் மேலாடை அணியப்பிரியப் படாதவர்கள். கண்ணாடி போன்ற சல்லாத்துணியை மேலே சும்மா விளையாட்டுக் கோசரம் போட்டுக் கொண்டிருந்தாலும் அதையும் அடிக்கடி நீக்கி ரவிக்கை அணிந்த மார்போடு காட்சி அளிப்பதில் தான் விருப்பமுடையவர்கள். தாசி வஸந்த சேனையைப் பற்றிக் கேட்கவா வேண்டும். கரகரத்த கடூரமான குரலில் பேசி, இனிமையான குரலில் பாடும் திறமையுடையவள் வஸந்தசேனை. மாலையிடம் மையல் கொண்டாள். அதாவது மாலைகட்டும் தேவதத்தனைத் தன் படுக்கை அறையை அலங்கரிக்கும்படி செய்து கொண்டாள். பிள்ளையைக் காணாத தேவதத்தனின் அப்பாவும் நண்பனைக் காணாத ஆழ்வாரும் அரசாங்க அதிகாரிகளோடு தாசி வீட்டுக்கு வர அவள் தன் காதலனை மறைத்து அவன் அங்கு இல்லை என்று பொய் சொல்லுகிறாள். இந்த சமயத்தில் வான வீதியிலே காமந்தகாரமான இரண்டு அப்சரஸ்கள் வட்டம் போட்டு வருகின்றனர். கழுத்திலே இருக்க மனமில்லாத ஆபரணம் ஒன்று கீழே - பூலோகத்தில் தாசி வஸந்தசேனை மாடி மீதுவிழ அதை எடுத்துப்போகும் சாக்கில் தூங்கிக் கொண்டிருக்கும் தேவதத்தனையும் ஒரு பூமாலையாக்கித் தன் கழுத்தில் போட்டுக் கொண்டு தேவலோகம்

போய்விடுகிறாள் திலோத்தமா என்ற அந்த தேவமாது.

உண்மைக் காதலால் உள்ளம் உடைந்துபோன தாசி வஸந்தசேனை படுத்த படுக்கையாகி விடுகிறாள்! காதலன் போன மாயம் அவளுக்கும் புரியவில்லை. ஆழ்வார் நண்பனைத் தேடக்கிளம்புகிறான். தேவலோகம் போன திலோத்தமா தேவதத்தனை பூமாலையை பள்ளியறைக் கட்டிலில் கிடத்தி அவனுக்குச் சுய உருவைக் கொடுக்கிறாள். பூலோகத்திலிருந்து ஆண்களை அடித்துக் கொண்டு வந்து அனுபவிக்கும் ஒரே திறமைதான் அந்த தேவமாதுக்கு உண்டு என்பதைக் கதையின் பின்பகுதி நிரூபித்து விடுகிறது. ஆணழகன்கிடைத்த ஆனந்தத்தில் திலோத்தமாவுக்கு குஷி பிறந்து 'கார்மன் மிராண்டா' நடனம் ஒன்று ஆடுகிறாள். சாதாரணப் பெண்ணைக் கண்டாலே பல்லை இளிக்கும் ஒழுக்கம் இல்லாத தேவதத்தன் திலோத்தமையின் அழகிலும் நாட்டியத்திலும் மயங்கியதில் வியப்பில்லை. காதலர் கரைகடந்த இன்பத்தை அனுபவிக்கின்றனர். காதல் விளையாட்டுகள் முடிந்ததும் மறுபடி தேவதத்தன் மாலையாக மாறி ஒரு சிலையின் கழுத்தை அலங்கரிக்க ஆரம்பித்து விடுகிறான். காரணம் தேவலோகத்தில் நான் தங்கக் கூடாது. தவிர திலோத்தமாவிற்குத் தன் மாஜிகாதலன் சித்திராங்கதனிடம் பயம் வேறு. [இதுவரை கதை ஓடிவிட்டது இதே சம்பவங்களுள்ள பலவிதக் கதைகளை சினிமா உலகம் பார்த்தும் விட்டது. ஆகவே மிர்ஜாபுரம் ராஜாவுக்கு இந்த இடத்தில் ஒரு புதுமை செய்ய வேண்டுமென்று தோன்றியது. 'என்ன' என்றார் திரும்பி. 'இதோ' என்று அதற்கு மேல் தன் கற்பனையை நீட்டினார் ஸ்கிரிப்ட் ரைட்டர்.]

தன்னை அலட்சியம் செய்யும் திலோத்தமையின் மன மாற்றத்துக்குக் காரணம் தெரியாமல் தவிக்கும் சித்திராங்கதனிடம் தன் மனதை வெகு நாளாகப் பறிகொடுத்திருக்கும் ஒரு தேவமாது தன் ஆசையைப்பூர்த்திசெய்து காதலை ஏற்றுக் கொண்டால் உண்மையைத்தான் சொல்லுவதாக வாக்களிக்கிறாள். சித்திராங்கதன் அவள் தலையை வருடிக் கொடுத்து அவளைத் தன் கைப்பொம்மையாக்கிக் கொள்ளுகிறான். அவள் தன் தோழி திலோத்தமை, தேவதத்தன் முன் ஆடிப்பாடி ஆனந்தப்படுத்தும் போது அதைக் காட்டிவிடுகிறாள் சித்திராங்கதனுக்கு. தேவதத்தனாகிய மாலையைக் கொண்டு வந்து தரும்படியும் அவள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாகவும் தாஜாப் படுத்துகிறான், தன் மேல் காதல் கொண்டு தவிக்கும் தேவமாதியிடம் சித்திராங்கதன். அவளும் காதல் போதையில் திலோத்தமையை வஞ்சித்து மாலையைக் கொண்டு வந்து சித்திராங்கதனிடம் கொடுத்து விடுகிறாள். சித்திராங்கதன் தன் கையில் மாலை வந்ததும் தன் வாக்கை மறந்து அவளை நிராகரித்து விட்டு திலோத்தமாவைப் பழிவாங்கக் காத்திருக்கிறான். வழக்கம்போல திலோத்தமை மாலையைப் படுக்கையில் கிடத்தி தேவதத்தனைக்கப் பார்க்கிறாள். மாலை மனித உருப் பெறவில்லை. கட்டழகி தவிக்கிறாள். ஐயோ என் இன்பமெல்லாம் பாழாகி விட்டதே என்று கலங்குகிறாள். தன் தோழியைக் கூப்பிட்டு நடந்ததைச் சொல்ல அவள், மாலை ஒருவேளை சித்திராங்கதன் கையில் சிக்கி இருக்கும் என்று சொல்லவே திலோத்தமா சித்திராங்கதனிடம் சென்று தன் இன்பவாழ்வைக் குலைக்காமல் தேவதத்தன் மாலையைக் கொடுக்கும்படி கெஞ்சுகிறாள். சித்திராங்கதன் தேவலோகத்துக்கு அவள் இழைத்த அவமானத்தைப் பற்றிச் சொல்லி கொதிக்கிறான். திலோத்தமா சாகஸம் செய்து அவன் மனதில் இரக்

கம் உண்டாக்குகிறாள். "மாலையைக் கொடுத்து விடுகிறேன் அவனை மறந்து விடுவதாக வாக்குக் கொடு" என்கிறான் சித்திராங்கன். தேவதத்தன் அளித்த இன்பத்தை அவளால் மறந்துவிட முடியவில்லை மறுக்கிறாள். கோதிப்படைந்த சித்திராங்கன் மாலையைத் தீயில் போட்டு விடுகிறான். திலோத்தமா அலறிவிழுந்து அலற்றுகிறாள்.

[சரி கதை முடிந்து விட்டது. சோக முடிவு போலிருக்கிறது என்று நினைத்து விடாதீர்கள் கதை கால்பாகம் கூட வரவில்லை.]

["என்னய்யா கதையை திடுதிப்புனு கொண்டுபோய் நிறுத்திப் புட்டியே" என்று சலித்துக்கொண்டார் வசனகர்த்தாவைப் பார்த்து டைரக்டர். இதோ என்று மேலே கதையை ஓட்ட ஆரம்பித்தார் வசனகர்த்தா.]

'அழாதே! சித்திராங்கதன் தீயில் போட்டது தேவதத்தன் மாலையல்ல பொய் மாலை' என்று ஒரு திடீர்ச் செய்தியைப் போட்டு உடைக்கிறாள் சித்திராங்கதனால் திரஸ்கரிக்கப்பட்ட தேவமாது. திலோத்தமை மட்டும் ஆச்சரியத்துடன் துள்ளிஎழவில்லை படம்பார்த்துக் கொண்டிருக்கும் நாம்கூட 'இது எப்படி? நிஜ மாலையைத்தானே அவள் அவனிடம் காதல் கொண்டு திருடிக் கொண்டு போய்க் கொடுத்தாள். அதனால்தானே திலோத்தமைக்கு மாலை தேவதத்தனாக மாறவில்லை. அப்படி இருக்க சித்திராங்கதனிடமுள்ள மாலை எப்படிப் பொய் மாலை யாயிற்று என்று திகைக்கிறோம்.

இன்பங்கள் மீளுகின்றன திலோத்தமைக்கு. தேவதத்தனை இனி தேவலோகத்தில் வைத்தனுப்பவிப்பதில் ஆபத்து இருப்பதை உணர்த்துகிறாள் தோழி. திலோத்தமையும் அதுவும் சரியானயோஜனை என்று யோசிக்கவே.........
[..."என்னய்யா மேலே கதை என்ன? ஹீரோயினை இப்படி யோசிக்கவைச்சா என்னஆவறது" என்று குதித்தார் டைரக்டர்.

"ஒரு நல்ல ப்ளாட்டா திங்க் செய்துட்டேன் சார். நம்ம ஹீரோயினுக்கு டபுள் ஆக்ட் உள்ள ஒரு ரோல். அதாவது...திலோத்தமாவின் அம்சமாக அதேபோல அதே பேருள்ள ஒரு அரசகுமாரியை பூலோகத்திலேசிருஷ்டிச்சுட்டேன்" இது கதாசிரியர் குரல்.

"பூலோகமாவது தேவலோகமாவதுய்யா. எல்லாம் ஸ்டுடியோ லோகந்தான்."—டைரக்டர்

...அது சரிங்க... படம் பார்க்கிறவாளை ஏமாத்தத்தானே! ஹி...ஹி...ஹி...]

"என் அம்சமாக பூலோகத்தில் ஒரு அரசகுமாரி இருக்கிறாள். என் உருவம். என் பெயர். நானே தான். அவளிடம் நீ இன்பம் அனுபவித்துக் கொண்டிரு." என்று கேட்டுக் கொள்கிறாள் திலோத்தமா. ருசி கண்ட பூனையான தேவதத்தன் 'உன்னைப் பிரிய மாட்டேன்' என்று சிணுங்குகிறான். அவனிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்து "என் ஆசை உனக்கு அதிகமாகும்

நடேசன் ராஜாம்பாளைக் கடத்திச் செல்லும் காட்சி. பாலாம்பாளும் லோகசுந்தரியும்தான் கூட இருப்பவர்கள்.

நடேசன் — பாலசந்தர்

போது இதைத் தேய்த்து என்னை நினைத்துக்கொள் நான் வருகிறேன்'' என்று சொல்லி அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைக்கிறாள்.

(இதற்கு மேல் யோசனை செய்து கதையை எழுத வசன கர்த்தாவுக்கு அவகாசம் கொடுத்துவிட்டு அன்றையப் படப்பிடிப்பை முடித்துக் கொள்கிறார் டைரக்டர்)

......பூலோகம். அங்கே திலோத்தமா (தேவ மாதல்ல. மனித ராஜகுமாரி) தோழிகளோடு பல பாஷைப் பாட்டுப்பாடிக் கும்மாளமடித்துக் கொண்டிருக்கிறாள். அங்கே வருகிறான் காமாந்தகாரனை கதாநாயகன்.

[பெண் ஆசையே அவன் பூஷணம். இல்லாவிட்டால் தேவலோகத்திலிருந்து அங்கு வந்து குதிப்பானேன். அப்பாவை மறந்தான், கண்பனை மறந்தான், நாட்டை மறந்தான். முதலில் தாசி, பிறகு தேவமாது அதன் பிறகு ராஜகுமாரி. இவன் கதாநாயகன். இவனிடமிருந்து மக்கள் அறிந்து கொள்ளும் படிப்பினை என்ன? நாமும் இவன் போல அழகிகள் இருப்பிடத்துக் கெல்லாம் போக மாட்டோமா என்ற ஏக்கம் கொள்வதுதானே படிப்பினை!]

தமிழ் மகன் என்ற தயவில் ராஜகுமாரி தேவதத்தன் மேல் விழுந்து கட்டிக்கொள்ளுகிறாள். இது அந்தக் காலத்துக் காதல். அந்நியனை இருந்தால் என்ன. அவன் ஆணை இருந்தால் போதும்! ராஜகுமாரிக்கு காதல் முளைத்து, வளர்ந்து, பூத்துக் காய்த்து பழுத்து விட்டது. எலலாம் ஒரே விநாடியில். அவன் மேல் சாய்ந்த உடனேயே. பெண்களின் ஒழுக்கத்தை எத்தனை அழகாகச் சித்தரித்திருக்கிறார்கள் பாருங்கள்.

அரச குமாரியும் தேவதத்தனும் தனிமையில் கூடிக்குலாவி மகிழ்கிறார்கள். அவள் அப்பா அம்மாவும் தங்கள் பெண்ணின் இந்தக் கேடுகெட்ட நடத்தைக்கு சம்மதப் பட்டு இருக்கின்றனர். ஒருநாள் இரவு அரசகுமாரியின் அருகில் படுத்திருக்கும் தேவதத்தனுக்குத் தாங்க முடியாத ஆவல் வந்து விடுகிறது; தேவமாது திலோத்தமாவைக் காண வேண்டுமென்று. மோதிரத்தைத் தேய்க்கிறான். அடுத்த விநாடி சித்திரா்ங்கதன் முன்னால் ஆசை நடனம் ஆடிக் கொண்டிருக்கும் திலோத்தமாவின் அணைப்பிற்குள் வந்து திடும்பிரவேசம் செய்கிறான் தேவதத்தன். அவள் மயக்கத்தில் பித்துப்பிடித்து உட்கார்ந்திருந்த சித்திராங்கதன் திடுக்கிட்டு எழுகிறான். தான் அழித்ததாக நினைத்த தேவதத்தனைக் கண்டு பொங்குகிறது ஆத்திரம். பிடிசாபம் என்கிறான். தேவதத்தனும், திலோத்தமாவும் வேடுவர்களாகப் பூலோகத்தில் பிறக்கவில்லை—அதே வயதில் கட்டிளங் காளை குமரிகளாகவே வந்து தோன்றுகிறார்கள். (பிறந்து வளர்ந்து பெரியவர்களானால், காத்திருக்கும் தாசியும் அரசகுமாரியும்

ராஜாம்பாள் கொலை கேஸ் விஷயமாகத் துப்பறியும் கோவிந்தனை **சாரங்கபாணி** அங்கமுத்துவை மிரட்டி ஏதோ விஷயத்தைக் கிரஹிக்கிறார்.

'திக்ஷா' என்ற தெலுங்குப் படத்தின் தமிழ்ப் பிரதியான அண்ணியில் ஒரு காட்சி. ஜி. வரலக்ஷமி — சேது.

என்ன ஆவது? பாட்டிகளாக அல்லவா அவனை மறுபடி சந்திக்க வேண்டி இருக்கும்! அதற்காகத் தான்.)

(ஞான திருஷ்டி என்று ஒருசக்தி உண்டே தேவர்களுக்கு அது மாய மாலைக் கதையில் வரும் தேவர் களுக்குக் கிடையாது. அல்லது அந்தச் சக்தியை மறந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் சித்தி ராங்கதன், திலோத்தமையின் ரகசியம் அறிய ஒரு பெண்ணின் உதவியை நாடுவானேன். திலோத் தமா தன் மாலை மனிதனுக மாறுத போது உண்மை தெரியாமல் கதறு வானேன்?)

(ஹீரோயினுக்கு மூன்றாவது வேஷம் சார். எப்படி நம்ம கற்பனை என்றார் கதாசிரியர். "அதுமட்டு மல்லசார், நீங்கள் ரொம்ப நாளாகத் தமிழ்ப் படத்தில் சேர்க்க வேண்டு மென்று ஆசைப்பட்ட 'டார்ஜான்' காட்சிகளை எல்லாம் இதில் சேர்க்க லாம். வேடர்கள் என்றால் அநாகரீக மானவர்கள் என்று அர்த்தம். அதாவது மேலாடை இன்றிக்குதிக் கும் நாகரீகமான நாட்டிலுள்ளவர் வர்களைவிட இவர்கள் இன்னுங் கொஞ்சம் மட்டம். அவர்கள் உடை, செய்கைகளில் எதைவேண்டுமானு லும் புகுத்தலாம். கேள்வி முறை கிடையாது" என்று விளக்கம் கொடுத்த வசனகர்த்தாவிடம் "சரி தானய்யா. இது இப்படியே இருக் கட்டும். அந்தப்பக்கத்து கதையை நீட்டும்" என்று உத்திரவுபோடவே கதை வளர ஆரம்பிக்கிறது)

தன் அருகில் படுத்திருந்த காத லன் மாயமாக மறைந்ததை அறிந்த அரசகுமாரி திலோத்தமா பதறு கிருள். காரணம் அவள் கர்ப்பிணி. செய்தி எங்கும் பரவுகிறது. ஆள் அகப்படவில்லை. தன் மகளின் கள் ளக்காதலன் உருவத்தை வரைந்து அதைதேசமெங்கும் மாட்டி அவனை அறிந்து சொல்பவருக்குப் பரிசு தரத் திட்டமிடுகிருர் அரசர். நண்பனைத் தேடிவந்த ஆள்வாரின் கண்களில் இதுபட அவன் உடனே இந்த விஷேதைச் செய்தியை காதல் நோயால் கருகிப் போய் கட்டிலோடுகிடக்கும் தாசி வஸந்தசேனைக்குக் கடிதமூலம் அறிவித்து அவளை உடனே புறப்

பட்டுவந்த அரசகுமாரியின் ஆதரவைப் பெற்று அவளிடமிருந்து தேவதத்தனின் அந்தரங்கத்தை அறியும்படி எழுதுகிறான். வஸந்தசேனை பாடகியாக வருகிறாள். இரவல் குரலில் இனிமையாக ஒரு கச்சேரி செய்கிறாள். அவளை அரசகுமாரிக்குப் பிடித்துவிடுகிறது. இனம் இனத்தோடுதானே சேரும்! அந்நாட்டின்சேனாபதி விஜயசிம்மனுக்கும் வஸந்தசேனையைப்பிடித்துவிடுகிறது. அதாவது அவன் அழகில் தன் அவலட்சணத்தை மறந்து காதல் கொண்டுவிடுகிறான். அவளை அடையச் சூழ்ச்சி செய்ய, அதில் தேவதத்தனின் ரகசிய நட்பால் கர்ப்பமாக இருக்கும் அரசகுமாரி தவறுதலாகக் கொண்டுவரப்பட அவளை மறுபடி அரண்மனையில் கொண்டு சேர்க்கும்படி உத்திரவிடுகிறான் சதிகாரர்களுக்கு விஜயசிம்மன். அவர்கள் அரசகுமாரியை நடுக் காட்டில் கட்டிலோடுபோட்டுவிட்டு ஓடிவிடுகிறார்கள். கர்ப்பவதியான அரசகுமாரி காட்டில் கஷ்டப்பட்டு மரத்தில் முட்டிக்கொண்டு கீழேவிழுந்து குழந்தையைப் பெறுகிறாள். மயக்கமுற்றிருக்கும் அவள் இறந்துவிட்டதாக; தேவதத்தனின் தகப்பனாருடைய இரண்டு சிஷ்யர்யர்கள் தவறாக நினைத்து இலைச் சருகுகளால் அவளை மூடிவிட்டு குழந்தையை மட்டும் எடுத்துக்கொண்டு ஆசிரமத்திற்கு வருகிறார்கள்.

மயக்கம் தெளிந்து எழுந்த தாயாரான அரசகுமாரி குழந்தையைக் காணாமல் புத்தி பேதலித்து பிதற்றிக் கொண்டு ஓடிவந்து (ஒரே கூத்து!) மாமனார் கையில் தன் குழந்தையைக்கண்டு—அதாவது தேவதத்தனின் தகப்பனார் கையில்—பித்தம் தெளிந்து ஆச்சிரமத்திலேயே குழந்தையோடு வசித்து வருகிறாள். அவர் தன் காதலனின் தகப்பனார் என்பது அவளுக்குத் தெரியாது. அவருக்கும் தெரியாது. நாட்டிலே விஜயசிம்மன் தன் எண்ணம் ஈடேற அரசகுமாரியின் மறைவிற்கு பாட்டுக்காரி வஸந்தசேனையைக் காரணமாக்கி, அவளைச்சிறையிலிட்டுப் பிறகு சிரச்சேதம் செய்யவும் உத்திரவு போடுகிறான். காட்டில் தண்டனையை நிறைவேற்றவரும் கொலையாளிகளை மறுவேடத்துடன் வந்து விரட்டிவிட்டுத் தன் மிருக இச்சைக்கு அவளை இணங்கும்படி நடுக்காட்டில் இம்சிக்கிறான்... இந்த வேளையில்.

(தலை சுற்றி வருகிறதா...நான் என்ன செய்ய? படிக்கும்போதே உங்களுக்கு இப்படியானால் படத்தையே பார்த்தால் என்ன ஆகும்)

வேடனாக இருந்துவரும் சிங்கியும் சிங்கனும் (தேவதத்தனும் தேவமாது திலோத்தமாவும்) சென்னை நகர நீச்சல் ஸ்டேடியத்தில் குதித்து நீந்தி எங்கோ ஒரு காட்டு ஏரியிலிருந்து கரையேறி இன்ப வாழ்க்கை நடத்திவரும்போது ஒரு நாள் காட்டில் ஆப்ரிக்க சுதேசிகளின் நடனம் ஒன்று நடக்கிறது. அந்தக்காட்டுமிராண்டி நடன முடிவில் 'சிங்கி குழந்தை இல்லாதவள் என்று ஏசப்படுகிறாள்'.

மூன்று ஜன்மங்களுக்குப் பிறகு தான் திலோத்தமாவிற்குக் குழந்தை இல்லாக் குறை தெரிகிறது. உடனே காதலனை சிங்கனிடம் (தேவதத்தனிடம்) தனக்குக் குழந்தை வேண்டுமென்பதைபற்றி ஆபாசமாகத் தர்க்கம் செய்கிறாள். குறி சொல்ல வருகிறாள் ஒரு குறத்தி. தேவதைக்கு ஒரு குழந்தையைப் பலி கொடுத்தால் குழந்தை பிறக்குமென்கிறாள் அவள். காதலனைக் குழந்தை திருடி வரும்படி அனுப்புகிறாள் சிங்கி. குழந்தைக்கு அலைந்து வரும் சிங்கனின் கண்களில் விஜயசிம்மன் வஸந்தசேனையை பலாத்காரப்படுத்தும் காட்சி படுகிறது. குபீரென்று பாய்ந்து கத்தியை உருவி ஸ்டண்ட் வேலை செய்து

அர்த்தநாரி வேஷத்திலிருக்கும் இந்த ஹாஸ்ய நடிகரோடு **நாகேஸ்வர ராவ் திட்டமிடுவது ஸ்திரீயின் சாகஸத்தை** வெல்வதற்காக இருக்கலாம்.

விஜயசிம்மனைக் கொன்றுவிட்டுத் திரும்பும் சிங்கனைத் தன் காதலன் தேவதத்தன் என்று அறிந்து கொண்ட வஸந்தசேனை அவனைத் தடுத்து நிறுத்தித் தன் ஏக்கத்தை அறிவிக்கிறாள். பூர்வ ஜன்ம நியாபகம் இல்லாத அவன் அவளை உதறித்தள்ளிவிட்டு ஓடுகிறான். வஸந்தசேனை துரத்தி வருகிறாள். ஓடிவரும் சிங்கன் ஆஸ்ரமத்திலுள்ள அரச குமாரியின் குழந்தையை—(அதாவது தான் பூர்வ ஜன்மத்தில் அவளுக்கு அளித்த அந்தக் குழந்தையைத்) தூக்கிக்கொண்டு ஓடுகிறான். அதைக் கண்டு அரசகுமாரி ஓடி அவனைப் பிடித்து நிறுத்த, அவன் தன் காதலனாக இருப்பதைக் கண்டு 'நாதா நாதா' என்று ஓடி வருகிறாள். வேடனாக இருக்கும தேவதத்தன் குழந்தையுடன் ஓட, வஸந்த சேனையும் அரச குமரியும் சந்தித்துக்கொண்டு தங்கள் காதலனைத் துரத்தி ஓட, இடையில்வந்த தேவதத்தனின் அப்பாவும் தன் மகனைக்கண்டு விரட்ட, இவர்களை எல்லாம் யார் என்று அறிந்துகொள்ள முடியாத தேவதத்தன் குழந்தையோடு காளி கோயிலுக்குள் சிங்கியுடன் ஓடுகிறான்.

(அரசகுமாரி, தேவதத்தன் அப்பா, வஸந்த சேனை, சிங்கன் இவ்வளவு பேரும் ஒரே இடத்தில் ஒரே காட்டில் எப்படி ஒன்று சேர முடிந்தது என்று என்னைக் கேட்டு விடாதீர்கள். கதை மூலைக்கு மூலை வளர்ந்து ஒன்று சேர முடியாமல் சம்பவங்கள் தாறுமாறாகப் போய் விட்டதைக் கண்டு டைரக்டருக்கே குழப்பம் ஏற்பட்டிருக்கும். ஆகவே எல்லாரையும் ஒன்று சேர்த்து சுபமாக முடிக்க இந்த ஏற்பாட்டை செய்திருக்கலாம்)

தன் குழந்தை என்று தெரியாமல் பலி பீடத்தில் வைத்து வெட்டப் போகும் சிங்கனிடம் அரசகுமாரி வந்து உண்மையைச் சொல்லி கதறி அழ, வஸந்த சேனை அவன் கையைப் பிடிக்க, சிங்கி தன் ஆசைக் கண்ணாளனின் நடத்தையில் சந்தேகப்பட்டு உருட்டி முழிக்க, சிங்கன் அவர்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு குழந்தையை வெட்டித் தீர்த்து விடுகிறான். இவ்வளவு ஆன பிறகும் தேவி வராமல் இருக்கலாமா?'

டி. கே. எஸ். சகோதரர்களின் இன்ஸ்பெக்டர் நாடகத்தில் ஒரு காட்சி

வராவிட்டால் எப்படி கதை முடிவு பெறும்? தேவி வருகிறாள். சிங்கன் தேவதத்தனாகிறான். சிங்கி திலோத்தமாவாகி தேவலோகத்துக்கு மறைகிறாள். குழந்தை உயிர் பெற்றெழுகிறது.

தேவதத்தன் ஆசைக்கு ஒருவளும் அன்புக்கு ஒருவளுமாக வஸந்தசேனையையும் ராஜகுமாரி திலோத்தமாவையும் மணந்துகொண்டு சுகித்திருக்கிறான். சுபம் சுபம் சுபம்!

அப்பா! கதை முடிந்தது.

இதற்குமேலும் மாயமாலையைப் பற்றி வர்ணிக்கவேண்டுமா? நடிப்பு இதில் யாருக்குமே இல்லை, நிரபராதியிலும் மர்மயோகியிலும் நம்மைத் திகைக்கவைத்த அஞ்சலியா இவ்வளவு மட்டமாக நடித்திருக்கிறார் என்று வருத்தப்படவேண்டி இருக்கிறது. பானுமதியைப்போல சேஷ்டைகள் செய்வதைவிட்டு இவர் ஒரிஜனலாக நடிக்க முற்படவேண்டும்.

ஆந்திர நாட்டில் பெண் நட்சத்திரங்கள்தான் அதிகம். ஆண் நட்சத்திரங்களுக்குப் பஞ்சம் என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் எந்தப்படத்துக்கும் எந்தப் பாத்திரத்துக்கும் நாகேஸ்வரராவே கதி என்று இருப்பார்களா? அவருக்குக் காதலனாக நடிக்க முகத்தில் பாவமே இல்லை. நடிப்பே கிடையாது. அவருக்கு ஒரே ஒரு வேஷம் தான் பொருந்தும். சோக நடிப்பு அதாவது காய்ஸ் போன்ற பாகம். இதைத்தவிர இவர் எந்தப்பாகத்திலும் சோபிக்கவே இல்லை.

காட்சிக்குக் காட்சி நடனங்களைப் புகுத்தி நமது பொறுமையை சோதித்திருக்கிறார்கள்.

சிஷ்யர்கள் என்று ஹாஸ்யத்துக்காக இரண்டு ஆத்மாக்களைக் காட்டிப் பொது மக்களின் உள்ளத்தின் அடிவரையில் வெறுப்பையும் வேதனையையும் உண்டாக்கி விடுகிறார்கள். குப்பி சதாரம் காலத்தில் கூட இப்படிப்பட்ட கேவலமான மட்டரக ஹாஸ்யத்தைக் காட்டியதில்லை. டைரக்டரின் அபாரமான கற்பனா சக்தியை, உயர்ந்த நோக்கங்களை இந்தப்படம் விளக்கக் கூடியதாக இருக்கிறது.

பாராட்டுப் பெறும் விஷயம் சங்கீதம். வஸந்தகுமாரி, ஜானகி லீலா இவர்களின் குரலின் இனிமையைக் கண்ணை மூடிக்கொண்டு ரசிக்கலாம்.

[சித்திராங்கதனைப்பற்றி மேலே ஒன்றும் சொல்லாமல் அவன் விஷயம் அப்படியே அந்தரத்தில் நிற்பதால் சாப விமோசனம் பெற்று தேவலோகம் சென்ற திலோத்தமைக்கும் அவனுக்கும் இடையில் நிகழும் சம்பவங்களைக் கொண்டு, 'பூச்செண்டு' என்றொரு கதை கட்டப்பட்டாலும் படலாம். பொது மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பார்களாக!

மொத்தத்தில் மாயமாலை.......,.. என்ன சொல்கிறது. நீங்களே தீர்ப்பளித்துக்கொள்ளுங்கள்.

கலைமணி

கலைப்பகுதி

தமிழ்ப் புதல்வர் மறைவு

சிறந்த எழுத்தாளரும் பத்திரிகையாளரும் எழுத்தாளர்களின் நண்பருமான ஸ்ரீ வ. ரா. (வ. ராமசாமி அய்யங்கார்) அவர்கள் தமது 63-வது வயதில் சென்ற ஆகஸ்டு மாதம் 23ம் தேதி மாலை 6 மணிக்கு நுங்கம்பாக்கத்திலுள்ள தமது இல்லத்தில் காலமானார் என்ற செய்தி தமிழ் நாட்டையே கலக்கி விட்டது. வ. ரா. அவர்கள் எழுத்தாளர் மட்டுமல்ல. சிறந்த தேசிய வாதியுங்கூட. பாரதியார், வ. உ. சி, அரவிந்தர், வ. வே. சு அய்யர், முதலியவர்களின் நெருங்கிய நண்பராவார். 1916ல் 'சுதந்திரம' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். 'தமிழ்நாடு'பத்திரிகையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். இலங்கை 'வீரகேசரி'யின் ஆசிரியர் பதவி வகித்தார். 1939ல் பாரததேவி வாரப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். தமிழ் இலக்கியத்திலே புரட்சி செய்த 'மணிக்கொடியின்' ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

'சுந்தரி' என்ற இவரது நாவல், இவரது சமூகசீர்திருத்த எழுத்து வன்மைக்குப் பெயர்போனது, 'மாயமேயோ' மழையும் புயலும், மகாகவி பாரதி, தமிழ்ப் பெரியார்கள், கோதைத்தீவு, சின்னச்சாம்பு, விஜயம், கற்றது குற்றமா என்ற புத்தகங்கள் இவரது அமர சிருஷ்டிகள் தான.

பாரதியார் பாடல்களின் தரத்தைத் தமிழ் நாட்டவருக்கு எடுத்துச் சொன்ன பெருமை வ. ரா அவர்களையே சாரும்.

வ. ரா. வெறும் பேச்சுச் சீர்த்திருத்தக்காரர் இல்லை பல தடவை சிறை சென்றிருக்கிறார். ஹரிஜன முன்னேற்றம், மதுவிலக்கு, கதர் திட்டம் முதலியவைகளில் அவரின் பணியைத் தமிழ் நாட்டவர் மறக்க முடியாது. 1938ல் வேறு ஜாதியைச் சேர்ந்த பெண்ணை மணந்து கொண்டு தன் தீவிரமான சீர்திருத்த வேகத்தை நிரூபித்தார்.

இன்று வ. ராவின் மறைவால் தமிழ்த்தாய் கண்ணீர் வடித்து நிற்கிறாள். நண்பர்களாகிய நாம் கலங்கி நிற்கிறோம். வ. ராவின் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

நீங்களும் போடலாம்

பயிற்சி அளிப்பவர்: “வாசுகி”

எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்ற பழமொழிப் படி தலையைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்டுவிட்டீர்கள். இனி சிரசிற்குக்கீழே உள்ள பாகங்களில் கவனம் செலுத்துவோம். முதலில் கையை எடுத்துக்கொள்வோம். சித்திரப்பயிற்சிக்கு வேண்டிய முக்கியமான இரண்டாவது அவயவம் கைதானே? முதல் அவயவம் பார்வை, அதாவது கண். கண்ணைத் தான் அழகாக வரைய உங்களுக்கு இப்போது தெரியுமே.

சித்திரப் பயிற்சியில் கை முக்கியமான பொறுப்பு வகிக்கிறது. வேகம், சலனம் இவைகளை வெளிப்படுத்த கை இல்லாவிட்டால் எப்படி முடியும். சித்திரம் பயில ஆரம்பிக்கும் பலர் கைகால் வரைவதில் அலட்சியம் காட்டுகின்றார்கள். விரல்களை ஒழுங்காக அமைத்துக் காட்டுவதில்லை. இதனால் அவர்கள் பாடுபட்டு வரைந்த சித்திரத்தின் அழகே கெட்டுவிடுகிறதென்றும் அவர்களுக்குத் தெரிவதில்லை. முகத்தை அழகுபட அமைப்பது தான் பிரதான அம்சமாகக் கருதுகிறார்கள். கையிலுள்ள சூக்ஷ்மமான விபரங்களை எல்லாம் வரைய வேண்டுமென்று சொல்லவில்லை. அடிப்படையான கையின் உருவ அமைப்பு இல்லாவிட்டால் அது விகாரமாகத்தானே இருக்கும். முகம் வரைவதற்காவது பாவம் வேண்டுமே என்ற கவலைவேண்டும். ஆனால் கை வரைவதற்கு அந்தக் கவலைகூட வேண்டியதில்லை. உங்கள் இடதுகையை முன்னால் விதவிதமாக வைத்துக்கொண்டு போட்டுப் பழகிக் கொள்ளலாம். அல்லது நண்பர்களின் கைகளை உங்கள் இஷ்டமான போஸ்களில் காண்பிக்கும்படி சொல்லி அதைப்பார்த்து வரையுங்கள். முதலில் அளவு கன்னாபின்னா என்றுதான் வரும் அதற்காக மனந்தளர்ந்து உங்கள் முயற்சியை விட்டுவிடக்கூடாது.

கைவரைவதற்கான முக்கியமான சில அம்சங்களை சுலபமான முறைகளை இங்கே தருகிறேன். இந்த அடிப்படையில் நீங்கள் எந்தவிதக் கோணத்தில் உள்ள கையையும் வரையலாம். கைக்கு அழகு தருவது விரல்கள் தான். விரல்களில் வளைவு உள்ள இடம் கணுக்களில் தான். விரல்கள் எல்லாவற்றையும் ஒரே மாதிரி அமைக்கக்கூடாது. அதாவது நீளத்திலும் பருமனிலும் விரல்களின் நுனியைக் கூர்மையாகக் காட்டக் கூடாது. முதலில் எதுவுமே கஷ்டமாகத்தான் இருக்கும். போட்டுப் பழகப் பழக சர்வ சாதாரணமாகி விடும். பக்கத்தில் உள்ள படத்தைப் பாருங்கள். நீங்கள் முதலில் உள்ளங்கையின் அமைப்பான (A) யை வரைந்து கொள்ள வேண்டும். பிறகு உள்ளங்கையோடு


'வாசுகி'



பாதங்கள்

"வாசுகி"

3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
'வாசுகி'

சேர்ந்திருக்கும் விரல்களை (B) வரைந்து கொள்ளுங்கள். பிறகு இதை ஒழுங்குபடுத்த வேண்டியது தான் (C) படம் 2 வலது கையின் பின்புறத் தோற்றம். படம் மூன்று. வலது கையின் விரல்கள் சேர்ந்து பக்கவாட்டில் அதாவது 'ஷேக் ஹாண்ட்' கொடுக்க வரும் நிலையில் படம் நான்கு ஐந்து ஆறு இவைகளின் நிலைகளையும் முறைகளையும் கவனித்து அதே போல போட்டுப் போட்டுப் பழகிக் கொள்ளுங்கள். இவை தான் கையின் அடிப்படை அமைப்புகள்.

உங்களுக்குப் பயிற்சியாக முன் பக்கங்களில் 30 விதமான கைகளின் நிலையை வரைந்து காட்டி இருக்கிறேன்.

இவைகளில் 15 லிருந்து 29 வரை உள்ள கைகள் ஓவியக்காரர்களின் கற்பனையில் உருவாக வேண்டிய அழகுக் கைகள். சிலைகளிலும் சித்திரங்களிலும் தான் இது போன்ற அழகிய கைகளைப் பார்க்கலாம். நாம் வாழ்வில் பார்க்கும் கைகளை 1 லிருந்து 14 வரை உள்ள படங்கள் காட்டுகின்றன. பெண்களின் கை விரல்கள் நீளமாகவும் நுனியில் கொஞ்சம் கூர்மையாகவும் அமைந்திருக்கும். இதை அருகே உள்ள பயிற்சிப் படங்களில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

இவைகளைப் பார்த்துப் பார்த்து நீங்கள் வரைந்து பழகிக் கொள்ளுங்கள் அதன் பிறகு நீங்களாக இதில் இல்லாத பலவித நிலைகளை வரைந்துபாருங்கள். எதைவரைந்தாலும் பெரிய உருவத்தில் வரைந்து பழகிக் கொள்ளுங்கள். கையைப் பற்றி இதற்கு மேல் இப்போது உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை.

அடுத்தபடியாகக் கால், பாதம். மிகச் சுலபமாக வரையக் கூடியது கால் தான். ஒரு முக்கோணத்தை வரைந்து கொள்ளுங்கள். அந்த முக்கோணத்தில் அடங்கி விடும் உங்கள் கால். 52ம் பக்கத்தில் உள்ள படத்தைப் பாருங்கள். உங்களுக்கு விளங்கி விடும். இது தான் கால் போடுவதற்கு உங்களுக்குத் தெரிய வேண்டிய முறை. கை விரல்களுக்கு உள்ள விதிகள் இதற்கும் பொருந்தும். எங்கே, முன் பக்கத்தில் வித விதமான பாதங்களின் நிலையைப் போட்டுக் காட்டி இருக்கிறேன். அவைகளை 'டிரேஸ்' எடுக்காமல் அப்படியே பார்த்து வரைந்து வரைந்து பழகிக் கொள்ளுங்கள். இதன் பிறகு நீங்களாகப் பலவிதமான நிலையில் கால்களை வரைந்து வரைந்து கையை லாகவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு இப்பொழுது முகமும் கையும் காலும் போட வந்து விட்டதல்லவா. இனி அடுத்த இதழில் முழு உருவம் வரைவதற்கான அடிப்படை முறைகளைப்பற்றிச் சொல்லித் தருகிறேன், ஆனால் ஒன்று இந்தக் கட்டுரைகளை நீங்கள் படிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் அடிக்கடி பென்சிலும் கையுமாக எதையும் போட்டுப் போட்டுப் பழகிக்கொண்டே இருக்க வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம் என்ற பழமொழி உங்களுக்குத் தெரியாதா என்ன?

சென்ற இதழில் சூரியனைப்பற்றிச் சில ரசமான கேள்விகள் கேட்கப்பட்டிருந்தது. அவைகளுக்குரிய விடைகள் தான் இவை:

1. உப்பு. 2. உஷ்ணம். 3. 93,000 000. 4. ஜனவரி 1. 5. கோபர்னிகஸ். 6. 109 மடங்கு. 7. சரி. 8. பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே வரும்போது பூமியின் நிழல் சந்திரனில் விழுவதால் சந்திர கிரஹணம் உண்டாகிறது.

9. ஜலவாயு. 10. நட்சத்திரம். 11 சூரியனின் ஆகர்ஷண சக்தி. 12. அல்ட்ரா வைலட் கிரணங்கள். 13. சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே வருவதால்.
14. பூமி சூரியனைச் சுற்றி வரும் பாதையில் தன்னுடைய அச்சை மாற்றிக் கொள்ளுவதில்லை

15. ஹெர்சல். 16. 10 000 டிகிரி பாரன் ஹீட். 17. தப்பு. சந்திரனின் ஆகர்ஷண சக்திதான் கடல் கொந்தளிப்புக்குக் காரணம்.

என்னைப்பற்றி...

'வஸந்தன்'

என்னைப்பற்றிய சுய சரிதையை கலைமணி ஆசிரியர் எழுதியனுப்பும்படி கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்னைப்பற்றி நானே எழுதிக்கொள்ளும் அளவுக்கு நான் எப்பொழுது பெரிய மனிதன் ஆனேன் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு பெரிய மனிதனாக முயற்சி செய்ததுமில்லை. பெரிய மனிதன் என்று எண்ணிக் கொண்டதுமில்லை. நான் நிரபராதி, "செப்டம்பர் இதழில் தங்கள் கட்டுரை வெளிவரப் போவதாக விளம்பரம் செய்து விட்டோம். 'என்னைப்பற்றி'ய கட்டுரையை உடனே அனுப்பி வைக்கவும்' என்று கலைமணி ஆசிரியர் பல கடிதங்கள் எழுதியபிறகு, எனக்கு தர்ம சங்கடமாகப் போய்விட்டது.

நான் எப்படிக் கதைகள் எழுத ஆரம்பித்தேன் என்று சொல்வது மிகவும் சுலபமான காரியம். மற்ற எழுத்தாளர்களைப் போலவே நானும் முதலில் ஒரு ரஸிகனாக இருந்துதான் எழுத்தாளன் ஆனேன். 1929–32-ம் வருஷங்களில் நான் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்த போது பத்திரிகைப் பைத்தியம் முதன் முதலாக என்னைப் பிடித்தது. அப்பொழுது ஆனந்தவிகடன் மாதம் இருமுறையாக வந்து கொண்டிருந்ததாக ஞாபகம். ஒவ்வொரு இதழையும் நான் ஆவலுடன் எதிர்பார்த்துப் படிப்பேன். எங்கள் ஊரில் விகடன் கிடைக்காது. ஆகவே, பக்கத்திலிருந்த புதுக்கோட்டைக்குச் சென்று வாங்கிவரச் சொல்லுவேன். ஆசிரியர் கல்கியின் கதைகளும் கட்டுரைகளும் அரசியல் குறிப்புகளும் என் இளம் உள்ளத்திலே பெரும் கிளர்ச்சியை உண்டாக்கியது. அவற்றைப் படிக்கப் படிக்க கல்கியின் லக்ஷக்கணக்கான ரஸிகர்களில் நானும் ஒருவன் ஆனேன். ஆசிரியர் கல்கியின் அரசியல் கட்டுரைகளையும் படித்து உற்சாகம் கொண்டேன். அவரது ஹாஸ்யக் கட்டுரைகளைப் படித்துக் குதூகலித்தேன். அவரது சோகக் கதைகளைப் படித்துக் கண்ணீர் பெருக்கினேன். நானும் கல்கியைப் போல் எழுதவேண்டும், நானும் ஆசிரியராக வேண்டும் என்று கனவு கண்டேன். எவ்வளவோ தடவை பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் விளையாடக் கூடச் செல்லாமல் எனதறையில் உட்கார்ந்து, நோட் புஸ்தகத்திலிருந்து சில தாள்களைக் கிழித்துக் கற்பனைப் பத்திரிகை ஒன்று தயாரித்து, அதில் கதைகள் எத்தனை பக்கங்கள் விளம்பரம் எத்தனை பக்கங்கள் என்று ஒதுக்குவேன்! இளம் வயதில் தான் எத்தனை அசட்டுக் கனவுகள்! நடக்கக் கூடாத வீண் எண்ணங்கள்! அப்பொழுது எனக்கு 17-19 வயது.

புதுக்கோட்டை ராஜா கல்லூரியில் இண்டர் மீடியட்டில் சேர்ந்ததும் அதுவரை ரஸிகனாக இருந்த நான் எழுத்தாளனாகவும் மாறினேன். பல கதைகள் எழுதினேன். எனக்கே அவை திருப்தியளிக்காததால் அவற்றைக் கிழித்தெறிந்து விட்டேன். கட்டுக்கட்டாக வெள்ளைக் காகிதங்கள் கருப்பாவதைப் பார்த்த என் தாயாருக்கு மனது கஷ்டமாகத்தானிருந்தது. தலைவனை

இழந்த எங்கள் ஏழைக் குடும்பம் மீண்டும் தலை தூக்க என்னையே எதிர்பார்த்து நின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் படிப்பில் அதிக உற்சாகத்தைக் காண்பிக்காமல் இலக்கிய சேவை செய்யப் போவதாகச் சொன்னால் பெரியவர்களுக்கு ஆத்திரமும் வேதனையும் உண்டாகாமல் என்ன செய்யும்? "பார்! பார் நான் கதைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கெல்லாம் அனுப்பப் போகிறேன். ஆயிரம் ஆயிரமாகப் பணம் வந்து குமியப் போகிறது. அதையெல்லாம் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கப் போகிறாய்?' என்று என் தாயாரிடம் சொன்னேன். அப்பொழுது அவரது முகத்தில் பிரகாசித்த மகிழ்ச்சியையும் கண்களிலே இருந்த நம்பிக்கையையும் இன்றும் என்னால் மறக்க முடியுமா? என் தாயார் பார்த்துக் கொண்டேயிருந்தார். நான் பல கதைகள் அனுப்புவதைப் பார்த்தார். அனுப்பிய 10, 15 நாட்களுக்கெல்லாம் கதைகள் ஒவ்வொன்றாகத் திரும்பி வந்து கொண்டிருந்ததையும் பார்த்தார்.

"இனிமேயாவது இந்த அசட்டுக் காரியத்தைவிட்டு விடுவாயா?" என்று பெரியவர்கள் கேட்பார்கள். 'ஆகட்டும்' என்று அழமாட்டாக் குறையாக அவர்கள் திருப்திக்காக சொல்லிவைத்தேன். என் கதைகளை உடனுக்குடன் திருப்பியனுப்பும் ஆசிரியர்களைக் கேட்பதா அல்லது 'கதை எழுதாதே!' என்று உத்தரவிடும் பெரியோர்களைக்கேட்பதா என்றே தெரியவில்லை. சிலகாலம் வரை ரகசியமாகக் கதை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பாமல் வைத்துக்கொண்டிருந்தேன். நானே என் கதைகளைப் படித்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன். 'அடடா! எப்பேர்ப்பட்ட கதைகள்! இதைப் பிரசுரிக்கும் பாக்கியம் இந்தப் பத்திரிகாசிரியர்களுக்குக் கிட்டவில்லையே! துரதிஷ்ட ஜன்மங்கள்!' என்று தமிழ்ப் பத்திரிகாசிரியர்கள் துரதிஷ்டத்தைக் குறித்து வருந்தினேன்.

மறுநாள் என் சிநேகிதன் ஒருவன் என்னைப்பார்க்க வந்தான். நான் மிகவும் ரஸித்த என் கதை ஒன்றை அவனுக்கும் படித்துக் காண்பித்தேன். அது ஒரு சோகக்கதை. கல்கியின் 'கேதாரியின் தாயார்' போன்ற கதைகளைப் படித்து என் உள்ளம் குமுறிக்கொண்டிருந்த சமயம் என் கதையையும் உருக்கமாக எழுதியதாக ஞாபகம். அதை மிக உணர்ச்சியுடன் நான் படித்தபோது மேற்கூறிய என் நண்பன் முகத்தில் வேதனை தோன்றியது. என் கலைத்திறமையில் எனக்கு கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கையும் ஏற்பட்டது ஆனால் சில நிமிஷங்களில் அவன் முகத்தில் விசித்திர மாறுதலைக் கண்டேன்! அவன் பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக்கொள்ள ரொம்பவும் கஷ்டப்படுவதாகத் தோன்றியது.' நான் என் கதாநாயகனைச் சிதையில் கிடத்தியபோது, அந்த சமயத்தில் கதாநாயகி திடும் பிரவேசம் செய்த சோக கட்டத்தில் என் சிநேகிதன் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்துவிட்டான்! எனக்கு வந்த ஆத்திரத்தில் என் கதையைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்தேன்! ரஸிக்கத் தெரியாத நண்பனிடம் வாசித்துக் காண்பித்தது என்பேரில்தானே தவறு! ஆனால் என் சிநேகிதன் பேரில் கோபம் ஏற்பட்டபோதிலும் தமிழ்ப் பத்திரிகாசிரியர்கள் பேரில் ஏற்கனவே இருந்த கோபம் மறைந்தது.

1934-ம் வருஷம் முதன் முதலாக நான் சென்னைக்கு வந்ததும், ஆசிரியர் கல்கி அவர்களை மிகவும் ஆவலுடன் சந்திக்கச் சென்றேன். டாக்டர் ஜான்ஸனைச் சந்திப்பதற்காக ஸ்காட்லாந்திலிருந்து லண்டனுக்கு வந்த பாஸ்வெல்லின் நிலைமையில் இருந்தேன். கதைகள் எழுத

எனக்கு உணர்வும் ஊக்கமும் தந்து, ஆயிரமாயிரம் கற்பனைகளில் என்னை மெய்மறக்கச் செய்த ஆசிரியர் கல்கியைக் கண்டேன். விகடனுக்குப் பல கதைகள் அனுப்பித் திரும்பி வந்துவிட்டதாகவும் என் கதைகளில் உள்ள குற்றங்குறைகளை எடுத்துக் காண்பித்தால் எனக்கு மிகவும் உபயோகமாயிருக்கும் என்றும் கூறினேன். அப்பொழுது சிறுகதை எப்படியிருக்க வேண்டும் என்று ஆசிரியர் அவர்கள் கூறிய வார்த்தைகளை நான் இப்பொழுதும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறேன். 1. வாழ்க்கையில் பிரதிதினமும் எவ்வளவோ சம்பவங்கள் நடக்கின்றன அவற்றைக் கவர்ச்சிகரமான முறையில் கதைகளாக எழுதலாம். கதைகள் வாழ்க்கைக்கு ஒட்டியதாகவும் இயற்கையாகவும் இருக்க வேண்டும். 2. கதை எளிய முறையில் ஹாஸ்யமாக இருந்தால் படிப்பவர்கள் ஆவலுடன் படிப்பார்கள். 3. நிறைய அயல் நாட்டுக் கதைகளைப் படித்து கதை யமைப்பு, கதை சொல்லும் பாணி, முதலிய 'டெக்னிக்கு' களை தெரிந்து கொள்ள வேண்டும்.



ஆசிரியர் அவர்களின் இந்த பொன் மொழிகளால் நான் மிகவும் பயன் அடைந்தேன். மீண்டும் நிறையக் கதைகள் எழுத ஆரம்பித்தேன். நல்ல பையன் ஆகிவிட்டேன் என்று சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்த என் தாயார், 'உம்! மறுபடியும் நீ இப்படியா ஆக வேண்டும்!' என்று வருத்தப்பட்டார். இப்பொழுதும் கூட நான் அனுப்பிய பல கதைகள் விகடனிலிருந்து டென்னிஸ் பந்துபோல் எனக்கே திரும்ப வந்து விட்டன. எனக்கு ஏமாற்றமாகத் தானிருந்தது. என் முதல் கதை தினமணி வார இதழில் தான் வெளி வந்தது. அப்பொழுது வார இதழைக் கவனித்துக் கொண்டிருந்த 'இளங்கோவன்' என் கதை நன்றாயிருப்பதாகச் சொல்லி என்னைப் பாராட்டினார். எனக்குத் தலைகால் புரியவில்லை. பின்னர் ஆனந்த விகடனிலும் சில கதைகள் பிரசுரமாயின.

நான் பி. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது தான் விகடனில் எழுதிய 'மணமிழந்த மலர்' என்ற கதைக்கு ரூ. 50 பரிசு கிடைத்தது. கதை வெளிவந்த அன்று இரவு முழுதும் தூங்கவில்லை. இதற்குப் பிறகு ஆனந்த விகடனில் அடிக்கடி என் கதைகள் வெளிவரத் தொடங்கின.

கதை யமைப்பு, நடை, கதைப் போக்கில் புதுமை இவற்றில் அதிக கவனம் செலுத்தினேன். இந்த அம்சங்களில் நான் கல்கியின் உதாரணத்தையே பின்பற்றினேன். கதைகளில் விருவிருப்புக்குறையாமல் விருப்பதற்கு என்னெ

ன்ன உபாயங்களைக் கையாளலாம் என்று யோசித்த பின்னரே எழுதத் தொடங்குவேன்.

கதைகளில் கருத்து எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கதையின் நடையும் என்ற எண்ணம் என் மனதில் வேரூன்றி விட்டது. ஒருவருக்கும் புரியாத நடையில் பிரமாதமான கருத்துக்களை எடுத்துச் சொல்லி விட்டதாகப் பெருமை யடித்துக் கொள்வதை விட சாதாரண விஷயங்களைக் கூட ஜனரஞ்சகமான நடையில் சொல்வதே ஒரு எழுத்தாளன் சிறப்பு என்பதை உணர்ந்தேன். அரும் பெரும் வேதாந்த உண்மைகளைக் கூட பாமர மக்களும் உணர்ந்து கொள்ளும்படி இந்நாட்டில் சங்கரர் ராமானுஜர் முதலியோர் செய்திருக்கும் போது, சாதாரண புரியக் கூடிய விஷயங்களை கடும்பதப் பிரயோகங்களுக்கிடையில் ஏன் மூடு மந்திரமாகச் சில எழுத்தாளர்கள் சொல்லுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. பிரபல எழுத்தாளர்கள் என்று கூறப்பட்ட பலரது கதைகளைப் படிக்க நான் முயற்சித்தேன். ஆனால் சில வரிகளுக்கு மேல் என்னால் படிக்க முடியவில்லை. ஆனால் என் முயற்சியினால் நல்ல பலன் கிடைத்தது. 'இந்த மாதிரி கரடு முரடாக எழுதக் கூடாது?'' என்பதற்கு அந்தக் கதைகளையும் கட்டுரைகளையும் எச்சரிக்கையாக வைத்துக் கொண்டு எழுதி வரலானேன்.

அந்தக் காலத்தில் அதாவது பத்து வருஷங்களுக்கு முன் - எழுத்துத் துறையில் எனக்கு இன்னும் மூவரது எழுத்துக்கள் தூண்டு கோலாக இருந்தன. 'கலை விநோதன்,' 'பி. ஸ்ரீ.' என்ற புனை பெயர்களில் பி. ஸ்ரீ ஆச்சாரியார் எழுதி வந்த இலக்கியக் கட்டுரைகளும், 'பரதன்' 'நமது அரசியல் நிருபர்' என்ற புனை பெயர்களில் ஸ்ரீ. ரா. பார்த்தசாரதி எழுதி வந்த கட்டுரைகளும், துமிலன் அவர்களின் ஹாஸ்யக் கதைகளும் கட்டுரைகளும் என்னைப் பெரிதும் உத்ஸாகப்படுத்தின. இப் பெரியார்களின் தமிழ் நடையையும், வார்த்தைகளைக் கையாளும் லாகவத்தையும், எழுத்தில் துள்ளியோடிய நகைச்சுவையையும் பெரிதும் ரஸித்தேன்.

இதற்குள், டூமாஸ், ஸ்காட் போன்ற ஆசிரியர்களின் சரித்திர நாவல் சிலவற்றையும், மாப்பஸான், ஹென்றி, செகாவ் முதலிய எழுத்தாளர்களின் பல கதைகளையும் ஜேன் ஆஸ்டின், ஹார்டி ஹால்கேய்ன் முதலியோரின் நாவல்களையும், பெல்லாக், மாகம், மார்க் ட்வைன், பீர்பாம், போன்றவர்களது கட்டுரைகளையும் படிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இவற்றைப் படிக்கப் படிக்க இந்த மாபெரும் ஆசிரியர்களின் பெருமையையும் உணர்ந்தேன். மேலே சொன்ன ஆசிரியர்கள் ஒவ்வொரு அம்சத்திலும் வல்லவர்களாக இருக்கலாம்.

நான் பி ஏ. தேறியதும், சில அரசாங்க வேலைகளுக்கு மனுப்போடும்படி வீட்டிலுள்ள பெரியவர்கள் கூறினார்கள். நான் பத்திரிகைத் தொழிலுக்கே போவேன் என்று பிடிவாதம் செய்து சர்க்கார் வேலைகளுக்கு மனுப்போட மறுத்துவிட்டேன்.

ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணியின 'பாரதமணி'யிலும் ஹனுமான் பத்திரிகையிலும், திருச்சி அகில இந்திய ரேடியோவிலும் சில காலம் இருந்தும், ஆசிரியர் கல்கியின் அருகில் இருந்து சேவை புரியவும் அவரது பாராட்டுதலைப் பெறவும் என் மனம் விரும்பியது. அவரது மேதைச் சிதறல்கள் என்மேல் கொஞ்சம்பட்டு நானும் ஒரு நல்ல எழுத்தாளனாகி தமிழ் மக்கள் உள்ளத்தில் ஒரு மூலையிலாவது இடம் பெறமாட்டேனா என்று ஏங்கினேன்.

இந்தச் சமயத்தில் தான் 'கல்கி' பத்திரிகை பிறந்தது. கல்கி

இவரைப்பற்றி

தமிழ் எழுத்தாளர்களை வரிசைப்படுத்தினால் அதில் ஒரு நல்ல இடம் '**வஸந்தன்**' அவர்களுக்கும் உண்டு. வி. எஸ். ராமகிருஷ்ணன் என்ற நிஜப் பெயருடைய இவர் பிறந்த ஊர் தஞ்சை ஜில்லாவிலுள்ள **அறந்தாங்கி**. இவருக்கு இப்போது வயது 35. வஸந்தனின் கதைகளைத் தமிழ்நாட்டவர் படிக்காதிருக்க முடியாது. பிரமாதமான வார்த்தை ஜாலங்களையும், வர்ணனை விசித்திரங்களையும் இவர் எழுத்துக்களில் நாம் பார்க்க முடியாதுதான். ஆனால் சிறு கதையின் லட்சணம் அறிந்து, சுவை குன்றாமல், விருவிருப்புத் தோன்றும்படி சம்பவங்களைச் சிருஷ்டிப்பதில் இவர் சமர்த்தர். இவர் கதைகள் எல்லாம் அனேகமாக அன்றாட வாழ்க்கையைச் சுற்றியேதான் பின்னப்பட்டிருக்கும். படிக்கும் பருவத்திலிருந்தே எழுத்தாளனாக வேண்டும், பத்திரிகாசிரியனாக வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு அந்தக் கனவு நினைவேறி, ஆனால் எழுத்தாளனாகத் தொழில் நடத்தி இந்தத் தமிழ் நாட்டில் வாழமுடியாது என்று அனுபவ வாயிலாக அறிந்து கொண்ட எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். '**பாரிஜாதம்**' என்ற அழகான பத்திரிகையைத் திறம்பட நடத்திய பெருமை இவருடையது. '**கல்கி**' பத்திரிகையின் ஆரம்ப வளர்ச்சிப்பருவத்தில் அதற்குத் தொண்டாற்றி இருக்கிறார். இதுவரை சுமார் இருநூறு சிறுகதைகளும், பல ரேடியோ நாடகங்களும், கீழ்க்கண்ட நாவல்களையும் தமிழ்நாட்டுக்கு அளித்திருக்கிறார். 1. வைராக்கியம் 2. இந்திரஜாலம் 3. புதுப்பெண் 4. மாலதி. இன்னும் எவ்வளவோ எழுத வேண்டும் என்ற துடிப்போடு அவர் இருப்பதைப் போலவே அவரது எழுத்துக்களை இன்னும் ரசித்து மகிழவேண்டுமென்று நாமும் காத்துக் கொண்டிருக்கிறோம்.

பத்திரிகைக்கு ஒரு உதவியாசிரியர் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்தவிட்டு, மனுப்போட்டேன். அதிருஷ்ட வசமாக வேலை கிடைத்தது ஆசிரியர் கல்கி அவர்களுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் கிடைத்தது. அரசியல் குறிப்புக்கள் எழுதுவதிலிருந்து பத்திரிகைத் தயாரிப்பு வரை பல அம்சங்களிலும் நான் தேர்ச்சி பெற்றேன். கல்கிப் பத்திரிகையின் வெற்றியிலிருந்து ஒரு முக்கிய விஷயத்தைத் தெரிந்து கொண்டேன். நல்ல கதை' கட்டுரைகளைத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் ; நல்ல பத்திரிகை

களுக்கு ஆதரவு அளிக்கிறார்கள் என்பதைத்தான்.

இந்த நம்பிக்கைதான் தனித் தமிழ்த் தொண்டு செய்ய சொந்தப் பத்திரிகை ஆரம்பிக்கத் தூண்டுகோலாக இருந்தது. ஆசிரியர் கல்கி உட்பட பல தமிழ்நாட்டுப் பெரியார்கள் ஆசியுடன் 1946-ம் ஆண்டு "பாரிஜாதம்" என்ற பத்திரிகையை ஆரம்பித்தேன். ஆனால், நான் பத்திரிகையை ஆரம்பிக்கு முன் என் தாயார் கடவுள் படத்துக்கு முன் கை கூப்பி, "கபாலி! இந்தப் பிள்ளையாண்டானுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கக் கூடாதா?" என்று பிரார்த்தித்ததை நான் எப்படி மறக்க முடியும்!

பாரிஜாதம் வெளிவந்ததும் அதைத் தமிழ்நாட்டு 'காரவன்' என்று ரஸிகர்கள் புகழ்ந்தார்கள். ஆயிரக்கணக்கான வாசக நேயர்களின் அன்பை நான் பெற்றிருக்கிறேன் என்பதை பாரிஜாதத்துக்குக் கிடைத்த வரவேற்பிலிருந்து அறிந்து மகிழ்ந்தேன். ஆனால், ஒரு பத்திரிகையின் ஆரம்ப தசையில் வாசக நேயர்களின் அபிமானம் மட்டும் இருந்தால் போதாது, பெரிய பணப்பை ஒன்றும் பக்கத்தில் இருக்கவேண்டும். என்பது தெரிந்தது. நான் பணப்பையைத் தேட முடியாவிட்டாலும் பத்திரிகையாவது பணப்பையைத் தேடட்டும் என்று நான் விலக நேர்ந்தது.

இன்று நான் சர்வ சுதந்திர எழுத்தாளனாக கல்கி, விகடன், கதிர் முதலிய பத்திரிகைகளுக்கு எழுதி வருகிறேன். இதுவரை சுமார் இரு நூறு கதைகளும், நான்கு நாவல்களும் பல ரேடியோ நாடகங்களும் எழுதியிருக்கிறேன். இன்னும் பல நாவல்களையும் சிறு கதைகளையும் சினிமாக் கதைகளையும் வசனங்களையும் எழுதவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். வாசக நேயர்களின் திருப்தியை என் மூலதனமாகக் கருதுகிறேன் நான் எழுதும் ஒவ்வொரு கதையிலும் அதை அதிகப்படுத்த முயற்சிக்கிறேன்.

பல வருஷங்களுக்கு முன் என் தாயாரிடம் பயமுறுத்தியபடி ஆயிரம் ஆயிரமாகப் பணம் சோத்து விடவில்லை. நான் அப்படி பயமுறுத்தியபோது அவர் முகத்தில் மலர்ச்சியும் கண்களில் நம்பிக்கையும் தோன்றியதாகச் சொன்னேனல்லவா? அந்த மகிழ்ச்சியை இப்போது நான் காணவில்லை. ஆனால் என் தாயின் முதிய கண்களில ஒரு நம்பிக்கையை மட்டும் காண்கிறேன். அதுவே போதாதா?

கலைமணி

அலுமினியம்

தங்கத்தைத் தான் இப்போது மிக உயர்ந்த உலோகமாகக் கருதுகிறோம். தங்கம் அதிகம் உள்ளவன் தான் இந்தக் காலத்தில் கோடீஸ்வரன் ஆனால் ஒரு காலத்தில் அலுமினியத்துக்குத் தங்கத்தை விட அதிக மதிப்பு இருந்தது. ஒரு சமயம் மூன்றாவது நெப்போலியன் என்ற அரசர் தம் விருந்தாளிகளை ஆச்சரியத்தில் மூழ்க வைக்க தங்கத் தட்டுக்களுக்குப் பதில் அலுமினியத் தட்டுகளை விருந்தின்போது உபயோகித்தாராம். அலுமினியம் அப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்ட சமயம். அதைப்பற்றி மக்கள் வியந்த காலம். தங்கத் தட்டுக்குப் பதில் அலுமினியத் தட்டை உபயோகித்த செய்தியைப் பெரிய சாதனையாக நாட்டு மக்கள் புகழ்ந்து வியந்து பேசிக் கொண்டார்களாம். அதே அலுமினியம் இன்றைக்கு பிச்சைக்காரன் குவளையாகக் கூட இல்லை அவ்வளவு மலிவான ஒரு பொருளாகி விட்டது.

முதல் பரிசு : டி. எம். முகமது யூசுப்
c/o முகமது கனி ராவுத்தர்
ரேஷன் ஷாப் No. 32
ரங்க கவுடர் தெரு, கோவை

காமிரா : பாக்ஸ் புரௌனி ரிப்ளெக்ஸ்
பிலிம் : கெவர்ட் பான்க்ர மோடிக்
நேரம் : 5—30 P. M.

பரிசுத்தொகை 10-9-51 அன்று அனுப்பிவைக்கப்படும்.

இரண்டாம் பரிசு :

ஏ. ஜே. ராமன்
நீர்முள்ளி விசலூர் P. O.
நந்நிலம் தாலுகா

காமிரா : பேபி புரௌனி
பிலிம் : கெவர்ட் பான்க்ரமோசா
நேரம் : நடுப்பகல் 1 மணி

○

பாராட்டுப் பரிசுப் படம் 65ம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

புகைப்படப் பகுதி

1. ஒருவர் ஐந்து படங்கள் வரை அனுப்பலாம்.

2, ஸ்டியோவில் எடுத்த படங்களை அங்கிகரிக்க முடியாது. இந்தப் போட்டி அமெச்சூர்களுக்குத்தான். போட்டோ கலையைத் தொழிலாக மதித்து நடத்தும் அன்பர்கள் இதில் கலந்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

3. பரிசு பெறத் தகுதியில்லாத ஆனால் நல்ல படங்கள் கலைமணியில் இடம் பெறும். இந்த இதழிலேயே வெளியிட்டிருக்கிறோம்.

4. முடிவு தேதி—ஒவ்வொரு மாதமும் 20ந் தேதிதான், அடுத்த இதழில் பரிசுபெறத் தகுதியுடைய படங்களைத் தேர்ந்தெடுக்கும் கடைசி நாள்.

போட்டோ அனுப்புபவர்களுக்கு இன்னும் சில வார்த்தைகள்.

முக்கியமாகப் படங்கள் சலனக் கற்பனை அழகுடன் இருப்பது நல்லது. குழந்தைகளின் சிரிப்பு, சேஷ்டை, அழுகை, விளையாட்டு இவைகளைப் படம் பிடித்தனுப்பலாம். பிராணிகளும் கூட நல்ல கோணங்களில் பரிசுப்படமாக இடம்பெறும். முக்கியமான விஷயம். உங்களுக்கே திருப்தியில்லாத படங்களை வீணே அனுப்பி வைக்காதீர்கள்.

போட்டோவின் அளவு கார்டு சைஸுக்குக் குறைவாக இருக்கக் கூடாது. சிறிய படங்களை அனுப்பினால் அது கவனிக்கப்பட மாட்டாது பரிசுக்கோ பிரசுரத்துக்கோ தகுதியற்ற படங்களைத் திரும்பப்பெற போதிய தபால் தலை வைத்தனுப்ப வேண்டும்.

கண்டிப்பாக இந்தப் போட்டி சம்பந்தமாக எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளக் கூடாது.

போட்டோவின் பின்னால் தங்கள் முழு விலாசத்தையும் அது எடுக்கப்பட்ட காமிராவின் குறிப்புகளையும் எழுதி கலைமணி கண்டோன்மெண்ட், திருச்சி என்ற விலாசமிட்டு அனுப்புங்கள்.

ஒவ்வொரு இதழிலும் சிறந்த கற்பனையும் அழகும் நிறைந்த ஒரு போட்டோவிற்கு முதல் பரிசு ரூபாய் பத்தும், இரண்டாம் பரிசு ரூபாய் ஐந்தும் அன்பளிப்பாக அனுப்பப்படும். இந்தத் தொகை அன்பர்களின் ஆதரவுக்கு ஏற்றபடி உயர்த்தப்படலாம்.

—ஆசிரியர்

பூர்த்தி செய்யவேண்டியகூப்பன்

பெயர் ______________________ வயது __________

விலாசம் ______________________________

____

அனுப்பியுள்ள போட்டோ பற்றிய விபரம் ______________________

பாலுள்ள இடங்களிலிருந்து கண்டெடுத்தும் இருக்கிறார்கள்.

பிரசித்திபெற்ற பிரேஸில் நாட்டு மீடியமான கார்லோஸ் மிராபெல்லியைப் (Carlos Mirabelli) பற்றி ஏற்கெனவேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஜடப் பொருள்களைத் திடீரென்று தோன்ற வைப்பதிலும் மறையவைப்பதிலும் அவருக்கு அலாதி திறமையும் சக்தியும் இருந்தது. எந்தவிதமான ஏமாற்று வித்தைக்கும் இடமில்லாதபடி தகுந்த முன் ஜாக்கிரதையுடன் விஞ்ஞானிகளால் அமைக்கப்பட்ட பிரத்தியேகமான ஸியான்ஸ் அறைகளில் மட்டும் அல்லாமல் பட்டப்பகலில் நல்ல வெளிச்சத்தில் திறந்த வெளியில்கூட அவரது இந்தச் சக்தியை அவர் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். ஒருதடவை மிராபெல்லியை ஆட்கொண்டிருந்த ஆவி முன்கூட்டியே தெரிவித்திருந்தபடி ஸாவொ பௌலோ என்ற இடத்திலுள்ள பின்டோ டி கொய்ரோஸ் (Senhor Pinto de Queiros in Sas Panlo) என்பவருடைய கைத்துப்பாக்கி, பல மைல்கள் தூரத்துக்கு அப்பாலிருந்த வாட்ஸன் (B. Watson) என்ற அமெரிக்கருடைய வீட்டிற்கு வந்ததாம். அதேபோல மற்றொரு சமயம் வாட்ஸனின் வீட்டுச் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த படம் ஒன்று திடீரென மறைந்துபோயிற்றாம். மறைந்துபோன அந்தப் படம் ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனிக் காரியாலயத்திற்குள் வந்து தரையில் விழுந்து உடைந்ததாம்.

நமது தமிழ் நாட்டிலும் திருச்சி ஜில்லாவைச்சேர்ந்த மருதூர் கிராமத்திலுள்ள அம்மையார் ஒருத்தியிடம் இந்தச் சக்தியிருப்பதைப் பலர்பார்த்திருக்கிறார்கள். உங்களில் அநேகரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். பழநி ஆண்டவருக்கென்று அந்த அம்மையாரிடம் கொடுக்கப்படும் காணிக்கையை அந்த அம்மையார் தம் கையிலேயே வாங்கு

கோயமுத்தூர் அத்ம ஞான ஸமாஜத்தார் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஆவியுலக மகான் ரிஷி ராம் ராம் அவர்களின் உருவப்படம். அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில் வாழ்ந்தவர் இம்மகான்.

இந்த உலகத்தில் உயிரோடு வாழ்ந்த காலத்தில் இம்மகான் எப்படித் தோற்றமளித்தார் என்பதைக்காண வேண்டுமென்று தாங்கள் விரும்புவதாக ஒரு 'ஸியான்ஸி'ன் போது ஆத்ம ஞான ஸமாஜத்தார் கேட்டுக்கொண்டார்களாம்.

சித்திரமே இன்னதென்று தெரியாத, 'ஸியான்ஸி'ல் இருந்த ஒருவரின் கையால் இப்படம் மிக எளிதில் வரையப்பட்டதாம். ரிஷி ராமே தாம் வாழ்ந்த காலத்தில் தாம் அளித்த தோற்றத்தை இவ்வாறு சித்திரமாகத் தீட்டி உதவினாராம்.

கிறாராம். வாங்கிய காணிக்கையை அந்த அம்மையார் அதை வாங்கியவரிடம் திருப்பிக் கொடுத்துவிடுகிறாராம். அப்படித் திருப்பிக் கொடுக்குப் பொழுது அந்தக் காணிக்கை - அது நாணயமாக இருந்தாலும் சரி அல்லது வேறெந்தப் பொருளாக இருந்தாலும் சரி - மறைந்துபோகிறதாம். மறைந்து போகும் அக்காணிக்கை நேராகப் பழநி ஆண்டவர் ஸந்நிதிக்கே போய் விடுவதாக மக்கள் நம்புகிறார்கள்.

இம்மாதிரி பொருட்கள், வஸ்துக்கள், சாதனங்கள், சிறிய உயிர்ப் பிராணிகள் முதலியவை திடீரென்று தோன்றுவதையும், திடுதிப்பென்று மறைவதையும் கேட்கும் போதும், பார்க்கும் போதும் அது இடம் விட்டு இடம் மாறி, கூடு விட்டுக் கூடு பாயும் அற்புதமாக ஆவியுலகத் தொடர்பு கொள்ளப் புதிதாக முனையும் நண்பர்களுக்குத் தோன்றலாம். குட்டிச் சாத்தான் பண்ணும் புரளியோ என்ற ஐயம் கூட எழலாம். ஆனால் உண்மையில் இயற்கையிலேயே தாமாக நிகழும் இந்த முதல் வகை அறிகுறிகள், அற்புதங்களே அல்ல, இயற்கைச் சட்டத்திற்கு விரோதமானவைகள் கூட அல்ல எனலாம். எக்ஸ்ரே (X-Ray) கதிர்கள் ஜடப் பொருள்களை ஊடுருவிச் செல்ல முடியுமானால், பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நடக்கும் சம்பவங்களையும் காட்சிகளையும் டெலிவிஷன் மூலமாக நமது கண்களுக்குப் படம் பிடித்துக் காட்ட முடியுமானால், ஆவியுலக ஆராய்ச்சியாளர்கள் கூறும் இந்த அறிகுறிகள் மட்டும் ஏன் நிகழ முடியாது? இந்த அறிகுறிகள் எப்படி நிகழ்கின்றன என்பதன் காரணத்தை மட்டும் நம்மாலும் விஞ்ஞானிகளாலும் அறிய முடியவில்லை என்பதற்காக அவற்றை நாம் அற்புதங்களாகக் கருதுவதும் முறையல்ல. நாட்பட்ட ஆராய்ச்சியின் மூலம் இந்த அறிகுறிகளின் பின்னே மறைந்திருக்கும் மர்மத்தை ஆவியுலக ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் அறிந்து கொள்ளத்தான் போகிறார்கள். அறிந்து கொள்ளப் போகிறோம் என்ற நம்பிக்கையில்தான் அவர்கள் ஆராய்ச்சியும் நடத்துகிறார்கள்.

இயற்கையிலேயே தாமாக நிகழும் முதல் வகை அறிகுறிகளில் மிகவும் அதிசயிக்கத்தக்க அறிகுறி இன்றொன்று இருக்கிறது. என்னவென்று கேட்கிறீர்களா? திடீரென்று ஆளே மறைந்து போவதுதான் அது. ஆளாவது மறைந்து போவதாவது. இது என்ன வெறும் 'கப்ஸா' வாக இருக்கிறதே என்று முடிவு கட்டி விடாதீர்கள். உண்மை என்று நான் மட்டும் கூறவில்லை. ஆவியுலக ஆராய்ச்சியில் அநுபவமிக்க, நம்பிக்கைக்குப் பாத்திரமான பெரியவர்களும், ஆள் மறைந்து போவதை நேரில் கண்ட விஞ்ஞானிகளும், மனோ தத்துவ நிபுணர்களும் மற்றும் காரண காரிய வாதத்தையுமே நம்பாத பேராசிரியர்களும் இந்த உண்மையை ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

'வேறொருவர்காணாமல் உலகத்து வாழலாம், மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்' என்று நம் நாட்டு வேதாந்திகளும் ஆத்மஞான வித்தன்னர்களும் எழுதி வைத்திருக்கிறார்கள். 'அவர் ஒரு முனிவர், சிந்தையை யடக்கிச் சும்மா இருக்கும் திறம் பெற்றவர். காலை 7 மணிக்கு அவரைக்கன்னியாகுமரிக்கடற் கரையில் பார்க்கலாம். அதே தினம் காலை 8 மணிக்கு அவரைத் திருவண்ணாமலையில் பார்க்கலாம். அதே தினம் மத்தியானம் அம்மகானைக் காசியிலும் இன்னும் அரை மணி சென்ற பின்னர் இமயமலைச் சாரலிலும் பார்க்கலாம். பார்த்ததாகப் பலர் சொல்லுகிறார்கள்' என்று ஒரு குறிப்பிட்ட முனிவரைப் பற்றி ஒரு நண்பர் உங்களிடம் கூறினால் நீங்கள் என்ன சொல்லுவீர்

கள்? 'வெறும் கட்டுக்கதை' என்பீர்கள். அப்படித் தானே? கட்டுக்கதையோ என்னவோ. நம்முடைய நாட்டில் இன்னும் அத்தகைய மகான்கள் இருக்கிறார்கள் என்று நமது மதிப்பிற்குரிய பலர் சொல்லுகிறார்கள். அவர் கந்தைத் துணி உடுத்தி ஒரு யாசகனைப்போல இந்தப் பறந்த நாட்டில் எங்கோ ஒரு ஊரில் தெருக்களைச் சுற்றி வரலாம். அல்லது ஒரு ஸந்நியாசிகளையும் பொய்ச் சாமியார்களையும் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன நாம் அந்த உண்மை மகானையும் அப்படிப்பட்டப் போலிக் கூட்டத்தைச் சேர்ந்தவராக கருதவும் செய்யலாம். உலகாத ஆசைகளில் உழன்று நம் முன்னே உறங்கிக் கிடக்கும் சக்திகளையெல்லாம் மறந்துவிட்ட நம் கண்களில் படாமல் அவர் எங்காவது ஓரிடத்தில் தாங்காமல் தூங்கிக் கொண்டும் இருக்கலாம். அவரையும் அவரைப் போன்றவர்களையும் விட்டு விட்டு நாம் விஷயத்திற்கு வருவோம்.

இருந்த இடத்திலிருந்தே திடீரென மறைந்துவிடும் வித்தை ஒன்று இருந்திருக்கிறது என்று நம் நாட்டு சாத்திரங்களிலிருந்து நாம் அறிகிறோம். இருக்கவே இருக்கிறது என்று ஆவியுலக ஆராய்ச்சியாளரும் கூறுகின்றனர். எப்படி, எந்த விதத்தில் இந்த வித்தை இயற்கையில் உண்மையிலேயே நிகழ்கிறது என்ற விஷயத்தைப் பொறுத்தவரையில் நம் நாட்டு யோகிகள் கொண்டுள்ள சித்தாந்தத்திற்கும் ஆவியுலக ஆராய்ச்சியாளர் கொண்டிருக்கும் கொள்கைக்கும் வித்தியாசங்கள் இருக்கலாம். ஆவியுலகம் வேறு. யோகிகளுடைய உலகம் வேறு.

'ஸியான்ஸ்' அறையிலிருந்து ஆவியினால் ஆட்கொள்ளப்படுகிற 'மீடியம்' எனப்படுபவரின் ஸ்தூல சரீரம் அப்படியே அகற்றப்பட்டுவிடுவதை அல்லது மறைந்துவிடுவதை ஆவியுலக நண்பர்கள் பலர் பார்த்திருக்கிறார்கள். சில சமயங்களில் வெளியில் எங்காவது இருக்கும் அந்த 'மீடியம்' பட்டப்பகலில் மறைந்துவிடுவதையும் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். இயற்கையிலேயே தாமாக நிகழும் அறிகுறிகளில் ஒன்றாகிய இதை ஆவியுலக ஆராய்ச்சியாளர் ட்ரான்ஸ்போர்ட்டேஷன் (Transportation) என்கிறார்கள். ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட மீடியம் அகற்றப்படுவதை கடத்தப்படுவதை, மறைக்கப்படுவதை, அல்லது எங்கோகொண்டு செல்லப்படுவதைத்தான் ஆவியுலக பாஷையில் இப்படிக்கூறுகிறார்கள்.

1854-ம் ஆண்டில் நியூயார்க்கைச் சேர்ந்த பப்பலோ (Buffalow, New-york) என்ற இடத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை ஆவியுலக ஆராய்ச்சியாளர் குறித்து வைத்திருக்கிறார்கள். இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் பெயர் இரா எராஸ்டஸ் (Ira Erastis) அவனுக்கு வயது 15 இளையவன் பெயர் வில்லியம் ஹென்ரி ஹாரிஸன் (William Henry Harrison) இவனுக்கு வயது 13. மூத்தவன் வீட்டின் பின்புறமுள்ள ஒரு அறையிலிருந்து ஆகாயத்திற்கு தூக்கப்பட்டு வெளியே தெருவில் எழுபது அடி தூரத்தில் கொண்டு வந்து மீண்டும் தரையில் விடப்பட்டான். மற்றொரு சமயம் அவன் வேலை செய்து கொண்டிருந்த பொழுது திடுதிடென்று அவனுக்கு ஒருவித உணர்ச்சி ஏற்பட்டு மயக்கம் வந்ததாம். அவனுக்கு மயக்கம் தெளிந்தபொழுது நியாகரா நதிக் கரையில் பனிமூட்டத்தின் நடுவில் நின்று கொண்டிருப்பதை அவன் பார்த்தான். அவன் அங்கு எங்ஙனம் வந்தான் என்பதற்கு ஒருவித அறிகுறியுமே இல்லையாம்.

இந்த சகோதரர்களால், பறக்கவும், ஆகாயத்தில் மிதக்கவும் முடி

யும் என்பதும் அவர்கள் வட்டாரத்திலுள்ளவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரியும். ஸியான்ஸ் ஆரம்பிக்கும் பொழுது அறையின் ஒரு மூலையில் நாற்காலிகளில் அவர்கள் உட்கார்ந்திருப்பார்கள். ஸியான்ஸ் முடிந்து மீண்டும் அறையில் விளக்குகள் பொருத்தப்படும் பொழுது பார்த்தாலும் அவர்கள் நாற்காலிகளில்தான் இருப்பார்களாம். ஆனால் அறையின் மற்றொரு மூலையில் காணப்படுவார்களாம்.

தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர் சொன்ன உண்மைச் சம்பவம். அவர் உறவினரில் ஒருவாது வாழ்வில் நிகழ்ந்த சம்பவம் அது. சாதாரணமாக விடியற்காலம் கருக்கலுக்குச் சற்று முன்னதாகவே படுக்கையை விட்டு எழுந்து தோளில் மண்வெட்டியுடன் அவர் தம் வயலுக்குச் சென்று விடுவது வழக்கமாம். அந்த விவசாயி அப்படி வயலுக்குச் செல்லும் போது அவரோடு ஒரே வீட்டில் கூட்டுக் குடித்தனம் நடத்திய அவரது மூத்த சகோதரரும் தோளில் இன்னொரு மண்வெட்டியுடன் அவருடன் செல்வதும் வழக்கமாம். ஒரு நாள் இரவு அவர் தூங்கிக் கொண்டிருந்தபொழுது அவர் தமையனர் வந்து அவரை எழுப்பி 'நேரமாகிவிட்டதே வயலுக்குப் போய் நீர் பாய்ச்ச வேண்டாமா? கிளம்பு' என்றாராம். இவரும் படுக்கையை விட்டு எழுந்து மண்வெட்டியை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு தமது தமையனருடன் வயலை நோக்கி நடந்தாராம். ஆற்றின் மறுகரையில் இருந்தது வயல். ஆற்றைத் தாண்டித்தான் வயலுக்குச் செல்ல வேண்டும். ஆற்றை அடைந்தபொழுது ஆற்றின் இரு கரையும் வெள்ளம் பொங்கப் புரண்டு சுழிகள் சுழித்துப் போய்க் கொண்டிருந்ததாம். ஆற்றை எப்படிக் கடப்பது என்று நினைத்த வண்ணம் அவர் தம் அருகில் நின்ற தமது தமையனர் பக்கம் திரும்பினராம். அவ்வளவுதான், திரும்பிப் பார்த்தபோது அதுவரை தன்னருகில் நின்ற தனது தமையனரைக் காணவே இல்லையாம். திடீரென அவர் மறைந்து விட்டார். தமையனர் எப்படி மறைந்தார்? எங்கு மறைந்தார்? அவருக்கு ஒரே திகைப்பாக இருந்தது. அப்பொழுதான் உணர்வு பெற்றவர் போல சுற்று முற்றும் பார்த்தார். எங்கும் மையிருட்டு. நடுநிசி நேரம். விடிவதற்கு இன்னும் எவ்வளவோ நேரம் இருந்தது. ஒரேயடியாக அவரைத் திகில் பற்றிக்கொண்டது. 'விர்'ரென்று நேராக வீட்டை நோக்கி வந்தார். வீட்டில் வந்து பார்த்தபொழுது அவர் தமையனர் படுக்கையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாராம். அப்படியானல் அவரை வந்து அழைத்துக் கொண்டு சென்றது யார்? அவர் நதிக்கரையில் வந்து நின்றது எப்படி? என்று அவருக்கு ஒரே ஆச்சர்யமாக இருந்ததாம். சிலர் தூக்கத்திலேயே நடப்பார்களாம். அது ஒருவித நோய். ஆங்கிலத்தில் அதை ஸோம்னம்புலிஸம் (Somnampulisom) என்பார்கள். அத்தகைய நோயால் பிடிக்கப்பட்டவரல்ல அவர். அவர் அப்படி என்றுமே தூக்கத்தில் நடந்தவரும் அல்லவாம்.

புகழ்பெற்ற காதல் கடிதம்!

உலகத்திலேயே மிகப்பெரிய (நீளமான) காதல் கடிதம் ஒன்று பிரிட்டிஷ் மியூசியத்தில் இருக்கிறது இது கன்னி ராணி எலிஸபெத்தின் அவையை அலங்கரித்த ஒரு பிரபு தன் காதலிக்கு எழுதியது. நெறுக்கமாக எழுதப்பட்ட நானூறு பக்கங்கள் கொண்ட காதல் கடிதம் இது. 410,000 வார்த்தைகள். அதாவது இப்போது வெளியாகும் சாதாரண 30 பக்க நாவலைப் போல ஐந்து அல்லது ஆறு மடங்கு நீளமானது!

இந்த சம்பவத்தை என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? வேறு ஒன்றும் அல்ல. ஆவியுலக ஆராய்ச்சியாளர் ட்ரான்ஸ்போர்ட்டேஷன் என்கிறார்களே அதுதான் இது.

பிரேஸில் நாட்டைச் சேர்ந்த மீடியமான கார்லோஸ் மிராபெல்லி (Carlos Mirabelli) என்பவர் எத்தனையோ தடவை புகழ்பெற்ற விஞ்ஞானிகள் மற்றும் பிரபலஸ்தர்கள் முன்னிலையினின்று மறைந்தும், மறைக்கப்பட்டும், வேறிடத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டும் இருக்கிறார். பிரேஸில் நாட்டின் பிரஸித்திபெற்ற மருத்துவ நிபுணரான டாக்டர் என்ரிகோ டி கௌஸ் (Dr. Enrico de Goes) என்பவரை கௌரவிப்பதற்காக ஸியான்ஸ் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஸியான்ஸ் அறையின் ஜன்னல்கள், கதவுகளுக்கெல்லாம் அரக்கு முத்திரை வைக்கப்பட்டு 'ஸீல்' செய்யப்பட்டிருந்தது. ஸியான் அறையினுள்ளே மிராபெல்லியின் கால்களையும் கைகளையும் நாற்காலியோடு நன்றாக இறுகச் சேர்த்துக் கட்டி வைத்திருந்தார்கள். அப்படி கட்டிவைக்கப்பட்டிருந்தவர் மறைந்துவிட்டார். மறைந்தவர் சற்று நேரம் கழிந்தபின்னர் அறையின் வெளிப்பக்கம் நின்றபடி கதவுகளைத் தட்டி அறையினுள்ளே இருந்தவர்களை அழைத்தார். அறையின் ஜன்னல்களிலும் கதவுகளிலும் ஏற்கெனவேயே வைக்கப்பட்டிருந்த அரக்கு முத்திரைகள் அப்படியே அழியாமல், உடையாமல் இருந்தன. 'ஸீல்'கள் உடையாமல் இருக்கின்றனவா என்று பார்க்கும் பொறுப்பு ஒரு விஞ்ஞானியினிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 'ஸீல்'கள் சரியாகவே இருக்கின்றன என்று அவர் கூறிய பின்னரே மிராபெல்லி மீண்டும் ஸியான்ஸ் அறையினுள்ளே நுழைய அனுமதிக்கப்பட்டாராம்.

ஒரு தடவை சாவொ பௌலோ (Sao Paulo)விலுள்ள டாலஸ் (da luz) என்ற ரயில்வே ஸ்டேஷனில் மிராபெல்லியும் அவரது வேறு பல நண்பர்களும் ஸேன்டோஸ் (Santos) என்ற ஊருக்குச் செல்வதற்காக ரயிலுக்கு காத்துக்கொண்டிருந்தனராம். அப்படிக் காத்துக் கொண்டிருந்தபோது திடீரென மிராபெல்லி காணாமற் போய்விட்டாராம். அவரை எங்கே என்று பார்த்துக்கொண்டிருந்த நண்பர்களுக்கு பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, உத்தேசம் எண்பது மைல்களுக்கு அப்பாலிருந்த சாவொ விஸன்டே (Sao Vicente) என்ற ஊரிலிருந்து டெலிபோன்மூலம் ஒரு செய்தி வந்ததாம். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மிராபெல்லி காணாமற்போன இரண்டு நிமிடங்களுக்கப்புறம் சாரவொ விஸன்டே என்ற ஊரில் அவர் பிரசன்னமாயி

ஒரு மனிதனைக் கொல்ல

1870ம் வருஷம் நடந்த பிராங்கோ பர்சியன் யுத்தத்தின் போது ஒரு மனிதனைக் கொல்ல சராசரி 80 துப்பாக்கி குண்டுகள் (புல்லட்ஸ்) சுடப்பட்டது. முதல் மகா யுத்தத்தில் இறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் 28 000 புல்லெட்டுகளும் 860 ஷெல்லுகளும் சுட்டு வீணாக்கப்பட்டன. இரண்டாவது மகா யுத்தத்தில் ஒரு மனிதனுக்கு 86 000 ஷெல்களும் 11,600,000 புல்லெட்டுகளும் செலவிடப்பட்டிருக்கிறது என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். ஏன் விசித்திரமாக இருக்கிறதல்லவா? ஒரு மனிதனைக் கொல்ல ஒரு புல்லட் போதாதா என்கிறீர்களா, இது யுத்தத்தில் செலவான மொத்தம் குண்டுகளையும் இறந்த மொத்த மனிதர்களையும் வைத்துக் கொண்டு சராசரிக் கணக்குப் போட்டுத் தயாரித்திருக்கிறார்கள். அவ்வளவுதான்!

ருந்தார் என்று அந்த டெலிபோன் செய்தி கூறிற்றாம்.

இயற்கையிலேயே தாமாக நிகழும் முதல் வகை அறிகுறிகளில் இன்னொன்று எக்டோபிளாஸம் (Ectoplasm) இது இன்னதென்று ஆவியுலகத் தொடர்புகொள்ள விரும்புகிறவர்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். உயிர்ப்பிராணிகளின் உடல் நுணுக்க சாஸ்திரம் தெரிந்தவர்களுக்கு புரோட்டோபிளாஸம், (Protoplasm) ஸைட்டோபிளாஸம் (Cytoplasm) ஸெல் (Cell) என்பவை என்னவென்று தெரியும். இவைபற்றி விளக்கமாகக் கூறுவதென்றால் அப்புறம் அதுவே ஒரு பெரும் நூலாகிவிடும். உயிர்நூல் சாஸ்திரத்தின் அஸ்திவாரமே இவைதான். மனிதர் உட்பட ஒவ்வொரு உயிர்ப்பிராணியின் முழு உருவமும், உடலும் ஸெல் என்னும் ஜீவ அணுக்களாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது. வாழ்வும் மரணமும் இந்த ஜீவ அணுக்களைப் பொறுத்தவை. உயிர்ப்பிராணிகளின் உடலில் உயிர் இயங்கிக்கொண்டிருப்பதே இந்தஜீவ அணுக்களினால்தான், எத்தனை எத்தனையோ கோடி ஜீவ அணுக்களாய் ஆக்கப்பட்டதுதான் நம்முடைய இந்த உடல். இந்த உடல் இயங்குவதும் உயிரோடு இருப்பதும் இந்த ஜீவ அணுக்களின் பிரசன்னத்தினாலும் சேர்க்கையினாலுமே. இந்த ஜீவ அணுக்கள் பலவகை. ஒரு உயிர்ப்பிராணியின் அணுவிற்கும் மற்றொரு உயிர்ப்பிராணியின் அணுவிற்கும் வித்தியாசம் உண்டு. அதேபோலவே ஒரே உயிர்ப்பிராணியின் உடலிலும் பலவிதமான ஜீவ அணுக்கள் இருக்கின்றன. மனித உடலை எடுத்துக்கொள்ளுவோம். சதையெல்லாம் ஒரு வித ஜீவ அணுக்களால் ஆனவை என்றால் மூளை வேறொருவித ஜீவ அணுக்களால் ஆனவை. ஒரு ஜீவ அணுவிற்கும் மற்றொரு ஜீவ அணுவிற்கும் உள்ள ஒற்றுமை இதுதான். அவற்றில் எப்போதுமே உயிர் இயங்கிக்கொண்டிருக்கும். ஸெல் என்று சொல்லப்படுகிற இந்த ஜீவ அணுவைப் பூதக்கண்ணாடியில் வைத்துப் பார்த்தால் அதனுள் பல பாகங்கள் தெரியும். இன்னும் அதிக சக்தியுள்ள பூதக்கண்ணாடியின் அடியில் வைத்துப் பார்த்தால் இன்னும் பல நுண்ணிய பாகங்கள் தெரியும். அவற்றையெல்லாம் இங்கு விவரிப்பதற்கில்லை. பொதுவாக ஒரு ஸெல்விற்குள் மூன்று பாகங்கள். ஸெல்வின் நடுவிலிருப்பது நியூக்ளியஸ் (Newcleus) அதைச் சுற்றி வளைய இருக்கும் பசை மயமான திரவப் பொருளையும் அதனோடு இருக்கும் மற்ற நுண்ணிய பொருள்களையும் ஸைட்டோபிளாஸம் (Cytoplasm) என்பார்கள். இவற்றை எல்லாம் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கும் வெளிச்சுவருக்கு ஸெல்வால் (Cell wall) என்று பெயர். மேற்கூறிய இவையனைத்தும் சேர்ந்ததுவே ஸெல். ஆனாலும் ஸெல்விற்கு உயிர்கொடுப்பது நியுக்ளியஸ் அல்ல. அதைச் சுற்றி வளைய இருக்கும் பசைபற்றுள்ள திரவப் பொருளிலுள்ள மற்ற நுண்ணிய பொருள்

காச நோய்

முதல் டாக்டர் ஹிப்போக்கிரேட்ஸ் (Hippocrates) என்பவர். இவர் கி. மு. 460 லிருந்து கி. மு. 377 வரை வாழ்ந்தவர். இவர் இப்போதுள்ள நவீன வைத்திய முறைகளை அப்போதே கையாண்டிருக்கிறார். ஹிருதயக் கோளாறுகளைக் குணப்படுத்துவதில் இவர் கைதேர்ந்தவராம். (டி. பி) டியூபர்குலாஸஸ் என்ற காசநோய்க்கு இவர் சொன்ன மருந்துகள் சூரிய வெளிச்சம், ஓய்வு, புஷ்டியான ஆகாரம் நல்ல பால் இதையே தான். 2200 வருஷங்களுக்குப் பிறகு இப்போது காச நோயாளிக்குக் கையாளப்படுகிறது.

களுமல்ல. ஸெல்லிற்கு உயிர் தருவது பசை மயமான, ஒட்டும் தன்மையுள்ள ஆனால் தண்ணீரில் கரையாத, பிசு பிசுவென்ற திரவப் பொருள் ஒன்று இருக்கிறதே அது மட்டும்தான். இதுவே உயிரோடு இயங்குவது, இதைத்தான் புரோட்டோபிளாஸம் என்கிறார்கள். ஸெல்லை ஜீவ அணு என்று சொல்வதைவிட புரோட்டோபிளாஸத்தை ஜீவ அணு அல்லது உயிர் அணு என்று சொல்வதுதான் சரி. புரோட்டோ பிளாஸம் என்பது இல்லையென்றால் ஸெல் உயிரோடு இயங்காது. ஸெல்லில் உயிர் இருக்காது. ஸெல்லின் உட்புறமாக ஸெல்லின் வெளிச்சுவரைத் தொட்டுக்கொண்டிருக்கும் ஸைட்டோபிளாஸத்தின் வெளிவிளிம்பை அல்லது புறவிளிம்பைச் சேர்ந்த பாகத்தைத்தான் ஆவியுலக ஆராய்ச்சியாளர் எக்டோபிளாஸம் என்கிறார்கள், அதாவது நியூக்ளியஸ், புரோட்டோபிளாஸம், அதனோடுள்ள மற்ற நுண்பொருள்களை எல்லாம் வளைத்துப் பிடித்திருக்கும் வெளிச்சுவரின் உட்புறமாகவும் புரோட்டோபிளாஸத்தின் வெளி விளிம்பின் ஓரமாகவும் சுற்றி வளைந்துள்ள உயிரோட்டம்தான் இந்த எக்டோபிளாஸம். இதை எக்ஸ்டீரியொரேடட் புரோட்டோபிளாஸம் (Exteriorated Proplasm) என்றும் டெலிபிளாஸம் (Teleplasm) என்றும் கூடச் சொல்லுவார்கள்.

பசைப்பற்றுள்ள ஊனீர் போன்ற திரவப் பொருளாகக் கருதப்படும் இந்த எக்டோபிளாஸம் ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட மீடியத்தின் உடலிலிருந்து வெளிவருவதாக அல்லது கசிவதாக ஆவியுலக ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். எப்பொழுதும் இல்லாவிடினும் சிற்சில வேளைகளில் இந்த எக்டோபிளாஸம் வெளிவருவதைப் பார்க்கலாம். இது வெளிவருவதை ஆவியுலகத் தொடர்பு கொள்ள குழுமி இருப்பவர்களால் உணர முடியலாம் அல்லது முடியாமலும் இருக்கலாம். பாரன்வான் ஷெரெங்க் நாட்சிங் (Baron von Schrench-Notzing) என்பவர் இவா வில்லிஸ் (Eva C. and Willis) ஆகிய இரண்டு மீடியங்களின் மேல் நடத்திய விரிவான ஆராச்சிகளின் போது இந்த டெலிபிளாஸத்தை போட்டோ எடுத்திருக்கிறார் அவர். இவா என்ற மாதை மீடியமாக வைத்து நடத்திய பரிசோதனைகளின் போது இந்த எக்டோபிளாஸம் அந்த மாதின் வாயினின்றும் வெளிவந்ததாம். வேறு சில மீடியம்களைப் பொறுத்தவரையில் எக்டோபிளாஸம் அவர்களது உடலின் பல பாகங்களிலிருந்தும் வெளிவந்ததாம். சிற்சில வேளைகளில், இப்படி வெளிவந்த எக்டோபிளாஸம் கைகள் போலவும், முகங்கள் போலவும் மற்றும் மனிதரின் வேறு சில அங்கங்கள் போலவும் உருவமும் வடிவமும் பெற்றுத் தோற்றமளித்ததாம். இறந்து போனவர்கள் நம் கண்முன் முழு உருவம் எடுத்து தாம் முன்னர் இந்த உலகத்தில் வாழும்போது எப்படித் தோற்றம் அளித்தார்களோ அப்படித் தோற்றமளிப்பதற்கு இந்த எக்டோபிளாஸம் மிகவும் அத்தியாவசியம் என்று சில ஆவியுலக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

சமுத்திர ஜலம்

கடலில் சராசரி ஆழம் 3 மைல்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கடல் நீரை முழுதும் காய்ச்சி வடித்தால் 230 அடி உயரத்துக்கு உப்புப் பாளங்கள் கீழே தங்குமாம். கடல் நீர் மேல் பரப்பைவிட அடியில் மிகக் குளிர்ந்திருக்கும் அனேக இடங்களில் முக்கியமாக நார்வேயை அடுத்த கடற்கரைகளில் தண்ணீர் மேலே குளிர்ந்து உறைவதற்கு முன் அடியில் இறுகிப் பனிக்கட்டியாகி விடுகிறது.

ஹாஸ்யக் கட்டுரை

R. P. மல்லாரி

சிறுகதை எழுதாமலிருப்பது எப்படி?

[ஒரு சிறிய குறிப்பு: ஒரு சில "சிறுகதை எழுத்தாளர்கள்"—தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை விளையாட்டாகப் படிக்கப் போய் ஏற்பட்ட விளைவுதான் இது. இன்றுவரையில் நான் ஒரு 'மாஜி எழுத்தாளன்' என்ற முறையில் ஒரு கலாரஸிகனுக, ஒரு சிறு கதை 'பித்தனுக' அந்தக் கொள்கைகளிலிருந்து கொஞ்சம் மாறுபட வேண்டி இருக்கிறது. யார் ஒருவர், ஒரு எழுத்துக்காரனுகப் பேரெடுத்துப் பிழைக்க இஷ்டமில்லையோ, அவர்களுக்கு இதோ என் யோசனைகள்.]

எழுதாமலிருப்பது எப்படி? அது ஒரு செப்படி வித்தைதான். தமிழ் பேசத் தெரிந்தவர் எழுதாமல் இருப்பது மிகவும் ஆச்சரியகரமானது! அதிலும் இவர்கள் கையில் சிறுகதை அகப்பட்டு விட்டால் போதும். கொலைதான். ஒரு கதையைப் பலர் கையில் கொடுத்து, மல்லி வேறு, சம்பங்கி வேறு, வெட்டிவேர் வேறு, ரோஜா வேறு என்று, அக்குவேறு ஆணிவேர் வேருக, ஒரு கதம்ப பூச்செண்டு முடிந்துவிடுவார்கள். மலர்கள் எல்லாம் உதிர்ந்து கிடக்கும்! இதுபோன்ற ஆசாமிகள் தமிழ் மொழிக்கே பயங்கரமான கபயூனிஸ்ட். இவர்கள் வாழட்டும், ஆனுல் சிறுகதை எழுதாமலிருக்கட்டும்!

நிற்க, கதை எழுதாமலிருக்க சிந்தனு சக்தி வேண்டும். கற்பனு சக்தி வேண்டும். கதைகள் எழுதுபவர்களுக்கு அவைகள் அவ்வளவு அவசியமில்லை என்று சொல்லுவதை நான் முழு மனதுடன் ஆமோதிக்கிறேன். இவைகள் இருந்தால் மட்டும் போதாது. எழுதவேண்டும் என்ற தீவிர ஆவலும் வேண்டும். ஆனுல் அதோடு கற்பனைக்கெட்டாத சோம்பலும் வேண்டும்!

ஒரு எச்சரிக்கை! எந்த சிறுகதையையும் - படியுங்கள் - கேளுங்கள். தற்சமயம் வெளியாகும் எந்தக் கதையும், உங்களை எழுத்தாளனுக்கிவிடுமோ என்ற பயம் எள்ளளவும் வேண்டாம். அவ்வளவு புத்திசாலித்தனம் சிறுகதை எழுத்தாளர்களுக்கு இருந்திருந்தால், அவர்கள் தங்கள் அபத்தத்தைவெளியிட்டிருப்பார்களா? இந்தியச் சிறுகதைப் போட்டியில் தமிழ்ச் சிறு கதையே எடுபடாமல், உலகப் போட்டியிலும் பங்கெடுத்துக்கொள்ள முடியாமல் போனது, சிறந்த சிறு கதை எழுத்தாளர்கள் எழுதாமல் இருப்பதே!

ஒரு சிறு சம்பவத்தை சிறுகதையாகத் திரிக்கலாம் என்று கூறப்படுகிறது. இதைவிடச் சக்தி வாய்ந்தது ஒரு காட்சி என்பது என் கட்சி. ஆபீஸ் வேலையாக ஓர் ஆசாமி காரில் போகிருர். அவர் குழந்தை குட்டிகளுடன் காணப்படுகிருர்! — இந்தக் "காட்சி"யை நாம் பார்க்கும்போது எவ்வளவோ பிரம்மாண்டமான கற்பனைகள் ஒரு க்ஷணத்தில் ஓடி மறைகின்றன. அந்த ஸ்திரீ யார்? மலைக்கோட்டைக்குப் பக்கத்தில் ஆண்டார் தெரு, அல்லது ஏதோ ஒரு புலிவார்டு ரோடு வாசி என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே உங்களுடைய நிருச்சி விஜயம் ஞாபகம் வரும். ஏதோ சினிமாவுக்குச் சென்ற சம்பவம் ஞாபகம் வரும். திரும்பி வருகையில் ஏதோ ஒரு 'கிராக்கி'யில் ஒரு ஆணை, ஒரு பெண்ணை சங்கடத்

கொண்டுவந்து விட்டாலும் பரவா இல்லை. ஒரு அலாரிப்பு! ஒரு ஜதிஸ்வரம்! ஒரு தில்லானா! ஒரு ததிக்கணதோம். எப்படியோ.

இந்த யோக்கியன்களுடைய உணர்ச்சியூட்டும் கலாசேவையை விளாசிவிட்டு, பிறகு கதை சொல்ல வேண்டுமா? ஒரு சிறு கதையில் அடங்குமா? இப்பேற்பட்ட ஆசாமிகள் எவ்வளவுபேர் என்று கேட்காதீர்கள். உங்கள் முன்னாலும் உண்டு, பின்னாலும் உண்டு. செவிட்டுப் பிடாரன் மடத்திலும் உண்டு; சாஸ்தா கோவிலிலும் உண்டு. சிறு கதையில் வரும்போது இவர்கள்தான் கதாசிரியர் கற்பனையில் கதாநாயகர்கள். இப்பேற்ப்பட்ட பாவிகளுக்கு உலகமே அறியாத கன்னிகளைக் கன்னிகாதானம் செய்து கொடுக்கும் பாவச் சுமையை ஏற்க வேண்டுமா? வேண்டாம். தயவு செய்து கதை எழுதாதீர்கள். சிறு கதை வேண்டாம்!

நடை வேகம் வருவதற்கு ஒரு வழி—இதோ! இதுபோன்ற கதாநாயகர்கள் எங்கும் உண்டு. அவர்கள் அறியாமல் அவர்களைப் பின்பற்றினால் போதும். குறுக்கு வழி, குழி, புதர் எல்லாம் தண்ணீர்பட்ட பாடமாகி விடும். இன்னும் கொஞ்சம் பிரயாசைப்பட்டால் அடி வாங்கியும் பழகிக் கொள்ளலாம். பிறகு அவருடைய 'தாஸன்' என்றோ, 'பித்தன்' என்றோ, 'அடியேன்' என்றோ சேர்த்துக் கொள்ளுங்கள். அவருக்குக் கிடைப்பதில் உங்களுக்கு ஒரு பங்கு. ஆனால் அவர் கதை எழுத ஆரம்பித்தால் மட்டும் நீங்கள் எழுதாதீர்கள். இதுமாதிரி 'ஜோடி'களும் இல்லாமல் இல்லை.

புதிதாகக் கதை எழுத ஆரம்பிக்காதவர்களுக்கு ஒரே ஒரு எச்சரிக்கை. தப்பித் தவறி "கோமுவின் காதலன்" என்றோ "சோமுவின் சுயம்வரம்" என்றோ ஒரு கதை எழுதி அதை ஆசிரியர் பிரசுரிக்க மறந்து விட்டால், தயவு செய்து அதோடு எழுத்துத் தொழிலுக்கே ஒரு முழுக்குப் போட்டு விடுங்கள்.

கதை எழுதாமலிருக்க நீதிகளை ஒன்றாகத் தொகுக்கலாமா?

(1) சிந்தனாசக்தி, கற்பனாசக்தி இவைகள் வேண்டும்—அதி புத்திசாலிகள் விஷயத்தில் இது விதிவிலக்கு.

(2) எந்தச் சிறு கதையையும் படிக்காதீர்கள் — ஆனால் அதுபற்றி விமர்சனம் செய்யுங்கள்.

(3) ஒரு அற்ப காட்சிக்கு பல வர்ணம் கொடுத்து மஞ்சக்காமாலைக் கண்களுடன் பாருங்கள்—ஆனால் தயவுசெய்து ஒன்றும் எழுதி விடாதீர்கள். ஏனெனில் அது பெரிய நாவலாகி விடும், பிரசுரத்துக்கு லாயக்கில்லாத!

(4) ஏதேனும் நல்ல கதை படித்தால் உடனே காப்பி அடியுங்கள். ஒரே சமயத்தில் அரை டஜன் பத்திரிகைகளுக்கு அனுப்புங்கள். அதோடு எழுதுவதற்கு தலைமுழுக்குப் போட்டுவிடலாம்.

(5) அதிக உணர்ச்சி பூட்டும் சம்பவங்களைப் பற்றிப் பேசுங்கள்—உங்கள் கோஷ்டியுடன். பிறகு காக்கா பிடியுங்கள்—பிறகு உங்கள் திருட்டு இரகசிய வேலை இருக்கவே இருக்கிறது. யாராவது கண்டுவிட்டாலும் பரவாயில்லை, காலில் விழ, தயங்க வேண்டாம். இதெல்லாம் இருக்கும்போது கதை எழுத ஏது நேரம்!

(6) உங்கள் நடையை நீங்கள் வருத்திக்கொள்ள வேண்டாம் உங்களுக்கு ஒரு வழிகாட்டி உண்டு. உங்களுக்கு ஒரு தாஸனும் உண்டு.

(7) மற்றபடி கன்னாபின்னா என்று திட்டுவது இருக்கவே இருக்கிறது!

இவை எல்லாம் இருந்தால் உங்களை ஒரு சிலர் பாராட்டவும் செய்வார்கள். அதையும் நீங்கள் காண்பீர்கள்!.........(தொடராது)

Printed by VE. Chidambaram at the Rainbow Printers, Trichy. Edited and Published by ARU. Ramanathan Williams Road, Cantonment, Tiruchirappalli. Associate Editor: V.K. Murthy

கைலாஸ் பிக்சர்ஸ்

நடிகை

(தமிழ்)

31-8-51 முதல்

திருச்சி	....	முருகன்
தஞ்சாவூர்	....	டவர்

விநியோகஸ்தர்கள் :

ரத்னு பிலிம்ஸ்,

தேவதானம் :: திருச்சி

(திருச்சி, தஞ்சை ஜில்லாக்களுக்கு)

Regd. No. M. 5432 KALAIMANI 1 SEPTEMBER, 195

RAINBOW PRINTERS, TIRUCHIRAPPALLI.